T.S. Rajeswari

கல்வித் தந்தை

ஏ. பி. ஸி. வீரபாகு அவர்களின்

மணிவிழா மலர்



செந்தில் முருகன்



உத்தமர் காந்தி - அன்னை கஸ்தூரிபாய்



HIS HOLINESS

SRI KANCHI KAMAKOTI PEETADHIPATHI

JAGATGURU SRI SANKARACHARYA SWAMI MUTT

KANCHEEPURAM

ஸ்ரீ ஏ. பி. எஸ். வீரபாகு அவர்கள் ஷஷ்டியப்த பூர்த்திவிழாவை யொட்டி ஒரு பாராட்டு மலர் வெளியிடுவதை அறிய ஸ்ரீ மஹா ஸன்னிதானத்தில் ஸந்தோஷிக் கிறார்கள்.

தூத்துக்குடியில் வ. உ. சி. கல்லூரியைத் தோற்றுவித்து சிறார்களுக்குக் கல்வித் தந்தையாகியுள்ள திருவாளர் ஏ. பி. எஸ். வீரபாகு அவர்கள் தொழில் அதிபராயும் அரசியலிலும் மேதையாய் விளங்குவதும் தவிர சிவநெறிச் செல்வராயும் விளங்குவது மிகவும் பாராட்டதக்க விஷயமாகும்.

பாராட்டு மலர் வெளியிடும் குழுவின் அங்கத்தினர்களும், மணிவிழாக் குழு அங்கத்தினர்களும், கல்லூரி மாணவ மாணவிகள் திருவாளர் வீரபாகுவின் உயர்ந்த குணங்களைப் பின்பற்றி வாழ்க்கையைப் பயனுள்ளதாகச் செய்துகொள்ள உதவுவார்கள் என ஸ்ரீ மஹா ஸன்னிதானத்தில் நம்புகிறார்கள்.

திருவாளர் ஏ. பி. எஸ். வீரபாகு இன்னும் பலகாலம் நீடூழி வாழ்ந்து மேன் மேலும் பரோபகாரம் செய்து இன்புற்று வாழ ஸ்ரீ மஹா ஸன்னிதானத்தில் ஆசீர் வதிக்கிறார்கள்.

ஆக்ஞைப்படி,

A. S. பானுபந்த்

மானேஜர்.

தருமையாதீனம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள்

தருமபுரம், மாயூரம் P. O.

உலகில் மக்கட் பிறப்பே உயர்ந்த பிறப்பு. "மானிடப் பிறவி தானும் வகுத்தது மனம் வாக்காயம் ஆனிடத்தைந்தும் ஆடும் அரன் பணிக்காக அன்றே" என்று சிவஞானசித்தியார் கூறுகிறது. இப்பிறப்பில் மக்கள் மனம் மொழி மெய் ஆகிய முக் காரணங்களாலும் இறைவனை வழிபட்டு வீடு பேறு அடையும் முயற்சிகளில் ஈடுபடல் வேண்டும். உலக வாழ்க்கையில் இம்மைக்குரிய நலங்களைத் தேடும் முயற்சிகளில் ஈடுபட மக்கட்கு மறுமைப் பயன்களையும் பெறுவதற்குரிய முயற்சிகளில் ஈடுபடுத்தும் விழாவாக மணிவிழா நிகழ்கிறது.

அன்பர் திரு. வீரபாகு, தமிழகத்து காங்கிரஸ் தலைவர், தொண்டர், தியாகி, செல்வக் குடும்பத்தில் வந்தவர், சைவர். இந்திய நாட்டு விடுதலையில் செக்கிழுத்த செம்மல் என்றும் கப்பல் ஓட்டிய தமிழன் என்றும் பாராட்டபெறும் வ. உ. சிதம்பரம் பிள்ளை அவர்கள் பெயரால் கல்லூரி அமைத்து அதன் தாளாளர் ஆக இருந்து அதனைச் செம்மையாக நடத்தி வருபவர், தமிழக சட்டமன்ற உறுப்பினராக இருந்து தொண்டாற்றியவர். இவ்விதமாக நாட்டுக்கும், சமுதாயத்துக்கும் கல்விக்குமாக தம் வாழ்நாள் முழுவதும் தொண்டு செய்துவரும் செம்மல் சிறந்த சிவநெறிச் செல்வராய் விளங்கி வருபவர். அவர் தம் மணிவிழாவை அன்பர்கள் பலரும் மலர் வெளியிட்டுச் சிறப்புறக் கொண்டாடுவதறிய மகிழ்ச்சி.

அவர்கள் நிறைந்த செல்வங்களும் நீடிய வாழ்நாளும் பெற்று விளங்கவும் அவர் தம் மணிவிழா சிறப்புற நடைபெறவும் மணிவிழா மலர் நன்கு சிறந்து மலர்ந்து பயன்தரவும் ஸ்ரீ செந்தமிழ்ச் சொக்கர் திருவருளைச் சிந்திக்கின்றேம்.

HIS HOLINESS THIRUVARUL THAVAYOGA

Sri-la-Sri Somasundara Sri Gnanasambanda Desika Paramachariya Swamigal

MADURAI AADHEENAM

70, South Avani Moola Street, Madurai.

தொழில் முன்னேற்றத்திற்கும் நாட்டின் நலத்திற்கும் கல்வி முன்னேற்றத்திற்கும், திரு. ஏ. பி. எஸ். அவர்கள் செய்து வருகின்ற சேவையை நாம் நன்கு அறிவோம்.

அன்னருக்குச் சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானமும், பவமதனை அறமாற்றும் பாங்கினில் ஓங்கிய ஞானமும், உவமையிலாக் கலைஞானமும், உணர்வரிய மெஞ்ஞானமும், சிந்தித மனைத்த சித்தியும், அரோக திடகாத்திரமும், தீர்க்காயுளும் அஷ்ட ஐஸ்வரிய ஆதிக்கமும், நித்திய மங்கள குரு கடாக்ஷமும், மென்மேலும் பெருக உண்டாகத் திருவருள் பாலிக்குமாறு, எல்லாம் வல்ல எம் அங்கையற்கண்ணி பங்கனும் ஆலவாய் அண்ணலைப் பிரார்த்தித்து ஆசீர்வதித்து விபூதிப் பிரசாதமும், குங்குமப் பிரசாதமும் இத்துடன் எழுந்தருளச் செய்திருக்கிறோம்.

எல்லோரும் திருவருட்கவசமாக அணிந்து மேன்மையுறுவீர்களாக.

எல்லோருக்கும் ஆசீர்வாதம்.

OM

SRI-LA-SRI PANDRIMALAI SAMIKAL

"OM NAMASIVAYAM"

3/1, Village Road, Nungambakkam. Madras-600034.

பேரன்புடையீர்,

உயர்திரு. வீரபாகுபிள்ளை அவர்களுடைய மணிவிழா மே இரண்டாந் தேதி முதல் ஐந்தாந்தேதி வரை சிறப்புற நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பெறுவது குறித்து மிக்க மகிழ்ச்சி. விழாவின்போது மணிவிழா மலரும் வெளியிடப் பெறுவது வரவேற்கத் தக்கதே.

உயர்திரு வீரபாகுபிள்ளை அவர்கள் தெய்வபக்தி உடையவர். சர்க்காரில் திறம்படத் தொண்டாற்றியவர்; நாட்டுப்பற்று மிக்குடையவர்; பொதுநலத் தொண்டில் ஈடுபாடு கொண்டு V. O. C. கல்லூரி, மகளிர் கல்லூரி முதலியன நிறுவ அயராது உழைத்தவர். தொடர்பு கொண்ட எல்லாத் துறைகளிலும் ஊக்கத்துடனும், வெற்றியுடனும் உழைத்துவரும் திரு. வீரபாகுபிள்ளை அவர்கள் பல்லாண்டு, பல்லாண்டு வாழவேண்டும் என்று வாழ்த்துகிறேன். விழா இனிது நடைபெறவும், விழா மலர் சிறப்பாக அமையவும் முருகன் அருள் முன் நிற்பதாக! விழாவில் கலந்து கொள்ளும் எல்லோருக்கும் முருகன் அருள் பெறுகுவதாக!

தண்டாயுதபாணி துணை.

காஞ்சிபுரம் தொண்டை மண்டலாதீனம்
மெய்கண்டதேவர் சந்தானம்
ஞானபீடத்துக் குருமகா சந்நிதானம்
சீலத்திரு ஞானப்பிரகாச தேசிக
பரமாசாரிய சுவாமிகள்
அவர்கள் அருளுரை.

காஞ்சிபுரம்-2

வாழ்த்து

திருநெல்வேலி மாவட்டம் தொன்று முதல் இன்றும் இனியும் செந்தமிழ் நூல நிலை முதன்மையாகக் கொண்டு போற்றும் பெருமை மிக்கது. "நூல் ஆய்பவர் திருநெல்வேலி நாட்டினர்" என்று ஒரு தனிப்பாடலடியும் அதற்குச் சான்றாகும்.

தூத்துக்குடியில் நெடுங்காலமாக வேறெங்கும் இல்லாத சைவ சித்தாந்த சங்கம் நிலவி வருகின்றது. அது மக்களைச் செவியுணவின் ஆன்றோராக்கி விளங்குகின்றது

தொல்காப்பியம் என்னும் பழந்தமிழ்ப் பேரியற் புலத் தொகையை நன்கு வெளியிட்டும் புதுப்பனுவல் பல இயற்றியும் உலகம் புகழும் உத்தமராய் விளங்கியும் தமிழர் தலைமணியாயிருந்த வ. உ. சிதம்பரம்பிள்ளையது வழித்தோன்றல், இம்மணிவிழாக் கொள்ளும் மாட்சி மிக்க செல்வர் என யாவரும் அறிவர்.

கல்வித் தந்தை, தேசிய வழி வழிச் செம்மல், சிவ நெறிப்புரவலர் எனப் போற்றப் பெறும் சைவத் திருவாளர் ஏ. பி. சி. வீரபாகுபிள்ளை அவர்களை வாழ்த்தி வாழும் வாய்ப்பு நல்லோர் எல்லோர்க்கும் நண்ணிற்று இம் மணிவிழாக் குழுவினர் நல்ல புண்ணியராவர். அவர்களைத்தான் முதலில் வாழ்த்தல் வேண்டும். மலர் வெளியீட்டுக் குழுவினரும் அத்தகையவரே. அவருள் அன்பும் அறிவும் ஆற்றலும் உண்மையும் இயல்பில் வாழ்ந்த சைவத்திருவாளர் பூ. சாம்பசிவனார் M. A. அவர்கள் செயலாளராயிருந்து வெற்றித்திருப் பெருகும் வண்ணம் செய்து மணிவிழாச் செல்வர் மிகச் சிறக்க முயல்வர்.

நிறைநாட் செல்வர் வீரபாகு அவர்கள் திருவருளாலும் குருவருளாலும் நீளாயுளும் நல்லுடலும் மேன்மேற் செல்வப் பெருக்கமும் சீருஞ் சிறப்பும் பேரும் புகழும் இன்ப வாழ்வும் குரு பக்தி சிவ பக்தி விசேடமும் எய்தி நீடுழி வாழ்க இனிது.

ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் வித்யாலயம்

ஸ்ரீ ராமகிருஷ்ண வித்யாலய அஞ்சல்
கோயமுத்தூர்-641020

திரு. ஏ. பி. சி. வீரபாகு அவர்களின் மணிவிழா கொண்டாட இருப்பதும், அவ்விழாவை ஒட்டி மலர் ஒன்று வெளியிட இருப்பதும் அறிய மிக்க மகிழ்ச்சி.

திரு. வீரபாகு அவர்கள் கல்வித் துறையிலும், தேசப் பணியிலும் மிகுந்த ஆர்வத்துடன் ஈடுபட்டு, உயர்ந்த லட்சியங்களுடன் சேவை செய்துகொண்டு வருபவர்கள். அவர்கள் இன்னும் நீண்ட நாட்கள் வாழ்ந்து கல்வித் துறையிலும், காந்திய இயக்கங்களிலும் சிறப்பாக ஈடுபட்டுப் பெருவாழ்வு வாழப் பிரார்த்திக்கிறேன்.

அன்புள்ள,

தி. சு. அவினாசிலிங்கம்.

SRI-LA-SRI
Ambalavana Pandara Sannathi Avl.,
Adheenakarthar
Thiruvavaduthurai Mutt

THIRUVAVADUTHURAI
(THANJAVUR DT.)

நயனெடு நன்றி புரிந்த பயன்உடையார் –
பண்புபா ராட்டும் உலகு —என்பது செந்தமிழ்ப் பொதுமறை. இப் பொய்யாமொழிக்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்து வாழ்வித்தும் விளங்குபவர் தொழில் அதிபர் உயர் சைவத்திரு ஏ. பி. எஸ். வீரபாகு அவர்கள்; வ. உ. சி. வழித் தோன்றலாக இருந்து பாரம்பரியத்தைக் காத்துப் பல்லாற் றானும் பொதுமக்களுக்கு நன்மை புரிந்து வருவதைத் தமது கடப்பாடாகக் கொண்டுள்ளவர். இவர்தம் அறுபதாண்டு நிறைவு மணிவிழா சிறப்பாக நடைபெறுவது குறித்து நமக்கு மகிழ்ச்சி மிக உண்டு.

இச்சீவநெறிச் செல்வர் தம் குடும்பத்தினர் பலருடன் நீடினிது வாழ்ந்து எல்லா நலன்களும் பெருகப்பெறவும், மணிவிழா சிறப்பாக நடைபெற்றுப் பல்லோருக்கும் இன்பம் பெருக்கவும், விழா மலர் நன்கினிது மலர்ந்துதெய்வமணமும் பசுந்தேன் ஞானமும் பயந்து யாவரையும் மகிழ்விக்கவும் நமது பூசாமூர்த்தியாகிய ஞானமா நடராஜப் பெருமா னுடைய செம்பொற்கழல்களைச் சிந்தித்து ஆசீர்வதிக் கின்றோம்.

அம்பலவாண பண்டாரச் சன்னிதி

PRESS SECRETARY TO THE PRESIDENT
RASHTRAPATI BHAVAN
NEW DELHI-110004

The President is glad to know from your letter of the 19th March 1975 that the Apeecee Veerabahu Manivizha Committee will celebrate the 61st birthday of Shri A. P. C. Veerabahu on the 2nd May 1975. He offers his greetings to Shri Veerabahu and wishes him many more years of useful service to the nation.

A. M. ABDUL HAMID.

VICE-PRESIDENT
INDIA
NEW DELHI
March 25, 1975

I am glad to know that the Apeece Veerabahu Manivizha, Chidambaram College Campus Tuticorin will celebrate the 61st Birthday of Shri A. P. C. Veerabahu on the 2nd May, 1975. His services in the field of education, social and economic development in Tamil Nadu, and as a legislator are well known. He was a great patriot and a true gandhian and served the people in a spirit of dedication.

I wish the celebrations all success.

B. D. JATTI.

FINANCE MINISTER
INDIA
New Delhi - 110001
March, 1975

I am glad to know that Shashtiabdapoorthi celebrations of Thiru A. P C. Veerabahu is being celebrated from 2nd May 1975 to 5th May, 1975 at Tuticorin and that a Souvenir is also proposed to be released to commemorate the auspicious occasion.

I join the admiress of Thiru A. P. C. Veerabahu in wishing him many happy returns of the day.

C. SUBRAMANIAM.

RAJ BHAVAN
Madras-600022,
March 1, 1975.

MESSAGE

I offer my warmest greetings to Thiru A. P. C. Veerabahu on the occasion of his 61st birthday and wish him many happy returns of the day.

K. K. SHAH,
Governor of Tamilnadu.

முதலமைச்சர்

1—5—1975

பொதுத் தொண்டினால் செல்வாக்குப் பெற்ற திரு. ஏ. பி. சி. வீரபாகு அவர்களின் 61-வது பிறந்த நாள் விழாவினைச் சிறப்பாகக் கொண்டாட ஏற்பாடுகள் செய்யப்படுவது குறித்துப் பெரிதும் மகிழ்கிறேன். விழாத் தலைவரை 'மேலும் பல்லாண்டு வாழ்க' என வாழ்த்துகிறேன். விழா வெற்றி பெறவும், விழா மலர் எழில் பெறவும் எனது இதயங்கனிந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மு. கருணாநிதி

ANBIL DHARMALINGAM
MINISTER FOR REVENUE

FORT ST. GEORGE
MADRAS - 600009

பேரன்புடையீர்! வணக்கம்!

மணிவிழா காணும் என்னரும் நண்பர் திரு. A. P. C. வீரபாகு அவர்கள் எல்லா நலன்களும் பெற்று இன்ப வாழ்வு வாழ வாழ்த்து கிறேன். வாழ்க நீடுழி.

அன்பன்,
அன்பில் தர்மலிங்கம்.

க. அருணாசலம்
தலைவர்

ச. அழகர்சாமி
காரியதரிசி

தமிழ்நாடு காந்தி நினைவு நிதி

தொலைபேசி : 25700 மதுரை 6 25020

அன்புடையீர், மணிவிழாத் தலைவரின் தொண்டு நிறைந்த வாழ்க்கையை நாடு நன்கு அறியும். அவர் கூட்டுறவு, கல்வி, சமயம், வாணிபம், அரசியல் முதலிய துறைகளில் உயர் நெறி நின்று பணியாற்றியுள்ளார். இதுவரை அவர் ஆற்றிய தொண்டு ஒரு கட்டுக்கு உட்பட்டிருந்தது. மணிவிழாக் கண்டதின் பயனாக அவரும் அவருடைய அருமைத் துணைவியரும் கட்டுக்கு மேற்பட்ட நிலையிலும் பலப்பல ஆண்டுகள் பணிபுரிய எல்லாம்வல்ல திருவருள் துணைநிற்பதாக.

தங்கள் அன்பன்,
க. அருணாசலம்.

Dr. T. P. MEENAKSHISUNDARAM
Ex-Vice Chancellar,
Madurai University

MADURAI

Thiru Veerabahu Pillai coming of a respectable family is a nationalist to the core ever working for the economic social and political regeneration of India in general and of Tamil Nadu in particular. He was in the thick of the fight for National freedom. He realised the importance of higher education as the foundation for any sound National edifice and organised and founded a College in Tuticorin Again as a true nationalist remembering the great contribution of V. O. C., made in the political economic literary and labour fields, named the College after that illustrious son of Tamil Nadu. The College has become one of the premier institutions. He was also instrumental in organising and developing other Colleges in that area. Being convinced that the economic development on right lines is absolutely necessary for national development, he became the life spirit of the cooperative movement. A man of very simple habits, though of very great forerunner in his ideas, He has been responsible for the great change in the Society especially of Tuticorin. May God bless him with a long life of happiness, success and usefulness.

இரா: நெடுஞ்செழியன்
கல்வி–சுற்றுலா அமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை-9

திரு. ஏ. பி. சி. வீரபாகு அவர்கள் அறுபது ஆண்டு நிறைவு பெற்று மணிவிழாக் கொண்டாடும் பெற்றியினை எய்தியிருப்பது கண்டு பெருமகிழ்ச்சியடைகிறேன். அவர் நலம் பலபெற்று நீண்ட காலம் இனிது வாழ்வாராக !

இரா. நெடுஞ்செழியன்.

க. இராசாராம்
தொழிலாளர் நல அமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை-9

தமிழகத்தில் ஆளும் காங்கிரஸ் கட்சியின் தலைவராகப் பொறுப்பேற்று சிறந்த தொண்டாற்றியவர். ஓயாமல் உழைப்பதில் அவர் மனநிறைவு காண்பதை பலமுறை நான் நேரில் கண்டிருக்கிறேன். தான் எடுத்துக் கொள்ளும் வேலைகளில் முழுவதும் மூழ்கிவிடும் உள்ளம் கொண்டவர் அவர் தமிழக மக்களுக்கு அரசியல் மூலமும், கல்வி மூலமும் சிறந்த தொண்டாற்ற வேண்டுமென்ற பெருவிருப்பம் கொண்டவர்.

திரு. ஏ. பி. சி. அவர்கட்கு அறுபதாண்டு நிறைந்து விட்டது என்பதை என்னால் நம்ப முடியவில்லை.

பலர் சாதரணமாக இந்த ஆண்டை அடைந்து விடுகிறார்கள், தாங்கள் நடந்து வந்த பாதையில், பலபேரின் அடிச்சுவடுகள் கூடப்படுவதில்லை. திரு ஏ. பி. சி. அதற்கு நேர் மாறானவர்.

அரசியல், கல்வி, இரண்டு துறைகளிலும் தனது முத்திரையைப் பதித்தவர்.

தூத்துக்குடியில் விளங்கும் வ. உ. சிக் கல்லூரி, ஒரு பல்கலைக் கழகம்போல் விளங்குவது அவரது பணியினால் அன்றே !

க. இராசாராம்.

புலவர் கா. கோவிந்தன்
எம். ஏ.

தலைவர்,
தமிழ்நாடு சட்டப் பேரவை.

தலைமைச் செயலகம்,
சென்னை-600009.

திரு ஏ. பி. சி. வீரபாகு அவர்கள் மணி விழா வரும் மே திங்களில் கொண்டாடப்பட இருப்பது கேட்டு மிக்க மகிழ்ச்சி. சிறந்த அரசியல் வாதியும் கல்வித் துறையில் ஈடுபாடு கொண்ட வருமான திரு. வீரபாகு அவர்களின் மணி விழாவையொட்டி வ. உ. சிதம்பரனார் கல்லூரி 'மணி விழா மலர்' வெளியிட இருப்பது பொருத்தமானதாகும். திரு. வீரபாகு அவர்கள் மேலும் பல்லாண்டுகள் வாழ்ந்து கல்வித் துறைக்கு தம் தொண்டினைச் செய்திட என் நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கா. கோவிந்தன்.

C. P. CHITRARASU
CHAIRMAN
Tamil Nadu Legislative Council

FORT ST. GEORGE
MADRAS-600009

I am glad to note that Thiru A. P. C. Veerabahu's 61st Birth Day is being celebrated and a Souvenir is brought on that occasion. His public service is well known and the celebration of 61st birth day, in a grand manner would give him further force to serve the people still better.

I wish the function all success.

C. P. CHITARARASU

K. KAMARAJ

8, TIRUMALAI PILLAI ROAD,
MADRAS-600017

I am in receipt of your letter of the 27th February 1975. I am happy to send my hearty good wishes to Shri A. P. C. Veerabahu on this occasion of the celebration of his 'Mani Vizha'. He is a nationalist and a patriotic. His keen enthusiasm in the educational field is quite well known. I pray Lord Almighty to bless him with many years of useful life.

K. KAMARAJ.

M. Bhaktavatsalam

15, WARREN ROAD,
MYLAPORE,
MADRAS - 4.

திரு. A. P. C. வீரபாகு அவர்கள் மணிவிழா நடைபெற இருப்பது பற்றி மகிழ்ச்சி. அந்த கொண்டாட்டத்தின் ஒரு அம்சமாக தங்கள் குழு ஒரு சிறப்பு மலர் வெளியிடுவதை நான் வரவேற்கிறேன். திரு A. P. C. வீரபாகு பல்லாண்டுகளாக நம்முடைய சமுதாய முன்னேற்றத்திற்குரிய வகையில் அரிய தொண்டுபுரிந்து வந்திருக்கிறார். அவர் காங்கிரஸில் மிக்க பற்றுகொண்டவர். காங்கிரஸ் இயக்கத்தில் ஈடுபட்டு சீரியதொண்டு புரிந்து வந்திருக்கிறார். அவர் காங்கிரஸ் கொள்கைகள், திட்டங்களை விளக்குவதில் திரு. A. P. C. ஆற்றல் மிகுந்தவர். நல்ல பேச்சாளர், கூட்டுறவு இயக்கத்திலும் மிக்க அக்கரைகொண்டு ஈடுபட்டு வந்திருக்கிறார். முக்கியமாக திரு. A. P. C.க்கு பெருமை தருவது கல்வித்துறையில் அவர் சாதித்திருப்பது. கப்பலோட்டிய வ. உ. சி. பேரில் ஒரு கல்லூரி தூத்துக்குடியில் அமைத்து நல்லமுறையில் அதை நடத்திக்கொண்டு வருகிறார். இந்த அறநிறுவனத்தின் கீழ் ஒரு பெண்கள் கல்லூரியும் அமைக்கப்பட்டிருக்கிறது. வ. உ. சி கல்லூரி இன்று தலைசிறந்த கல்லூரியாக விளங்குகிறதென்றால் அதற்கு A P. C. தான் மூலகாரணம் என்று சொன்னால் மிகையாகாது.

இவ்வாறு பலதுறைகளில் தொடர்ந்து சீரிய பணியாற்றிவரும் திரு. A. P. C. யின் வாழ்க்கை சீரிய வாழ்க்கை என்று அவர் திருப்தி படுவதோடு தமிழ் மக்களும் அவரைப்பற்றி பெருமைப்படுவார்கள். அவர் மேலும் பல்லாண்டுகள் குறைவற்ற வாழ்க்கை வாழ்ந்து மக்களின் வளர்ச்சிக்குரிய வகையில் அரிய தொண்டுபுரிய வேண்டுமென்று அவருக்கு நல் வாழ்த்து கூறுகிறேன்.

எம். பக்தவத்சலம்.

Dr. Rajah Sir MUTHIAH CHETTIAR
OF CHETTINAD.

Chettinad House, Adyar,
Rajah Annamalaipuram P. O.
Madras-28.

I thank you for your letter of the 27th ultimo and also your telegram. I am happy to know that the Shashtiabdapoorthi of my revered and good friend Thiru Veerabahu is to be celebrated from 2nd to 5th May next and that you will be bringing out a souvenir to commemorate the happy occasion. He belongs to a noble family. 'A P. C.' is a household name in Tuticorin, and Tamil Nadu. Thiru Veerabahu has done much for Tuticorin in the field of education. (He is a great leader respected by one and all and a great patriot, and it is quite fitting that his 61st birthday should be celebrated elaborately.) The public of Tuticorin are much beholden to him. I take this opportunity of wishing him many happy returns of the day and also long life and robust health to continue his useful service to the public of Tuticorin and the country and Tamil Nadu in particular.

M. A. Muthiah Chettiar.

K. VEERASWAMI
CHIEF JUSTICE

HIGH COURT BUILDINGS
MADRAS - 1

I am glad to hear that you propose to hold Mani Vizha of Thiru A. P. C. Veerabahu, whose services to the community is praise - worthy. I wish the function all success.

K. Veeraswami.

T. SADASIVAM

Kalki Buildings
Chetput
Madras-600031

I am happy to know from your communication date 1—3—75 of the Shashtiabdapoorthi of Thiru A. P. C. Veerabahu. Please canvey to him my hearty felicitations.

May Lord Venkateswara bless Thiru Veerabahu with all helth and happiness and one hundred years of useful life.

Kind regards.

T. Sadasivam

G. RAMACHANDRAN

Khadi & V. I. Commission
3, Irla Road, Vile Parle (West)
Bombay - 56

What Vedarathnam Pillai was to Tanjore, Sri A. P. C. Veerabahu is to Tirunelveli. He is the salt of Tuticorin. Sri A. P. C. Veerabahu represents the spirit of the new generation. He has been an active and ardent Congressman even from his college days. He had his University education at the Hindu College, Tirunelveli which has a long tradition of Nationalism. Eminent men like Shri K. B. Yegneswara Sharma, Shri K. A. Neelakanta Shastri and Prof. Saranathan had laid the cultural foundations of the Hindu College. Tirunelveli gave to the Nation such patriots as Subramanya Bharati. V. O. Chidambaram Pillai and V. V. S. Iyer Shri Veerabahu is a Gandhian who believes in the transformation of Society through Educational and Constructive efforts. It is his pioneering leadership which has made Tuticorin blossom into a centre of higher learning. Under his management are now functioning, he V. O. C, College, V. O. C. College for Women and V. O. C. Teachers' College which remain as model institutions. Though he has his involvement in politics and has held many party positions, he has been taking active interest in the Sarvodaya movement. A few years ago he got up a mighty gathering at Kalugumalai to propagate the ideals of Bhoodan. He is also associated with the Mayer Trust, which helps substantially Gramdan Village in Tirunelveli District. Shri Veerabahu has been mainly instrumental in the reviving of the National Shipping Service originally founded by Shri V. O. Chidambaram Pillai as part of the Swadeshi movement. Shri Veerabahu who combines in himself the qualities of an industrialist, educationalist, philanthropist and a political leader is an asset to the country. Let us hope, that under his stewardship, Tuticorin will one day become a University Centre, May God give him a long lease of life to enable him achieve this lofty goal.

G. Ramachandran

K. SANTHANAM

"SABAREE"
58, East Abhiramapuram Street
MYLAPORE, MADRAS-4

I have great pleasure in sending my blessings and felicitations to Sri Veerababu on the occasion of his Manivizha (He has been a steady and untiring worker for the country both before and after freedom.) I wish him many more years of health and national service.

K. Santhanam

N. MAHALINGAM, B. Sc., M. i. E.

"SAKTHI NILAYAM"
POLLACHI.
(MADRAS STATE)

என்னுடைய அன்புடைய நண்பர் திரு. A. P. C. வீரபாகு அவர்களுடைய: மணிவிழா நடைபெற இருப்பதை அறிந்து மிகவும் மகிழ்வடைகின்றேன்.

நீண்ட நாளாக அரசியல் வாழ்வில் கேள்விப்பட்டிருந்த அவரை சென்னை சட்ட மன்றத்தில் இருவரும் நன்றாக இருந்தபோது நல்ல நண்பராகப் பெற்ற பேற்றை அடைந்தேன்.

தமிழக அரசியலில் காங்கிரஸ் ஆட்சியிலிருந்தபோது கட்சியின் அரசுபற்றியும், கொள்கைபற்றியும் விமரிசம் செய்யும் வகையில் நாங்கள் இருவரும் ஒருமனத்தவராக இருந்தோம்.

பொருப்பில் இருந்த தலைவர்களின் கொள்கை குழப்பத்தால் தமிழக காங்கிரசுக்கும், ஈ. வே. ரா. பெரியார் கட்சிக்கும் அதிக வித்யாசத்தை மக்கள் காணமுடியவில்லை. ஆகவே 1967ல் ஆட்சி மாறியது.

ஆட்சி மாறிய பின்னர்தான் A. P. C. யும் நானும் சில நண்பர்களோடு தமிழக காங்கிரஸ் கட்சி இயக்கத்தில் புதிய துறையில் செல்லவேண்டுமென்று முயற்சித்தோம். தலைமையை மாற்றி திரு. சுப்பிரமணியத்தை பொருப்புக்கு கொண்டுவர முடிந்தது. ஆனல் புதிய தலைவரும் பழைய நண்பர்களோடு சமாதானமாக அரசியல் நடத்த விரும்பினர்.

A. P. C. யும் நானும், K. T. K. யும், பக்தவத்சலமும் புதிய தலைவரின் வழியைப் பார்த்து வருந்தினோம். சில மாதங்களுக்குள் தமிழக காங்கிரசில் திருவாளர் காமராஜுக்கும், தலைவர் சுப்பிரமணியத்திற்கும் மன ஒற்றுமை இல்லாத நிலை.

அந்த சூழ்நிலையில் பக்தவத்சலம் இல்லத்தில் நடந்த நண்பர்கள் கூட்டத்தில் A. P. C. அவர்கள் C. S.ஐ நீங்கள் Vote of confidence கேளுங்கள், அதன்பேரில் காரியக்கமிட்டியை மாற்றி அமையுங்கள் என்று கூறினர். இதன் மத்தியில் தேச சூழ்நிலையிலும் காங்கிரசில் மாறுதல்கள்.

A. P. C. கூறிய யோசனையை திரு. C. S. கேட்காமல் ராஜினமா செய்தார். பின்னர் உள்ள செய்திகள் பலரும் அறிந்தவை. தமிழக அரசியல் A. P. C. யின் யோசனையை C. S. கேட்டிருந்தால் 1969ல் என்ன ஆகியிருக்கும் என்பது ஒரு பிரச்னை!

திரு. A. P. C. க்கும் எனக்கும் சில ஒற்றுமைகள் உண்டு, இரு வருக்கும் அரசியல் ஒரு தொழில் அல்ல. Habby தான் சொந்தமாக தொழில் செய்வதும், கல்வி நிலையங்கள் நடத்துவதும் மேலும் இரு ஒற்றுமையான விஷயங்கள். அவர் நடத்திவரும் கலைக்கல்லூரியில் கல்லூரி முதல்வர் சீனிவாச ராகவனின் மணிவிழாவில் கலந்து கொள் ளும் வாய்ப்பு பெற்றேன்.

காங்கிரஸ் இரண்டானதற்கு பின்னர் A. P. C. தமிழக காங்கிரஸ் தலைவராகவும் இருந்து பெரும் முயற்சி செய்தார். இப்பொழுது மறு படியும் அவர் கல்வி, தொழில் துறை பணியில் அதிக அளவில் கவ னித்து அரசியலுக்கு காலம் கொடுப்பதை குறைத்துள்ளார் ஜனநாயக நாட்டில் அரசியல் Habby ஆக உள்ளவர்கள் அதிகம் இருப்பதுதான் நாட்டிற்கு நல்லது.

ஆனல் தேசத்தில் இன்று அரசியலும் ஒரு தொழிலாக இருப் பதுதான் அதிகமாக உள்ளது காலம் மாறி A. P. C. போன்ற நண்பர் கள் அதிகம் இருக்கும் காலம் வருமென நம்புகின்றேன்.

அவருடைய மணிவிழா சிறப்பாக அமைத்து அவர் பெற்ற அனு பவமும், ஆற்றலும் மக்களுக்கு பயன்படும் வகையில் நாட்டின் எதிர் காலம அமையப் பிரார்த்திக்கின்றேன்.

நா. மகாலிங்கம்

HARIKATHA RATHNAKARA
T. S. BALAKRISHNA SASTRIGAL

STATE BANK OF INDIA
COIMBATORE CITY

I am in receipt of your letter and have great pleasure in joining with thousands of wellwishers of Shri A. P C. Veerabahu on the very happy occasion of his Shashttabda-poorthi.

Shri Veerabahu is indeed a 'Thavapputhalvan' of this great land. His steadfastness in heart and action towards Gandhiam ideals and love for the Country and the devotion to elders and Saints are some of the many exemplory qualities in him. These qualities are the landmarks which the younger generation of the Modern days should follow had in hand in bringing out the prosperity of the nation.

Once again I offer my heartiest felicitations to Shri Veerabahu and wish him with the grace of Lord Sri Rama many more years of happiness, health and prosperity.

T. S. Balakrishna Sastrigal.

R. VENKATARAMAN

Labour Law Journal
Royapettah High Road,
Madras - 14

On the happy occasion of the Shashtiabda-poorthi celebrations of Sri A. P. C. Verabaghu, I send him my warmest greetings and good wishes for a long and meritorious career of further service to our Country. He has a fine record of dedicated service to the cause of freedom Co-operative movement and in the field of education and I trust that in the years ahead his talents will find scope for expression in responsible position of trust and authority.

R. Venkataraman.

UNIVERSITY OF MADRAS

N. D. SUNDARAVADIVELU,
Vice-Chancellor.

UNIVERSITY BUILDINGS,
CHEPAUK, MADRAS-5.

Thiru Veerabahu along with other public spirited citizens of Tuticorin, was instrumental in founding the V. O. Chidambaram College as a memorial to the great patriot, the late Thiru V. O. Chidambaram Pillai. This College was affiliated to the University of Madras in 1951 and Thiru Veerabahu devoted his entire energy and time for the growth and development of this college. It is no exaggeration to say that it is mainly through his exertions that the college has attained its present stature.

On this memorable occasion of the Shastiabda-poorthi of Thiru Veerabahu, I offer my warm greetings and felicitations to him. I join his other friends and admirers in wishing him good health, happiness and many more years of useful service to the cause of education in our State.

N. D. SUNDARAVADIVELU.

மதுரைப் பல்கலைக் கழகம்,

சை. வே. சிட்டிபாபு,
துணைவேந்தர்.

பல்கலைநகர்,
மதுரை - 625021.

திரு. வீரபாகு அவர்கள் அறுபதாண்டு காலமாக கல்விக்கும் மக்கள் சமுதாயத்திற்கும் அருந்தொண்டாற்றிவரும் அருஞ்செயலுக்காக அன்னாருக்காக மணிவிழா எடுக்கப்போவதை அறிந்து மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். அவர் ஒரு சிறந்த தலைவர், தேசபக்தர், விடுதலை வீரர், அறிஞர்.

திரு. வீரபாகு அவர்கள் மக்களால் நன்கு அறியப்பட்ட வள்ளல் தன்மை நிறைந்த செயல் வீரர். பொது மக்களுக்கான நல்வாழ்வுத் திட்டங்களில், குறிப்பாக கல்வித் திட்டங்களில் பெரிதும் ஈடுபாடு கொண்டவர். அவருடைய நல்ல தொண்டினைத் தொடர்ந்து நிறை வேற்ற மணிவிழா பூணும் திரு. வீரபாகு பல நலன்களையும் பெற்று பல்லாண்டு வாழ்வாராக.

மணிவிழா சிறப்பாக நடந்தேற என் மனமார்ந்த நல் வாழ்த்துக் களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சை. வே. சிட்டிபாபு.

K. MOHANARANGAM, M, A., B. T.,
Director of Collegiate Education.

MADRAS - 600006

Thiru Veerabahu is not only a great patriot but also an educationist. The V. O. C. Chidambaram Training College at Tuticorin were founded and nurtured by him and they owe their present position as centres of great educational learning to his untiring efforts, broad vision and dynamism.

I wish your efforts to bring out a Souvenir to mark the momentous occasion all success

K. Mohanarangam.

Dr. V. I. SUBRAMONIAM M. A. Ph. D.
(Ind. U. S. A.)
Prof. and Head of the Department of
Linguistics

DEPARTMENT OF LINGUISTICS
UNIVERSITY OF KERALA
KARIAVATTOM, TRIVANDRUM

விடுதலை இயக்கத்தில் வெற்றிபெற்ற படையாளி வீரபாகு மக்கள் கல்வி யியக்கத்திலும் வெற்றிச் சின்னம் பதித்து அழியாப்புகழ்மிக்க சாதனைகள் பல வற்றைச் செய்துள்ளார். தூத்துக்குடி கல்விக்கழகங்கள் இவற்றிற்குச் சான்று கும். பல்லாயிர மாணவர்களும் ஆசிரியர்களும் இவற்றிற்குச் சாட்சியாகும். ஒரு தனி மனிதர் எவ்வளவு செய்ய முடியும் என்பதை அவர்களுடைய வாழ்வு எடுத்துக்காட்டிவிட்டது. அந்தப் பெருவாழ்வுக்குச் செய்யும் சிறப்பத்தனையும் தமிழர்களால் வரவேற்கப்படும்.

வி ஐ. சுப்பிரமணியம்

P. S. RAJAGOPAL NAIDU,
B. SC., B. L.

" SHANKARA NILAYAM "
8/A, Thyagarajapuram Extension
VELLORE - 632001

I can only say that in Sri A. P. C. Veerabahu you have a dedicated and committed Cooperator who always held service above his self. It is only by his sincere, straightforward and untiring efforts he was able to build up the District Supply Marketing Society at Tuticorin. I know he built up this institution from a mere scratch to that of a giant. It is only the present day politics that has deprived him and also others of his kind from rendering further service for the Cooperative moment. By such deprivation of his loyal services, it is only the movement that is suffering.

Let me join others in wishing "A. P. C." many more years of service for the cause of the poor and down-trodden.

P. S. Rajagopal Naidu

Southern Petrochemical Industries Corporation Ltd.

24, WHITES ROAD, MADRAS-600-014.

It is indeed a great pleasure to receive an invitation to witness the MANIVIZHA (61st Birthday) of the worthy citizen Thiru A. P. C. of Tuticorin during early May 1975.

When one looks back through the past 35 years, one would find that he has, through his dedicated, sincere, and hard efforts, given the best for the development of Tamil Nadu in its economic, commercial, political, cultural and social spheres. When we look at the pinnacle of the various achievements he has made in business, social, economic and political activities, village development activities, cooperative sector activities and, especially, activities based on educational development.

We deem it a great pleasure that we could felicitate this auspicious occasion with great joy, as we could have by the beginning of April brought to Tuticorin, Tamil Nadu, South India and India, the product from the Tuticorin Fertilizer Complex towards which he has continuously given his unstinted cooperation and support.

K. R. Srivatsa.

Madura Coats

MADURAI - 625001.

I am pleased to learn of the Manivizha (61st Birthday Shashtiabdapoorthi) of Sri A. P. C. Veerabahu. May he be blessed with long life and health to continue to serve the nation in all fields and particularly in the sphere of education which is dear to his heart. His services to Tuticorin are praiseworthy.

M. B. S. Henry.

K. S. SONACHALAM
Formerly Professor of Economics
Annamalai University & Member
Railway Rates Tribunal of India.

SIVAGIRI HOUSE
COURTALLAM P. O.
(Tirunelveli Dist.)

It gives me great pleasure to add my tribute to Thiru A. P. C. Veerabahu on the happy and auspicious occasion of his MANIVIZHA to be celebrated in the first week of May, 1975.

Born in the soil sanctified by the footprints of the great patriot and the Father of Indian Shipping., V. O. Chidambaram Pillai and brought up in his noble tradition of public service above every things else, Thiru A. P. C., as he is endearingly called, has rendered distinguished service to the country in the spheras of Education, Cooperation, Industry and Trade.

As the Founder already of no less than three great Colleges at Tuticorin, his name deserves to be inscribed along with the galaxy of philanthropists for the cause of education, like the Raja of Chettinad, Dr. Alagappa Chettiar, Karumuthu Thiagaraja Chettiar and Thiru Avinasilingam Chettiar whose names will ever adorn the educational history of Tamil Nadu.

Simple and austere in his personal habits and a flower of Indian culture, he is a true patriot of the Gandhian heritage with a rich record of Public Service in and outside the Legislatures of our country. He will be only sixty years young in May, 1975 and may God bless him with many, many years of life, robust health and prosperity to continue his selfless service to Tamil Nadu and the country at large.

K. S. Sonachalam

Dewan Bahadur
T. M. Narayanaswami Pillai,
M. A, B. L.

B-27, 11th Cross,
Thillainagar,
Tiruchi - 3.

Sri A. P. C. Veerabahu Pillai is a gentleman whom I know for many, many years I have got great affection and high respect for him. He comes of a very rich, pious work. His brother-in-law Sri M C. Veerabahu was a shining member of the Indian Parliament and Sri A. P. C. Veerabahu has been an equally shining member of the Madras Legislature for two terms. Sri Veerabahu's public work is of a permanent character. He has done marvellously well in the Educational and Co-operative fields. He has been the Founder-Secretary of the V. O. C. College, Tuticorin, and not only has he immortalised the great Patron's name, but has also immortalised himself by his magnificent work in the Educational field This College is now a shining College in the South of our State. Further he has established a V, O. C. Training College and A P. C. Mahalakshmi Women's College named after his mother. He has been a leader in the Co-operative Movement for years. He has been the President of the Central Stores for two decades and has done excellent work.

He has played a notable part in the public life of our State. He has been the President of the District Congress Committee for many years. His influence in the District is enormous. He is loved and respected by all. His 61st birthday is approaching and the whole State reveres him and will remember him for his solid and outstanding service in public life. He is a man of great piety and sterling character, always kind, always obliging and helpful.

T. M. Narayanaswami Pillai

மணிவிழா காணும் அண்ணலின் குடும்பத்தினர்

பாட்டனூர் வக்கீல் வீரபாகுபிள்ளை
தூத்துக்குடி நகரசபை அங்கத்தினர் 1889—1899
1887 சென்னை காங்கிரஸ் மகாசபையின்
தூத்துக்குடி பிரதிநிதி,

1857—1900

பாட்டி வீ. கலியாணி அம்மாள்
1863—1923

வளர்ப்புத்தந்தை
A. P. சொக்கலிங்கம் செட்டியார்
1884 – 1920

வளர்ப்புத்தாய்
A. P. C. மகாலெக்ஷிமி அம்மாள்
1890 – 1971



ஏ. மி. ஸி. வீரபாகு 1930

மணிவிழா தம்பதிகளின் திருமணம் 1941

Badminton Group **1932**

தலைவர் காமராஜ்

செல்வி உலகம்மாள் திருமணத்தில் கலந்துகொள்ளுதல்

மணிவிழாத் தம்பதிகள் மகளும் மருமகனுடன்

செல்வன் சொக்கலிங்கத்தின் திருமணத்தில்
மணிவிழாத் தம்பதிகள்

செல்வன் பரமசிவன் திருமணம்

செல்வி உலகம்மாள்
தலைவர் காமராஜிடம்
காசுமாலை சீனப போர் நிதிக்கு வழங்குதல்

ஸ்ரீலஸ்ரீ பன்றிமலை சுவாமிகள், உபன்யாச சக்கரவர்த்தி அனந்தராம தீக்ஷிதர், குகஸ்ரீ கிருபானந்தவாரியாருடன் மணிவிழா காணும் நமது தலைவர் வீரபாகு.

மலர்வாயில்!

குறிஞ்சிமலர் பன்னிரண்டு ஆண்டுக்கு ஒருமுறை மலரும் என்பர். அறுபதாண்டுக்கு ஒருமுறை மலரும், மலரும் உண்டு. ஆம், நல்லெண்ணத் தேன் தேக்கி, இதய அன்பின் இதழ்களே விரியக் கருத்துவண்ணக் காம்பு ஏற்றுக் காலத்தின் தேவையென, 'ஆயிரங்காலத்துப் பயிராகவும்' எழுத்துருவம் பெற்று மலர்ந்துவருவது அது! இஃது எல்லோருக்கும் அன்று.

நம் கல்வித் தந்தை, 'சிவநெறிச் செல்வர்', 'அறநெறி அண்ணல்', 'தமிழவேள்' திரு. ஏ.பி.ஸி. வீரபாகு அவர்களின் மணிவிழாச் சோலையில் பூத்துவருகிறது இந்நூல்மலர்!

அருஞ்சமயச் சான்றோரும், அரசியல் தலைவர்களும், அறிஞர் பெருமக்களும் வழங்கிய வாழ்த்துரை, இதனில் தேனெனத் திரண்டிருக்கின்றது.

மணிவிழாக் கண்ட அண்ணலை, அரும்பண்புகள் குறித்துப், பல்வேறு நிலையில் அலங்கரிக்க அடுக்கிய அன்புரிமை இதழ்கள் பல.

"தனிமனிதனைப் பாராட்டுவதோடு, ஒரு மலர் தன்னைக் கட்டுப்படுத்திக்கொள்ளக் கூடாது; என்றும், எங்கும், எவர்க்கும் அறிவு விருந்து அளிப்பதாகவும் விரிந்து மணம் பரப்பும் வகையில் விளங்குதல் வேண்டும்" என்னும் மணிவிழா மன்னவர் விருப்பத்தை நிறைவேற்றும் வகையில், அறிஞர் பெருமக்கள்—ஆராய்ச்சி வல்லுநர்கள், ஆகியோரின் அரிய கருத்துவண்ண எழுத்திதழ்கள், அருளியல், பொருளியல், உலகியல், மொழியியல், உளவியல் முதலிய துறைகளின் வழித் தொடுக்கப்பெற்றுள்ளன.

கவிதை வண்ண மெருகு, கலைமலர் முழுதும் கலந்திருக்கத்தானே செய்யும்!

மலரைக் கலைச் செல்விக்குக் காணிக்கை யாக்குவது மரபு! பல்லியலும் படைத்துப் பாதுகாத்துப், பாடுபட்டுழைத்துப் பீடுபெறத் துலங்கும் தன் மணிவிழா மைந்தனுக்கே இம்மலரைக் கருத்தாரக், கையாரக் காணிக்கை யாக்குகிறாள் கலைச்செல்வி! அதுவே முகப்பு ஓவியம்! 'செய்யும் தொழிலே தெய்வம்' என்பதற்கேற்ப, அனைத்துத் துறைகளையும் விளங்கச்செய்த பெருமையால், சிந்தை கனிந்த தொழில் தெய்வம் செய்யும் சிறப்பு இது என்னும் உருவகம்!

ஓவியம் வரைந்து, முகப்புவண்ண அட்டையையும் தனியே அச்சேற்றித் தந்து மலர்வாசற் கோலமிட்டுதவினர், திருச்சி 'அலங்கார் புரோஸஸ்' எனும் அமைப்பினர்.

அதற்கு அச்சுக்கட்டை" இயற்றி அடிப்படை இட்டது 'ராயல் புரோஸஸ்'.

படவரிசையிலேயே அண்ணலின் வரலாற்றைப் பார்த்து மகிழ வாய்ப்பளிக்கும் வகையில் புகைப்பட அச்சுக்கட்டைகள் செய்து, பூவிதழ்ப் பொலிவாக அச்சேற்றித் தந்தது, திருநெல்வேலி 'அலங்கார் அச்சகம்'. 'அலங்கார்' என்பதற்கு இத்தகைய அலங்கார இராசி போலும்!

காலநெருக்கடியிலேயும் கைகொடுத்து, உதிரி இதழ்களுக்கு உருக்கொடுத்து, உள்ளங்கவர் மலராக்கிக் குறித்த காலத்தில் மலரச் செய்த தூத்துக்குடி, தூய மரியன்னை தொழிற்பள்ளி அச்சகத்தை மறக்க முடியுமா? இவ்வுதவிக்குத், தவநெறித் துறவி ஜி. எஸ். ஞானமணி அவர்கள் 'திருஇருதய சபை'யில் மட்டும் அன்று, நம் இதயச் சபையிலும் இடங்கொண்டுள்ளார்.

அண்ணலின் அருஞ்சொற்பொழிவிலிருந்தும், அவர்களைக் குறித்து மற்றையோர் ஆற்றிய உரைகளிலிருந்தும், முத்து முத்தான முதன்மைக் கருத்துக்களை, நண்பர் திரு. வி. முத்துச்சாமி திரட்டித் தந்தது 'காலத்தினால் செய்த நன்றி!'

... ... 'கங்குல்
எல்லை காண் பளவும் நின்றான் இமைப்பிலன் நயனம்'

என்னும் கம்பன் வரிக்கு இலக்காக அச்சுப் பிழை திருத்துவதில் உடனிருந்து உதவினர் நண்பர் திரு. ஆ. நம்பிநாராயணன்.

ஒல்லும் வகையில் எல்லாம் மனம் கொள்ளும் வகையில் மலருக்கு வேண்டிய அனைத்து முன்னேற்பாடுகளையும் திட்டமிட்டுச் செய்து, தொடர்ந்து பக்கம் நின்று, கண் காணித்து நிறைவு தந்த அன்பர்கள் திரு. வீ. சொக்கலிங்கம், திரு. எஸ். பிச்சை முத்து, திரு. டி. நாராயணன், திரு. மு. குப்புசாமி, திரு. எஸ். வேலாயுதம் ஆகியோரின் செயல் திறனை, ஆழ்ந்து தேர்ந்த அனுபவ அறிவை வியக்காமலிருக்க முடியாது!

இவ்வாறு, இம் 'மணிவிழா மலர்' மலர்ந்து வர, எண்ணத்தால், எழுத்தால், கை வண்ணத்தால் உதவிய அனைவரையும் போற்றி, எங்கள் இதயங்கனிந்த நன்றியைக் காணிக்கையாக்கி மகிழ்கின்றோம்.

இனி மலரை நுகருங்கள் ..... நுழையுங்கள்!

அன்புடன்,

தூத்துக்குடி,
5—5—1975.

மலர்க் குழுவினர்.

மலர்க் குழு உறுப்பினர்கள்

டாக்டர் ஆர். வஜ்ரேஸ்வரி எம். ஏ; பி. எச். டி; எம். எட்.

பேராசிரியர் உ. கோ. சந்திரகுமாரி, எம். ஏ.

,, ஜீனராஜதாஸா, எம். ஏ; எம். எட்.

,, கு. நா சிவராமகிருஷ்ணன், பி. ஓ. எல். (ஆனர்சு)

,, பி. வி. இராமச்சந்திரன், எம். ஏ; எம். லிட்.

அ. செகதீசன், எம். ஏ.

ஹ. துரைசாமி, எம். ஏ.

எஸ். சீனிவாசன், பீ. இ.

செல்வி எல். இளம்பிறை, எம். ஏ.

பூ. சாம்பசிவன், எம். ஏ; பி. டி.—செயலாளர்

மணிவிழாக் குழு

புரவலர்கள் :

திரு. K. காமராஜ்

,, M. பக்தவத்ஸலம்

ராஜா. ஸர். எம். ஏ. முத்தையா செட்டியார்

திரு. G. K. சுந்தரம்

தலைவர் :

திரு. M. S. சிவசாமி, M.P.

துணைத் தலைவர்கள் :

திரு. S. A. முருகானந்தம், M.P.

,, K. R. இராமலிங்கம், M.L A.

செயலாளர்கள் :

திரு. R. வைத்தியநாதன்

,, P. S. S. பொன்னுசாமி நாடார்

பொருளாளர் :

திரு. சிவ. சி. நல்லபெருமாள்

இயக்கக் குழு :

திரு. செவாலியர் C. I. R. மச்சாது

,, J. M. B. ரோச்

,, S. K. S. ராஜமணி நாடார்

,, V. V. D. நித்தியானந்தம்

திரு. M. வெங்கிடகிருஷ்ணன், B.A.

,, A. சுப்பையா, M.A. (முதல்வர், வ.உ.சி. கல்லூரி)

,, K. பழனியாபிள்ளை (பேராசிரியர்)

,, S. M. பிள்ளை

உறுப்பினர்கள் :-

திரு. K. S. கிருஷ்ணமூர்த்தி
,, K. S. ராமன்
,, M. சோமசுந்தரம்
,, L. குத்தாலிங்கம் செட்டியார்
,, A. V. R M. சங்கரநாராயண முதலியார்
,, ஹரிஹரன்
,, M. சங்கரபாண்டியன் பிள்ளை
,, V. ராமகிருஷ்ண நாயக்கர்
,, N. P. S. ரத்தினம்
,, நடேச ஐயர்
,, D. திருஞானம்
,, R. J. சுந்தர்சிங்
,, P. சண்முகசுந்தரம்
,, P. V. K. S. குத்தாலிங்கம்
,, குத்தாலிங்கம்பிள்ளை
,, M. S. ராமையா பிள்ளை
,, முத்தையா
,, P. A. அப்துல்கபூர்
,, சேதுராமலிங்கம்
,, S. G. சுந்தரராமன்
,, ராமமூர்த்தி
,, V. S. அழகிரிசாமி செட்டியர் & பிரதர்ஸ்
,, J. சுந்தரராஜன்
,, S. கன்னையா
,, கந்தசாமி
,, R. V. சுவாமிநாதன், M.P.
,, Y. S. நியூட்டன்
திருமதி ஜெயலட்சுமியம்மாள், M.P.
திரு. A. M. செல்லச்சாமி, M.P.
,, J. குழந்தை
,, M. துரைசாமி
,, M. S. செல்வராஜன்
,, A. நல்லகண்ணு
,, D. செல்வராஜ்

திரு. A. R. சுப்பிரமணியபிள்ளை
,, K. S. நடேச ஐயர்
,, A. பச்சைப்பெருமாள் பிள்ளை
,, T. கனகசபாபதி பிள்ளை
,, P. S. சுப்பராமன்

திரு. S. S. உலகுமுத்து செட்டியார்
,, B. கோமதிநாயகம்
,, S. மீனாட்சிசுந்தரம் பிள்ளை
,, A. மந்திரம் பிள்ளை
,, A. சங்கரன் பிள்ளை

உள்ளுறை

எண்.		பக்கம்
1.	திருமுறைச் செல்வம் — டாக்டர் வை. இரத்தினசபாபதி	1
2.	புலவருடைய திறம் — திருமுருக. கிருபானந்தவாரியார்	7
3.	திருமுருகாற்றுப்படை — கி. வா. ஜகந்நாதன்	9
4.	தற்காலத் தமிழ் இலக்கியம் புலப்படுத்தும் சமுதாய உணர்வு பாயிரவுரை — டாக்டர் ந. சஞ்சீவி...	18
5.	என் மனம் கவர்ந்தவர் — The Most Rev. Thomas Fernando ...	27
6.	ஆகமம் — மகாவித்வான். ச. தண்டபாணி தேசிகர்	29
7.	ஏ. பி. எஸ். வீரபாகு (கவிதை) — துறைவன்	33
8.	தொல்காப்பியம் ஓர் உளநூல் மாளிகை — பேராசிரியர் கு. நா. சிவராமகிருஷ்ணன்	36
9.	தமிழ்த் திருமணம் — கீ. இராமலிங்கனார்	42
10.	திருமுறைச் செல்வர் — மறை. திருநாவுக்கரசு	56
11.	தர்ம வீரர் — என். இராம தீட்சிதர்	58
12.	கர்ம வீரர் ஏ. பி. சி. — எஸ். சுப்பையா முதலியார்	60
13.	ஒளியன் எழுந்தான், இருளன் ஓடு! (கவிதை) — டாக்டர் சாலை இளந்திரையன்	64
14.	மொழியியல் — டாக்டர் சி. பாலசுப்பிரமணியன்	66
15.	கழுகுமலை ஒரு கலைக் கருவூலம் — கு. அருணாசலக் கவுண்டர்	70
16.	பாரத மாதாவின் தவப்புதல்வர் — வடகுடி. என். பாபு தீக்ஷிதர்	81
17.	எளிமை எனும் ஒரு ஸதாசாரம் — டி. எஸ். பாலகிருஷ்ண சாஸ்திரி ...	83
18.	அறிவுச்செல்வம் — கவிஞர் மீ. ப. சோமு	86
19.	தொல்காப்பியம் - நூல்வரலாறு — பூ. சாம்பசிவம்	88
20.	மனிதர் பற்றிய மதிப்பீடுகள் — டி. என். சுகி சுப்பிரமணியன்	101
21.	நான் அறிந்த தலைவர் — T. கௌரி	107
22.	விடுதலைப் போர் வீரர் — K. S. ராமசாமி	111
23.	வரலாற்றுத் தென்கடலில் ஒரு முத்துக் குளிப்பு — பி. ஸ்ரீ.	112
24.	தியாக சீலர் — ஈ. வெ. கி. சம்பத்	118
25.	எங்கள் கூட்டுறவுத் தந்தை — ச. கன்னையா, ச. ஆழ்வார்	119
26.	நாடகக் கலையைத் தோற்றுவித்தவர் தமிழரே — நாரண. துரைக்கண்ணன் ...	127

எண்			பக்கம்
27.	ஏ. பி. எஸ். அவர்களுக்கு மணிவிழா நகரெங்கும் பொதுவிழா — எம். எஸ். செல்வராஜ்	...	131
28.	வீரபாகுபிள்ளைத் தமிழ் (கவிதை) — அ. செகதீசன்	...	133
29.	ஏ. பி. எஸ். வீரபாகு – வாழ்க்கைக் குறிப்புகள் — பூ. சாம்பசிவன்	...	139
30.	நான் ஏன் நேசிக்கிறேன் — எஸ். ஏ. முருகானந்தம்	...	152 அ
31.	காலத்திற்குரிய கல்விப் பணி — ம பொ. சிவஞானம்	...	152 ஈ

ENGLISH

32.	**Sri A. P. C. Veerabahu as Educationist**	Principal K. R. Appalachari	153
33.	**A. P. C , A Versatile Titan**	S. M. Pillai	160
34.	**The Challenge of Youth**	N. Mahalingam	169
35.	**The Sarvodaya Movement**	Richard Benedict Keithan	173
36.	**A Gifted Leader**	V. V. Nithianandam	176
37.	**Apeecee As I Know Him**	A. V. Subramania Aiyer	179
38.	**Lighted to Lighten**	Dr. R. Vajreswari, M A.,Ph D,	183
39.	**A. P. C. as I See**	Principal A. Subbiah	185
40.	**Salute from Sawyerpuram**	Principal D.S. George Muller	188
41.	**"Were There More Like You,..."**	Principal P. Jinaraja	190
42.	**An Orator and a Friend of Labour**	G. Ramanujam	195
43.	**The Scientific Approach to Religion**	T. V. Kamalasamy, B.A.	197
44.	**Veerabahu, The Educationist**	A. A. A. Chettiar	199
45.	**Events in a Notable Life**		200
46.	**Rajaji's Prophecy of Sri A. P. C. V's Success**		202

HINDI

47.	**Dakshin Ke Sardar**	Harihar Duraiswami
48.	**Nidar Netha**	E. Thangappan

காலத்தின் தேவைகளைக் கண்டாற்றும் மைந்தனுக்கு
ஞாலக் கலைச்செல்வி நாட்டும் மலர்ப்படையல்.

வாழ்த்துப்பா

தவத்திரு குன்றக்குடி அடிகளார்

உலகில் உயர்புகழ் ஒண்டமிழ் நாட்டில்
திருவளர் திருமந் திரநகர் எனப்பெறும்
தோலா முத்துடைத் தூத்துக் குடியில்
விழுமிய வேளாண் மரபினில் மேன்மைச்
சைவக் குடியினில் தோன்றிய தகவோய்!
வீரபா குவென விளங்கிடும் செம்மால்!
கற்றநூற் புலமை மிக்குடை அறிஞ!
விடுதலை வீர! மேன்மையார் செல்வ!
நிரந்தினி துரைக்கும் நாவல! மக்கள்
புன்கண் தீர்க்கும் புரவல! மாண்பார்
வள்ளுவன் வழியில் வ.உ.சி. நிதியில்
கல்விக்கண் வழங்கும் கருணை ஆர்வல!
வாழ்க்கைக் கும்பொருள் அளித்தனை! வளமொடு
பிறந்து முகிலெனப் பிறர்க்கு வழங்கினை!
ஈட்டும் நெறியினை இனிதே அறிந்துஅவ்
ஈட்டிய செல்வம் இன்புற வழங்கினை!
பிறப்பின் சார்பால் மேட்டுக் குடியே
ஆயினும் அன்பின் பெற்றியி னுலே
பேருல கத்தின் பெருநட் பாயினை!
நின்றன் மணிவிழா மன்பதைக்(கு) அணிவிழா!
உணவிற்கு உப்பே, போல வுலகிற்கு
உப்பே யானுய் வாழிய நீயே!
வாழி நின் குடும்பம்! வாழி நின் அறமே!
மாயிரு ஞாலத் தினிலே
மல்குக நின்புகழ்! வாழ்கஇவ் வுலகே!

"திருமுறைச் செல்வம்"

டாக்டர் வை. இரத்தினசபாபதி

முன்னுரை

திருவை அருளும் நூல்கள் திருமுறைகள் எனவும் திருவினுல் அருளப்பெற்ற நூல்கள் திருமுறைகள் எனவும் கூறுதல் மரபு.

'திரு' என்ற சொல்லுக்குப் பொருள்கள் பல உள. 'திரு' என்ற சொல்லானது மக்களாய்ப் பிறந்தோர் யாவரும் அடைய வேண்டிய ஒருவகை மனநிலையைக் குறிக்கும் சொல்லாக இங்கே கருதப்பெறுகிறது. அத்தகைய மனநிலையை அளிக்கும் நூல் திருமுறை.

'திரு' என்ற மனநிலையைப் பெற்ற சான்றோர்களாகிய திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி சுவாமிகள். மாணிக்கவாசகர் மற்றும் இவர் போன்றோர் அருளிய நூல்கள் ஆகையால் திருமுறைகள் எனப் பெற்றன.

'திரு' என்ற சொல்லுக்கே உரியவனுன இறைவன் 'சென்றடையாத திருவினன்' என வழங்கப்பெறுவன், அவன் உள் நின்று இயக்க எழுந்த நூல்கள் ஆயினமையின் திருமுறைகள்.

திருமுறைகள் பன்னிரண்டு. இவை மக்களுக்குச் செல்வமாக நின்று பயன்தருவன ஆதலின் திருமுறைகளைச் செல்வம் என்று கருதும் வழக்கு அமைந்தது. திருமுறைகள் எவ்வாறு செல்வமாக அமைகின்றன என்பதை இக்கட்டுரையில் தெளியலாம்.

திருவில் வரு பொருள்

'திரு' என்ற சொல்லானது ஒருவகை மனநிலையைக் குறிக்கும். மனித வாழ்க்கையின் அனுபவங்கள் எல்லாம் இன்பம், துன்பம் என்ற இரண்டிலேயே நிறைந்து விடுதலை நாம் காணலாம். இன்ப துன்ப அனுபவங்களை முறைப்படுத்தித் துய்க்கும் மனநிலை நான்கு வகைப்படும்.

1. இன்பத்தை இன்பமாகவும், துன்பத்தைத் துன்பமாகவும் எண்ணி, அவைஅவை வரும்போது அவை அவைகளை அனுபவிக்கும் மனநிலை. இத்தகைய மனநிலை உடையவன் உலகியல் வாழ்க்கையை வெறுத்து ஒடுபவன் அல்லன். இன்பமும் துன்பமும் தம்முள் மாறுபட்டவைகளாக இருக்கலாம். ஆயினும் உண்மையான வாழ்க்கை என்பது இவ்விரண்டும் இணையும்போதுதான் அமைகிறது இன்பமும் துன்பமும் ஒன்று ஒன்றை அழிக்கிறது என்பதைவிட, ஒன்று ஒன்றை நிறைவு செய்கிறது என்று கருதும் மனநிலை உடையவனுக இவன் வாழ்கிருன். இவன் வாழத் தெரிந்தவன்.

2. இன்பம் வரும்போது அங்கே துன்பத்தின் சுவடுகளை உண்டாக்கிக் கொண்டும் துன்பம் வரும்போது இன்பத்தின் நினைவுகளை இணைத்துக்கொண்டும் வாழ்கிற மனநிலை ஒன்று உண்டு. இன்பத்தையும் துன்பத்தையும் தத்தம் எல்லைகளைக் கடந்து போகவொட்டாமல் தடுத்து நிறுத்தி, ஒருவகைக் கட்டுப்பாட்டை அமைத்துக்கொண்டு வாழும் மனநிலை. வாழ்க்கையை ஒரு அறிவுப் பாசறையாக அமைப்பவனுக்கே இத்தகைய மனநிலையைப் பெற முடியும். இவனை "வாழ்க்கை வீரன்" என்று கூறலாம். இன்பத்தையும் துன்பத்தையும் அளவுக்குட்படுத்தி, அவை அவைகளை எல்லை கடந்துபோகாமல் தடுக்க வேண்டும். வாழத் தெரிந்தவன் ஒன்றை ஒன்றால் நிறைவு செய்கிறான். வாழ்க்கை வீரனே ஒன்றை ஒன்றால் கட்டுப்படுத்திக்கொள்கிறான்.

இன்பம் மிகுதிப்படும்போது துன்ப எண்ணத்தை வருவித்து, அதன் மூலம் இன்பத்தைக் கட்டுப்படுத்திக்கொள்கிறான். அவ்வாறே துன்பம் மிகுதிப்படும்போது இன்பத்தை இன்ப எண்ணத்தை வருவித்துக் கட்டுப்படுத்திக்கொள்கிறான்.

"இடுக்கண் வருங்கால் நகுக" என்றும் "தாம்தம் மகிழ்ச்சியால் மைந்துறும்போது இகழ்ச்சியிற் கெட்டாரை உள்ளுக" என்றும் வழிமுறைகளை எடுத்துக் கூறிச் செயல்படுத்துகிறார் திருவள்ளுவர். பொருள் உடைமை, பொருள் இன்மை போன்றவைகளால் உண்டாகும் மன எழுச்சி வீழ்ச்சிகளையும் இவ்வாறே ஒழுங்குபடுத்திக்கொள்ள வேண்டும் என அறநூல்கள் வரையறை செய்கின்றன.

3. இன்பத்தையும் துன்பத்தையும் ஒப்பக் கருதும் மனநிலை. இது இன்பமும் துன்பமும் ஒன்றை ஒன்று நிறைவு செய்வன என எண்ணி அனுபவிக்கும் மனநிலையும் அன்று; இன்பத்தால் துன்பத்தையும் துன்பத்தால் இன்பத்தையும் சமப்படுத்தி அனுபவிக்கும் மனநிலையும் அன்று. இம்மன நிலைக்கு எடுத்துக்காட்டாக "ஓடும் பொன்னும் ஒக்கவே நோக்குவார்" என்ற வாய்மொழியைக் காட்டுவர். இது ஒரு வகையில் மதிப்பீடு செய்யும் முறை. பொன்னைட்டைப் பொன்னென்று மண்ணைட்டை மண்ணென்று மதிப்பீடு செய்தல் நேர்மையான முறையே. இத்தகைய மதிப்பீட்டு முறையில், மதிப்பீடு செய்பவன் தன்னைப் பொருள்களோடு இணைத்துக்கொள்ளமாட்டான். மதிப்பீடு செய்பவன் மனிதனேயானாலும், அவன் தன்னை உணர்ச்சியற்ற இயந்திரமாக அமைத்து மதிப்பீடு செய்கிறான். நிறுக்கப் பெறும் பொருள் சர்க்கரையாக இருந்தாலும், புளியாக இருந்தாலும் தராசின் மதிப்பீட்டு முறை ஒன்றுதானே!

"காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு" என்பது ஒரு பழமொழி. இங்கே தாழ்வு உயர்வாக மதிப்பீடு செய்யப்பெறுகிறது. மதிப்பீடு செய்யும் பொருள் தன்னையும் இணைத்துக் கொள்ளுகிற காரணத்தால் தாழ்ந்த பொருள் உயர்ந்த பொருளாக மாற்றம்கொள்ளப் பெறுகிறது. இது தவறான மதிப்பீட்டு முறை.

இனி, ஓடும் பொன்னும் ஒக்கவே நோக்குவார் என்ற தொடரில் 'ஒக்க' என்பதன் பொருள் என்ன? மண்ணோடும் பொன்னோடும் ஒன்றே என்றால் ஒன்றுக்கும் பற்றாத மண்ணைட்டைப் பொன்னைட்டின் மதிப்பீட்டு முறையளவுக்கு உயர்த்துகிறார் அல்லது பொன்

ஞேட்டின் மதிப்பை மண்ணேட்டின் மதிப்பீட்டு முறையளவுக்குத் தாழ்த்துகிறார் என்பது பொருளாகும்.

இக்கருத்தை வேறு ஒரு வகையாலும் சிந்திக்கலாம். என் எதிர் வீட்டுக்காரர் சான்றோர்களையும் கயவர்களையும் ஒக்கவே நோக்குவார் என்று சொல்லுவோமாயின் அவருடைய பண்பு என்ன?

மேலும் ஒன்று. ஓட்டையும் பொன்னையும் ஒன்றுகவே மதிக்கும் தன்மையைச் சிறு குழந்தைகளிடத்திலும் காணலாம். இரண்டையும் ஒன்றுகவே வைத்து எண்ணி, விளையாடி இன்பம் கொள்ளுகிறது அக்குழந்தை. எனவே ஓடும் பொன்னும் ஒக்கவே நோக்கும் தன்மையானது சிறு குழந்தைத் தன்மை என்பதாக நாம் அமைத்துக் கொள்ள முடியுமா?

ஓட்டையும் பொன்னையும் ஒக்க நோக்கும் போது, ஓட்டை ஓடாகவும், பொன்னைப் பொன்னுகவும் கருதுவது, அவற்றுக்கேற்ப மதிப்பீடு செய்வது ஆகிய செயல்களில் குறை பாடு எதுவும் இல்லை. ஓட்டின் மதிப்பீட்டு முறையில்தான் ஓடு பார்க்கப் பெறுகிறது; பொன்னின் மதிப்பீட்டு முறையில்தான் பொன்னும் பார்க்கப் பெறுகிறது. ஆனால் இரண்டாலும் தனக்குப் பயன் இல்லை என்பதே பொருள் ஆகிறது. உடைந்த மண் ஓட்டினால் எப்படித் தனக்குப் பயன் இல்லையோ அப்படியே பொன்னாலும் தனக்குப் பயன் இல்லை என்ற வகையில் இரண்டும் ஒன்றே என நினைக்கும் தன்மை.

இனி, ஓடும் பொன்னும் ஒக்கவே நோக்குவார் என்ற தொடரில் அமையும் வேறொரு நயத்தையும் சிந்திக்க வேண்டும். சங்கப் புலவன், கண்ணியன் பூங்குன்றன் இம்மனநிலையை விளக்கும் முறை ஒன்று உண்டு. "மாட்சியில் பெரியோரை வியத்தலும் இலம்; சிறியோரை இகழ்தல் அதனினும் இலம்" என்பது அவன் வாக்கு. 'மாட்சியில்' என்ற ஒரே சொல்லை இருவருக்கும் இணைத்துக் காட்டுகிறான். மாட்சியிற் பெரியோர், மாட்சி இல் சிறியோர்: மாட்சிமையினால் பெரியவர்கள், மாட்சிமை இன்மையினால் சிறியவர்கள் ஆனார்கள். பெரியவர்களை வியந்து பாராட்டவும் இல்லை; சிறியவர்களை இகழ்ந்து பேசவும் இல்லை. வியந்து பேசவேண்டிய உலகியல் முறை இருக்கவும் அதைக் கடைப்பிடிக்கவில்லை; இகழ்ந்து கூறலாம். ஆயினும் அறம் கருதிக் கூறவில்லை. இங்கே பெரியவர்களும் சிறியவர்களும் அவரவர்க்குரிய தன்மையில் மதிப்பீடு செய்யப்பெறுகிறார்கள் என்பதிற் குறையில்லை. ஆனால் ஓடு பொன் எடுத்துக்காட்டினால் இம்முறை மாற்றம் பெறுகிறது. ஓடும் பொன்னும் ஒக்கவே நோக்குவார் என்பதே தொடர் என்றாலும் பொன்னைது ஓட்டின் மதிப்பீட்டின் அளவுக்கு இழிவுபடுத்தப் பெற்றுப் புறக்கணிக்கவே பெறுகிறது என்பதையும் நாம் உணர்தல் வேண்டும். அவ்வாறே இன்ப துன்பங்களை ஒன்றுக எண்ணும் நிலை என்று கூறினால் துன்பத்தைப் பொருட்படுத்துவதில்லை என்பது பொருளாகாது; இன்பத்தைப் பொருட்படுத்தாமையோடு புறக்கணிப்பதும் உண்டு என்பது பொருளாக அமைகிறது. அதனாலேயே சேக்கிழார், ஓடும் பொன்னும் ஒக்கவே நோக்குவார் என்று கூறிய உடனேயே, "வீடும் வேண்டா விறலின் விளங்குவார்" என்று கூறி முடிக்கின்றார்.

4. இன்பம் துன்பம் என்ற இரண்டையும் கடந்த நிலை. இன்பம் துன்பம் என்ற இரண்டையும் கடந்த நிலையைச் சூனியம் அல்லது வெற்றுநிலை மனம் என்று கூறும் முறை உண்டு. இன்பமும் துன்பமும் வந்து தாக்கினாலும், அவற்றோடு இணைந்து நிற்கும் காலத்திலேயே தாக்கப் பெறாமல் தனித்து நிற்கும் நிலை. கண்ணாடிக் குடுவையில் ஊற்றப் பெறுகின்ற பொருள் என்ன நிறமாக இருக்கிறதோ, அதே நிறமுடையதாக அக் கண்ணாடிக் குடுவையானது தோற்றமளிக்கிறது. உண்மையில் அக் கண்ணாடிக் குடுவை அந்நிறத்தை ஏற்றுக் கொள்வதில்லை. இது கலந்து நிற்கும் போதும் கடந்து நிற்கும் மனநிலை. இதனை ஒருவகையான வீரநிலை என்று குறிப்பிடுகிறார் சேக்கிழார்.

மழையானது மலைமேலும் பெய்கிறது; நிலத்திலும் பெய்கிறது. மலைமேல் பெய்த மழைநீர் அருவியென இறங்கி ஓடிவிடுகிறது. மலைமேல் எத்தகைய மாற்றத்தையும் அது உண்டாக்கவில்லை. அதே மழைநீர் நிலத்தில் பட்டதும், நிலமும் நீரும் இணைகின்றன. சிலர் நடக்க முற்பட்டதும் சேறு உண்டாகிறது. பிறகு அது யாராலும் நடக்க முடியாத அளவுக்குத் தூய்மை அற்றதாக ஆகிவிடுகிறது. மலையில் நாம் இத்தகைய மாற்றத்தை காணமுடியாது.

இன்ப துன்பங்களிற் கலந்து நின்றாலும் தாக்கப் பெறாமல் கடந்து நிற்கும் மன நிலையை வீரநிலை என்று குறிப்பிட்டாலும் 'திரு' என்றும் 'திருநின்ற செம்மை' என்றும் குறிப்பிடும் மரபு உண்டு. இத்தகைய மனநிலையை — திருவை — திருநின்ற செம்மையை அளிக்கும் நூல்கள் **'திருமுறைகள்'** என்று கூறப்பெற்றன.

திருமுறைகள் செல்வம் ஆகுமா?

திருவை அளிக்கும் நூல்கள் திருமுறைகள். 'திரு' என்பது ஒருவகை மனநிலை; வீர நிலை. அதுவே ஒரு செல்வம். எனவே திருமுறைகள் என்றாலே வீரநிலை என்ற செல்வத்தைத் தரும் நூல்கள் என்று பொருள்படுகிறது. செல்வத்தைத் தரும் நூல்களைச் செல்வம் என்ற சொல்லால் மீண்டும் குறிப்பிடவேண்டுமா? செல்வம் தரும் நூலாகிய செல்வம் என்று கூறுதல் கூறியது கூறலாக அமையாதா?

'திரு' என்ற சொல்லால் குறிக்கப் பெறும் செல்வம் கடந்த நிலையில் அமையும் செல்வம். செல்வம என்ற சொல்லால் குறிக்கப் பெறுவது கலந்த நிலையில் அமையும் செல்வம்.

எனவே கடந்த நிலைச் செல்வத்தையும், கலந்த நிலைச் செல்வத்தையும் தரும் நூல்கள் என்பது பொருளாக அமைகிறது. கலந்த நிலைச் செல்வம் என்பது எது?

செல்வம் என்பதன் இலக்கணம் என்ன? செல்வம் என்பது சிந்தையின் நிறைவு என்பது இலக்கணம். இவ்விலக்கணத்தைச் சேக்கிழார் **"யாதுங் குறைவிலார்"** என்ற தொடரால் குறிப்பிடுவார்.

சிந்தையின் நிறை என்பதன் பொருள் என்ன? சிந்தை என்பது ஒரு கூட்டுப் பொருள். மூன்று பகுதிகளால் இணைக்கப் பெற்ற முழுமைப் பொருள் சிந்தை. அறிவுக் கூறு, செயற் கூறு, இச்சைக் கூறு என்ற மூக்கூற்று இணைப்பே சிந்தை.

சிந்தையின் நிறைவே செல்வம் எனின், அது மூன்று கூறுகளாலும் நிறைவு பெறுதல் வேண்டும். மூன்று கூறுகளும் நிறைவு பெற்றுவிட்டாலே செல்வம் என்று கூறினாலும், அதற்குமேல் விளையும் விளைவைத்தான் 'செல்வம்' என்று குறிப்பிடுகிறார். இத்தகைய மூன்று கூறுகளையும் நிறைவித்த நிலையில் எழும் இன்பத்தையே நம் முன்னோர் 'முத்தமிழ்' என்ற சொல்லாற் குறிப்பிட்டனர்.

திருமுறைகள் நிறைவாக்கும் முறை

திருஞான சம்பந்தப் பெருந்தகையும் திருநாவுக்கரசுப் பெருந்தகையும் ஒரே காலத்தில் இணைந்து தொண்டாற்றிய பெருந்தகைகள். இருபெருங் குரவர்களும் ஒரே காலத்தில் தொண்டாற்றுமாறு இறையருள் இயக்கியது. ஏன்?

மனித மனத்தின் இருபெருங் கூறுகள் அறிவும் செயலும். இவ்விரு கூறுகளுக்கும் அடிப்படையாகவும் முடிவாகவும் இருப்பது மூன்றாங் கூறாகிய இச்சைக்கூறு. இதுவே அடிப்படையாக இருக்கும்போது நம்பிக்கை என்றும், முடிவு நிலையாக நிற்கும் போது 'இணைக்கும் அன்பு' என்றும் பெயர் பெற்று விளங்கும்.

அறிவும் செயலும் இணைந்தே நிற்பவை. தெளிந்த அறிவுதான் செயற்படும். செயற்பாடு அறிவைத் தெளிவாக்கவல்லது. கருத்துமுறைக் கல்வியும் செயல் முறைக் கல்வியும் இணைந்தே நிற்கவேண்டும். உண்மை என்பது வரையறையையும் தெளிவையும் கொண்டது. கருத்துமுறைக் கல்வி வரையறையை அமைப்பது; செயல்முறைக் கல்வியானது தெளிவைக் கொடுப்பது:

திருஞானசம்பந்தப் பெருந்தகை கருத்து முறைக் கல்வியை மக்களுக்கு அமைத்துத் தொண்டாற்றியவர்; திருநாவுக்கரசுப் பெருந்தகை செயல்முறைக் கல்வியை மக்களுக்கு அமைத்துத் தொண்டாற்றியவர். இரண்டும் தனித்தனி நின்றாற் பயனில்லை என்ற கருத்தினால்தான் திருவருள் இருவரையும் ஒன்றாக இணைத்தே தொண்டாற்ற வைத்தது. இதனாலேயே திருஞானசம்பந்தர் தத்துவ நிர்ணயம்-கொள்கை விளக்கம் செய்யும் தொண்டில் தலைநின்றார். "திருநாவுக்கரசு வந்த திருத்தொண்டின் நெறிவாழ" என்ற செயல்முறைக் கல்விக்கு உறுதுணையாக நின்ற அப்பரடிகள் திறத்தினை உலகுக்கு உணர்த்தினார் சேக்கிழார்.

முதல் மூன்று திருமுறைகளாகிய திருஞானசம்பந்தர் திருமுறைகள் மூன்றும் சிந்தையின் அறிவுக் கூற்றை நிறைவு செய்வன எனக்கொள்ளவேண்டும். நான்கு ஐந்து, ஆறு எனப் பெறும் மூன்று திருமுறைகளாகிய திருநாவுக்கரசர் திருமுறைகள் சிந்தையின் செயற் கூற்றை நிறைவுசெய்வன. இனி, ஏழாந் திருமுறையாகிய சுந்தரர் தேவாரம் அடிமையும் தோழமையும் ஆம் இரு நெறிகளை விளக்கிக் காட்டும் அறத்தை மேற்கொண்டு சிந்தையின் இச்சைக் கூற்றை நிறைவு செய்கிறது எனக்கொள்ளல் வேண்டும். மணிவாசகப் பெருமானுடைய திருவாசகமும் திருக் கோவையாரும், எட்டாந் திருமுறையாக நின்று, நிறைவு பெற்ற சிந்தையிலிருந்து பொங்கியெழும் இன்பத்தை நமக்கு எடுத்துக்காட்டுவனவாக அமைந்தன.

எனவே, அறிவு, செயல், இச்சை என்ற மூன்று கூறுகள் கொண்ட இணைப்புப் பகுதியாகிய சிந்தையை, இம்மூன்று கூறுகளாலும் நிறைவுபெற வைக்கின்ற பணியை முறையே திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் தேவாரங்கள் செய்கின்றன என்றும், சிந்தையின் நிறைவில் எழும் செல்வமாம் இன்ப விளக்கத்தை எழில் பெற எடுத்துக்காட்டுவதே மணிவாசகரின் எட்டாந் திருமுறையின் தொண்டு என்றும் கொள்ளுதல் வேண்டும். ஏனைய ஐந்து திருமுறைகளும் இவ்வாறே தொண்டுபுரியும் ஆற்றை உய்த்துணர்ந்து கொள்க. விரிப்பிற் பெருகும்.

முடிப்புரை

மேலே எடுத்துக் காட்டிய வாற்றால், 'திரு' என்ற சொல்லால் வரையறை செய்யப் பெறும் பொருள் இது என்பதும், 'செல்வம்' என்ற சொல் திருமுறைகளுக்கு எவ்வாறு பொருந்துகிறது என்பதும் விளக்கப் பெற்றன.

புலவருடைய திறம்

திருமுருக கிருபானந்தவாரியார்

ஒரு தேசத்திற்குப் புகழ் புலவர்களால் விளங்கின்றது; சிறந்த புலவர்கள் இருந்து நாட்டை அலங்கரிக்கின்றார்கள்; மேலும் புலவர்கள் திறமையாகப் பாடுவதிலும் திறமையாகப் பேசுவதிலும் வல்லவர்கள். அக்காலத்துப் புலவர்கள் தேனூறும் பாடலுக்கு மன்னர்கள் வாயூறி நின்றார்கள். மன்னவர்கள் மட்டுமா? ஆண்டவன் கூட.

"பாவலான் ஒருவன் செந்தமிழ்க் கிரங்கிப்
பரவையார் ஊடலை மாற்ற
ஏவலா ளாகி இரவெலாம் உழன்றான்"

ஏகநாயகனுகிய எம்பெருமான் என்றால், பாவலர் பெருமை பாட்டுக்கும் ஏட்டுக்கும் அடங்குமோ?

சொக்கநாதப் புலவர் என்ற ஒருவர் மதுரையில் இருந்தார். அவர் திருமலை நாயக்கர் காலத்தவர். அவர் பல பாடல்கள் பாடியிருக்கின்றார். ஒவ்வொரு பாடலும் சுவை மிகுந்தது. சொல் நடை, பொருள் நடையுடன் கூடியது.

சொக்கநாதப் புலவர் ஒரு சமயம் திருக்களந்தை என்ற திருத்தலஞ் சென்றார்.

சுவாமி திருமுன் நின்று அழகாகப் பாடினர். சிவலிங்கத்திலிருந்து ஒரு குரல் எழுந்தது.

"அன்பனே! உனக்கு என்னவரம் வேண்டுமோ கேள்"

இந்தக் குரலைக் கேட்டவுடனே புலவர் திடுக்கிட்டுப் போனர். எம்பெருமான் திருவருளை எண்ணினர். அவர் கண்களிலிருந்து விண்மாரி என நீர் வழிந்தது; சொல் குழறியது.

ஆண்டவனிடம் அவர் என்ன கேட்டார்? அழிகின்ற பொன்னையும், பொருளையும், நிலபுலன்களையுமா கேட்டார்? இல்லை இல்லை.

நிரம்பிய பொன்னும், பொருளும், நிலபுலன்களும் உடையவன் மகிழ்ச்சியாகவும் திருப்தியாகவுமா இருக்கின்றான்? செல்வம் உயர உயரக் கவலைகள் உயருகின்றன. மன்னாதி மன்னரும் கவலைகின்றார்கள்; பெரிய கோடீஸ்வரர்கள் மனச்சாந்தியின்றி வருந்துகின்றார்கள்.

ஆதலால் அறிவு நிறைந்த புலவர்பெருமான் அல்லலுக்கு உறைவிடமான செல்வத்தை வேண்டினரில்லை.

அவர் வேறு என்ன வேண்டினர்? இறைவன் நமது உள்ளத்தில் வந்து இருப்பதுவே மேலான இன்பம் என்று கருதினர்.

ஒரு மாகாணத்துக் கவர்னர் — அல்லது முதன்மந்திரி நமது வீட்டில் வந்து சில நேரம் தங்கிவிட்டுச் சென்றால், அதற்கு எவ்வளவு பெருமை ஏற்படுகின்றது.

அகிலாண்ட கோடி பிரமாண்ட நாயகனை எம்பெருமான் நமது உள்ளத்தில் எழுந்தருளினால் அதைவிட மேலான ஒரு பெரும் பேறு இருக்க முடியுமா? அதுவே பேரின்பம் என்றெல்லாம் அவர் எண்ணினர்.

"சுவாமீ! கருணைக்கடலே! தேவரீர் என் உள்ளத்தில் எழுந்தருளியிருக்க வேண்டும்" என்றார்.

இறைவன் புலவருடன் வேடிக்கையாகப் பேசுவதை விரும்பினர். "அன்பனே! இதோ இந்தத் திருக்களந்தைக் கோயிலிலே இருக்கின்றேன். இங்கு என்பால் பல அடியார்கள் இடையருது வந்து வந்து வழிபட்டு வரம் பெறுகின்றார்கள்; இதனை விடுத்து உன் உள்ளத்தில் நான் எப்படி வர இயலும். அப்படி வந்து தங்கினால் இங்கு வருகின்ற அடியார்கட்கு ஏமாற்றமாகிவிடும். ஆகவே நீ கேட்ட வரத்தின்படி நான் உன் உள்ளத்தில் எப்போதும் தங்கியிருக்க முடியாது" என்றார்.

புலவர் இந்த வாசகத்தைக் கேட்டார். இறைவன் எங்கும் தங்கும் நிறையுடையவன். பல்வேறு வடிவும் பல்வேறு செயலும் பூண்ட பரிபூரணன். எனினும் இறைவன் "நான் திருக்களந்தைக் கோயிலில் இருக்கின்றேன். உன் உள்ளத்தில் எவ்வாறு வந்து தங்குவேன்" என்று கூறியதனால் நாமும் சமர்த்தாகத்தான் கூறவேண்டும் என்று கருதினர்.

"ஆண்டவனே! நீர் இரண்டு இடங்களிலும் ஏக காலத்தில் இருக்க ஒரு வழி கண்டு பிடித்திருக்கின்றேன். அது என்ன வழி தெரியுமா? கூறுகின்றேன் கேளும்:"

"நீர் முன்னம் உமது திருமேனியில் இடப்பாகத்தை என் தாய் உமாதேவிக்குத் தந்தீர். அவருடைய வலப்பாகத்தைப் பெற்றுக் கொண்டீர். அந்த வகையில் உமது திருமேனியில் இடப்பாகமும் அம்மையின் வலப்பாகமும் சேர்ந்து இப்போது இங்கே காட்சியளிக்கின்றீர்!

"ஐயனே? இனி உமது திருமேனியில் பாதியும் அம்மையின் மேனியில் ஒரு பாதியும் உண்டல்லவா? அந்த இரண்டும் சேர்ந்தால் ஓர் உருவம் ஆகுந்தானே? அப்போது இரண்டு வடிவங்கள் ஆகும்; ஒன்று திருக்களந்தைத் திருக்கோயிலில் இருக்கட்டும். மற்றொன்று அடியேன் மனக்கோயிலில் இருக்கட்டுமே" என்றார்.

புலவருடைய சொல் திறத்தைக் கேட்டுப் பெருமான் பெருமகிழ்ச்சியுற்றார். அவருடைய உள்ளக் கோயிலில் எழுந்தருளி அருட்காட்சி தந்தருளினர். அவர் பாடிய அற்புதமான பாடல் இதோ.

ஆகத்திலே யொருபாதி யென் னம்மைக்
களித்தவன் தன்
பாகத்திலே யொன்று கொண்டாய்;
அவள் மற்றைப் பாதியும் உன்
தேகத்திலே பாதியும் சேர்ந்தால், இருவர்
உண்டே; சிவனே
ஏகத்திராமல் இருப்பாய் களந்தையும்
என்னெஞ்சுமே.

மணிவிழாத் தம்பதிகள் பாரதப் பிரதமர் திருமதி காந்தியுடன் (1972)

பாரதப் பிரதமர் பண்டித நேருவுடன்



நமது ஏ. பி. ஸி. வீரபாகு **Sir** ஆர்தர் ஹோப்புடன் **(1944)**



சென்னை ஆளுநர் ஸ்ரீ பிரகாசவுடன்

நமது இந்திய ராஷ்டிரபதி கிரியுடன் ஏ. பி. எஸ். வீரபாகு



தமிழக ஆளுநர் மேதி அவர்களுடன் நமது ஏ. பி. எபி. வீரபாகு

தமிழக ஆளுநர் ஜான் அவர்களை வரவேற்றல்

தூத்துக்குடி ஆழ்கடல் துறைமுகம் என அறிவிக்க வருகைதந்த தலைவர் நேருஜி **(16th April 1959)** வீரபாகுவுடன் ஏதோ விளக்கம் சொல்லுகிறார்

திருமுருகாற்றுப்படை

கி. வா. ஜகந்நாதன்

கடைச்சங்க நூல்கள் என்று வழங்குபவை பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண் கீழ்க்கணக்கு என்பவை. "மூத்தோர்கள் பாடி யருள் பத்துப்பாட்டும் எட்டுத் தொகையும், கேடில் பதினெட்டுக் கீழ்க் கணக்கும்" என்று இந்த மூன்றையும் ஒரு சேரத் தமிழ்விடு தூது சொல்கிறது. இந்த மூன்று வரிசையிலும் உள்ள நூல்கள் முப்பத்தாறு. இவற்றை, பாட்டு, தொகை, கீழ்க்கணக்கு என்று சுருக்கமாகவும் குறிப்பிடுவதுண்டு.

இந்த மூன்று வரிசைகளிலும் முதலில் நிற்பது பத்துப்பாட்டு, அந்தப் பத்துப் பாட்டில் முதலில் இருப்பது திருமுருகாற்றுப்படை. மேலே சொன்ன முப்பத்தாறு நூல் களிலும் முதலாவதாக இருப்பது திருமுருகாற்றுப்படை. தத்துவங்கள் முப்பத்தாறு என்றும், அவற்றில் முதலில் நிற்பது சிவதத்துவம் என்றும், சைவசித்தாந்தம் கூறும். முப்பத்தாறு தத்துவங்களில் முதலில் நிற்கும் சிவதத்துவத்தைப் போல, சங்க நூல்கள் முப்பத்தாறிலும் முதலாவது நிற்பது திருமுருகாற்றுப்படை.

சங்க நூல்களில் இரண்டே நூல்கள் 'திரு' என்னும் சிறப்புடன் வழங்குகின்றன; திருமுருகாற்றுப்படை, திருக்குறள் என்பன.

சைவத் திருமுறைகள் பன்னிரண்டு, அவற்றில் பதினோராந் திருமுறையில் உள்ள நூல்களில் ஒன்றாகவும் திருமுருகாற்றுப்படையைக் கோத்திருக்கிறார்கள். ஆகவே இலக் கியச் சுவை கருதிப் பத்துப்பாட்டிலும், தெய்வீகப் பெருமை கருதிப் பதினோராந் திருமுறை யிலும் சேர்க்கப் பெற்ற சிறப்பை இந்த நூல் பெற்றிருக்கிறது.

பத்துப்பாட்டில் இது முன்னுல் இருப்பதற்குக் காரணம் என்ன? 'நக்கீரர் பாடிய தனுல் அப்புலவரின் சிறப்புக் கருதி வைத்திருக்கலாம்; காலத்தால் மூற்பட்டதென்றும் வைத் திருக்கலாம்' என்ற கருத்துக்களுக்கு இடம் இல்லை. நக்கீரரையும் விடக் காலத்தால் முற் பட்ட கபிலர் பாடிய குறிஞ்சிப்பாட்டு எட்டாவது நூலாக இருக்கிறது. நக்கீரருடைய பெருமையைக் கருதியிருந்தால் அவர் இயற்றிய மற்றொரு நூலாகிய நெடுநல்வாடையை இரண்டாவதாக வைத்திருக்கவேண்டும்; அதனை ஏழாவதாகக் கோத்திருக்கிறார்கள். முருக னுடைய பெருமையைக் கூறும் சிறப்புக் கருதியே இது பத்துப்பாட்டில் முதல் இடம் பெற் றிருக்கிறது.

முருகனுக்குரிய குறிஞ்சித் திணையை முதல் திணையாக வைத்துப் போற்றுவதும் முருகனுக்குரிய வெட்சி மலரை அடையாளமாகக் கொண்ட புறத்திணையாகிய வெட்சியை

முதலாக வைத்துப் போற்றுவதும் தமிழர் மரபு. அதனால் அவனைப்பற்றிய பாட்டுக்கு முதலிடம் தந்தார்கள்.

திருமுருகாற்றுப்படை என்பதில் உள்ள 'திரு' என்ற அடை தெய்வத் தன்மையைக் குறிக்கிறது. முருகாற்றுப்படை என்பதே நூலின் பெயர். அத்தொடர் முருகு, ஆற்றுப்படை என்ற இரண்டு சொற்களால் ஆனது. முருகு என்பது முருகனுடைய பெயர். "வாழிய முருகே" என்று நற்றிணையில் வருகிறது. ஆற்றுப்படை என்பது ஆற்றிலே படுத்தல் அல்லது வழியிலே சேர்த்தல் என்ற பொருளுடையது. வேறு வகையில் சொன்னால் 'வழிகாட்டி' என்று சொல்லலாம். முருகனை அடைவதற்குரிய வழியிலே ஈடுபடுத்தி வழிகாட்டுவதனால் இதற்கு முருகாற்றுப்படை என்ற பெயர் அமைந்தது.

பலவகையான சிற்றிலக்கியங்களில் ஒன்று ஆற்றுப்படை. தொல்காப்பியத்தில் அதற்குரிய இலக்கணம் இருப்பதனால் அந்த இலக்கணம் தோன்றுவதற்கு முன்பே ஆற்றுப் படை இலக்கியங்கள் தமிழில் இருந்திருக்க வேண்டும் என்று புலனாகிறது. பத்துப் பாட்டில் ஐந்து நூல்கள் ஆற்றுப்படைகள்.

புலவர், பொருநர், பாணர், விறலியர், கூத்தர் ஆகிய கலைஞர்கள் எப்போதும் தமிழ் நாட்டில் உலவிக் கொண்டே இருப்பார்கள். தம்முடைய கலையை அறிந்து சுவைத்துப் பாராட்டும் இயல்புடையவர்களைத் தேடிச் செல்வார்கள். அத்தகையவர்களை அடைந்து தம் கலைத்திறமையைக் காட்டிப் பரிசு பெறுவார்கள்.

அவ்வாறு ஒரு வள்ளலை அடைந்து பரிசு பெற்று வரும் கலைஞன் ஒருவன், தன் எதிரே வரும் கலைஞர்களைக் கண்டு, "நீங்கள் இன்னாரிடம் சென்றால் உங்கள் கலையைப் பாராட்டி அவர் வேண்டிய பரிசுகளை வழங்குவார்" என்று சொல்லும் பாணியில் அமைந்தது. ஆற்றுப்படை. வள்ளல் இருக்கும் ஊருக்குச் செல்லும் வழியையும், வழியிலுள்ள காட்சி களையும், வள்ளலின் இயல்பையும் அவனுடைய கொடைச் சிறப்பையும், தான் அவனிடம் சென்று பரிசுபெற்றதையும் சொல்லி, நீங்களும் போங்கள் என்று வழிகாட்டுவான் பரிசு பெற்ற கலைஞன். அவ்வாறு சொல்லும்போது தமிழ்நாட்டுப்பகுதிகளும் வள்ளலின் வரலாறும் பாட்டில்வரும். மேல்நாட்டினர் பயணநூல் (Travelogue) என்று ஒருவகை நூல்களைக் குறிப் பர். அந்த வகையைச்சேர்ந்தது ஆற்றுப்படை என்றுகூடச் சொல்லிவிடலாம்.

முருகனுடைய அருளைப் பெற்றவராகிய நக்கீரர், அதனைப்பெற வேண்டும் என்ற ஆர்வமுடைய புலவன் ஒருவனைப்பார்த்து, "நீ இன்ன இன்ன இடங்களுக்குச் சென்றால் முருகனைக் காணலாம். அவனை இன்னவாறு துதித்து வணங்கினால் அவன் உன்முன் தோன் றிப் பெறலரும் பரிசை வழங்குவான்" என்று சொல்வது திருமுருகாற்றுப்படை.

இப்போது முருகன் எழுந்தருளியிருக்கும் திருப்பதிகளில் ஆறுபடை வீடுகள் என் பவை மிகச்சிறப்பாக விளங்குகின்றன. அருணகிரிநாதர் அவற்றைத் திருப்புகழிலும் பிற பாடல்களிலும் பாடியிருக்கிறார். கந்தபுராணத்தில் ஒவ்வொரு படைவீட்டுக்குமுரிய வணக்கம் இருக்கிறது. இந்த ஆறுபடைவீடுகள் என்றவழக்குக்கு மூலகாரணமாக இருப்பது திருமுருகாற்றுப்படையே. திருப்பரங்குன்றம் திருச்சீரலைவாய், திருவாவினன்குடி, திருவேரகம்

குன்றுதோறுடல், பழமுதிர்சோலை என்பனவற்றையே இப்போது ஆறுபடைவீடுகள் என்று வழங்குகின்றனர். முருகனை இந்த ஆறு இடங்களிலும் காணலாம் என்று சொல்வதோடு வேறு பல இடங்களிலும் அவனைத்தரிசிக்கலாம் என்று நக்கீரர் சொல்கிறார்.

திருமுருகாற்றுப்படை தோன்றிய வரலாற்றைத் திருவிளையாடற் புராணங்கள், திருப்பரங்கிரிப் புராணம், சீகாளத்திப்புராணம் ஆகியவை சொல்கின்றன. நக்கீரர் சிவ பெருமான் பாடிய பாட்டுக்கு அகந்தை காரணமாகக் குற்றஞ்சொல்லி, அவனுடைய நெற் றிக் கண் தீயினால் வெதும்பி நோயுற்றாரென்றும், சிவபெருமான் கயிலையை நோக்கிப் புறப் பட்டுச் செல்லும் வழியில் திருப்பரங்குன்றத்தில் ஒரு பூதத்தினால் குகையில் அடைக்கப் பட்டார் என்றும், அப்போது திருமுருகாற்றுப்படையைப் பாடினார் என்றும், முருகன் எழுந் தருளிப் பூதத்தைக் கொன்று நக்கீரரையும் அவருடன் சிறைப்பட்டிருந்த 999 பேரையும் விடுவித்தான் என்றும், முருகனுடைய அருளால் நக்கீரர் சீகாளத்தி சென்று அங்கேயே கைலைத்தரிசனம் செய்து நோய் நீங்கப்பெற்று மதுரைக்கு மீண்டாரென்றும் அந்தப் புராணக் கதைகள் மூலம் அறிகிறோம். இந்தக் கதைகளுக்கு வரலாற்றுச் சான்றுகள் இல்லாவிட்டா லும், அருணகிரிநாதர் முதலிய தெய்வப்புலமை அருளாளர்கள் இவற்றை அங்கங்கே எடுத்துச் சொல்கிறார்கள்.

திருமுருகாற்றுப்படை இன்றும் பாராயண நூலாக இருந்து வருகிறது இதைப் பாராயணம் செய்து நலம் பெற்றோர் பலர். பாராயணம் செய்யும் நூலுக்குப் பயன்கூறும் பாட்டு இருப்பது வழக்கம். திருமுருகாற்றுப்படைக்கும் பயன் வேண்டுமென்று கருதி யாரோ ஓர் அன்பர் பத்து வெண்பாக்களை இயற்றியிருக்கிறார். இந்த நூலைப் பாராயணம் செய்யும் பக்தர்கள் அவற்றை இறுதியிலே சொல்லி முடிப்பது வழக்கமாக இருக்கிறது. அந்தப்பாடல்கள் மனத்தை உருக்கும் தகைமை உடையன.

*

திருமுருகாற்றுப்படைக்கும் மற்ற ஆற்றுப்படை நூல்களுக்கும் சில வேறுபாடுகள் உண்டு. பத்துப்பாட்டில் உள்ள ஏனைய ஆற்றுப்படைகள் உலகில் வாழ்ந்த வள்ளல்களைப் பாட்டுடைத் தலைவர்களாகக் கொண்டவை. இதுவோ முருகனைப் பாட்டுடைத் தலைவனாக உடையது. மற்ற ஆற்றுப்படைகள் யாருக்கு வழிகாட்டுகிறார்களோ அவர்களால் பெயர் பெறும். பொருநரை ஆற்றுப்படுத்தியதனால் பொருநராற்றுப்படை என்றும், பாணரை ஆற்றுப்படுத்தியதனால் சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை என்றும் பெயர் பெற்றன. திருமுருகாற்றுப்படை புலவனை ஆற்றுப்படுத்தியது; ஆனால் பாட்டுடைத் தலைவன் பெயரால் முருகாற்றுப்படை என்ற பெயர் பெற்றது. உரையாசிரியர்கள் புலவராற்றுப்படை என்று குறிப்பதும் உண்டு.

ஆற்றுப்படுத்துபவர் தாம் வள்ளலிடம் போய்க்கண்டு பரிசு பெற்ற செய்திகளைச் சொல்வதுண்டு; அத்தகைய பகுதி இதில் இல்லை. யாரை ஆற்றுப்படுத்துகிறாரோ அவரைப் பற்றிய விரிந்த செய்திகள் இதில் இல்லை. அவனை விளித்துச் சொல்லும் முறையும் இல்லை,

"செவ் வேற் சேய்
சேவடி படரும் செம்மல் உள்ளமொடு
நலம்புரி கொள்கைப் புலம்பிரிந்து உறையும்
செலவுநீ நயந்தனை ஆயின் பலவுடன்
நன்னர் நெஞ்சத்து இன்னிசை வாய்ப்ப
இன்னே பெறுதிநீ முன்னிய வினையே"

என்ற அடிகளில் ஆற்றுப்படையின் தோற்றுவாய் இருக்கிறது.

"முந்துநீ கண்டுழி முகன்அமர்ந்து ஏத்திக்
கைதொழுஉப் பரவிக் காலுற வணங்கி"

முருகனை வாழ்த்துவாயாக என்ற பகுதி, புலவனை வழிப்படுத்தி இன்னது செய்க என்று அறிவுறுத்துகிறது.

"இருள்நிற முந்நீர் வளைஇய உலகத்து
ஒருநீ யாகத் தோன்ற, விழுமிய
பெறலரும் பரிசில் நல்குமதி"

என்ற பகுதி, புலவன் பெறும் பரிசைப்பற்றிச் சொல்கிறது. மற்றப்பகுதிகள் யாவும் முருகன் பெருமையையும் அவன் எழுந்தருளியிருக்கும் இடங்களின் இயல்புகளையும் அவனை வழி படுகிறவர்களின் செயல்களையும் கூறுகின்றன.

ஒவ்வொரு படைவீட்டையும் பற்றிச் சொல்லிவிட்டு, "அது மட்டும் அன்று" என்று கூறி அடுத்த படைவீட்டுக்குத் தோற்றுவாய் செய்கிறார் நக்கீரர். "அதா அன்று" என்ற தொடர் அந்தப் பொருளில் வருகிறது. *

திருமுருகாற்றுப்படை "உலகம்" என்ற மங்கலச் சொல்லுடன் தொடங்குகிறது. முருகப்பெருமானுடைய உருவத்தோற்றத்தைப் பிழம்பாகச் சொல்லிப் பிறகு அவனுடைய திருவடியையும் திருக்கரத்தையும் காட்டி, தேவயானையின் கணவனாக எழுந்தருளியிருப்பதைப் புலப்படுத்தி, அவனுக்குரிய கடம்பமாலையையும், காந்தட்கண்ணியையும் சிறப்பித்து, அவன் வேல் செய்த வீரச்செயலை முதலில் எடுத்துக்காட்டுகிறார் நக்கீரர்.

'கீழ்கடலிலே உலகமெல்லாம் மகிழவும் பலரும் புகழவும் கதிரவன் தோன்றுவது போலே மயிலின் மேலே முருகன் தோன்றுவான்' என்று அறிய வைத்து, அவன் திருமேனி ஒளி காலங்கடந்து இடங்கடந்து ஒளிரும் என்று கூறுகிறார். அவன் திருவடி தன்னை அடைந்தாரைத் தாங்குவது; அறியாமையை அகற்றுவது, அவனுடைய கைகள் பகைவர்களை அழிக்கும் ஆற்றலை உடையவை.

தேவயானையின் கணவன் என்பதை, "மறுவில் கற்பின் வாணுதல் கணவன்' என்பதில் குறிப்பாகப் பெற வைக்கிறார். மறுவில் 'வாணுதல் கற்பின் வாணுதல் என்று கூட்டிப் பொருள் கொள்ள வேண்டும். முருகன் களவு, கற்பு என்ற இரண்டு வகை ஒழுக்கத்தையும் ஒழுகிக்காட்டினான். வள்ளி நாயகியைக் களவு மணத்தால் கொண்டான். தேவயானையை அடுப்பாரும் கொடுப்பாரும் இருந்து கொடுக்கக் கற்புமணம் செய்து கொண்டான். அதனால்

அந்தப் பெருமாட்டியை. "கற்பின் வாணுதல்" என்றார். முதற்படைவீடாகிய திருப்பரங்குன்றத்தில்தான் தேவயானை திருமணம் நடைபெற்றது. அதனால் அதைப்பாடும்போது தேவயானை கணவன் என்று குறித்தார்.

"இத்தகையவற்றை உடைய முருகனைக் காணும் வேட்கையுடன் நீ புறப்பட்டிருக்கிறாய். 'உன்னுடைய விருப்பம் உடனே நிறைவேறும்' என்று எதிர்நிற்கும் புலவனைத் தட்டிக்கொடுக்கிறார் நக்கீரர்.

"அவன் மதுரைக்கு மேற்கே உள்ள திருப்பரங்குன்றத்தில் எழுந்தருளியிருக்கிறான்' என்று சொல்லும்போது மதுரையின் சிறப்பையும் திருப்பரங்குன்றத்தைச் சுற்றியுள்ள நிலவளத்தையும் சுருக்கமாகச் சொல்லி முதற்பகுதியை முடிக்கிறார். *

இரண்டாவது பகுதி திருச்சீரலை வாயாகிய திருச்செந்தூரைப் பற்றியது. முருகன் பிணிமுகம் என்னும் யானையின் மேல் எழுந்தருளி வருகிறான். அவனுடைய திருமுடியும் காதணிகளும் பொலிவு பெற்றுத் தோன்றுகின்றன. ஆறுதிருமுகங்கள் வேறு வேறு தொழில்களைச் செய்ய, அவற்றிற்கு ஏற்ப அவனுடைய பன்னிரண்டு திருக்கரங்களும் இயங்குகின்றன. 'இவ்வாறு ஆறு முகங்களோடும், பன்னிரண்டு திருக்கரங்களோடும் முருகன் எழுந்தருளித் திருச்சீரலை வாயில் தங்கியிருக்கிறான்' என்று இந்தப் பகுதியை முடிக்கிறார்.

முருகன் தன் திருமுகம் ஒன்றினால் உலகத்தில் இருள் இல்லாமல் ஒளியைப் பரப்புகின்றான்; ஒரு முகம் அன்பர்களுடைய துதிகளைக் கேட்டு மகிழ்ந்து வரம் வழங்குகின்றது; மற்றொரு முகம் அந்தணர் வேள்வியைக் காக்கின்றது; இன்னும் ஒன்று ஞான விளக்கம் தருகின்றது; பிறிதொரு முகம் போரில் வெற்றி பெற்று விளங்குகிறது; ஆறாவது திருமுகம் வள்ளி நாயகியுடன் மகிழ்ந்து இலங்குகிறது. இப்படி ஆறுமுகநாதனைக் காட்டுகிறார் நக்கீரர். *

மூன்றாவது பகுதியில் முருகன் திருவாவினன்குடியில் எழுந்தருளியிருப்பதைச் சொல்கிறார். முருகன் நான்முகனைச் சிறையில் இட்டுவிட்டான். அவன் ஆற்றும் படைப்புத் தொழில் இல்லாமையால் மற்றத் தேவர்களுக்கு வேலை செய்ய முடியவில்லை. ஆதலின் திருமால் முதலியவர்கள் திருவாவினன்குடிக்கு நான்முகனை விடுவித்துச் செல்ல வருகிறார்கள். இந்தப் பெருங்கூட்டத்தில் முதலில் முனிவர்கள் வருகிறார்கள். அவர்களுக்குப்பின் கந்தர்வர்களும் அவர் மகளிரும் வருகிறார்கள். அவர்களை அடுத்துத் திருமாலும், சிவபெருமானும், இந்திரனும் வருகின்றனர். பிறகு முப்பத்து மூன்று தேவர்கள், பதினெண்கணத்தினர் வருகின்றனர். அவர்கள் வந்து தரிசிக்கும்படி முருகன் வீற்றிருக்கிறான்.

திருமால், சிவபிரான், இந்திரன், பிற தேவர்கள் முருகனை வழிபட்டு நலம் பெற்ற தவமுனிவர்களையே முன்னிட்டுக்கொண்டு செல்கிறார்கள். முனிவர்களின் சிறப்பு அதனால் தெரிய வருகிறது. *

நான்காவது திருவேரகத்தைப் பற்றிய பகுதி. இந்தப் பகுதி 13 அடிகளையே கொண்டது. இங்கே அந்தணர்கள் முருகனை வழிபடும் காட்சியைக் காட்டுகிறார். நக்கீரர். அவர்கள் முருகனுடைய மந்திரமாகிய ஷடக்ஷரத்தை உச்சரித்துக் கொண்டு வழிபடுகிறார்கள்.

"ஆறெழுத்து அடக்கிய அருமறைக் கேள்வி
நாறிணர் மருங்கின் நவிலெய் யாடி"

என்று அதைச் சொல்கிறார் புலவர். *

எல்லாக் குன்றுகளிலும் முருகன் எழுந்தருளியிருக்கிறான். அவன் குறிஞ்சித்திணைக் குக் கடவுள் ஆதலின் எல்லா மலைகளும் அவனுடைய அருளாட்சிக்குரியனை குன்றுதொறு டல் என்ற பகுதி ஐந்தாவதாக இருக்கிறது. பல மலைகளையும் தொகுதியாக வைத்து அதனை ஒரு படைவீடாகச் சொல்லும் வழக்கம் இதனால் உண்டாயிற்று.

மலையில் பூசாரியாகிய வேலன் முருகனுக்குப் பூசையோட, மலைவாணர்கள் கூடி அதைக்கண்டு ஆடுகிறார்கள்; பாடுகிறார்கள். அவர்கள் வழியாட்டை ஏற்று முருகன் எழுந்தருளுகிறான். அவன் எழுந்தருளும் பலவகையான தோற்றத்தை இந்தப்பகுதியில் காண்கிறோம்.

பல மகளிரோடு முருகன் எழுந்தருளுகிறான். சிவப்பு மேனியும் சிவப்பு ஆடையும் உடையவனாக வருகிறான். காதிலே அசோகந் தளிரும், இடையிலே கச்சும், காலிலே வீரக் கழலும், மார்பிலே வெட்சி மாலையும் அணிந்திருக்கிறான்.

ஒரு சமயம் புல்லாங்குழல் வாசிக்கிறான்; வேறொரு சமயம் கொம்பை ஊதுகிறான். இப்படியே வெவ்வேறு சமயங்களில் வெவ்வேறு வாத்தியங்களை வாசிக்கிறான். ஆட்டுக் கிடாய் வாகனத்தில் வருகிறான். மற்றொருமுறை மயில் வாகனத்தில் எழுந்தருளுகிறான். கேவற்கொடியை ஏந்தி வருகிறான்.

குன்று தோறும் இப்படிப் பல விளையாடல்களை நிகழ்த்துகிறானும்.

'குறவர்கள் பூசாரியை முன்னிட்டு எடுக்கும் விழாவில் இவ்வாறு முருகன் உண்மையாகவே எழுந்தருளுகிறானு?' என்ற ஐயம் எழலாம். முருகப்பெருமானுடைய விக்கிரகங்களுக்கு வெவ்வேறு கோலம் பூண்டு வெவ்வேறு வாகனங்களில் எழுந்தருளச் செய்வதையே இவ்வாறு சொல்கிறார் போலும். அல்லது, ஒருவருக்கு முருகனைப்போலக் கோலம் பூண்டு அவரையே முருகனைக் பாவித்து வழிபடுவதாகவும் கொள்ளலாம். இப்படி ஒரு வழக்கம் இருந்ததைச் சிலப்பதிகாரத்தில் காணுகிறோம். வேடுவர்கள் ஒரு கன்னிப்பெண்ணுக்குக் கொற்றவையைப்போலக் கோலம் பூண்டு வழிபட, அவள் ஆவேசம் கொண்டு சிலவற்றைச் சொன்னாள் என்று வேட்டுவ வரியில் வருகிறது. அதைப்போல, குன்றுகளில் உள்ள குறவாணர்கள் ஒவ்வோரிடத்திலும் ஒவ்வொரு வகையில் ஒருவருக்குக் கோலம் பூண்டு வழிபட்டிருக்கலாம். *

அருவது பகுதி பழமுதிர் சோலையைப் பற்றிச் சொல்வது, முதலில் திருப்பரங்குன்றத்தைச் சொல்லும் பகுதியில் ஆற்றுப்படைக்குரிய தோற்றுவாயை அமைத்ததுபோல, இறுதிப் பகுதியாகிய இதில் ஆற்றுப்படைக்குரிய பிறசெய்திகளை இணைத்து நிறைவுறுத்துகிறார் நக்கீரர். பழமுதிர்சோலையில் முருகன் இருக்கிறான் என்ற முறையில் சொல்லாமல், பழமுதிர் சோலையில் உள்ள முருகன் உனக்கு அருள் செய்வான் என்ற முறையில் சொல்லி அதுவும் அவன் இருக்கும் இடங்களில் ஒன்று என்று புலப்படுத்துகிறார்.

இந்தப் பகுதியில், முதலில் முருகன் உறையும் பலவகையான இடங்களைச் சொல்கிறார். ஊர்தோறும் நடைபெறும் விழாவிலும், அன்பர்கள் போற்றும் இடங்களிலும், பூசாரி பூசைபோடும் இடத்திலும் அவன் இருப்பான். இவை அவனை நினைத்து வழிபடும் இடங்கள். இவற்றையன்றி இயற்கையாகவும் செயற்கையாவும் அமைந்த பல இடங்களில் அவன் இருப்பானும். இயற்கையாக அமைந்த காட்டிலும், மனிதன் வளர்த்த சோலையிலும், ஆற்றின் இடையில் உள்ள தீவிலும் இயற்கையான ஆற்றிலும், மனிதன் வெட்டிய குளத்திலும் அவன் இருப்பான். நாலு தெருக்கள் கூடும் இடத்திலும், பல தெருக்கள் கூடும் சந்திகளிலும், கடம்ப மரத்திலும், பெரிய சபைகளிலும், மரத்தடி மேடைகளிலும், கம்பத்தை நட்டு வழிபடும் இடத்திலும், அவன் இருப்பான். பூசாரி பூசை போடும் இடத்தில் அவன் ஆவேச ரூபத்தில் வருவான்.

'இவ்வாறு வெவ்வேறு இடங்களில் தங்கள் தங்கள் விருப்பத்தின்படி மக்கள் வழிபட அவன் இருக்கிறான். நீ எங்கே மனம் உருகிக் காண்கிறாயோ, அங்கே அவனை வணங்கித் துதிப்பாயாக.' என்று புலவனை வழிப்படுத்துகிறார்.

இங்கே முருகனுக்குரிய திருநாமங்களை அருச்சனையைப் போலச் சொல்கிறார். இருபத்தாறு திருநாமங்கள் அடுக்கடுக்காக உள்ளன. 'அறுவர் பயந்த ஆலமர் செல்வ!' என்று தொடங்கி 'போர்மிகு பொருந, குரிசில்' என்பது வரையில் இந்த அருச்சனை அமைந்திருக்கிறது. அவன் சரவண பவன் என்பதை, 'நெடும் பெருஞ்சிமையத்து நீலப் பைஞ்சுனை..... செல்வ' என்று குறிப்பிக்கிறார். 'அவன் கார்த்திகேயன் என்பதை, 'அறுவர் பயந்த செல்வ' என்பதனால் புலப்படுத்துகிறார். அவன் தேவ சேனாபதி என்பதையும் அவன் கையில் வில்லும் தாங்கியவன் என்பதையும், 'வானோர் வணங்குவில் தானைத்தலைவ" என்ற திருநாமத்தால் அறியலாம்.

அவன் குறிஞ்சி நிலத்துத் தலைவன் என்பதை, "விண்பொரு நெடுவரைக் குறிஞ்சிக் கிழவ" என்று சொல்கிறார். அவன் திருநாமமாகிய முருகன் என்பது, மிகச் சிறந்தது என்பதைத் தெளிவிக்க, 'அரும் பெறல் மரபிற் பெரும் பெயர் முருக' என்கிறார்.

'இவ்வாறு முருகனை ஏத்தினால் அவன் எழுந்தருளி வருவான்" முருகுத் திருக்கோலத்தோடு வருவான்' என்கிறார். இங்கே முருகன் என்ற திருப்பெயருக்குரிய சிறப்பான பொருள்கள் நான்கு குறிப்பாகத் தெரிய வருகின்றன.

"பண்டைத்தன், மணங்கமழ் தெய்வத்து இளநலம் காட்டி"

என்ற இடத்தில் முருகனிடம் மணமும், தெய்வத்தன்மையாகிய அருளும், இளமையும், அழகும் நிரம்பியிருப்பதை உணர்த்துகிறார். இவை முருகு என்ற சொல்லுக்கு உரிய சிறப்பான பொருள்கள். இவற்றையுடையவன் முருகன்.

முருகன் தரும் பரிசில் இன்னது என்பதைச் சொல்லும் பகுதி,

" விளிவின்று
இருள்நிற முந்நீர் வளைஇய உலகத்து
ஒருநீ ஆகித் தோன்றல் விழுமிய
பெறலரும் பரிசில் நல்குமதி "

என்பது, 'அழிவு இல்லாமல்' கரிய நிறத்தையுடைய கடல் சூழ்ந்த உலகத்தில் எங்கும் வேறு பொருளே தோன்றுமல் நீயாகவே தோன்றும்படி, மிகச்சிறந்த, வேறு யாரும் பெறுவதற் கரிய பரிசிலை வழங்குவான்' என்பது இதன் பொருள். பேதக்காட்சியே இல்லாமல் எங்கும் தானாக நிறைந்து தோன்றும் அனுபவமே அத்துவித அநுபவம். அது சீவன்முத்தனுடைய நிலை. 'முருகன் உனக்குச் சீவன்முக்தியாகிய பரிசைத் தருவான்' என்பதுவே இதன் கருத் தாகக்கொள்ள வேண்டும்.

சங்ககாலத்தில் சீவன்முக்தியைப் பற்றிய கருத்து நிலவியதா என்ற ஐயம் சில ருக்கு எழலாம். மதுரைக் காஞ்சியில் மதுரையிலுள்ள பல பெரியோர்களைப் பற்றிச் சொல் லும் இடத்தில்,

"சிறந்த வேதம் விளங்கப் பாடி
விழுச்சீர் எய்திய ஒழுக்கமொடு புணர்ந்து
நிலம்அமர் வையத்து ஒருதாம் ஆகி
உயர்நிலை உலகம் இவணின்று எய்தும்
அறநெறி பிழையா அன்புடை நெஞ்சிற்
பெரியோர்" (மதுரைக்காஞ்சி 468—73)

என்ற பகுதி வருகிறது. இதிற் சொல்லப்பட்ட பெரியோர் சீவன்முக்தர் என்று நச்சினார்க் கினியர் உரை எழுதியுள்ளார். இந்த உடம்பு உள்ளபோதே, பற்றற்று இன்ப அநுபவத் தைப் பெறுவதே சீவன்முக்தி. 'நிலம் அமர் வையத்து ஒருதாம் ஆகி' என்ற அடி எங்கும் தாமாகவே பார்க்கும் அகண்ட அத்வைதக் காட்சியைச் சொல்கிறது. திருமுருகாற்றுப்படை யில் வரும், 'உலகத்து ஒருநீ யாகித் தோன்ற' என்ற அடியும் இந்த அடியும் ஒன்றையே சொல்கின்றன. 'உயர் நிலை உலகம் இவண் நின்று எய்தும்' என்ற மதுரைக்காஞ்சி அடி, 'வானோர் உலகத்துக்கும் மேற்பட்ட மோட்சலோக இன்பத்தை இவ்வுலகில் இருந்தபடியே அடையும்' என்ற பொருள் தருவது. அந்த நிலைதான் சீவன்முக்தி. உடம்பு இருக்கும் போதே அடையும் இன்ப நிலையைச் சீவன்முக்தி என்றும், உடம்பினின்றும் உயிர் பிரிந்து இறைவனோடு ஒன்றும் நிலையை விதேசமுக்தி என்றும் சொல்வர். உடம்பை விடாமல் இருக்கும்போதே அடையும் சீவன்முக்தி நிலையை உவமையாகப் பொருநர் ஆற்றுப்படை என்ற நூலும் எடுத்துரைக்கிறது.

"தவம் செய் மாக்கள் தம்உடம்பு இடாஅது
அதன்பயன் எய்திய அளவை மான" (பொருநராற்றுப்படை 91, 92)

'தவம் செய்யும் பெரியோர்கள் தம் உடம்புகளைக் கீழே விட்டு இறந்து போகாமலே அந்தத் தவத்தின் பயனாகிய முக்தி இன்பத்தை அடையும் முறையைப் போல' என்பது இவ்வடிக ளின் பொருள்.

சங்ககாலப் புலவர்களுக்குச் சீவன்முக்தியின் இலக்கணமும், சீவன்முக்தரின் பெருமையும் நன்றாகத் தெரியும் என்பது மேற்காட்டியவற்றால் தெரியவரும். ஆகவே நக்கீரரும், புலவன் முருகனிடம் பெறும் பரிசில் வேறுயாரும் பெறுவதற்கரிய பரிசில் என்று சிறப்பித்துச் சொல்வது சீவன்முக்தியையே என்று கொள்ள வேண்டும். பிறர்தரும் பரிசில் கள் எல்லாவற்றையும்விட அது, 'விழுமிய பெறலரும் பரிசு' அல்லவா?

'பெறலரும் பரிசில் நல்குவான்' என்று செயப்படுபொருளையும் பயனிலையையும் முன்னே வைத்து, யார் தருவான் என்ற கேள்விக்கு விடையாக வரும் எழுவாயை, அடுத்து, 'பழமுதிர்சோலை மலைகிழவோனே' என்று சொல்லி நூலை முடிக்கிறார். 'பரிசில் நல்குமதி, பழமுதிர் சோலை மலைகிழவோன்' என்று வாக்கியம் முடிகிறது.

பழமுதிர்சோலை மலையின் வளத்தைச் சொல்லி, இத்தகைய பழமுதிர்சோலை மலைக்கு உரியவன் என்று சேர்க்கிறார் நக்கீரர். பழமுதிர்சோலை மலையில் உள்ள அருவியை வருணிப்பாராகி, அந்த அருவி மலைமுகட்டிலிருந்து கீழ் நிலப்பரப்புக்கு வரும் வரையில் தோன்றும் பல்வேறு காட்சிகளைக் காட்டும் வாயிலாக அந்த வளத்தைத் தெரிந்துகொள்ள வைக்கிறார். *

"செவ்வேற் சேஎய் சேவடி படரும் செம்மல் உள்ளமொடு செலவு நீ நயந்தனை ஆயின், இன்னே பெறுதி நீ முன்னிய வினையே" (அவன்) குன்று அமர்ந்து உறைதலும் உரியன்; அலைவாய்ச் சேறலும் நிலைஇய பண்பு; ஆவினன்குடி அசைதலும் உரியன்; ஏரகத்து உறைதலும் உரியன்; குன்றுதொருடலும் நின்ற தன் பண்பு; வேண்டுநர் வேண்டியாங்கு எய்தினர் வழிபட ஆண்டாண்டு உறைதலும் அறிந்தவாறு; 'முந்து நீ கண்டுழி ஏத்தி, பரவி, வணங்கி புலமையோய் எனக்குரித்தது மொழியா அளவையின், தான் வந்து எய்தி, மணங்கமழ் தெய்வத்து இளநலம் காட்டி, அன்புடை நன்மொழி அளைஇ, பெறலரும் பரிசில் நல்குமதி, பழமுதிர் சோலை மலைகிழவோனே' என்று இந்தப் பாட்டின் பொருளமைப்பு இருக்கிறது.

முருகப் பெருமான் குறிப்பிட்ட இடங்களில் உள்ள திருக்கோயில்களில் இருப்பான்; அவ்வப்போது வழிபடும் இடங்களில் இருப்பான்; அழகான பல இடங்களில் இருப்பான் என்று சொல்லும் முறையில் அவன் இல்லாத இடமே இல்லை என்ற உண்மையை விளக்குகிறார் நக்கீரர். வானுலகத் தலைமை பெறும் மூர்த்திகளும், நிலவுலகத்தில் சிறப்புப் பெற்ற முனிவர்களும் அந்தணர்களும், குறவாணர்களும் பிறரும் முருகனை வழிபடுகிறார்கள். வடிவாலும் வண்ணத்தாலும் வெவ்வேறாக உள்ள பல மணிகளை ஒன்றாகக் கோத்து அமைத்த பொற்சரடு போல, சமுதாயத்தில் அறிவாலும் தொழிலாலும் பழக்க வழக்கங்களாலும் வெவ்வேறு நிலையில் இருக்கும் மக்களினூடே முருகனுடைய அன்பு புகுந்து விளையாடுகிறது. காதலும் வீரமும் அவனால் விளக்கம் பெறுகின்றன. இயற்கையிலும் செயற்கையிலும் அவனைத் தமிழர் கண்டு மகிழ்ந்தனர். அவனுடைய பிறப்பு, அவன் செய்த வீரச் செயல்கள், அவனுடைய திருமணம் முதலியவற்றைப் பற்றிய செய்திகள் அந்தக் காலத்திலேயே வழங்கிவந்தன. இந்தக்கருத்துக்கள் திருமுருகாற்றுப்படையால் விளங்குகின்றன.

திருமுருகாற்றுப்படை தமிழரின் கடவுளுணர்வைக் காட்டும் கண்ணாடி. முருகனை எல்லா நிலைகளிலும் வழிபடும் சமரசத்தைத் தெய்வமாகக் காட்டும் பொதுநிலைத் திருக்கோயில்; முருகனுடைய திருநாமங்களைப் பொதிந்து வைத்திருக்கும் அருச்சனை நூல். இயற்கையின் எழிலைக் காட்டும் ஓவியம்; செந்தமிழ் இன்பத் தேனடை.

பல நூற்றாண்டுகளாக இந்த நூல் இலக்கியப் புலவர்களின் உள்ளத்தில் செந்தமிழ்ச் சுவையையும், முருகன் அடியார் உள்ளத்தில் முருகுணர்வையும் ஊட்டி என்றும் இளமையோடு நிலவி வருகிறது.

தற்காலத் தமிழ் இலக்கியம் புலப்படுத்தும் சமுதாய உணர்வு

பாயிரவுரை

டாக்டர் ந. சஞ்சீவி, எம். ஏ., எம். லிட் , பிஎச். டி.,
டிப். மானிடலியல். டிப். அரசியல்—ஆட்சியியல்,
தமிழ்த்துறைப் பேராசிரியர்—தலைவர்,
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை-600005.

'இந்திய விடுதலைக்குப் பின் இக்கால (இந்திய) இலக்கியம்' பற்றி Indian Literature since Independance என்ற சாகித்திய அகாதமி வெளியீடும் (1973) 'இந்திய விடுதலையும் தமிழ் இலக்கியமும்' என்ற சென்னைப் பல்கலைக்கழக இந்திய விடுதலை வெள்ளிவிழாக் கருத்தாய்வரங்கக் கட்டுரைகள் தொகுப்பும் (1973) குறிப்பிடத்தக்கன. இவ்விரண்டுள் முன்னதில் பேராசிரியர் டாக்டர் தெ. பொ. மீ. அவர்களின் தமிழ் பற்றிய விரிவான கட்டுரை உள்ளது: அஃது ஆழ்ந்து படிக்கக்கதது. பின்னது (1) இந்திய விடுதலையை மையமாகக் கொண்டு அரிமா நோக்காய் முன்னும் பின்னும் காண்பதாலும் (2) தமிழ் இலக்கியம் பற்றியே 35 புலவர்களின் தனிக்கண்ணோட்டம் ஆதலாலும் சிறப்பு வாய்ந்தது. இப் பல்கலைக் கழக வெளியீடு பற்றிச் 'சுதேசமித்திர'னில் திரு. க. நா. சுப்பிரமணியம் வெளியிட்ட மதிப்புரையும் ஈண்டுச் சுட்டத்தக்கது. இம்மதிப்புரையில் அவர் இக்கால இலக்கியத் திறனாய்வில் பல்கலைக்கழகத் தமிழாசிரியர்கள் நீலை என்று ஒன்று இருப்பதாக ஒப்புக் கொண்டிருப்பதும் ஓர்தற்குரியது.

இக்கருத்தரங்கப் பொருளுக்கு ஒருசார் தொடர்புடையன நண்பர்கள் வட்டம் (சென்னை கிறித்துவ இலக்கியச் சங்கம்) ஆண்டு தோறும் வெளியிடும் கருத்தாய்வரங்கக் கட்டுரைகளின் தொகுப்புகள்.

பூ. சா. கோ. கலைக்கல்லூரி நடத்தும் இதுபோன்ற கருத்தாய்வரங்குகளால் உயர் கல்வித் துறையில் 'அஃகி அகன்ற' ஆய்வறிவு மேலும் மேலும் பாய்ந்து பரவும் என்பது உறுதி.

நம் கருத்தரங்கப் பொருள் பெரிதும் ஓர் அஃகாய்வு (Micro) தன்மையது எனலாம். ஆனல் இப்பொருளுக்குப் பொருள் விரிக்கும் வகையில் இஃது அகலாய்வு (Macro) தன்மையது என்கலாம்.

எனவே, 'சமூகவியல்' என்றல் என்ன என்று முதலில் பார்த்தல் முற்றிலும் முறை. எளிய வழி—இந்திய விடுதலைக்குப் பின் தமிழ் வளர்ச்சியின் இமய வெற்றியாய் இலங்கும் கலைக்களஞ்சியத்தைக் காணலே ஆகும். இரத்தினச் சுருக்கமாய் நமக்குக் கிடைக்கும் விளக்கம் வருமாறு:

சமூகவியல் (SOCIOLOGY) என்பது சமூகத்தை அதாவது மக்களுறவையும் அதன் விளைவுகளையும் பற்றிய அறிவியலாகும். இது

சமூகத்தின் தோற்றம், வளர்ச்சி, அமைப்பு, செயல்கள் ஆகியவைகளுக்குத் தக்க விளக்கம் காண முற்படுகிறது. மக்களுறவால் ஏற்படும் சமூக நிகழ்ச்சிகளை ஆராய்கின்றது.

சமூகவிஞ்ஞானம் என்ற பரந்த துறையைச் சார்ந்த பல விஞ்ஞானங்களில் சமூகவியலும் ஒன்று. இந்தச் சமூகவிஞ்ஞானங்கள் மக்கள் சமூகத்தின் உறுப்பினர்கள் என்ற முறையில் அவர்களின் நடத்தையையும் செயல்களையும் பற்றியவை. இவைகளில் பல சமூகவிஞ்ஞானத் துறையில் ஏதாவதொரு குறிப்பிட்ட பகுதியை மட்டும் பற்றியவையாக இருக்கின்றன. எடுத்துக்காட்டாகப் பொருளாதாரம் பொருள் பற்றிய சமூகச் செயல்களையும் மக்கள் தம் தேவைகளை நிறைவேற்ற மேற்கொள்ளும் முயற்சிகளையும் ஆராய்கின்றது. மக்கள் அரசாங்கத்தின் உறுப்பினர்கள் என்ற முறையில் அவர்களுடைய செயல்களை அரசியல் ஆராய்கின்றது. வரலாறு சமூகத்தின் கடந்த கால நிகழ்ச்சிகளைத் தொகுத்துக் கூறுகிறது. அதாவது பொருளாதாரம், அரசியல் போன்ற துறைகள் சமூகத்தின் பகுதிகளைப் பற்றிய தனி நியதிகளை ஆராய்கின்றன. ஆனால் சமூகவியல் அமைப்பு முழுமைக்கும் பொதுவான நியதிகளை ஆராய்கின்றது. எனவே, சமூகவியல் சமூகவிஞ்ஞானங்களில் முக்கியமானதாக விளங்குகின்றது. வார்டு (WARD) என்பவர் கூறியபடி, சமூகவியல் ஒரு தலை; மற்றச் சமூக விஞ்ஞானங்கள் அதன் உடலும் உறுப்புக்களுமாகும்.

இது சமூகத்தைப் பற்றி நாம் அறிந்தவைகளைத் தொகுத்து முறைப்படுத்திக் கூற முற்படுகிறது. சமூகம் இன்றைய நிலையை எவ்வாறு அடைந்தது என்பதை அடிப்படையாகக் கொண்டுள்ள சமூகவியல், மாறி வரும் சூழ்நிலைக் கேற்பச் சமூக அமைப்பு எவ்வாறு மாறும் என்பதைச் சுட்டிக்காட்டக் கூடும். இவ்வகையில் இது வாழ்க்கைக்குப் பயன்படக்கூடிய விஞ்ஞானமாக விளங்குகிறது. சமூகம் எப்படித் தோன்றியது, எவ்வாறு வளர்ந்தது, சமூகத்தை இயக்கும் சக்திகள் யாவை என்பவைகளைப் பற்றிய உண்மைகளை அறிந்து, அவைகளைப் பாகுபடுத்தித் தொகுத்துக் கூறினால் மட்டும் போதாது. சமூக வாழ்வை உயர்த்துவதற்கான வழியையும் கண்டாக வேண்டும். எனவே, சமூகத்தைப் பற்றிப் புரிந்துகொள்வதும், சமூக முன்னேற்றத்துக்கான திட்டத்தை வகுப்பதும் சமூகவியலின் நோக்கங்களாகும்.

சமூகவியலை மரபிலக்கிய வாய்ப்பாடு வழி சொன்னால் அறம் / இன்பம் / பொருள்; மறு மலர்ச்சி இலக்கிய வாய்ப்பாடு வழிச் சொன்னால் 'ஒரு மனிதன் / ஒரு வீடு / ஒரு உலகம்'.

இனி சமூக (மனச்சான்று) உணர்வு என்றால் என்ன? டாக்டர் மெக்லினின் புகழ் பெற்ற An introduction to Social ethics—The Social conscience in a democracy (1920) என்ற கலங்கரை விளக்கனைய நூலிலிருந்து ஒரு கதிர்:

"The Social conscience is individual in residence and social in function. It relates to these phases of the ethical sentiments that deal primarily with social problems. It is concerned with those norms that make possible group action upon ethical issues. In the second place, the social conscience is characterised by the conscious use of ethical norms for the preservation of group welfare. Hence arises the awareness of the authoritative role of the social conscience towards all phase of the community's life. The regard for human values in the larger

sense is what distinguishes the social from the individual conscience."

சமூக உணர்வே நம் இந்திய அரசியல் அமைப்பின் அடிப்படை என்பது அதன் பாயிரத்தாலேயே (Preamble)–அதன் தொடக்கத்தாலேயே விளங்கும். அது வருமாறு:

We, the people of India, having solemnly resolved to constitute India a **Soverign Democratic Republic** and to secure to all its citizens:

Justice, Social, economic and political.

இப்பாயிரக் கருத்தின் விரிவாகவே இந்திய அரசியல் அமைப்பின் Part-III-Fundamental Right-ம், Part IV-Directive Principles of State Policy-ம் இருப்பது எண்ணத்தக்கது.

மேற்குறிப்பிட்ட அரசியலமைப்பின் சமூகநீதி உணர்வும் மேற்போக்கானதே; ஆழமானதும் உண்மையானதும் இல்லை என்பது என் கருத்து. நம் அரசியலமைப்பு தந்துள்ள இசைவுகளும் பூட்டியுள்ள நிபந்தனைகள் பலவுமே அதன் நோக்கை அழிக்கும் கோடரிப் போக்குகள். இதற்குப் பெரிய எடுத்துக்காட்டு சமயத்துறையில் சமூகநீதி இல்லாமை. இவ்வகையில் தீண்டாமையை நிபந்தனையின்றித் தண்டனைக் குற்றமாகக் கருதும் Article 17-ம் கூடக் கருதுவாரற்று உள்ளதாகவே உள்ளது.

அரசியல் சட்டப்படி தனிச் சொத்துரிமை —தகர்க்கப்பட்டுச் 'சக்திக்கேற்ற உழைப்பு; தேவைக்கேற்ற வசதி' என்றாகும்போதுதான் சமூகநீதி தழைக்கும் என்பது என் தெளிவான—திடமான கருத்து.

இந்திய விடுதலை 1947 ஆகஸ்டு 15ஆம் நாள் வந்தது. இதற்கு முன்பே 1920–1937 வரை இந்தியா எங்கும் ஒருவகையான குறுகிய மாநில அரசு (Provincial Government) அல்லது இரட்டை ஆட்சி (Diarchy) நடைபெற்றது. தமிழகத்தைப் பொறுத்த வரை முதலில் நடந்த நீதிக்கட்சி ஆட்சி (1920—1937) ஏழை மக்களுக்கு மனநிறைவு தராததால் வாழ்விழந்தது. இரண்டாவது, இராசாசியின் தலைமையில் நடந்த காங்கிரஸ் ஆட்சி (1937–39), மதுவிலக்கு, கடன் நிவாரணச் சட்டம் முதலியவற்றின் வாயிலாக ஏழை கட்கு இனிய ஆட்சியாக அமையினும் இந்தித் திணிப்பின் வாயிலாக நடுத்தர/படித்த மக்களின் பெரும் எதிர்ப்பைத் தேடிக்கொண்டது. இதுவே கால் நூற்றாண்டுக் கழித்து 1967இல் தி.மு.க. ஆட்சி அமைய வித்திட்டதும் எனலாம். எனவே, இந்திய விடுதலைக்கு முன்பே சென்னை இராச்சியத்தின் ஒரு பகுதியாகத் தமிழகம் கண்ட நீதிக்சட்சி, காங்கிரஸ் ஆட்சி இரண்டிலும் இருவிதமான பெருங் குறைகள் இருந்தமை நினைவில் இருத்தத்தக்கது. இந்த இரு குறைகளும் – ஒன்று பொருளாதாரம், மற்றொன்று கலாச்சாரம் – ஆழ்ந்து கருதத்தக்கன. காரணம் அவை அடிப்படையானவை. இன்னும் அவற்றின் அசுரத் தலைகள் முற்றிலுமாக அறுக்கப்பட முடியவில்லை.

இனி 1946 முதல் 1975 (76) வரை உள்ள ஆட்சிக் காலத்தை (அ) 1946–1954 (ஆ) 1954–1966 (இ) 1966–1975 (76) என்று மூன்று கூறுகளாகப் பிரிக்கலாம். முதல் எட்டாண்டுக் காலத்தின் முற்பகுதியில் இந்திய விடுதலையின் உடனடி விளைவுகளான இருபெரும் பிரிவுகள் எல்லோர் உள்ளத்தையும் உலுக்கின. முதலாவது இந்தியா—பாகிஸ்தான் பிரிவினையும் இதனால் ஏற்பட்ட பயங்கர வகுப்புக் கலவரங்களும் இரண்டாவது இதன் விளைவாக அமைந்துவிட்ட காந்தி அடிகள் படுகொலை. ஒரு வகையில் பெரு நோயாகிய முன்னதற்குப் பின்னது பெருமருந்து எனலாம். இந்த

இரண்டாலும் தென்னகத்திலும் வடபுடலமே அதிகமாகப் பாதிக்கப்பட்டது. காரணங்கள் வெளிப்படை.

இவ்விரு நிகழ்ச்சிகளின் அடிப்படையிலும் இந்து—முஸ்லீம் ஒற்றுமை இலக்கியங்கள் தமிழிலும் சமூக உணர்வுடன் தலைகாட்டின. அவ்வளவுதான்.

1946 முதல் 1954 வரை தமிழகம் (சென்னை இராச்சியத்தின் ஒரு பகுதி) நிலையற்ற காங்கிரஸ் ஆட்சி கண்டது. இக்காலக் கட்டத்தில் தான் பிரிவினை / வகுப்புப்போர் இரண்டோடும் சேர்ந்து பருவமழை பொய்த்து விளைவு சீர்குலைந்து நாட்டில் பொருளாதாரப் போராட்டம் பொங்கி எழுந்தது. எங்குப் பார்த்தாலும் வேலை நிறுத்தங்கள் ஏற்பட்டன. உணவுப் பங்கீட்டு முறை மக்கள் உயிரை வாங்கியது. 'எரிகிற வீட்டில் பிடுங்கியது ஆதாயம்' என்ற மனப்பான்மையுடன் தேசிய மனம் படைத்தோரே அரசியல் அதிகார மாயையில் அகப்பட்டுத் தற்கொலைப் பாதைக்குத் தயாராயினர். இது இக்கால கட்டத்தில் ஏற்பட்ட தெலிங்கானா போராட்டம், பிரகாசம், ஓமந்தூரார், குமாரசாமி ராசா, இராசாசி ஆகியோர் தலைமையில் நான்கு முறை (1946—47, 1947—49, 1949—52, 1952—54) நிகழ்ந்த அமைச்சரவை மாற்றம், காங்கிரஸ் அல்லாத கட்சிகளும் முதல் முதலாகக் கட்சி மாறச் செய்து இராசாசி காங்கிரஸ் ஆட்சி அமைத்தமை ஆகியவற்றுல் நன்கறியலாம். இக்காலப் பகுதியிலேயே ஒரு முனையில் பொருளாதாரப் போராட்டமும் மற்றொரு முனையில் சாதிப் போராட்டமும் முகங்காட்டின. முன்னது அடக்குமுறையாலும் பின்னது அமைச்சரவைப் பரிசாலும் வெற்றிகரமாகச் சமாளிக்கப் பட்டன. இதில் முன்னின்றவர்கள் முறையே ஆந்திர பிரகாசமும் தமிழ் இராசாசியும் ஆவர். இவ்விருவகை நிலைகளாலும் மக்கள் அரசியல் விடுதலையின் உட்பொருளாகிய பொருளாதார விடுதலையையும் சமூக விடுதலையையும் நாடினர் என்பது தெளிவாகும். குழப்பம் நிறைந்த இந்தக் காலத்தில் விடுதலை ஆட்சியில் வளர்ச்சிப் பொருளாதாரம் (Growth economics) காரணமாகப் பணவீக்கம், கள்ள வாணிபம், கொள்ளை லாபம், பர்மிட் வேட்டை இன்னோரன்னவற்றின் ஒட்டுமொத்த விளைவாகிய லஞ்ச/வஞ்ச வாழ்க்கை வேர்கொள்ளத் தொடங்கியது. தனி உடைமைப் பொருளாதாரம் தேசிய சக்திகளிடையே அழுக (இரு பொருளிலும்) ஆரம்பித்தது, இதை அம்பலப்படுத்தவும் இலக்கியப் படைப்புகள் எழுந்தன. அவ்வளவுதான்.

ஆனால் 1954 முதல் 1966 வரை அமைந்த மூன்றுவது கால கட்டம்தான் தமிழகத்தின் பொருளாதார / சமூகப் பொற்காலம் எனலாம். காலங்கருதி கடமை புரியக் காத்திருந்த திரு. காமராசர் திடுமென ஆட்சிப்பீடத்தைக் கைப்பற்றியதே இராசாசியின் குலக்கல்வித் திட்டத்திற்குத் தந்தை பெரியார் தலைமையில் எழுந்த மாபெரும் எதிர்ப்பின் மணியான பயன். திரு. காமராசர் தலைமையில் பெரும் பொருளாதார வளர்ச்சிகளும் ஓசைபடாக் கல்விப் புரட்சியும் ஓங்கின. புதிய தமிழகத்தின் பெரிய அடிப்படை அமைந்தது இக் காலத்திலேயே ஆகும். முதல் கட்டமாகிய 1947 – 56 வரை நடந்த காங்கிரசாட்சியைக் கடுமையாகத் தாக்கி வந்த தந்தை பெரியாரின்—ஏன்? பேரறிஞர் அண்ணுவின் உள்ளார்ந்த ஆதரவைப் பெற்றது திரு. காமராசர் ஆட்சி என்பது கருதத்தக்கது.

1947 முதல் 1966 வரையில் ஏற்பட்ட தமிழ் இலக்கிய மறுமலர்ச்சியே குறிப்பிடத்தக்கது. இக்காலக் கட்டத்தில்தான் (1) தமிழ் வளர்ச்

சிக் கழகம் தோன்றிப் பெருஞ்சிறப்பு வாய்ந்த கலைக்களஞ்சிய வெளியீடு (10 தொகுதிகள்) செய்தது. தலைசிறந்த தமிழ்நூல்கட்கு ஆண்டு தோறும் பரிசும் பாராட்டும் வழங்கியது. (தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் நடை பெற்ற முதல் மாநாடும் முதல் பரிசளிப்பு விழாவும் இதே கோவையில்தான் நடைபெற்றன என்ற உண்மையும் கருதத்தக்கது; கருதத்தக்கது இல்லை!) (2) தமிழ் ஆட்சி மொழியாகவும் பயிற்சிமொழியாகவும் வேர் கொண்டது. இதற்குப் பெருங் காரணர்களாக இருந்த தந்தையும் மைந்தனும் போன்றவர்கள் திரு. அவினாசிலிங்கம் அவர்களும் (1946–49 வரை மூன்று ஆண்டுகளே கல்வி அமைச்சராய் இருந்து இவர் செய்த சாதனைகளுக்கு நிகர் ஏது?) திரு. சி. சுப்பிரமணியம் அவர்களுமே ஆவர்.

இந்தப் பொற்காலத்தில்தான் காட்டாற்று எதிர்க்கட்சிகள் தமிழகத்திலும் காவிரிப் பாய்ச்சலுக்குப் பாராளுமன்றக் கரைபோட்டுக் கொண்டன. இவ்வகையில் குறிப்பிடத் தக்கதே தி. மு. க. நோக்கும் போக்கும். திராவிடக் கழகத்தையும் எதிர்த்துக் கொண்டு — இல்லை—புறக்கணித்துக் கொண்டு பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் தி. மு. க. உருவாகியது.

1947 முதல் 1966 வரையான கால கட்டத்தில் 1966ஆம் ஆண்டு வரை ஒன்றை ஒன்று எதிர்த்தும் ஓங்கிவளர்ந்த இரு தமிழகக் கட்சிகள் திராவிட முன்னேற்றக் கழகமும், தமிழரசுக் கழகமும். தி. மு. க.வைப் பழைய நீதிக் கட்சியின் புரட்சிப் பிள்ளை என்றும் தமிழரசுக் கழகத்தைப் பழைய காங்கிரசின்—இல்லை—காந்தீயத்தின் தெய்வீகக் குழந்தை என்றும் குறிப்பிடலாம். இவ்விரு அமைப்புகளின் உயிர் மூச்சு தமிழ்—இந்தியத் தேசியத்தினும் இனிய தமிழ். இதனால்தான் இவ்விரு அமைப்புகளும் 1967–இல் அரசியலிலும் உறுதியாக இணைந்தன. இவ்விணைப்புக்கு அனைத்திந்திய வலிமை ஊட்டியது தி. மு. க. வுக்கு இராசாசி தந்த பேராதரவு. ஆம். தமது காங்கிரசு ஆட்சிக்காலத்தில் கம்யூனிஸ்டுகளை முதலெண் எதிரியாகக் கருதியவரும் 1937–இல் கட்டாய இந்தித் திணிப்பால் தமிழகத்தில் தேசியத்திற்கே மாசூட்டியவரும் ஆகிய இராசாசி, தந்தை பெரியாரின் ஆதரவோடு நடந்த காமராசர் ஆட்சியை, என் கருத்தில் பழிவாங்கும் உணர்வுடனும் சாதி அடிப்படையான் சமூகஉணர்வுடனும் கவிழ்க்க முனைந்தார். அந்த முனைப்பைத் தக்கவாறு பயன்படுத்திக் கொண்ட பேரறிஞரும், பெருங்கலைஞரும் சமூக இன உணர்வோடு வகுப்புவாத முனைப்பின் முனையை உடனேயே முறித்தனர்! இதனால் பெரிதும் மனம் உடைந்து போனார் இராசாசி! வினையை வென்றது வினை! இவ்விடத்து, காங்கிரசாட்சி கவிழ்ந்ததற்குக் காரணமே பொருளியலும் மொழியியலும்தான் என்பது கருதத்தக்கது. முன்னதினும் பின்னது சமூக (மனச்சான்று) உணர்வு சான்றதே. வாயுணர்விற்கும் தாயுணர்வாகிய தமிழ்ப் பற்றிற்கும் ஏலாதவாறு அடாதன புரிந்தமையால் பக்தவத்சலம் ஆட்சி படாதனபட்டுப் பதவியிழந்தது.

தி. மு க., தமிழரசுக்கழக இயக்கங்களால் குறிப்பிடத்தக்க பெருந்தமிழ் மறுமலர்ச்சி படைப்பிலக்கியத் துறைகள் பலவற்றிலும்—ஏன்?—எல்லாவற்றிலும் ஏற்பட்டன. சற்று முன் குறிப்பிட்டதுபோல் 1950 முதல் 1966 வரையான காலமே இந்திய விடுதலைக்குப் பின்—இப்படிச் சொல்வதிலும் இந்திய விடுதலையால்—ஏற்பட்ட தமிழ் மறுமலர்ச்சியின் பொற்காலம். இந்தக் கால கட்டமே அனைத்திந்திய இலக்கிய மறுமலர்ச்சியின் பொற் காலம் என்றும் போற்றலாம்.

1954-ஆம் ஆண்டே சாகித்திய அகாதமி நிறுவப்பட்டு 1955 முதற் கொண்டே இந்திய மொழிகளில் ஆண்டுதோறும் சிறந்த நூல்கட்குப் பரிசளிக்கும் திட்டம் ஏற்பட்டது.

1947—1966 காலப் பகுதியில் மறுமலர்ச்சித் தமிழிலக்கியத்தை நேரடியாகவும் மறைமுகமாகவும் ஒன்றுக்கொன்று உடன்பட்டும் முரண்பட்டும் உருவாக்கிய அரசியல் சக்திகள்: காங்கிரஸ், கம்யூனிஸ்ட், தி.க., தி.மு.க., தமிழரசுக் கழகம் என்பது தெளிவு. இக்காலக் கூற்றில் என் கருத்தில் ஓங்குபுகழ் பெற்ற மக்கள் இலக்கியப் படைப்பாளர்கள் (1) பேரறிஞர் அண்ணா (2) பேராசிரியர் டாக்டர் மு.வ. (3) சிலம்புச் செல்வர் ம.பொ.சி. (4) அகிலன் (5) எஸ்.டி. சுத்தரம் (6) பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்.

கடந்த 66 முதல் 75 வரையான காலப் பகுதியில் என் கருத்தில் பெரும்புகழ் பெற்றிருப்பவர்கள் (1) கலைஞர் கருணாநிதி (2) கவிஞர் கண்ணதாசன் (3) சிலப்புச் செல்வர் ம.பொ.சி. (4) அகிலன் (5) ஜெயகாந்தன் (6) நா. பார்த்தசாரதி (7) கு. இராசவேலு (8) 'சோ' (9) திருமதி ராஜம் கிருஷ்ணன் (10) ஆர். சூடாமணி (11) திரு. கே.சி.எஸ். அருணாசலம். எவ்வளவு தாராளமாகப் பார்த்தாலும் 1950 முதல் 1975 வரையான கால் நூற்றாண்டு மறுமலர்ச்சிக் காலத்தின் தலைசிறந்த தமிழ்ப்படைப்பாளர்கள் கால்நூறும் இல்லை எனலாம்! இது ஏமாற்றத்துக்கு உரியதே. இன்னும் தமிழுக்கு 'ஞானபீடம்' பரிசு கிடைக்கவில்லை என்பதும் எண்ணத்தக்கது.

இந்திய விடுதலைக்குப் பின் அவ்விடுதலையின் உண்மைப் பொருளாகிய பொருளியல்/சமூகவியல் விடுதலை காண எழுந்த எதிர்ப்பியல்கள் அவற்றின் உள்ளார்ந்த குறைகள் காரணமாக உருக்குலைந்தன. ஏற்கனவே 1942-இல் நடந்த இந்திய விடுதலைப் போரியக்கத்திற்குத் துரோகம் செய்தவர்கள் என்று களங்கப்பட்டிருந்த காரணத்தால் கம்யூனிஸ்டுகட்கும் தேசிய இடதுசாரிகட்கும் இடையே ஏற்பட்ட பூசல்களாலும் தோன்றிய நாள் முதல் இந்திய கம்யூனிஸ்டு இயக்கம் நடுத்தர மக்கள்/மாணவர் உலகில் வேர் கொள்ளாததாலும் அவ்வப்போது அமைந்த மக்களாட்சி அரசுகள் சிறிது சிறிதாக ஜமீன் ...இனம் ஒழிப்பு, தொழிலாளர் நலச் சட்டங்கள் முதலியவற்றைச் செய்து வந்ததாலும் பொருளாதார எதிர்ப்பு இயக்கங்கள் பொசுங்கிவிட்டன எனலாம்.

இன்று இந்திய அரசியலில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி வரும் ஜெயப்பிரகாசர் இந்திய சோஷலிஸ்டு கட்சியை உருவாக்கினார்; ஆனால் அதை அவர் வெற்றியுடன் கட்டிக் காக்க முடியாமல் அரசியலை விட்டே விலகி 'சர்வோதய' இயக்கத்திடம் சரணடைந்தார் என்பது நினைக்கத்தக்கது.

திராவிட இயக்கமோ தி.மு.க. வின் பார்வையிலேயே தந்தை பெரியார் தனிவாழ்விலும் (திருமணம் காரணமாக) பொதுவாழ்விலும் (விடுதலை நாள் கருத்து பற்றிச்) செய்த 'தவறு'லும், பேரறிஞர் அண்ணாவின் பெரும் பிரிவாலும் கலைஞரைப் போலவே எல்லோரும் இல்லாததாலும் மாநில சுயாட்சியின் மாட்சி சுடர் விடாததாலும் பொருளியல் துறை கண்ட முன்னேற்றங்களையும் சமூக/மொழித் துறைகளில் காணவில்லை எனலாம். பெரிய எடுத்துக்காட்டு குடிசை மாற்று வாரியம் போல் பல வாரியங்கள் உள்ளன. ஆனால் சிலம்புச்செல்வரே வற்புறுத்தும் தமிழ் வளர்ச்சி வாரியம் இன்றும் இல்லை. இதனால் உணர்ச்சி ஓங்கிய அளவுக்கும் செயல் சிறக்கவில்லை. ஆட்சிமொழியாகத் தமிழ் மாட்சிபெற்ற அளவுக்கும் பயிற்சி மொழி

யாகத் தமிழ் பரவாமையும் கருதத்தக்கது. எந்த ஒரு கட்சியும் ஆட்சி இயந்திரத்தின் பற்சக்கரங்களில் சிக்கும்போது மக்கள் தொடர்பையும் அதன் காரணமான செல் வாக்கையும் இழக்கும் இன்னலுக் திராவிட இயக்கமும் அடைந்துவிட்டது என்றுல் மிகை யாகாது —பகையாகாது — என்று எண்ணுகி றேன். ஆட்சி பீடத்தில் இருத்தப்பட்ட நிலை யில் கலைஞர் தவிரப் பிறர்பால் இலக்கிய முயற்சிகளும் அருகி விட்டமையும் வருத்தத் துடன் அறிதற்குரியது.

காமராசர் ஆட்சியில் இலவசக் கல்வி ஏற்பட்டதுபோலத் திராவிட இயக்க ஆட்சி யில் கல்வி / அலுவல் துறைகளில் கலப்பு மணம் செய்தவர்கட்கும் அவர்கள் பிள்ளை கட்குமே முன்னுரிமை (Preference) என்ற ஏற்பாட்டைச் செய்திருந்தால்கூடச் சாதியற்ற சமுதாயம் உருவாக எவ்வளவோ உதவியாக இருந்திருக்கும். அப்படியே காங்கிரஸ் ஆட் சிக் காலத்தில் கலைக்களஞ்சியம் பத்துத் தொகுதிகளாக உருவாக்கப்பட்டது போல அறிவியல் கலைக்களஞ்சியம் திராவிட இயக்க ஆட்சியில் உருவாக்கப்பட்டிருந்தால் உயர் கல்வியில் தாய்மொழி வழிக் கல் விக்கே தலைமையிடந் தந்து அக்கல்வி பெற் றவர்களுக்கே அலுவல் துறையில் முன்னு ரிமை (Preference) என்றும் ஏற்பாடு செய் தால் — தமிழ்த்தாயின் நெஞ்சு குளிர்ந்திருக் கும். கலைஞர் பாடியது போல 'பால் நிலவுப் பயணமெல்லாம்' பைந்தமிழில் வந்து அறி வியல் பயிற்சித் தமிழ் ஆர்வம் ஆணிவேர் பெற்றிருக்கும்.

இந்திய விடுதலைக்குப் பின் வளர்ந்து வரும் தமிழ் மொழியில் தனித் தமிழைக் கேலி செய்த வட்டாரங்களும் அக்கனித் தமிழை நடைமுறையிலும் போற்றுவது சமூக உணர் வின் மாபெரும் மொழியியல் வெற்றியாகும். இதற்கு வழிவகுத்த மறைமலையடிகளையும் படை நடத்திய தி.மு.க.வையும் செயல்படுத் திய பேராசிரியர் டாக்டர் மு. வ., சிலம்புச் செல்வர், கலைஞர் போன்ற பெருமக்களையும் தமிழும் தமிழினமும் என்றும் மறவாது நன்றி யுடன் போற்றும்.

எழுபதுகளில் வெளிவந்த நூல்களில் என்னைக் கவர்ந்த இலக்கியப் படைப்புகள் பின்வருமாறு. (1) கவிஞர் கருணானந்தத்தின் 'அண்ணு காவியம்' (கவிதை) (2) அகிலனின் 'எரிமலை' (சிறு கதைகள்) (3) நா. பார்த்த சாரதியின் 'சத்ய வெள்ளம்' (4) சுந்தரத்தின் 'வியட்நாம் வீடு'.

இந்திய விடுதலைக்குப்பின் தமிழிலக்கி யத்தில் எக்கால - எந்நாட்டு இலக்கியமும் போலவே பெரிதும் பேசப்படும் பொருள்கள் சமூகப் பொருள்கள் — காசும் காமமுமே. தொன்று தொட்டுத் திருவள்ளுவர், திருமூலர் முதலாக இராமலிங்கர், இராமகிருஷ்ணர் ஈருகச் சான்றோர்கள் அஞ்சிய இவ்விரு பொருள்களுமே தனிஉடைமைப் பொருளா தாரச் சமூகத்தின் சிக்கல் பொருள்களாக — பொருள் சிக்கல்களாக இருக்கும் என்பது தெளிவு. காமச் சிக்கல்களும் பெரிதும் காசுச் சிக்கல்களால் விளைவனவே. கெடுபவளும் காசுக்காகக் கெடுகிறுள்; கெடுப்பவனும் காசைக் கொடுத்தே — காசிருக்கும் திமிரா லேயே கெடுக்கிறுன். அதற்காவுமே காசைத் தேடுகிறுன். அதைத் தேடியதும் அவள் கலைத் தேடுகிறுன். கலையே பெரிதும் காசுக்கு இரையாகும்போது மற்றவைப் பற் றிக் கேட்பானேன்?

ஆங்கில மொழியில் செய்வது போல நம் படைப்புகட்குப் பொருளடைவு (Subject Index) பயில்வெண்ணேடு (Frequency Count) போட்டால் மேற்கண்ட உண்மையும் மேலான உண்மைகளும் புலனுகும்.

சாகித்திய அகாதமி பரிசு பெற்றுள்ள நூல்களின் பெயர்களை மட்டுமே வைத்துச் சொல்வதனால் நம் 'சமுதாய வீதி'யில் 'அகல் விளக்கு' ஒளியே உள்ளது. 'அலை ஓசை' போன்ற பேச்சுக்கள் இருக்கிற அளவுக்கு 'சக்கரவர்த்தித் திருமகன்' வாழ்க்கையோ' 'பிசிராந்தையார்' நட்போ 'ஸ்ரீராமானுசர்' தொண்டோ 'வள்ளலார் கண்ட ஒருமைப் பாடோ' இல்லை. 'சில நேரங்களில் சில மனிதர்கள்' தரும் 'அன்பளிப்பும்' ஐயத்திற்கும் அச்சத்திற்கும் உரியதாய் உள்ளது! நம் வாழ்க்கை 'வேருக்கு நீர்'ய்த் 'திருக்குறள் நீதி இலக்கியம்' அமையின் நாம் 'வெள்ளைப் பறவைகள்' எனப் பறந்து 'வீரர் உலகம்' எனப் பேர் பெற்று 'தமிழின்பம்' நுகர்ந்து 'அக்கரைச் சீமை'யிலும் அரும்புகல் நாட்டலாம்.

உலகத்தின் ஒரு பகுதி பாரதம்; பாரதத்தின் ஒரு பகுதி பைநதமிழ்நாடு. இன்று சலிக்கும் (இரு பொருளிலும்) வறுமை/வளமை இரண்டின் மிகை/பகை நிலை காரணமாகப் பெருமளவில் மனமுறிவு வெறுமையுணர்வு (Frustration) வேகமாகப் பரவி வருகிறது. இலக்கியத் துறையில் இதன் விளைவுகளுள் ஒன்றே 'Open poetry' எனப்படும் புதுக் கவிதை. கருத்து போதும்; (யாப்புக்) கட்டு எதுவும் வேண்டா என்பதே இதன் அடிப்படை அறைகூவல்.

இந்த அறைகூவலும் சென்ற நூற்றாண்டில் ஏற்பட்ட அறிவியல் தொழிற்புரட்சியின் இன்றைய முடிவு எனலாம். இவ்வுண்மையை நன்கு உணருமபோதே மறுமலர்ச்சி இலக்கியத்தின் 'மறு'மைக் காரணம் விளங்கும்.

'எல்லார்க்கும் எல்லாம்' என்பதே அறிவியலின் அலறல். வேறு சொற்களில் சொன்னால் அடக்குதலும் அடங்காமையும் உண்மையில் ஒடுங்காமையும் அறிவியல் 'பண்பு'கள். இதன் விளைவே அரசியலில் மக்களாட்சி; பொருளியலில் சமதர்மம்; சமூகவியலில் சமத்துவம்; மொழியியலில் விளக்கவியல் மொழியியல் (Discriptive Linguistics) இலக்கிய இயலில் ஏராளமான சிறுகதைகள், நாவல்கள், நாடகங்கள். விளக்க மொழியியல் தாக்கம் பெற்ற வட்டார நாவல்கள்; Discriptive literatures) காலக் கருத்தாட்டின் விளைவுகளான (Communication of Scientific age) பருவுரு (Concrete) கவிதைகள். ஆராய்ச்சித் துறையிலும் சமூகப்பார்வை செழித்து வருகிறது; நாட்டுப்புற இலக்கிய ஆய்வு நலம் பெற்று வருகிறது.

அறிவியல் உயிராகவும் உடலாகவும் விளங்கும் அச்சும் இதழ்களும் 'எல்லார்க்கும் எல்லாம்' வாரிவழங்க முன்னின்றன. இப்போதே அச்சையும் இதழையும் புறங்கண்டு திரைப்படமும் வானொலியும் தொலைக்காட்சியும் வெ(ற்)றி வாகை சூடுகின்றன! இதன் விளைவு 'எல்லார்க்கும் எல்லாம்' மென்ன குருக்களும் மகாகவிகளும் விரும்பியதைத் தானே 'சேரவாரும் செகத்தீரே' என்று விஞ்ஞானிகளும் விரும்பினர். மேற்போக்காகச் சிந்தித்தால் இப்படித்தான் தோன்றும். ஆனால் உண்மையில் மெய்ஞ்ஞானிகள் மேவியது 'தகுதி பெற்ற எல்லார்க்கும் எல்லாம் என்பதே. ஆனால் விஞ்ஞானத்தின் வீறே, எல்லார்க்கும் எல்லாம் வந்தால் தகுதி தானாக வரும்' என்னும் தலைகீழ்ப்பாடம். மெய்ஞானம் அகத்தின் மேன்மை மேவுவது; விஞ்ஞான புறத்தின் பொலிவில் புதைவது. இதன் விளைவே இன்று.

இறுதியாகச் சொல்லத்தக்கது விடுதலைக் குப்பின் தமிழிலக்கியத்தில் காணப்படும் சமூகஉணர்வு அடிமைத் தமிழகம் தந்த

இலக்கியத்தில் காணப்படுவதிலும் அகலமானது; ஆழமானது. ஆனால் தனிஉடைமையையும் தேவையற்ற அதிகாரக் குவியலும் நிறைந்தமைய ஆட்சியையும் உயிர்நாடியாகக் கொண்டுள்ள சரியில்லாத நம் அரசியல் அமைப்பு போற்றும் சமத்துவத்தைக் கூட நம் தலைமுறையில்— இந்த நூற்றாண்டிலேயே அடைவதற்கு முடியாத மந்த கதியிலே நம் நாட்டின் மிகப் பெரும்பான்மைச் சிந்தனையும் செயலும் உள்ளன. இதை உடைத்தெறிய தற்சிந்தனை நிறைந்த அறிவாளர்கள் எழுத்தாளர்களாகவும், (பேச்சாளர்களாகவும்) முன் வரவேண்டும்.

கட்சிப்பற்றும் சார்பும் இல்லாக் கருத்தாளர்கள் அச்சமின்றிக் கருத்துக்கள் தெரிவித்தால் அதை வரவேற்கும்/ஆதரிக்கும் அரசே அமைய வேண்டும். எச்சரிக்கைகள் செய்து அச்சுறுத்தும் அவல நிலையாவது குறைந்த அளவு(ம்) இல்லாமல் இருக்க வேண்டும். வேறுயாரைக் காட்டிலும் நேரடியான அரசு ஊழியத்தில் உள்ள ஆசிரியர்கட்கும் இந்த உரிமை வேண்டும். தன் காலத்துக் கல்வி நிருவாகத்தையும் பிற அரசியல் ஆட்சியியல் முறைகளையும் ஆராய்ந்து குறை/நிறை கண்டு கருத்து மட்டுமே தெரிவிக்கும் உரிமையைக் கூட உரிமைபெற்ற நாட்டின் அரசு ஆசிரியர்கட்கும் மறுக்குமாயின் அந்த அரசு தன்னலம் காரணமாகப் பொதுநலத்தைக் கொல்லுகிறது என்றே சொல்ல வேண்டும். அரசியலாளர்களும் (Politicians) நாட்டியலாளர்களாக (States men) உயர்வதே உயர்வு.

இனி, ஆசிரிய(ர்களும்) எழுத்தாளர்(களும்) எந்த அளவிற்குத் தங்கள் பொதுவுடைமைக் குறிக்கோள் தெளிவுசீகாண்டு உயர்ந்து ஒன்றுபட்டுப் பொருமை இன்றி உழைக்கிறார்களோ (With motive and mobilisation) அந்த அளவிற்கே வருங்கால வாழ்வு: வாழ்க்கை: எண்ணம்: எழுத்து: வாழ்க்கை என்ற விகித அடிப்படை மிக்க வலிமை வாய்ந்தது என்பதை உள்ளார உணர்வதே உய்யும் வழி.

"என் மனம் கவர்ந்தவர்"

THE MOST REV. THOMAS FERNANDO, D. D., D. C. L.
BISHOP OF TIRUCHIRAPPALLI

உயர்திரு A. P. C. வீரபாகு அவர்களின் மணிவிழா கொண்டாடப் போகும் செய்தி கேட்டு நான் மிகவும் மகிழ்ச்சியுற்றேன். இவருடைய நண்பர்கள் மட்டுமன்று, திருமந்திரநகர் பொதுமக்களும் பெருமிதத்துடன் விழா எடுத்துப் பாராட்டுதற்கு இவர் உரியவர். நானறிந்த மக்கட்தலைவர்களுள் ஒருவரான இவர் என் மனதைக் கவர்ந்தவர். அன்னவர்க்கு எனது உளமார்ந்த வாழ்த்துக்கள்.

திருமந்திரநகரில் ஆயராக நான் பணியாற்றின 20 ஆண்டுகள் திருமிகு வீரபாகு அவர்களை எனக்குத் தெரியும். இவர் ஒருபெரிய செயல்வீரர்.

"மெய்வருத்தம் பாரார், பசிநோக்கார், கண்துஞ்சார்,
எவரெவர் தீமையும் மேற்கொள்ளார்-செவ்வி
அருமையும் பாரார், அவமதிப்புங்கொள்ளார்
கருமமே கண்ணாயினர்."

என்ற நீதிநெறி விளக்கம் இவருக்குப் பொருந்தும். அவ்வீரத்துக்குத் தனிச் சிறப்புக்களும் உண்டு, அதாவது, அறிவுத் தெளிவும் பொதுநோக்கும் கொண்டது அவ்வீரம். கொண்டதைச் சாதிக்கும் திண்ணம் செயல் வீரத்தின் இயல்பு. ஆனால் அது ஆக்கலாம் அல்லது அழிக்கலாம். 'துணிந்தபின் எண்ணுவோம் என்பது இழுக்கு' என்ற வகையில் வீரமாய் ஒருவன் செயல்படலாம், எனினும், எண்ணித் துணிந்த கருமமே அறிவுடைய செயல்.

திருமிகு வீரபாகு அவர்கள் அறிவாற்றல் கொண்டவர்கள். அதுவும் பல துறையில் கொண்டவர்கள். கல்வி, கலை, சமூகநலம், அரசியல், நிர்வாகம், வாணிபம் போன்ற பல் வேறு துறைகளில் ஆழ்ந்த கருத்துக்களும், அவற்றை நடைமுறையில் கைக்கொள்ளும் வழி வகைகளைக் கணித்துணரும் திறனும் இவருக்கு உண்டு. இதை இவருடைய சொற்பொழிவுகளில் நான் கேட்டு வியந்திருக்கின்றேன், பாராட்டியுமிருக்கின்றேன். கேட்போருக்குத் தெளிவூட்டி அவர்களை ஊக்குவிக்கும் விதத்தில், எல்லோரும் புரிந்துகொள்ளக் கூடிய எளிய நடையில், சலிப்பின்றி அனைவரும் கேட்டு ரசிக்கும்படி இவர் அழகாகப் பேசுவார். இவருடைய பேச்சுக்களிலிருந்து நானும் பல கருத்துக்களைக் கற்றிருக்கிறேன்.

இந்தத் திறமைகளையெல்லாம் இவர் மக்களின் பொது நலனுக்குப் பயன்படுத்தினர். எவருடனும் அந்நியம் பாராட்டாமல் இனிது உரையாடி, மக்களைப் பிரித்துணரும் குறுகிய மனமின்றி எல்லோருடைய நலனையும் உள்ளத்தில் கொண்டு, தூத்துக்குடி பட்டணத்திலும்

தென்றல் தவழும் தென்பாண்டி நிலப் பரப்பிலும் அனைவருக்கும் சேவைசெய்ய இவர் விரும் புவார். இப்பொது நோக்கு இவரைச் 'சேவைச் செம்மலா'க்கி, எல்லோருக்கும்-படித்தவர்க் கும் பாமரர்க்கும், தனவந்தருக்கும் எளியவர்க்கும், உள் ளூர்வாசிகளுக்கும் வெளியிலிருந்து வந்தவர்களுக்கும் ஏற்புடையவராகவும் செய்துவிட்டது. ஆகவே, மக்களின் நலனை வாழ் வின் இலக்காகக் கொண்ட இறையடியாரின் மனதை இவர் கவர்ந்து விட்டதில் வியப்பில்லை.

"திரை கடல் ஓடித்திரவியம் தேடு" என்ற மூதுரைக்கு ஏற்பத் தமிழகத்தின் பொரு ளாதார முன்னேற்றத்துக்குத் தூத்துக்குடித் துறைமுகம் வழிகோலும். ஆனால் அதற்கு அங் குள்ள மக்களின் நட்புறவும் ஒத்துழைப்பும் அவசியமாகும். இவ்வடிப்படைத் தேவையை நிறைவுசெய்யும் நற்பணியில் திருமிகு வீரபாகு அவர்கள் முன்னணியில் நின்று செயல்படு வதின் விளைவாகப் பொதுமக்களின் ஒற்றுமை ஓங்குமென்று நம்புகிறேன். இந் நம்பிக்கை நிறைவேறுமாறு, இவர் இன்னும் பல்லாண்டுகள் நலமுடன் வாழ்ந்து அருந்தொண்டாற்ற இறைவன் இவரை ஆசீர்வதிக்க வேண்டுகிறேன்.

உபன்யாச சக்கரவர்த்தி சேங்காலிபுரம்
அனந்தராமதீக்ஷிதர் நமது ஏ. பி. ஸி.க்கு
பொன்னுடை அணிவித்தல்

திருவாவடுதுறை ஆதீனம் காருபார்
நமது ஏ. பி. ஸி. வீரபாகுக்கு
பொன்னுடை அணிவித்தல்

தருமை ஆதீன பிரதிநிதி பொன்னுடை அணிவித்தல்

மதுரை என். எம். ஆர். சுப்பராமன் அவர்கள்
நமது ஏ. பி. ஸி. வீரபாகுக்கு பொன்னுடை அணிவித்தல்

தென்னிந்திய வங்கியின் ஊழியர் சங்கம் நமது ஏ. பி. ஸி.க்கு
பொன்னுடை அணிந்து கௌரவித்தல்

ஆகமம்

மகா வித்வான் ச. தண்டபாணி தேசிகர்

ஆகமம் என்பது பொது வகையில் நூலின் பெயராக வழங்குவதை 'ஆகம அளவை' என்ற வழக்கால் தருக்கநூல்களிலும், சிவஞானசித்தியார் அளவையியலிலும் அறிகிறோம்.

அருமையான-சுவையான உருவகம் ஒன்று ஆகமத்தின் பெருமையை அளந்து காட்டுகிறது.

"வேதம் பசு அதன் பால் மெய்யாகமம்" என்பது அப்பாடற் பகுதி. ஆகவே வேதப்பசு கறந்த பால் ஆகமம் என்பது பெறப்படும். அதிலும், மெய்யாகமம் என்ற அடைமொழி இப் பாடல் எழுந்த காலத்தே பொய்யான-புனைந்துரைகளான-மக்களுயிர்க்கு நன்மை பயவாத சில நூல்களும் ஆகமம் என்ற பெயரால் வழங்கத்தொடங்கியிருக்கலாம். அவற்றினின்று சிலவற்றைப் பிரிப்பதற்கு 'மெய்யாகமம்' என்ற அடைமொழியை இக்கவிஞர் அளித்திருக்கலாம் அல்லவா!

இது போன்றே

"வேதமொ டாகமம் மெய்யாம் இறை வனூல்
ஓதும் பொதுவுஞ் சிறப்பு மென் றுள்ளன
நாதன் உரை நாடிடில் இரண்டந்தம்
பேதமென்பர் பெரியோர்க்கவே தமே

திரு மந். 2358

என்ற மந்திரம் வேத சிவாகமங்கள் இறைவனுல் அருளிச் செய்யப்பெற்றவை. வேதங்கள் பரியாக முற்றும் அற்றும்மாகிய மக்கட்சமுதாயத்துக்குப் பொதுவானவை. ஆகமங்களோ நல்லறிவு சற்றே விளங்கிய பரியாகம் பெற்ற உயிர்களுக்காகவே இறைவனே அருளியவை என்பதை விளக்கும்.

இறைவன் வேதமாகியும், ஆகமமாயும் உள்ளான். நூல் உருவாக மக்களுயணுகுகிறான்; அண்ணிக்கிறான்; (தித்திக்கிறான்) என்பதை

'ஆகம மாகி நின்றண்ணிப்பான்'(திருவா: 1:வரி4) என்ற மணிவாசகம் காட்டுகிறது.

திருக்காழிலை மலையில் சிவபெருமான் ஆகமங்களை அன்னைக்கு அருளினர். அம்மை அதனைச் சிறிது சிந்தை பற்றுதிருந்து செவிமடுத்தார். அதனுல் மறக்கருணை காட்டிய மகேசன் அவற்றைக் கடலில் ஏறிந்தார். அம்மையையும் வலஞர் செல்வியாகச் சபித்தார். தவறுணர்ந்த அம்மை அடிபணிந்து மன்னிப்பு வேண்ட இறைவன் நந்தி எம் பெருமானைச் சுருமீளுகித் தேடிக்கொணரச் செய்தார். தாமே கேவேடராகி (வலஞர் காளையாகிச்) சுருவைக் கொன்று ஆகமங்களை மீட்டு, வலச்சியான அம்மையைத் திருமணஞ்செய்து கொண்டார் என்ற வர்லாறு, 'ஆகமங்களை உபதேச வாயிலாக அன்றிப் படித்தறிவது மட்டும் போதாது; ஆசிரியர் உபதேசிக்கும்போது மிக மிகக் கவனமாகக் கேட்டலும் வேண்டும்' என்பதை உணர்த்துகின்றது.

மேலும், அவ்வாகமங்களை மீளவும் சிவவாக்காகவே மயேந்திர மலைமீதிருந்து தம்முடைய

ஐந்து முகங்களினின்றும் தோற்றுவித்தார். அதனை ஆன்மாக்கள் அறிந்துய்வதற்காகக் கல்லாடம் என்னுந்தலத்தில் அம்மையப்பராக எழுந்தருளியிருந்து விளக்கினர் என்ற செய்திகளை அறிவாற் சிவமேயான மணிவாசகப் பெருமான்

> "கேவேடராகிக் கெளிறது படுத்து
> மாவேட்டாகிய ஆகமம் அருளியும்
> மற்றவை தம்மை மயேந்திரத்திருந்து
> உற்றவைம் முகங்களாற் ரேற்று வித்
> தருளியும்
>
> திருவாசகம் 1:17-20
>
> மன்னுமாமலை மயேந்திர மதனிற்
> சொன்ன ஆகமம் தேற்றாறு வித்தருளி
> கல்லாடத்துக் கலந்தினி தருளி
> நல்லா ளோடு நயப்புற வெய்தியும்"

என்ற பகுதிகளாற் குறிப்பர். 1:9-12.

திருமூல தேவநாயனார்,

> அஞ்சனமேனி அரிவையொர் பாகத்தன்
> அஞ்சொ டிருபத்து மூன்றுள ஆகமம்
> எஞ்சலில் விஞ்ஞகர் இருபத்
> தெண்மரும்
> அஞ்சாம் முகத்தில் அரும்பொருள்
> கேட்டதே
>
> —திருமந் 68

என்ற செய்யுளால் ஆகமம் சதாசிவ மூர்த்திபினுடைய ஐந்து முகங்களினின்றும் தோன்றியன. அவை இருபத்தெட்டு. இருபத்தெட்டுபேர் உபதேசங் கேட்டனர் என்ற வரலாற்றைக் கூறுகிறார். திருமந்திர உரையாசிரியர்களிற் சிலர் சதாசிவ நாயனுடைய ஐந்தாவது முகமாகிய ஈசானத்தினின்றே இருபத்தெட்டாகமங்களும் தோன்றின என்பர். அவற்றுள் காரணம், காமிகம், வீரம், சிந்தியம், வாதுளம், வியாமளம் காலோத்திரம் சுப்ரவேதம், மகுடம் என்ற ஒன்பது ஆகமங்களையே திருமூலர், ஒன்பது தந்திரங்களாகத் தமிழ் செய்தேன் என்கின்றார். (திருமந். 135)

சாதனங்கள்:

ஆகமங்களின் அமைப்பையும், அதிற் கூறப் பெறும் பொருட்டொகுதியையும் பற்றி எல்லா ஆகமங்களும் தந்திராவதாரப்படலம் என்பதிற் கூறுகின்றன. ஆனால் அவை ஒன்றற்கொன்று மாற்றமும் பிறழ்வும் உடையனவாகவே யுள்ளன.

இப்பகுதி 'காரணம்' என்னும் ஆகமத்தின் துணைக்கொண்டே எழுதப்பெறுகின்றது.

சொற்பொருள்:

'ஆகமம்' என்ற சொல்லுக்குப் பகுதிப்பொருளாகவும், சங்கேதப் பொருளாகவும் பல வேறு பொருள்கள் கூறப்பெறுகின்றன. 'கம்' என்னும் பகுதிக்குப் போ என்று பொருள். 'ஆ' என்னும் துணையாகிய இடைச்சொல் சார்ந்து ஆகம் என்ருகிப் பகுதிப் பொருள் வேறுபட்டு வருதல் என்ருயிற்று. ஆகமம் வருதலையுடையது. அதாவது ஆக்கியோனுகிய சதாசிவமூர்த்தியினிடமிருந்து அம்மைக்கும் அமரர்களுக்கும் ஆன்மாக்களுக்குமாக வருதலையுடையது என்பதாம். ஆகவே ஆகமம் இறைவனிடமிருந்து வழிவழியாக உபதேச பரம்பரையில் வந்தது என்னும் பொருளதாதல் தெளிவு. இது பகுதிப்பொருள்,

ஆ—ஆன்மா; க—முத்தி; ம—மலம், ஆன்மாக்கள் மலம் நீங்கி முத்தியடையும் உபாயங்களை யுரைப்பது என்ற சங்கேதப்பொருளையும் அறிவிக்கிறது தந்திராவதாரபடலம். இப்பொருள்களால் ஆகமம் இறைவனிடம் தோன்றி உயிர்கள் மலமகன்று முத்தியின்பம்பெற உதவப்பெற்றது என்ற பொருள் விளக்கம் பெறுகிறது.

ஆகமத்தோற்றம்

சதாசிவ மூர்த்திக்கு ஈசானம், தத்புருஷம், அகோரம், வாமதேவம், சத்யோசாதம் என ஐந்து திருமுகங்கள் உள்ளன. அவற்றுள் **சத்யோசாத**

முகத்திலிருந்து காமிகம், யோகசம், சிந்தியம், காரணம், அஜிதம் என்ற ஐந்து ஆகமங்கள் தோன்றின,

வாமதேவமுகத்தினின்று தீப்தம், சூட்சுமம் சகஸ்ரம், அம்சுமான், சுப்ரபேதம் என்ற ஐந்தாக மங்கள் தோன்றின.

அகோர முகத்தினின்று விஜயம், நிச்சு வாசம், சுவாயம்புவம், அனலம், வீரம் என்ற ஐந்தும் தோன்றின.

தத்புருடத்திலிருந்து ரௌரவம், மகுடம், விமலம், சந்திர ஞானம், பிம்பம் என்ற ஐந்தும் தோன்றின.

ஈசான முகத்தினின்று புரோத்கீதம், லளிதம், சிந்தம், சந்தானம், சர்வோக்தம், பாரமேஸ்வரம் கிரணம்; வாதுளம் என்ற எட்டு ஆகமங்கள் தோன்றின.

வகை: இந்த இருபத்தெட்டாகமங்களில் முதற் பத்து ஆகமங்கள் சிவபேதம் எனவும், பின்னுள்ள பதினெட்டாகமங்கள் உருத்திரபேதம் எனவும், இருவகைப்படுவன. சிவபேத ஆகமங்கள் ஒவ் வொன்றையும் மும்மூன்றுபேர் மரபு வழி நின்று கேட்டனர்.

சிவபேதம்—10

காமிகம்	பிரணவர்	திரிகலர்	ஹரர்
யோகசம்	சாதாக்யர்	பஸ்மர்	விபு
சிந்தியம்	அதீப்தர்	கோபதி	அம்பிகா
காரணம்	காரணர்	சர்வருத்திரர்	பிரசாபதி
அசிதம்	சுசிவன்	சிவன்	அச்யுதன்
தீப்தம்	ஈசன்	திரிமூர்த்தி	உதாசனன்
சூட்சுமம்	சூட்சுமர்	வைசிரவணர்	பிரபஞ்சனர்
சகஸ்ரம்	காலன்	பீமன்	தருமன்
அம்சுமான்	அம்பு	உக்கிரக	ரவி
சுப்ரபேதம்	தேசசர்	விக்னேசர்	சசி

உத்திரபேதம்—18

விசயம்	அநாதிருத்ரர்	பரமேசுரர்
நிச்வாசம்	தசார்ணர்	பார்வதி
சுவாயம்புவம்	நிதனேசர்	பத்மபூ
ஆக்னேயம்	வியோமர்	உதாசனக
வீரம்	தேசர்	பிரசாபதி
ரௌரவம்	பிரமேசர்	நந்திகேசர்
மகுடம்	சிவர்	மகாதேவர்
விமலம்	சர்வாத்மர்	வீரபத்ரர்
சந்திரஞானம்	அனந்தர்	பிரகஸ்பதி
முகபிம்பம்	பிரசாந்தர்	ததீசி
புரோத்கீதம்	சூலி	கவசர்
லளிதம்	ஆலயேசர்	இலளிதர்
சித்தம்	விந்து	சண்டேசர்
சந்தானம்	சிவநிஷ்டர்	சுசம்பாதர்
சர்வோக்தம்	சோமதேவர்	நிருசிம்மர்
பாரமேசுரம்	சீதேவி	உசனர்
கிரணம்	தேவவிபு	சம்வர்த்தகர்
வாதுளம்	சிவர்	மகாகாளர்

இங்ஙனம் சிவபேதமான ஆகமங்களைக் கேட்டவர் கள் மும்மூவராகவும் ருத்ரபேதங்களைக் கேட்டோர் இவ்விருவருமாக உலகத்திற்கு உதவினர்.

இந்த ஆகமங்கள் உபதேச முறையில் பரவிய நிலை பரம், மகான், திவ்யம், திவ்யாதிவ்யம் அதிவ்யம் என ஐவகைப்படும். இவற்றின் விளக் கம் காரணாகமத்திற் காணலாம்.

இந்த மூலாகமம் 28லிருந்து கிளைத்தெழுந்த வழியாகமங்கள் உபாகமங்கள் எனப்பெறுவன. அவை மூலாகமம் ஒன்றினின்று மூன்றும் ஐந்தும் ஆறு முதலாகப் பலவேறுகப் பிரிந்து கிளைத் துள்ளன. இவை மொத்தத்தில் இருநூறே உள் ளன.

ஆகமங்கள் அனைத்தும் ஞானபாதம், யோக பாதம், கிரியாபாதம், சரியாபாதம் என நான்குப்

புக்களையுடையன. அவற்றுள் ஞானபாதம் பதி பசு பாசங்களின் உண்மையையும் இலக்கணத்தை யும் அறிவிப்பன. உயிர்கள் மலநீக்கம் பெற்றுப் பதியையடைந்து பேரின்பம் அடையக்கூடிய உபாயங்களையுரைப்பன.

யோகபாதம்-பிராணயாமம் முதலான எண் வகை யோகவுறுப்புக்களையும், அவற்றின் நிலை வேறுபாடுகளையும், ஆன்மசுத்தி அந்தர்யாகம் முதலியவற்றின் இலக்கணங்களையும் அறிவிப்பது.

கிரியாபாதம், பரார்த்த ஆலயங்களில் கர்ஷ ணமுதல பிரதிட்டை வரை நிகழும் செயல்களின் விளக்கத்தையும் முறைகளையும், விழா முதல் பிராயசித்தம் வரையுள்ள விழா வகைகளின் விதி முறைகளையும், சமய விசேட நிர்வாண ஆசாரியா பிடேகம் வரைந்துள்ள தீட்சை விதிகளையும், அவற்றிற்குரிய மண்டபம் வேள்விக்குண்டம், முதலியவற்றின் இலக்கணங்களையும் அறிவிப்பது மந்திரம், கிரியை பாவனை, என்ற மூன்றையும் வகுப்பது.

சரியாபாதம் பூசைக்குரிய சாதனங்களையும் முறையையும் அறிவிப்பது.

இதில் ஆலய அமைப்பைக் கருவாகக் கொண்டு நகர அமைப்பு, குளம், தெரு, ஆறு மன் றம் இவற்றின் அமைப்பையும், திருவுருச்சமப் பின் இயல்பையும் அறிவிப்பதால் இதனைக்கண்ட சிலர் ஆகமங்கள் சிற்பநூல்கள்தாமே என்பர்.

சிற்ப நூல்கள் ஆலய அமைப்பு வழிபாடு வழியாக ஞானத்திற்குப் பயன்படுமுறையை உணர்ந்த பிறகு அவர்களே ஆகமங்கள் ஞான நூல்களே எழுதியும் பேசியும் வருகின்றனர்.

ஆகம நூல்கள் வடமொழியில் எழுதப்பெற்றி ருப்பினும் தமிழக மக்களின் கடவுட்கொள்கையை யும் வழிபாட்டு முறைகளையும் அவற்றிற்குரிய நாடு நகர ஆலய அரண்மனையமைப்புக்களையும் கூறும் தமிழர் வாழ்வியல் நூல் என்பதைத் தமிழர்கள் மறந்து விடக்கூடாது.

ஆதலால், ஆகம அறிவியல் வளர்ச்சி ஆலய வளர்ச்சி; ஆன்ம ஞான வளர்ச்சி; அநுபூதி மார்க் கம் என அமைவோம்.

இதுவரை, குடும்ப நலம், அரசியல் வாழ்வு பலவேறு பணிகளில் ஈடுபட்டுப் பிறர்க்கென வாழ்ந்த சைவப்பெருமகன் உயர்திரு வீரபாகுப் பிள்ளையவர்கள் தொண்டிற் பழுத்த தூயோராக அறுபாணுண்டு நிறைந்து சைவநலம் பழுத்த பண் புடையவர்களாகிறார்கள். அவர்கள் தொண்டு சமயத்துறையிலும் திரும்பிச் சைவர்களையும் சைவத்தையும் வாழவைக்கும்; வளர வைக்கும் என்று எண்ணுகிறோம்.

வாழ்க வள்ளல். வளர்க நலங்கள்.

ஏ. பி. ஸி. வீரபாகு

"துறைவன்"

(வானெலி நிலைய இயக்குநர்)

கட்டாக், ஒரிசா மாநிலம்.

விடுதலை தேடிப் போரிட்டார்
வீர சிதம்பரப் பெருவள்ளல்
விடுதலை பெற்ற பாரதரின்
வெற்றிகள் காணுமுன் மறைந்திட்டார் (1)

கப்பலோட்டிய பெருந் தமிழன்
கண்ட கனவுகள் பற்பலவாம்
ஒப்பி லாததோர் சமுதாயம்
உருவாக்கிட அவர் உழைத்திட்டார் (2)

"இளைஞர்க் கெல்லாம் உயர்கல்வி"
என்றொரு கனவு; "தமிழ்நாட்டில்
வளமும் வாழ்வும் வாணிபமும்
வளருக" என்னும் ஒருகனவு! (3)

"என்வழி போற்றும் நல்லிளைஞர்
எத்தனையோ பேர் இருக்கின்றார்
முன்வந் தென்றன் கனவெல்லாம்
முழுதும் நிறை வேற்றிடுவார்கள்" (4)

என்ற நினைவின் நிறைவோடு
இயற்கையிற் கலந்தார் சிதம்பரனார்
மன்றுள் ஆடிய பெருமானின்
மலரடி நிழலில் கரைந்திட்டார் (5)

இதயத்துள்ளே ஒலித்த குரல்
இந்தியர் உயர்கென எழுந்தகுரல்
விதியைச்சாடி வென்ற குரல்
வீரசிதம்பரக் குரல் காணீர் (6)

இன்னல் அலைகள் மோதிடினும்
எதிரியர் சூழ்ச்சி மிகுந்திடினும்
தன்னந் தனியாய்ப் போரிட்டார்
தன்னலங் கருதாச் சிதம்பரனார் (7)

நினைத்தால் உடலம் நடுங்கிடுமே
நெஞ்சு வெடித்துப் பொடிந்திடுமே
அனைத்துத் துயரக்கடல் விழுங்கும்
அகத்தியனே காண் சிதம்பரனார் (8)

இங்கவர் கனவு நனவாக
இதய ஆசைகள் நிறைவேற
கங்கணம் கட்டி யுழைத்தனனே
கருணைச் செம்மல் ஒருபெரியோன் (9)

வீரபாகுப் பெயர் கொண்டோன்
விசால நோக்கும் பேரறிவும்
சேரும் செல்வப் பேராளன்
செயல்வீரன் வெகு பண்பாளன் (10)

நிறுவினன் சிதம்பரனார் நினைவாய்
நிகரில்லாத தோர் கல்லூரி
நிறுவினன் தமிழர் நன்றியினை
நிலைத்திடு வெற்றித் தூணெனவே (11)

பேராசிரியரைத் துணைக் கொண்டான்
பிழையா அறநெறி மேற்கொண்டான்
ஊரார் நலமே எஞ்ஞான்றும்
உணர்வாய்க் கொண்ட அறிவாளன் (12)

தழைக்கும் தமிழக மரபுவழி
தளரா வீர பாகுவழி!
முழக்கிடுவோம் அவன் தொண்டுநலம்
முத்தமிழ் உலகம் போற்றிடவே (13)

அன்னவன் வாழிய நீடூழி
அன்பும் அருளும் அறமும்போல்!
மன்னவன் வீரபாகு வழி
மாநில மெங்கும் ஓங்குகவே (14)

(வேறு)

முத்துவிளையும் தொழில் விளையும்
முந்நீர் வங்கத் திருவிளையும்
பத்தி விளையும் பிறந்தமண்ணின்
பாசம் விளையும் தூதைநகர்ச்
சித்தன் வீரச் சிதம்பரன்பேர்
சேரும் அருமைக் கல்லூரி
புத்தம் புதிதாய் என்றென்றும்
புனிதத் தொண்டில் ஓங்குகவே (15)

புகழ்சேர் வேளாண் குடிக்கோமான்
புனிதன் வீரபாகு வெனும்
தகைமைச் சான்ரோன் பொதுப்பணிக்குத்
தன்னைத் தந்த அறிவாளன்
அகமும் முகமும் ஒருமித்த
அன்புத் தலைவன், மறைதல்இலாப்
பகலோன் போன்று வாழியவே
பாரோர் போற்றும் சிறப்பினிலே! (16)

தொல்காப்பியம்—
ஓர் உளநூல் மாளிகை

பேராசிரியர் கு. நா. சிவராமகிருஷ்ணன் B. O. L. (Hons)

'மொழி' என்பது ஒரு கருவி. மனிதன் படைத்த கருவிகள் பலவற்றுள் தலைசிறந்த கருவி: தானும் வளர்ந்து. தன்னை உருவாக்கிய மனிதனையும் வளர்க்கும் தனி ஆற்றல் உடையது மொழி. இது மொழி வரலாற்றில் காணும் பேருண்மையாகும். இந்த உண்மை உள்ளீடாக அமைந்த அடிப்படை நோக்கைக் கொண்டு விளங்குவது தொல்காப்பியம். "தமிழ் இலக்கண வரலாற்றின் தந்தை" என்ற பாராட்டைப் பெற்ற தொல்காப்பியர் இந்த அடிப்படையிலேயே தம் நூலை இயற்றி உள்ளார். தொல்காப்பியத்தின் அமைப்பை நோக்கும் போது இந்த உண்மை நன்கு விளங்கும்.

தொல்காப்பியத்தின் அமைப்பு

இன்று கிடைக்கும் தமிழ் நூல்களுள் காலத்தால் மிகப்பழமையானது, தொல்காப்பியம். 1610 நூற்பாக்கள் கொண்டது. எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் ஆகிய மூன்று பிரிவுகள் உடையது. ஒவ்வொரு அதிகாரத்திற்கும் 9 இயல்கள் வீதம் 27 இயல்களைக்கொண்டு விளங்குகிறது. தொல்காப்பியம் ஓர் உளநூல் மாளிகையாகக் காட்சி தருகிறது. எழுத்து, சொல் ஆகிய இரு அதிகாரங்கள் அந்த மாளிகையின் அஸ்திவாரம் போன்றவை. பொருளதிகாரத்தில் வரும் அகத்திணையியல், புறத்திணையியல், செய்யுளியல் முதலியன அந்த மாளிகையின் பகுதிகள். மாளிகையின் மைய மண்டபம் போன்று விளங்குவது மெய்ப்பாட்டியல். இ∴து உளநூல் உண்மைகளின் நிலைக்களம். இதனை இங்கே சிறிது விளக்கமாக ஆராய்வது பயனுடையதாகும்.

புதிய வீடு கட்ட விரும்பும் ஒருவன் அதற்கு வேண்டிய நல்ல கல், செங்கல், மரம், இரும்பு ஆகியவற்றைத் தேர்ந்தெடுத்துக் கொள்வான். இந்த வகையில் அமைவது எழுத்ததிகாரம். வீடு கட்டத் தேவையான இந்தச் சாதனங்களைக் கொணர்ந்து குவித்தால் போதுமா? குவிந்த செங்கல் சுவர்களாக எழ வேண்டுமே! சுவர் ஒழுங்கு, கதவு, நிலையமைப்பு, கட்டிடத்தின் முழுமைக்கு இன்றியமையாதவை. இவற்றை நினைப்பூட்டும் பகுதியாக அமைகிறது தொல்காப்பியத்தில் வரும் சொல்லதிகாரம்.

மொழியின் வளர்ச்சியைப் பற்றிய இலக்கணமாக எழுத்ததிகாரமும், சொல்லதிகாரமும் இருக்கின்றன. மொழி என்னும் கருவியைப் படைத்துத் தந்தவன் மனிதன். ஆயிரமாயிரம் ஆண்டுகளாக வாழ்ந்து வந்த மனித இனத்தின் சிந்தனைக் கருவூலத்தின் ஒலி வடிவமே மொழி என்பது. எழுத்தும், சொல்லும் மொழியின் புறவடிவம்; உடல் போன்றது. உடலின் ஊடே செழித்து வளர்ந்து வரும் உள்ளம், அதன் தன்மை, நுண்மைகள்- சுருங்கச் சொன்னால் மனித இனத்தின் எண்ண அலைகளின் வரலாறு—இதுவே மொழியின் தலைசிறந்த

கூறும். [1]இதைப் பற்றிய நுண்ணிய ஆராய்ச்சியைப் பொருளதிகாரத்தில் ஆசிரியர் தொல்காப்பியர் மேற்கொண்டுள்ளார். இதை எண்ணும்போது சிந்தனையாளர் உள்ளம் வியவாமலிருக்கமுடியுமா? 'சொல்' தன்னைக் குறிக்கிறது, ஒரு பொருளைக் குறிக்கிறது. இதற்கும் மேலே அது செய்யும் அரியகாரியம் ஒன்றினைத் தொல்காப்பியர் மிக நயமாக விளக்குகிறார். சொல்லின் பிறந்த வீடு மனித உள்ளம். பிறந்த வீட்டுச்சாயல் ஒரு பெண்ணிடம் அமைவது இயற்கை. அது போல் சொல் என்ற பெண்ணிடம் அது பிறந்த உள்ளத்தின் சாயல் படிகிறது தலைவி சொல்வதாக வரும் ஒரு பாடல் இதனை உணர்த்துகிறது.

பரத்தையிடம் சென்று திரும்பி வந்த தலைவனை நோக்கித் தலைவி, "உன்னுடைய மார்பில் விளங்கும் குவளை மாலை புலால் நாற்றம் வீசுதலால் அதனைப் பொருந்தேன். என் மகன் மார்பில் உள்ள இழிவான எருக்கம்பூ மாலையும் மணம் நிரம்பி உள்ளது" என்று கூறுகிறாள்.

"ஒல்லேம் குவளைப் புலாஅல் மகன்மார்பிற்
புல்லெருக்கங் கண்ணி நறிது"

குவளை மலர் புலால் நாற்றம் வீசுவதற்கும், எருக்கம்பூ மாலை மணம் மிகுந்திருப்பதற்கும் காரணம் என்ன தெரியுமா? குவளை மலர் மாலை புலால் நாற்றம் வீசுவதற்குக் காரணம் பரத்தையிடத்து ஒழுகி வந்த தலைவன் தவறு. அவனுடைய பிரிவாலும் செயலாலும் வருந்தும் தாயைத் தன் செஞ்சிறு வாய் முறுவல் காட்டி மகிழ்விக்கும் புதல்வன் மேல் பெருகும் அன்பு காரணமாக எருக்க மலர் மணம் சிறந்து விளங்குகிறது. தலைவன் செய்த தவறும் தன் குழந்தை மேல் பெருகும் அன்பும் காரணமாக முறையே, குவளைமாலை நாறுகிறது, குழந்தை மார்பிலுள்ள எருக்கம்பூ மாலை மணம் கமழ்கிறது. தலைவியின் உள்ளக் குறிப்பை இந்தப்பாடலில் வரும் சொற்கள் குறிப்பாக உணர்த்துகின்றன. இவை போன்று வரும் சொல்லமைப்பை.

[2] **"குறித்தோன் கூற்றம் தெரித்து மொழி**
கிளவி"

என்று தொல்காப்பியர் குறிப்பிடுகிறார்.

தொடர்பு இல்லாத புலால் நாற்றத்தைக் குவளை மலரிலும், மணம் இல்லாத எருக்கம்பூவில் நறுமணத்தையும் ஏற்றித் தலைவி பேசுவது அவள் இதயத்தில் ஆழ்ந்து கிடக்கும் உணர்ச்சியைச் சுட்டுகிறது.

உள்ளத்தில் அலைமோதும் இத்தகைய ஆழ்ந்த உணர்ச்சிகளை இப்படிக் குறிப்பாக எதிரொலிப்பது சொல்லின் ஒப்பற்ற பணியாகும். உள்ளத்தில் இழையோடும் உணர்ச்சிகளைச் சொற்கள் இப்படிக் குறிப்பாக உணர்த்தும் அழகு தொல்காப்பியரின் பொருள் அதிகாரம் முழுவதும் நிலவுவதைக் காணலாம். பொருள் அதிகாரத்திற்கே உரிய தனிச்சிறப்புகளுள் இதுவும் ஒன்று.

அகத்திணையியல், களவியல், கற்பியல், பொருளியல், புறத்திணையியல், மெய்ப்பாட்டியல், உவமையியல், செய்யுளியல், மரபியல் என்ற

---

1 எழுத்தும் சொல்லும் ஆராய்வது பொருளதிகாரத்தின் பொருட்டன்றே; பொருளதிகாரம் பெறேமே எனின் இவைபெற்றும் பெற்றிலேம்' களவியலுரை—இறையனார் அகப்பொருள்—தொல்—பக்கம் 748.

2 தொல்—சொல்—55; கூற்றம்—சொல். தெரித்து மொழி—தெரித்துக் கூறும் சொல். அதாவது விளக்கமாகக் கூறும் சொல்.

ஒன்பது பிரிகளைக் கொண்டது, பொருளதிகாரம். இதில் 665 நூற்பாக்கள் உள்ளன. இவற்றுள் அகத்திணை இயல் முதல் பொருளியல் ஈறாக உள்ளவை அகப்பொருளையும், புறத்திணையியல் புறப் பொருளையும் விளக்குகின்றன. மெய்ப்பாட்டியல் மெய்ப்பாடு என்பதையும், உவமையியல் அணி இலக்கணத்தையும், செய்யுளியல் யாப்பிலக்கணத் தையும் மரபியல் மரபுகளைப் பற்றியும் விளக்க வரு கின்றன. மாளிகையின் மைய மண்டபம் போல் விளங்குவது மெய்ப்பாட்டியல். 27 நூற்பாக்கள் கொண்ட மெய்ப்பாட்டியலை மூன்று பிரிவாக ஆராயலாம்.

எட்டு வகைச் சுவையினையும் அதன் பிரிவு களையும் பதினேரு சூத்திரங்களில் விளக்குகிறது முதல் பகுதி. உடைமை முதல் நடுக்கம் ஈறாக வேறு மூப்பத்திரண்டு வகையாக வரும் மெய்ப் பாடுகளை விளக்குவது இரண்டாம் பகுதி. அகத் திணைக்கே பெரும்பாலும் உரிய மெய்ப்பாடுகளை இறுதி 15 சூத்திரங்களால் கூறுவது மூன்றும் பகுதியாக உள்ளது.

முதல் பகுதி:

நகை (சிரிப்பு), அழுகை (அவலம்), இளி வரல் (இழிவு) மருட்கை (வியப்பு), அச்சம், பெரு மிதம் (வீரம்), வெகுளி (உருத்திரம்), உவகை என மெய்ப்பாடு எட்டு வகைப்படும்.[3]

வடமொழியில் அணிநூலார் கூறும் 'சுவை' (ரசம்) என்பதையே இங்கே ஆசிரியர் தொல்காப்பி யர் எண்வகை மெய்ப்பாடுகளாகக் கூறியுள்ளார்.

'சுவை' என்பது மனதில் தோன்றும் விருப் பம் முதலிய மனச் செய்கையாகும்.[4] அனுபவம் இருவகைப்படும். நேரடியாகப் பெறும் அனுபவம் [Direct Experience], பாவனை வழி அனுபவம் [Vicarious Experience] என ஆராய்ச்சியாளர் இவற்றைக் கூறுவர்.

பாவனை வழி அனுபவத்தின் பல்வேறு நிலை களை ஆசிரியர் தொல்காப்பியனார் இங்கே எட்டு வகையாகப் பிரித்துக் கூறியுள்ளார். இரண்டா வது பகுதியில் [5]உடைமை, இன்புறல், நடுவு நிலைமை, அருளல், தன்மை, அடக்கம், வரைதல், அன்பு, ஐயம், நடுக்கம் முதலிய மூப்பத்திரண்டு மெய்ப்பாடுகள் குறிக்கப் பெறுகின்றன. இவற் றுள் "உடைமை" என்பது செல்வம். செல்வந் தன்னை நினைத்தின்புறுவதற்கு ஏதுவாகிய பற் றுள்ளம்". அஃதாவது செல்வம் உடைமையால் வரும் மெய்வேறுபாடு என்று பொருள் கூறுவர்.

'அன்பு' என்பது அருட்கு முதலாகி மனத் தினிகழும் நேயம். அஃது உடையார்க்கு, பிறர் கட்டுண்பம் கண்டவழிக் கண்ணீர் விழுமாகலின் அவ்வருளானே அன்புடைமை விளங்குமென்பது. "இவையெல்லாம் தத்தம் மனத்தின் நிகழ்ச்சியை

---

3 நகையே யழுகை இளிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி யுவகையென்று
அப்பால் எட்டே மெய்ப்பா டென்ப. [தொல்—மெய்ப்— 3]

4 சுவையாவது—'வடிவம், இளமை முதலிய விபாவங்களாலும், (விபாவம்—விசேடித்துத் தோன்றியது), கட்டார்வை, மயிர் சிலிர்த்தல் முதலிய அநுபாவங்களாலும், (பின்னர்த் தோன்றியது), வெறுப்பு, பலக்குறை முதலிய சஞ்சாரி பாவங்களாலும் (துணை செய்வதாகத் தோன்றியது) உண்டாகும் விருப்பு முதலிய மனச் செய்கையாம்.' மு ரா. [பொருளதிகார ஆராய்ச்சி—153]

5 மெய்ப்பாட்டியல்—12

வெளிப்படுத்தின ஆகலின் மெய்ப்பாடு எனப்பட்டன. இனி வருகின்றவற்றிற்கும் இஃது ஒக்கும்'' எனப் பேராசிரியர் விளக்கம் எழுதியுள்ளார். இந்த வரிசையில் வரும் ''வரைதல்'' என்பதற்குக் ''காப்பன காத்துக் கடிவன கடிந்தொழுகும் ஒழுக்கம்'' என்று பொருள்கூறுவர்.

மூன்றாவது பகுதியில் அகத்திணைக்கே பெரும்பாலும் உரிய மெய்ப்பாடுகள் விளக்கப் பெறும். ஒருவனும் ஒருத்தியும் எதிர்ப்பட்ட விடத்து, அவ்வெதிர்ப்பாடு தொடங்கிப் புணர்ச்சி வரையும் மூன்று பகுதியாகவும், புணர்ச்சிக்குப் பின் களவு [மறைந்தொழுகுதல்] வெளிப்படும் வரையும் மூன்று பகுதியாகவும், அமையும். இனி இந்த ஆறு பகுதியும் முறையே தனித்தனி நான்கு பிரிவு உடையனவாக மெய்ப்பாடுகள் விளக்கப் படும். இவற்றுள் தலைவனும், தலைவியும், முதல் முதலாகச் சந்தித்தல் [எதிர்ப்படுதல்] தொடங்கிப் புணர்ச்சி வரையுள்ள மூன்று பகுதியில் முதல் பகுதிக்குரிய நான்கு வகை மெய்ப்பாடுகளும், தலைவியிடம் மட்டுமே நிகழ்வன. [6] புகுமுகம் புரிதல், பொறிநுதல் வியர்த்தல், நகுநய மறைத்தல், சிதைவு பிறர்க்கின்மை என அவை குறிக்கப் பெறுகின்றன.

தலைவனும் தலைவியும் எதிர்ப்படும்போது தன்னை அவன் நோக்குதலைத் தலைவி விரும்பும் உள்ள நெகிழ்ச்சி [எதிர்ப்பட்ட தலைவன் தன்னைப் பார்ப்பதை விரும்பி நிற்கும் மனநிலை] இது புகுமுகம் புரிதல் என்னும் மெய்ப்பாடாம்.

'யானோக்குங் காலை நிலனோக்கு(ம்)
நோக்காக்காற்
றானோக்கி மெல்ல நகும்'' (குறள் 1094)

என்ற குறள் இதற்குச் சிறந்த உதாரணம் ஆம்.

தலைமகன் தன்னை நோக்கிய வழியுட்கும், நாணும் ஒருங்கு வந்தடைதலால் வியர்வு உண்டாகிய நெற்றியை உடையளாதல்.

அதன்பின்னர்த் தலைவனிடம் தோன்றிய குறிப்புக்களால் தலைவி உள்ளம் மகிழும். அதனைத் தன் புன்முறுவலால் வெளிப்படுத்தாது நிற்றல், நகுநய மறைத்தல் என்ற மெய்ப்பாடாம்.

''முகைமொக்கு ளுள்ளது நாற்றம்போற் பேதை
நகைமொக்கு ளுள்ள தொன் றுண்டு''
[1274]

அங்ஙனம் நகையை (மகிழ்ச்சி காரணமாகத் தோன்றும் முறுவல்) மறைந்த வழியும் உள்ளம் சிதைந்து நிறையழிதல் இயல்பு. ஆதலால் அச் சிதைவு (அவ்வாறு தன் உணர்ச்சி கட்டுக்கடங்காமல் பெருகுவதை) பிறருக்குத் தெரியாவண்ணம் அவள் தன் நெஞ்சினை நிறுத்தல் (நெஞ்சினை மறைத்தல்) இங்கே சிதைவு பிறர்க்கின்மை என்னும் மெய்ப்பாடாகக் கூறப்பட்டது.

யான்தற் காண்டொறும் தான்பெரிது மகிழ்ஞாள்
வாணுதல் வியர்ப்ப நாணினள் இறைஞ்சி
மிகை வெளிப்படாது நகைமுகங் கரந்த
நன்னுதல் வரிவளை தன்மனஞ் சிதைத்
ததை
நீயறிந் திலையால் நெஞ்சே
யானறிந் தேனது வாயா குதலே.

என்ற பாடல் தலைவன் கூறுவதாக வருவது. இயற்கைப் புணர்ச்சி பெற்று நீங்கிய அவன் தன் நெஞ்சிற்குச் சொல்வதாக இப்பாடல் அமைகிறது.

6 புகுமுகம் புரிதல், பொறிநுதல் வியர்த்தல் நகுநய மறைத்தல், சிதைவுபிறர்க் கின்மையொடு தகுமுறை நான்கே யொன்றென மொழிப.

இதில் மேலே கூறிய நான்கு மெய்ப்பாடுகளும் முறையே நிகழ்ந்தனவாகக் கூறப்படுதல் காணலாம். இவை போன்றே ஏனைய ஐந்து பகுதிகளின் மெய்ப்பாடுகள் இனிது விளக்கப்பட்டுள்ளன. இவற்றை அடுத்துத் தலைமகனிடம் நிகழும் மெய்ப்பாடுகள் கூறப்பெறுகின்றன. 'நிம்பிரி'[7] (அழுக்காறு-இச்சொல் இப்பொருளில் ஆசிரியரால் அருமையாக வழங்கப்படுவதாம்) கொடுமை, தன்னை வியத்தல் புறங்கூறுதல், வன்சொல், உறுதியின்மை, சோம்பல், தன் குடியை மேலாக மதித்தல், இருவருள் ஒருவர் தாமே இன்பம் பெரிதும் அடைவதாக நினைத்தல், அறிவின்மை, மறவி இன்னோன் ஒப்பாள் இவள் என்று அன்பு செய்தல் என்பவை உயர்ந்த காமக்குறிப்பிற்கு ஆகாதன என்று ஆசிரியர் கூறுவர்.

இறுதியாகக் கண்ணாலும், செவியாலும் நுட்பமாக அறியும் நுண்ணுணர்வு உடையவர்கள் அல்லாது மற்றவர்களுக்கு இம்மெய்ப்பாடுகளை ஆராய்ந்தறிந்து கொள்ளுதல் அரிதாம் என்று கூறி இவ்வியலை நிறைவு செய்வர் ஆசிரியர்.

இந்த இயலில் மெய்ப்பாடுகள் பற்றிக்கூறப்படுகின்றன.[8] இவற்றிற்கும் உளநூலுக்கும் என்ன தொடர்பு? மெய்ப்பாடு என்பது பொருட்பாடு. 'உலகத்தாரது உள்ளத்தே நிகழும் நிகழ்ச்சிகள் அங்கு நிகழ்ந்தவாறு புறத்தார்க்குப் புலப்படுவதோர் வழியால் வெளிப்படுத்தலாம்'' என்று இதனை விளக்குவர்.

இவ்வியலில் கூறும் மெய்ப்பாடு பிற இயல்களில் கூறுவனவற்றிற்கெல்லாம் பொதுவாகும்.[9] பிற இயல்களில் வரும் ஒழுகலாறுகளுக்கு (நடத்தை-Behaviour) எல்லாம் அடிப்படையாக உள்ள மனக்குறிப்பே இம்மெய்ப்பாடுகள். இயல்பு ஊக்கம் (Instinct) வழித்தோன்றும் மனக்குறிப்பு உடல் வேறுபாடு, ஆகியவற்றையே இங்கு மெய்ப்பாடுகள் என்று விளக்கியுள்ளனர், எனக்கூறலாம் எனவே இவற்றை இவ்வியலில் தொகுத்துக் கூறியுள்ளார். இவ்வியலின் தலைப்பு, அமைப்பு எல்லாமே ஆசிரியரின் உளநூல் ஞானத்தை விளக்குகின்றன, பாவனை வழி அனுபவக்கூறுகளை எட்டு வகையான மெய்ப்பாடுகளாக முதல் பகுதியிலும், ஏனைய மெய்ப்பாடுகளில் தன்னுணர்வு இயல்பூக்கங்களை (Self-preservatory Insticts) அடிப்படையாகக் கொண்ட மெய்ப்பாடுகளை இரண்டாவது பகுதியிலும், பால் உணர்வு இயல்பூக்கங்கள் (Sex Instincts) காரணமாகத் தோன்றும் மெய்ப்பாடுகளை மூன்றாவது பகுதியிலும் அமைத்து விளக்கும் அழகே அழகு. இயல்பான மன எழுச்சியை இயல்பூக்கம் (Instinct) என்று உளநூலார் கூறுவர். தன்னுணர்வு நிலைகளை விளக்கும் மெய்ப்பாடுகளுக்கு மூலமாக உள்ள இயல்பூக்கங்கள் உடைமை முதல் நடுக்கம் ஈறாக உள்ள இரண்டாம் பகுதியில் விளக்கப்பெறுகின்றன. உடைமை என்று ஆசிரியர் இங்கே கூறுவது உளநூலார் கூறும் உடைமை இயல்பூக்கம் (Possessive Instinct) என்பது தெளிவு. அன்பு எனும்

---

7 நிம்பிரி—பால் உணர்வு காரணமாகத் தோன்றும் அழுக்காறு (பொருமை).

8 மெய்க்கட்பட்டு விளங்கிய தோற்றம்—வீரசோழிய உரை இதனையே வடநூலார் 'சத்துவம்' என்பர்.

9 'மேலை ஒத்துக்களுள் கூறப்படும் ஒழுகலாற்றிற்கும் காட்டலாகாப் பொருள—(தொல்—பொருள்—247) என்றவற்றிற்கும் எல்லாம் பொதுவாகிய மனக் குறிப்பு இவையாகலின் இவற்றை வேறுகொண்டு ஓரினமாக்கி மெய்ப்பாட்டியலென வேறோர் ஒத்தாக வைத்தமை எல்லாவற்றிற்கும் இயையுடைத்தென்பது. (தொல்—பேராசிரியர் உரை).

இயல்பூக்கம் (Instinct of Love) என்பதைக் குறிக்கிறது. இங்கே இந்தப்பிரிவில் கூறும் இயல்பூக்கங்கள் தன் உணர்வு வழி உண்டாகும் மெய்ப்பாடுகளாக அமைகின்றன. இவற்றைத் தன்னுணர்வு இயல்பூக்கம் வழிபிறக்கும் மெய்ப் பாடுகள் (Self-preservatory Instincts) எனலாம். அடுத்து வரும் மூன்றும் பகுதியில் பால் உணர்வு இயல்பூக்கம் வழித்தோன்றும் மெய்ப்பாடுகள் விளக்கப்பெறுகின்றன. பாலுணர்வு மெய்ப்பாடுகளை இங்கே தனியே கூறியிருப்பது சிந்தனைக்குரியது. Segmond Freud என்ற அறிஞர் பாலுணர்வு இயல்பூக்கத்தை Libido என்று குறிப்பிடுவர். இதற்கு ஒப்பாகத் தொல்காப்பியர் கூறும் [10]"உருவு நிறுத்த காம வாயில்" என்பதைக் கொள்ளலாம்.

பிற இயல்பூக்கங்களால் உருவாகும் மனக் குறிப்பு உறுப்புக்களின் வேறுபாடு ஆகியவை ஒரு வகை. இனிப் பாலுணர்வு காரணமாக ஏற் படும் இத்தகைய மனக் குறிப்பு உறுப்பு மாற்றங் கள் இவற்றினின்றும் முற்றிலும் வேருனவை என்று Segmond Freud என்னும் உளநூல் அறிஞர் கூறுகிறார்.[11]

மெய்ப்பாட்டியல் என்னும் அதிகாரத் தலைப்பு அதன் அமைப்பு அங்கே வரும் விளக்கங்கள் எல் லாம் உளநூல் நுட்பங்கள் பொதிந்தனவாகக் காட்சியளிக்கின்றன. இவற்றையெல்லாம் எண் ணும் போது தொல்காப்பியம் ஒரு இலக்கணநூல் மட்டுமன்று, சிறந்த உளநூல் மாளிகையாகவும் அது விளங்குகிறது, என்று கூறலாம். "தொல் காப்பியர் 'தமிழ் இலக்கண வரலாற்றின் தந்தை' என்பது மட்டுமன்று, சிறந்த 'உளநூல் மாளிகை யின் சிற்பி' என்றும் அவரைப் பாராட்ட மனம் முந்துகிறது.

---

10 'உருவு நிறுத்த காமவாயில்' என்பது பெண்மை வடிவும், ஆண்மை வடிவும் பிறழ்ச்சி யின்றி அமைந்தவழி அவற்று மேல் நிகழும் இன்பத்திற்கு வாயிலாகிய அன்பென்றவாறு ஒப்பிடுக: Libido [Instinctual forces of the sexual life] Freud. காமவாயில் எனப் பட்ட இயற்கை அன்பு வடிவு பற்றி அல்லது தோன்றுமையானும்..... (பேராசிரியர் உரை—மெய்ப்பாட்டியல் 51)

11 The sexual instincts both in their bodily and their mental manifestations conduct themselves differently from the other instincts which we set against them. (Lectures on Psycho—Analysis—Page 336). The Theory of Libido—Narcission-Segmond Freud.

தமிழ்த்திருமணம்

கீ. இராமலிங்கனார், எம். ஏ.,

செய்யும் முறை :

(1) மண அறை அமைப்பு

1. மணப் பந்தர்: வீட்டின் முற்றத்தில் நான்கு கால்கோ நட்டு, கால்களுக்குத் தென்னை ஓலைகளைச் சுற்றி, வாழை மரங்கள் கட்டி, பந்தலின் நான்கு பக்கமும் மாவிலைத் தோரணமும், பூச்சரங்களும் தொங்கவிட்டு ஒரு சோலை போன்ற இடத்தை அமைத்துக் கொள்வர். மாக் கோலம், செம்மண் முதலிய போட்டு அழகு செய்வர்.

2. பந்தர்க் கால்: தெய்வத்தின் துணையால் திருமணங்கள் கூடுவதால், அச் சோலையை ஒரு தெய்வச் சோலையாகக் கருதி, திருமணம் நடப்பதற்கு மூன்று நாளைக்கு முன்பே, தெய் வத்தை வழிபட்டு, ஐந்து வாழ்வரசியர், (சுமங்கலிகள்) பந்தலின் ஒரு காலுக்கு, பால் முதலிய விட்டுத் திருமஞ்சனம் ஆட்டி, அக்காலை மட்டும் பந்தலின் வடகிழக்கு மூலை யில் நடுவர். பிறகே மற்றக் கால்களை பந்தர்க்காரன் நட்டு, மணப்பந்தரை அமைப் பான். ஆயிரங்காலத்துப் பயிரான திருமணத்திற்கு அடிகோலுவது ஆதலின் கால் நடும் குழியில் நவமணிகள் இடுவர், நவதானியமும் பெய்வர்.

3. மணமனை : பந்தரின் மேற்கு இரண்டு கால்களுக்கும் இடையே, மணமக்கள் கிழக்கு நோக்கி அமர்வதற்கு, ஒரு நீள மணமனையை இடுவர். அம்மனையின் அடியில் சிறிது நெல் அல்லது அரிசி பெய்து வைப்பர்.

4. நிறை குடங்கள் : மணமக்களுக்கு நேர் எதிரே, பந்தரின் கிழக்கு இரண்டு கால்களுக்கும் இடையே, தரையில் மணல் அணைத்து, அதன் மீது இரண்டு புது மண் குடங் களுக்கு மஞ்சளும், குங்குமமும் இட்டு மங்கல வடிவாக்குவர்.

5. குட விளக்கு : பந்தரின் தென் கிழக்குக் காலையொட்டி, ஒரு மர உரலின் மீது, ஒரு சிறு மண் குடத்தில் நீர் நிரப்பி, அதன் பேரில் அகன்ற அகலில் விளக் கேற்றி வைப்பர். இவ்விளக்கு அணையாது இருக்க அகலைச் சுற்றி இலை கட்டுவர். மர உரல், குடம் அசையாதிருக்க; கல் உரலாயின் உறுத்துப்பட்டுக் குடம் உடையக் கூடும். எனவே, மரத்தாலான உரல்.

6. முளைத்த கூலங்கள் (நவதானியம்) : ஒன்பது மண் கலசங்களில், முளைத்த நவ தானியங்களை நிரப்பி, நிறைகுடங்களுக்கு முன்பக்கம் வரிசையாக வைப்பர். பந்தர்க்கால் நடும் அன்றைக்கே, நவதானியங்களை நனைத்து, முளைக்கப் போடுவர்.

7. **அம்மியும் குழவியும்:** பந்தரின் வடகிழக்குக் காலியொட்டி, ஓர் அம்மியும் குழவியும், அவற்றிற்கு மஞ்சள் குங்குமம் இட்டு, பொட்டு வைப்பர்.

8. **கை விளக்கு, கிளிவிலக்கு:** நிறை குடங்களின் முன்பு, ஒரு தட்டில் கை விளக்கு ஏற்றி வைப்பர். இவ் விளக்கைக் காமாட்சியம்மன் விளக்கு என்று சொல்வ துண்டு. குடங்களுக்குப் பின்புறம் கிளி விளக்கு அழகு செய்யும்.

9. **அம்மையப்பர்:** நிறை குடங்களுக்கு முன்புறம், முளைக் கலசங்களையொட்டி, இருதலை வாழையிலையில் பச்சரிசி பெய்து, அதன்மீது இரு செம்புகளை அமைப்பர். மணம் செய்து வைக்கும் ஆசிரியர், செம்புகளில் முக்கால் பங்கு நீர்விட்டு, மாவிலை செருகி, நாரோடு இருக்கும் தேங்காய் ஒவ்வொன்றை, அவற்றின் மீது நிறுத்துவர். தேங்காய் களுக்கும் செம்புகளுக்கும் மஞ்சள் இட்டுக் குங்குமம் வைப்பார். தேங்காய் மீது வெள்ளை, பச்சை, சிவப்புத் துணித் துண்டுகளையும் பூச்சரத்தையும் மாலைகளாக இடு வார். வெற்றிலை, பாக்கு, பழம், மஞ்சட் கொம்பு இவற்றை முன்னே படைப்பார்.

இவ்வாறு அம்மையப்பர் வடிவங்களை அமைப்பதற்கு முன், மஞ்சளில் ஒரு பிள்ளையார் பிடித்து வைப்பார். மலரிட்டுப் பழம் படைப்பார்.

(2) மணம் நிகழ் முறை

(அ) முற்பகுதி

1. **மணமகன், மணமகளுக்கு நலங்கு:** மணநாள் காலை, மணமகனைப் பந்தரில் அமரச் செய்து, பெண்வீட்டு, பிள்ளைவீட்டு, வாழ்வரசியர் நலங்கு வைப்பர். பிறகு மண மக்களுக்கு அப்படியே நலங்கு வைப்பர். மணமகனை மாப்பிள்ளைத் தோழர் அழைத்து வருவார். மணமகளைத் தோழி அழைத்து வருவார்.

2. **மண ஆடை படைத்தல்:** மணமகனும் மணமகளும் உடுத்திக்கொள்ள வேண்டிய மண ஆடைகளையும், பூமாலைகளையும் ஒரு தட்டில் வைத்து, அம்மையப்பர் முன், மண ஆசிரியர் படைப்பார்.

3. **மண ஆடைக்கு அவையினர் வாழ்த்து:** பிறகு அத்தட்டை அவையினரிடம் எடுத்துச் சென்று, அவையில் மூத்தவர்கள், ஆடையைத் தொட்டு வாழ்த்தச் செய்வார்.

4. **மண ஆடை வழங்கல்:** மணமகனை, மணப்பந்தருக்கு, மாப்பிள்ளைத் தோழர் அழைத்து வருவார். அவருக்குரிய மண ஆடை, மாலையை அவருக்கு வாழ்த்தியளிப்பார் ஆசிரியர். தோழி அழைத்துவர, மணமகளும் பந்தருக்கு வந்து, மண ஆடை, மாலை யைப் பெற்றுச் செல்வாள்.

5. **அரசாணிக்கால் நடுதல்:** இலையோடு கூடிய அரசமரத்துக் கொம்பு ஒன்றுக்கு ஐந்து வாழ்வரசியரைத் திருமஞ்சனம் ஆட்டச் செய்து, மஞ்சள், குங்குமம், பூ அணிவித்து,

பந்தரின் கீழ்ப்புறத்துக் கால்களுக்கு நடு இடையே, நிறைகுடங்களையொட்டி, கெட்டி மேளங்கொட்ட, அந்த அரசங்காலை ஆசிரியர் நடச் செய்வார். திருமணத்திற்கு இது ஆணிக்கால். எனவே இதை "அரசாணிக்கால்" என்பர்.

6. மணப் பொங்கல்: மண்பந்தரின் கீழ்ப்புறமாக, ஒரு மண்செப்பில் சோறு பொங்கி, இலைகளில் இட்டு வைப்பர், வீட்டுப் பெண்கள். மணமகனும், மண மகளும் மண ஆடையுடுத்தி, மாலையணிந்து, வலமாக வந்து படையல்களின் முன்பு நின்று, கற்பூரம் காட்டி வழிபடுவர்.

7. காப்புக் கட்டல்: மாப்பிள்ளையும், பெண்ணும், மணமனையில், பெண் வல மிருக்க அமர்ந்ததும், அரசாணிக்காலுக்கு மஞ்சட்கொம்பு கட்டிய ஒரு மஞ்சள் நூலைக் காப்பாகக் கட்டுவார். காப்புக்கட்டும்போது கெட்டிமேளம் கொட்டும்.

8. பெற்றோர் போற்றல்: மாப்பிள்ளை தன் பெற்றோருக்குத் திருவடி பூசை செய்வார். அப்படியே பெண்ணும் செய்வார். ஆசிரியர் செய்விப்பார்.

9. ஓம்படை செய்தல்: மாப்பிள்ளையின் பெற்றோர், தம் மகனின் வலக்கை யைப் பிடித்து ஏந்த, பெண்ணின் பெற்றோர், தம் மகளின் வலக்கையை எடுத்து, மாப் பிள்ளையின் வலக்கையில் வைத்து, பல்லாண்டு ஓம்பி வாழ்க! என வாழ்த்துவர்.

(ஆ) நடுப்பகுதி

1. இறைவழிபாடு: மஞ்சளிலுள்ள முன்னவனுரையும், அன்னையும் தந்தையு மாக இரண்டு செம்புகளில் நிறுவியுள்ள இறைவனையும், மணமக்கள் மலர் தூவி வழிபடுவர்.

தாலி கோத்த மங்கல நாண், ஒரு தட்டில், அரிசியின் மீது, தேங்காயில் சுற்றி வைக்கப் பெற்றிருக்கும். தேங்காய்க்கும் மஞ்சள், குங்குமம் இடப் பெற்றிருக்கும். இத் தட்டு அம்மையப்பர் முன்பு வழிபடும்போது வைக்கப் பெற்றிருக்கும்.

2. மங்கல நாணுக்கு அவையினர் வாழ்த்து: மங்கல நாண் தட்டை மண ஆசிரி யரோ, வேறு பெரியவர் ஒருவரோ அவையினரிடம் எடுத்துச் சென்று, தொடச் செய்து, வாழ்த்துப் பெறுவார்.

கூடவே, இன்னொருவர் ஒரு தட்டில் மஞ்சள் அரிசியும் மலரும் கலந்து வைத் துக்கொண்டு செல்வார். மங்கல நாண் தூட்டும்போது, தூவி வாழ்த்துவதற்கு, அவையினர், அவ்வரிசி மலரில் சிறிது எடுத்துக் கொள்வர்.

3. அழல் ஓம்பல்-1 (தீ வடிவான இறைவனைப் போற்றி): மணமக்கள் முன்பு ஒன்பது வகை மரக்குச்சிகளை இட்டு, நெய் விட்டு, ஓமம் வளர்த்துவார், ஆசிரியர். மணமகன் நெய் சொரிந்து கொண்டேயிருப்பார்.

4. மங்கல நாண் சூட்டல்: கை விளக்கை, மணமகனின் உடன்பிறந்தாள் ஏந்தி மணமகளின் பின்புறம் நிற்க, மங்கல நாணை, மாப்பிள்ளை இருகையில் தாங்கிப் பெண்ணின் கழுத்தில் சூட்டி, மூன்று முடுச்சுகள் இடுவார். கெட்டி மேளம் கொட்டும்; அவையினர் அரிசி மலர் சொரிந்து வாழ்த்துவர்.

மூடிச்சின் மீது, மஞ்சள் இட்டுக் குங்குமம் வைப்பார் மாப்பிள்ளை; பெண்ணின் பின் புறமாகக் கையைக் கொண்டு சென்று நெற்றியிலும் குங்குமம் இடுவார்.

5. பட்டங் கட்டல்: மணமக்களின் பழைய உறவினர்களும், மணத்தினால் புதிதாக உறவினர் ஆனவர்களும், தங்கள் தங்கள் 'மாமிப்பட்டம்', 'நாத்திப்பட்டம்' என்றெல்லாம் உறவின் முறையைக்கூறி, மணமக்களின் நெற்றியில் தங்கத் தகட்டுப் பட்டம் கட்டுவர். சிலர் பொற்காசும் கட்டுவர்.

6. மாலை மாற்றல்: மணமக்கள் எழுந்து நின்று, மூன்று முறை மாலை மாற்றிக் கொள்வர்.

7. வலம் வரல்: ஒரு மூத்த இளம் பெண், தன் கையில் தட்டில் வைத்த கைவிளக்கை ஏந்தி முன்னே செல்ல, அவளைத் தொடர்ந்து, அறியாச் சிறுமிகள் மூவர் கலசங்களைத் தாங்கிப் போக, மாப்பிள்ளைத் தோழர், மணமகளின் இடக்கைச் சுண்டு விரலைத், தன் வலக்கைச் சுண்டு விரலால் பிடித்துப்பின் பின் செல்வார். விளக்குத் தட்டில் பந்தரின் மூலைகளில் காசு இடுவர்.

8 அம்மி மிதித்தல்: பந்தரில் இடப் பெற்றுள்ள அம்மியின் மீது, மணமகன் மணமகளின் வலக்காலைப் பற்றி வைத்து, அதன் இரண்டாம் விரலில் வெள்ளிச்சுற்று மோதிரம் அணிவார். இடக்கால் இரண்டாம் விரலில் இன்னொரு மோதிரம் அணியப்பெறும்.

9. பொரியிடல்: மணமக்கள் ஒரு சுற்று வந்ததும், ஓமத் தீயின் முன்பு நிற்பர். பெண்ணின் உடன் பிறந்தான், நெல் பொறியைத் தன் இரண்டு கைகளில் ஏந்திப் பெண்ணின் கையில் தர, அதைப் பெண், மாப்பிள்ளையின் கையில் பொருந்த வைக்க, இருவருமாக அதைத் தீயில் இடுவர்.

இங்ஙனமே, இரண்டாவது சுற்றிலும் செய்த பிறகு, மைத்துனனுக்கு மாப்பிள்ளை சந்தனம் தந்து, பன்னீர் தெளித்து, மலர் மாலையிட்டு, மோதிரம் போடுவார். இதற்கும் பொரி மோதிரம் என்று பெயர்.

(இ) பிற்பகுதி

1. உறுதிமொழி ஏற்றல்: மூன்றுமுறை வலம் வந்து அமர்ந்ததும், மணமக்கள் மண வாழ்க்கையை வெற்றியுடன் நடத்துவதாக உறுதிமொழி ஏற்பர். இரண்டு தாள்

களில் அவ்வுறுதிமொழி வரையப் பெற்று மணமக்கள் கையொப்பமும், மண ஆசிரியர், சில பெரியவர்கள், கையொப்பமும் வாங்கி மணமகனுக்கு ஒன்றும், மணமகளுக்கு ஒன்றும் வழங்கப்பெறும்.

2. அழல் ஓம்பல் – 2. (கோள், பிறவற்றுல் குறை நேராது இருக்க): எரிந்து தணிந்துள்ள ஓமத் தீயில், குச்சிகளும், நெய்யும் சொரிந்து, முன் போல் அழல் ஓம்பப் பெறும்.

3. காப்பவிழ்த்தல்: முதலில் அரசாணிக் காலில் கட்டிய காப்பும், பிறகு மணமக்கள் காப்பும் அவிழ்க்கப் பெறும். கெட்டிமேளம் கொட்டும்.

4. மாறியமர்தல்: மணமகன் வலப்பக்கமாக அமர்ந்து, தன் நெஞ்சப் பகுதியான இடப் பக்கத்தில், தன் அன்பிற்கு உரியவளாகி விட்ட மணமகளை அமரச் செய்வார்.

5. மணப்பரிசுகள்: மணமக்களுக்குப் பரிசுப் பொருள்கள் வழங்க விரும்புகிறவர்கள், அவற்றை வழங்குவர்.

6. அரிசி வாழ்த்து: மணமக்கள் எதிரே அரிசியைச் சொரிந்து, அவையிலுள்ள பெரியவர்கள் மணமக்களை வாழ்த்துவர். மணமக்களுக்குத் திருநீறு பூசியும் வாழ்த்துவர்.

7. ஆலம் சுற்றல்: மணமக்களுக்குக் கண்ணேறு கழிக்க, மூத்த வாழ்வரசியரில் ஒருவர் அல்லது இருவர் சேர்ந்து ஆலஞ் சுற்றுவர்.

8. வலம் வரல்: முன் போல் மூன்றுமுறை மணமக்கள் வலம் வருவர். விளக்குத் தட்டில் முன் போலவே காசு இடுவதும் உண்டு. முதல் முறையில் பெண் வீட்டார் இட்டால், இந்த முறையில் மாப்பிள்ளை வீட்டார் இடுவர்.

9. பாலும் பழமும்: வலம் வந்து, வீட்டுக்குள் சென்று அமர்ந்ததும், அலுப்புத்தீர மணமக்களுக்குப் பாலும் பழமும் அளிப்பர். முதலில் மாப்பிள்ளைத் தோழர் பருகுவதற்கு முன் அவருக்குப் பணப்பரிசு அளித்து மகிழ்விப்பர், மணவீட்டர்.

வாழ்த்துரைகள்: மணமக்கள் நாற்காலிகளில் வந்து அவையில் அமர்ந்ததும், பெரியார்கள் அவர்களுக்கு நல்லுரைகள் கூறி வாழ்த்துவர்.

செய்முறை விளக்கம்.

மேலே கண்ட ஒவ்வோர் இனமும் ஒரு நல்ல கருத்தை அடிப்படையாகக் கொண்டது.

தமிழரின் திருமணம் பண்டைக் காலத்திலே, சோலையிலேதான் முகிழ்த்தது. ஒருவனும் ஒருத்தியும், ஒரு மனப்பட்டு, அதற்கு அரசமரத்தைச் சான்றாக வைத்துக் கொண்டனர். தெய்வத் திருவருளால் திருமணம் கூடுகிறது என்னும் நம்பிக்கையுடையவர்கள் தமிழர்கள்.

மணப்பந்தர், பந்தர்க்கால்: 'மணப்பந்தர்' பண்டைக் காலத்தில் சோலையை நினைவூட்டும் தெய்வ அருளால் மணம் கூடுவதால், அச்சோலையைச் 'பந்தர்க்கால்' என்று தெய்வச் சடங்கு வைத்து அரசமரம் திருமணத்திற்கு ஆணிக்கால் போலச் சான்றுவதைக் குறிக்க அரசாணிக்கால் நடப்பெறுகிறது.

மணமனை: மணமக்கள் அமரும் மனையின் அடியில் நெல்லோ அரிசியோ இடுவது, அவர்கள் வாழ்வு, நெல்லுக்கும் அரிசிக்கும் குறைவு சிறிதும் இன்றி யமைய வேண்டும் என்னும் அவாவினைக் குறிப்பதாகும். வாழ்வுக்கு அடிப்படைப் பொருள் அவையே அன்றே?

நிறைகுடங்கள்: மணமக்கள் இருவரின் இல்லற வாழ்க்கை, நிறைவானதாக அமைய வேண்டும் என்பதற்கு அறிகுறியாக, இரு நிறைகுடங்கள், மங்கலத் தோற்றத்துடன், மணமக்கள் கண்முன்னே விளங்குவதற்கு அமைக்கப் பெறுகின்றன. குடங்களை வைக்க, அடியில் இடும் மணல், எதிர்பாராமல், எப்போதேனும் பந்தரில் தீப்பற்ற நேருமானால், அணைப்பதற்கு உடனடி உதவக்கூடியது. குடங்களில் உள்ள நீரும் அங்ஙனமே பயன்படக்கூடியது.

குடவிளக்கு; மணமாகும் வரையில் மணமக்களின் நெஞ்சமாகிய குடத்திற்கு உள்ளேயிருந்த ஒளி விளக்கம், மணத்தினால் குடத்திற்கு வெளியே வந்து ஒளிவீசப் போகின்றது என்பதற்கு அடையாளமே குடவிளக்கு. இது அணையாமல் இருக்க வேண்டும். எனவே இதற்கு இலை மறைப்பு. மண நிகழ்ச்சிக்குப் பின் இவ்விளக்கை விழிப்பாகக்கொண்டு சென்று வீட்டிற்குள் தூய இடத்தில் வைப்பர்.

முளைத்த கூலம்; முளைத்த நவதானியம், மணமக்களின் கண் எதிரே அழகு செய்து, அவர்கள் ஒன்று பலவாக, அறிவில், திறமையில், ஆற்றலில், செல்வத்தில் சிறப்பில், பிறவற்றில் இனி முளைக்க வேண்டும் என்பதை அறிவுறுத்திக்கொண்டு இருக்கிறது.

அம்மியும் குழவியும்: அம்மியும் குழவியும் மணமக்கள் எதைச் செய்தாலும் ஒன்றுக இருந்து செய்ய வேண்டும் என்பதை நினைவுறுத்தியபடி விளங்குகின்றன. அம்மி தெருவிலும் குழவி புறக்கடையிலும் இருந்தால், அவற்றுல் ஏதேனும் பயன் உண்டா?

தமிழ்த் திருமணப் பந்தரில் அம்மி மட்டும் போட்டு வைப்பதில்லை. குழவியும் இன்றியமையாமல் உடனிருக்கும். பிறவகை மணங்களில் அம்மி மட்டுமோ அல்லது ஒரு கருங்கல் துண்டோ இருப்பதைக் காணலாம். அகலிகை சாபத்தை நினைவூட்டவோ அல்லது மணமக்கள் ஏழடி நடப்பதில் முதலடி எடுத்து வைப்பதற்குப் பயன்படவோ எந்தக் கருங்கல்லும் சாலுமே, என்று அவ்வகை மணங்களைச் செய்து வைக்கும் ஆசிரியர் கூறக் கேட்டதுண்டு.

கைவிளக்கு: கைவிளக்கு மங்கல நாண் சூட்டும்போது மணமகன் உடன் பிறந்தார் ஏந்தி நிற்கவும், வலம் வரும்போது முன்னே ஏந்திச் செல்லவும் பயன்படு

கிறது. மங்கலநாண் சூட்டியதற்கு ஒரு முக்கிய சான்றுவர் விளக்கு ஏந்தியவர். வாழ்க்கையில் உலாவிவர அறிவான ஒளி முன்னே செல்லப் பின்னே செல்லவேண்டும் என்னும் குறிப்பு.

கிரை விளக்கு : கிரை விளக்கு அழகுக்கு மட்டும் அன்று. ஒரு விளக்கு அணைந்தாலும் பிற விளக்குகள் எரியும். கிரைகளிலுள்ள எல்லா விளக்குகளும் ஒரே நேரத்தில் அணைந்து அமங்கலம் விரைவித்துவிடா.

அம்மையப்பர் : உலகமே ஆணும் பெண்ணுமாக இயங்குகிறது. உயிரற்ற பொருள்களிலும் ஆண் உண்டு, பெண் உண்டு. மின்விசை ஒரு சடப் பொருளே. அதிலும் ஆண் ஆற்றல் பெண் ஆற்றல் இருப்பதை (Positive — Negative) என்கிறோம். அண்டங்கரையெல்லாம் நடத்திக் காத்து வரும் பேரறிவும் பேராற்றலுமான பரம்பொருளும் ஆணும் பெண்ணுமாக இயக்குவதை நம் முன்னோர்கள் உணர்ந்து அதனை அம்மையப்பர் என்றும் மாலும் திருவும் என்றும் போற்றிவரலாயினர். அப்பரம்பொருளையே இரு குடங்கள் உருவத்தில் மணமக்கள் கண்டு வழிபடுவதற்கு ஏற்ற முறையில் இரு செம்புகளில் எழுந்தருளச் செய்வது மரபு. சைவ, வைணவ நெறியினர் இருவர்க்கும் இம்மரபு பொது.

நலங்கு : மணமக்களுக்கு நலங்கு வைப்பது, அவர்களை இல்லற வாழ்வுக்கு ஆயத்தம் ஆக்கல். ஒரு மகிழ்ச்சியான நிகழ்ச்சி, மணமக்கள் சமூகத்தில் கலந்து பழகும் மனநிலையை வளர்ப்பது. (நலங்குதல் = கசங்குதல், இணக்கமாதல்)

மணஆடை ; மணஆடையை இறைவனுக்குப் படைத்து, அதற்கு அவையினரின் வாழ்த்தைப் பெற்று, வழங்குவது, பெண்ணும் மாப்பிள்ளையும், முதல் முறையாக மணக்கோலம் பூண்பதற்குத் திருவருள் துணையும் மக்கள் நல்லெண்ணமும் நிலவவேண்டி.

அரசாணிக்கல் : அரச மரமே, காதல் காதலியர் இருவரது உள்ளங்களும் முதன் முதலில் சோலையில் ஒன்றியதற்குச் சான்றாக அமைந்தது. சோலையிலுள்ள தாவரங்களில் தலைசிறந்து ஓங்கி வளர்ந்தது. வாழ்வரசியர் கூடி அரசங்காலை நடுவது, மணமக்கள் அரசு போலப் பன்னெடுங்காலம் மங்கல வாழ்வு வாழ்ந்து வரவேண்டி.

மணப்பொங்கல் : இப்பொங்கல் படையல்கள், திருமணப் பந்தரில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு உரியன. மணமனை ஏறுவதற்கு முன்பு மணாளனும் மணப்டியும் கடவுளை வழிபட்டு அன்னதானம் செய்யும் நோக்கமுடையது.

மணப்பொங்கல் சில குடும்பங்களில் இடுவதோ, படைப்பதோ இல்லை.

காப்புக்கட்டல் : இருவரும் திருமணம் செய்துகொண்டு இல்லற வாழ்வை இனிது நடத்துவோம் என்னும் உறுதியைத் தெரிவிப்பதே, மணமக்கள் காப்பு அணிதல். சான்றாக நின்ற அரசமரத்துக்கும் முன்னதாகக் காப்புக்கட்டுவது பொருத்தமே.

பெற்றோர் போற்றல் : சோலையிலே இருவரும் உளங்கலந்து, திருமணம் பூண உறுதிசெய்து கொள்வதே பண்டை நாளில் தமிழகத்தில் நடந்தது. பிறகு பெற்றோரின்

ஒப்புதல் பெறுவர். அதற்கு வாயிலாக அமைவதே மணமக்கள் அவரவர் பெற்றோர் களுக்குத் திருவடிபூசை செய்து வணங்குவது.

பெற்றோரில் ஒருவரோ, இருவருமோ இல்லாதபோது, பெற்றோர் நிலையில் கண வன் மனைவியுமாக இருக்கும் இருவர் பாதபூசை செய்துகொள்வர்.

ஓம்படை செய்தல்: ஓம்படை செய்தல், சங்காலச் செய்யுள்களில் பொறிக் கப்பெற்றுள்ள ஒரு வழக்கு.

மற்ற முறைத் திருமணங்களிலே நடைபெறும், கன்னியைத் தாரை வார்த்துத் தத்தம் செய்வது அன்று. மணமகனும் மணமகளும் ஒத்த நலங்கள் உடையவர்கள் ஆதலின், பெண்ணை மாப்பிள்ளைக்கு 'தானம்'; செய்வதோ தத்தம் பண்ணுவதோ தமிழ் மரபுக்கு முற்றும் மாறானது. பெண்ணை ஆணுக்கு அடிமையாக்கல் தமிழ் வழக்கில் இல்லை.

இறை வழிபாடு: இறைவனை மணமக்கள் வழிபடுவதற்கு விளக்கம் தேவை யில்லை. இருவரின் வாழ்விலும் ஈடு எடுப்பற்ற ஓர் இன்ப நிகழ்ச்சி நடைபெறுவதற்கு அவர்களைப் போலவே, ஆணும் பெண்ணுமாக அங்கிங்கு எனாதபடி விளங்கும் எல்லாம் வல்ல பரம்பொருளை இங்கித மண அறையில் வணங்குவது இன்றியமையாதது அன்றே?

மங்கல நாணுக்கு வாழ்த்து: மங்கல நாள் ஒரு தேங்காய் மேல் சுற்றப் பெற் றிருக்கும். தேங்காய் ஆடாதபடி, அரிசியின் மீது பொருத்தப் பெற்றிருக்கும். அவை யினர், தாலியைத் தங்கள் இருகரத்தாலும் தொட்டு, தூய சிந்தனையோடு வாழ்த்துவதற்கு ஏற்றபடி பொன்தாலி மேல்புறமாக அனைவர் கண்களிலும் படும்படி இருக்கும். திருமணத்திற்கு இன்றியமையாத அடையாளமாக வந்து விட்ட தாலியைத் தொடுவதால், திருமணம் நடந்ததற்கு அவையினர் சான்றாகின்றனர்.

மங்கல நாண் சூட்டும்போது, கெட்டிமேளம் அடிக்குமாதலின் அவையினரின் நினைவு, தாலி கட்டும் நிகழ்ச்சிக்கு ஈர்க்கப் பெற்று, கையில் எடுத்து வைத்துள்ள மஞ்சள் அரிசி மலரைத்தூவி, தாலி கட்டியதற்கு நேர்ச்சான்றாகவும் அவையினர் ஆவர்.

அழல் ஓம்பல்: அழல் ஓம்பல், இறைவனை ஒளி வடிவில் போற்றுவதற்குத் துணையாவது. இறைவன் ஐந்து பெரும் பொருள்களான நிலம், நீர், நெருப்பு, காற்று, வெளி இவற்றில் ஊடுருவித் தங்கியுள்ளான் என்னும் உண்மையைச் சிந்தனை செய்து, நிலத்தின் மீது, நீர் நிரம்பிய இரு கலசங்கள் வைத்து, எதிரே நெருப்பை வளர்த்து, வழி படுவது இயற்கைக்குப் பொருத்தமாவதே. காற்றும் வெளியும் முன்னைய மூன்றுள் கலந்தனவாகும். ஆதலின், ஐம்பதங்களிலுமே இறைவனை உணர்ந்து போற்றுவதற்கு, அம்மையப்பர் வழிபாடும், ஓமமும் வாயிலாகின்றன.

அழல் ஓம்பல் பண்டைய நாளில், தமிழ்த் திருமணங்களில் இடம் பெற்றிருந்ததா என்பது ஆராய்ச்சிக்குரியதேயாயினும், ஒளி வழிபாடு சிறந்தது என்பதை யுன்னி இதனை மண நிகழ்ச்சியில் ஓர் இனமாக வைத்துக் கொள்வது, அறிவுக்கு உகந்ததே.

அழல் ஓம்பல் 2. : இரண்டாவது ஒரு முறை ஓமம் வளர்ப்பது, கோள் குறை பிற குறைகளைத் தீயின் முன் தூசு போல் அகலச் செய்ய இறைவனின் அருளைத் தீ வடிவில் வழிபடுவதற்காகும்.

மங்கல நாண் சூட்டல் : மங்கல நாண் சூட்டும்போது, மணமகள் உடன் பிறந்தாள் கைவிளக்கு ஏந்தி நிற்பது பந்தரில் சூழ்ந்திருக்கற்பால இருட்டை அகற்றி ஒளியளிக்கப் பயன்படுவதோடு, தாலி கட்டியதற்குத் தக்க சான்றாக மாப்பிள்ளையின் அக்கா தங்கையே அமையவும் ஏற்பாடு செய்ததாயிற்று.

தமிழ் மணத்தாலி, புலிப்பல் போன்றது. மணமகனின் வீரத்துக்கு அடையாளமாக அவன் புலியைக் கொன்று கொண்டு வந்ததாகக் கருதுதற் பொருட்டே இன்றும் தாலி புலிப்பல் வடிவில் செய்யப் பெறுகிறது.

மங்கல நாண் சூட்டியதும், மணமகன், மணமகளின் நெற்றியில் குங்குமம் வைப்பது, மங்கல அடையாளமாக இருப்பதுடன் மணமகளின் கழுத்தருகே அணைத்துத் தலையைத் தொடவும் வாய்ப்பளிப்பதாக இருக்கின்றது. இதுவே முதல் தடவையாக, மாப்பிள்ளை தானே பெண்ணைத் தொடுவதாகும்.

பட்டங் கட்டல் : பட்டங் கட்டுவது, பழைய புதிய உறவினர் பலரும் மணமக்களிடம், தமக்குள்ள உறவு உணர்வைக் காட்டிக் கொள்ளப் பயன்படுவதாகும்.

மாலை மாற்றல் : மாலை மாற்றல், மணத்திற்குப் பெரிதும் உரித்தான மங்கல நிகழ்ச்சி. நேருக்கு நேரே மணமக்கள் நின்று, ஒருவருக்கொருவர் தலைவணங்கி மாலையேற்பது வாழ்வில் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து மனம் ஒத்து வாழ்வதற்கு நல்ல அறிகுறி.

வலம் வருதல் : வலம் வரும்போது பெண்ணின் கையைத் தானே தொட்டுப் பிடிக்கிறார். (ஓம்படை செய்யும்போது தன் கையில் மணமகளின் கை பிறரால் வைக்கப் பெற்றது)

மணமக்களின் வாழ்க்கை ஒளி விளக்கால் வழிகாட்டப் பெற்று, ஒன்று பலவாக முளைத்து மிளிர வேண்டும் என்னும் எண்ணத்தை யுண்டாக்கிப் பீடு நடை போட வேண்டும் என்பதற்கு அறிகுறியாக, முன்னே விளக்கேந்தி ஒரு பெண் செல்ல அவளைத் தொடர்ந்து முளைக்கும் சிறுமியர் முளையேந்திச் செல்ல மணமக்கள் வலம் வருவது மகிழ்ச்சியளிக்கும் காட்சி.

முளைக்கும் பருவத்திலுள்ள சிறு பெண்களே முளையேந்துவர். வயதான இளம் பெண்களோ, முதிய பெண்களோ இங்கு இடம் பெறுவது இல்லையென்பது கருத்தக்கது.

அம்மி மிதித்தல் : அம்மி மிதிப்பதிலே அருங்கருத்து இருக்கின்றது. பெண்ணுக்கு, புகுந்த வீட்டிலே, கருங்கல் மேல் நிலையான கடைக்காலிட்ட வாழ்வு உண்டு என்பதை மணமகன் மணமகளுக்கு உணர்த்துகிறான். மணமக்கள் ஒருவருக்கொருவர்

அசைக்கலாகாத கற்புடையவர்களாக விளங்குவர் என்பதையும் இது காட்டுகிறது. இருவரும், எதைச் செய்தாலும் ஒருங்கிணைந்து செய்யவேண்டும் என்பதையும் தெரிவிக்கிறது.

பெண்ணின் தலையையும், கையையும், முன்னே தொட்ட மாப்பிள்ளை, இப்போது அவள் காலையும் தொட்டு, எல்லோர் முன்பும் உச்சந்தலை முதல் அவளை உள்ளந்தாள் வரை, முற்றும் தனக்கு உரியவளாக ஏற்றுக் கொண்டான் என்பதைப் பலர் அறிய விளம்புவதும் இந்நிகழ்ச்சியே.

பொரியிடல்: பொரியிடுவது, மாப்பிள்ளை, மைத்துனனைத் தன் சிறு பணிகளுக்கு ஆட்ப்படுத்திக் கொள்ளுவதின் தொடக்கமாகும். மாமியார் வீட்டுக்குச் சென்றதும் மாப்பிள்ளை, தன் மனைவியை, அழைத்து வர மைத்துனனே துணையாயிருப்பான். அன்னையுடன் அடுப்பங்கரைப் பகுதியில் இருக்கற்பால அவளைக் கூப்பிடச் சொல்வதற்கேயன்றி, வீட்டிலுள்ள மற்றவர்களுடன் தொடர்புகொள்ள உதவி செய்பவனும் மைத்துனனே. அவனை இங்கு ஓமத்தில் பொரியிடத் துணைபுரியப் பண்ணி, அவனுக்கு மாலை மரியாதைகள் செய்து, மோதிரமும் இட்டு, மாப்பிள்ளை தன்வயப்படுத்திக் கொள்ளுகிறான்.

உறுதிமொழி: உறுதிமொழி இன்றியமையாதது அன்று. அதனை ஒலிவாங்கியில், மணமக்கள் படித்து ஏற்று, அவையினரின் வாழ்த்தினைப் பெறுவர். தமிழ் மரபுக்கு ஒத்தபடி இதன் வாசகம் அமையும்.

காப்பவிழ்த்தல், மாறியமர்தல்: மணமக்கள், இரண்டாவது முறை அழல் ஓம்பிய பின்பு, காப்பவிழ்க்கப் பெற்றதும், மணமகனையில் மாறியமர்வர். மணமாகும் வரையில், மணப்பெண், ஓர் அயல்பெண்ணாகக் கருதப்பெறுவள். மணமானபின்பு, மணமகனின் நெஞ்சத்துக்கு உரிய மனைவியாவதற்கு அடையாளமாக அவனுடைய நெஞ்சுப் பக்கமாகிய இடப்பக்கம் அமர்வள்.

இதில் இன்னொரு கருத்தும் இருக்கிறது. தெய்வ காரியங்கள் செய்யும் போதெல்லாம் மனைவி, கணவனின் வலப்பக்கம் இருப்பதே மரபு. அயல் பெண்ணிடத்தில் உடல் இச்சை நினைவுகொள்ளாது இருப்பது போல, மனைவியிடமும் இருவரும் தெய்வச் செயல்கள், பூசனைகள் புரியும்போது உடல் நசையூறாது இருக்கவேண்டும் என்பது உட்கிடை. அதற்குரிய இடம், கணவனின் வலப் பக்கமே. வலம் பொருந்திய 'பேராண்மை'க்கான பக்கம் அதுவே.

அரிசி வாழ்த்து: அரிசி வாழ்த்து, மணமக்கள் என்றென்றும் நிறைவோடு வாழ வேண்டும் என்னும் குறிக்கோளுடன் செய்வது. அரிசிப் பொழிவு நிறைவைக் குறிப்பது.

மணப் பரிசு: மணப்பரிசுகள், உற்றார் உறவினர் அன்பர், நண்பர்களின் பரிவைக் காட்டுவன. மொய்த்துக்கொண்டு, எழுதுவித்து வழங்குவதால், 'மொய்' எழுதுதல் என்று கூறப்பெறும். மணமக்களுக்கு இவை மகிழ்ச்சியூட்டி இவர்களைப் பெருமை கொள்ளச் செய்வன.

செலவு மிகுந்த நேரமாகிய மணக்காலத்தில் மணமக்கள் பெற்றோர்களுக்கு இவை ஓரளவு கைகொடுப்பன. பரிசுகளை அளித்தவர்களுக்குப் பின் நேரக்கூடிய அவர்கள் வீட்டு நிகழ்ச்சிகளில் வேறுவகையாகத் திருப்பி வழங்கிவிடும் நோக்கத்துடனேயே ஏற்கப் பெறுவன.

ஆலம் சுற்றல்: கண்ணேறு கழிக்க.

பாலும் பழமும்: பசும்பாலும் வாழைப்பழமும் கலந்து அருந்தல் அலுப்பைப் போக்கும்.

(3) மந்திரங்கள்

இத் திருமணத்தில் ஓதும் மந்திரங்கள் அனைத்தும், தமிழ்த் தெய்வப் பனுவல்களிலுள்ள அருட்பாடல்களில், சூழ்நிலைக்கு ஏற்றனவாக இருக்குமாறு தோந்தெடுக்கப் பெறுவனவே.

> 'நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
> மறைமொழிதானே மந்திரம் என்ப'

என்று தொல்காப்பியம், மந்திரத்திற்கு இலக்கணம் வகுக்கிறது. மந்திரம் எந்த மொழியிலும் இருக்கலாம். தமிழிலும் உண்டு. தொல்காப்பியர் காலத்திற்கு முன்பும் மந்திரமாகப் போற்றத்தக்க தமிழ் இருந்தது என்னும் உண்மையை, 'என்ப' என்னும் சொல்லால், தொல்காப்பியர் மேற்கண்ட நூற்பாவில் குறித்திருக்கிறார். சைவ, வைணவக் கருத்துக்கு ஏற்ப மந்திரங்களை அமைத்துக்கொள்ளலாம். முரணான அல்லது பொருத்தமற்ற கருத்தோ, அவலச் சொல்லோ இல்லாத பாடல்களாகத் தேர்ந்து கொள்ள வேண்டும்.

(4) பலரும் பங்குகொள்ள வாய்ப்பளிப்பது

தமிழ்த் திருமணம், உற்றார், உறவினர், அன்பர், நண்பர் அனைவரும் அதில் பங்கு கொள்ளுமாறு அமைந்திருப்பதை அறியலாம். ஒருநாள் வாழ்வில் திருமணம் என்பது மிகச் சிறந்ததொரு மகிழ்ச்சியான நிகழ்ச்சி. இதில் எல்லோரும் என்னென்ன வகையிலே கலந்துகொண்டு சிறப்பித்து மகிழ்ச்சி பெருகச் செய்வது இன்றியமையாததே. இதற்குப் பிற மணமுறைகளில் இல்லாத வாய்ப்புக்கள் இதில் இருக்கின்றதை மண நிகழ்ச்சிகளைக் கண்டு களிக்கும்போதே காணலாம்.

தொழில் புரிவோர் பலருக்கும் இம் மணப்பொருள்களில் பங்கு உண்டு. குயவர் மணத்திற்குரிய குடங்கள் முதலியவற்றைச் செய்து அளிக்கிறார். அவருக்கே தெரியும், என்னென்ன பாண்டங்கள் மணத்திற்குத் தேவையென்று. கிளைவிளக்கு முதலியவற்றிற்கு அவ்வப்போது எண்ணெய் விட்டுச் சரிவர எரியச் செய்து வருபவர், வண்ணர். அரிசி வாழ்த்தின்போது அடியில் துணி விரிப்பவர் அவரே. அந்த அரிசி அவருக்கு உரியது.

மணப்பொங்கல் அவருக்கும் குயவருக்கும் சேரும். காப்புக் கட்டும்போது தட்டில் இருக்கும் தேங்காய் அரிசி முதலியன அம்பட்டருக்கு உரியன.

மங்கலத்தாலி செய்து தரும் தட்டாருக்கும் சில மரியாதைகள் உண்டு.

இசைக் கருவிகள் இயக்குவோர், பாடுவோர், பந்தர் அமைப்போர் பிறரும் மண நலங்களில் பங்குபெறுவர்.

இவ்வாறு தமிழ்த் திருமணம் சமூகத்திலும் குடும்பத்திலும் உள்ள அனைவரும் கலந்துகொள்ளும் ஒரு சமூக நிகழ்ச்சியாக அமைந்திருப்பதை அறியலாம்.

(5) இன்று நிலவித் தமிழ் மரபு காப்பது

இத்திருமண முறை, எக்காலத்தில் நாட்டில் ஏற்பட்டது என்று திட்டவட்டமாகக் கூறுவதற்கில்லை. தொல்காப்பியர் காலத்திலேயே, பொய்யும் வழுவும் நுழைந்த பிறகு கணவன் மனைவியருக்குள்ள ஒன்றிய தன்மையை நிலைநிறுத்தும் பொருட்டு ஏற்பட்டிருக்க வேண்டும் என்று தோன்றுகிறது. சிலப்பதிகாரத்தில் வரும் கோவலன்—கண்ணகித் திருமணத்திலேயே சில சடங்குகள் நுழைந்துவிட்டதைக் காணலாம்.

மண அறையைச் சோலை போல அமைத்துக்கொள்வது, மணமக்கள் அங்குக் கூடியே திருமணம் செய்துகொள்ள உறுதிகொள்வது, மணப்பந்தரில் அம்மியோடு குழவியையும் வைப்பது, மணமகளை மணமகனிடம் ஒப்படை செய்வது; இவையும் பிறவும் தமிழ் மரபை ஏற்றுக்கொள்ள விரும்பாதவர்கள் வீட்டுத் திருமணங்களில் இல்லாதிருப்பதை இன்றும் பார்க்கலாம். நிறைகுடம், குடவிளக்கு, முளைப்பாலிகை, இவற்றில் எதுவும் இன்றிக் கூடத்தில் மணமக்களை உட்கார வைத்து மணங்கள் நடப்பதைக் கண்டபோது, ஏன் இவையும், மண அறையும் பிறவும், இல்லையேயென அந்த மணங்களைச் செய்து வைத்த ஆசிரியர்களைக் கேட்டதில், 'அவையெல்லாம் எதற்கு? என்னும் விடையே வந்தது. அத்தகைய ஒரு மணத்தில், கருங்கல் துண்டு ஒன்று மட்டுமே இடப்பெற்றிருந்தது ஆசிரியரை 'அம்மியும் குழவியும் வேண்டாமா? என்று வினவியதில், 'அவை யெதற்கு, அகலிகையை மணமக்களுக்கு நினைவூட்டவும், 'சப்தபதி' க்குப் பயன்படவும், இக்கருங்கல் துண்டே போதுமே' என்று அந்த ஆசிரியர் விடை பகர்ந்தார்.

தமிழ்நாட்டில் எந்தப் பகுதியில் தமிழர் வீட்டில் திருமணம் நடந்தாலும் மண அறையைச் சோலை போல அமைத்துக்கொள்ளும் வழக்கம் இன்னும் இருந்து வருகிறது. திருநெல்வேலியில் நடைபெறும் திருமணங்களில் மண அறையில் உட்கார வைப்பதற்கு முன்பு ஊஞ்சலில் மணப்பெண்ணையும் பிள்ளையையும் அமர வைத்துத், திருவாசகத்திலுள்ள 'பொன்னூஞ்சல்' பதிகத்தைப் பாடி, பிறகே மங்கல நாண் கட்டுகின்றனர். சோலையில் முதன்முதலில் காதலோடு இருவர் கூடியபோது, ஊஞ்சல் ஆடிக் களித்ததை நினைவூட்டும் நிகழ்ச்சி இது.

'தமிழ்த் திருமணம் என்பது 'விவாகம்' அன்று; திருமணமே 'விவாகம்' என்னும் சொல்லுக்குப் பொருள்தெரியாமல், ஒரு வடமொழிப் பேராசிரியரைக் கேட்டதில் அதற்குப் பொருள் 'தூக்கிக்கொண்டு போவது' என்றார். 'வாகனம்' என்பது தூக்கிக் கொண்டு போகும் கருவி'. அச்சொல்லின் பகுதி 'வக்' என்பதாகும். 'வக்' என்றால் 'தூக்கு' என்று பொருள். 'வி' என்றால் 'சிறப்பாக', 'செவ்வையாக', 'ஒப்பில்லாத வகையில்' என்றெல்லாம் பொருள். 'வி.வக்' என்றால் சிறப்பாகத் தூக்கிக்கொண்டு போவது என்றுதான் பொருள். 'வி.வக்' 'விவாகம்' என்று ஆகிறது என்று, மேலும் அந்தப் பேராசிரியர் விளக்கினர்.

குழந்தைப் பருவத்திலேயே மணஞ் செய்து கொடுத்து வரும் கட்டாயத்துக்கு உள்ளாக்கப்பட்டிருந்தவர்கள், குழந்தையை மடியில் தூக்கி வைத்துக்கொண்டுதான் மணம் செய்து கொடுக்க முடியும். குழந்தை தனியே மாப்பிள்ளை பக்கத்தில் அமராது. மாலை மாற்றும்போது குழந்தையைத் தூக்கிக்கொள்ள வேண்டும்; அல்லாவிட்டால் மாப்பிள்ளையின் கழுத்து குழந்தைக்கு எட்டாது. மணப்பெண்ணை, மணமகன் தன் ஊருக்கு அழைத்துச் செல்லும்போது, தன் தோளில் தூக்கிக்கொண்டுதான் செல்லவேண்டும். சிறு குழந்தையாயிற்றே! நடந்து செல்ல முடியாதே! இந்தக் காரணத்தால்தான் 'மண'த்தை 'விவாகம்' என்னும் சொல்லால் குறித்தனர் என்று அப்பேராசிரியர் தொடர்ந்து சொன்னார். இன்றுங்கூட அப்பண்டைக் கால வழக்கத்தை உடும்புப் பிடியாகப் பற்றிக் கொண்டு 25 வயதான மணமகளையும் அவள் தத்தையார் மடியில் அமர்த்திக்கொண்டு மணம் செய்து கொடுக்கும் வழக்கம் தமிழ் மரபில் நம்பிக்கை இல்லாத இனத்தவரிடம் இருப்பதை அறியலாம்.

மணவியை, 'பாரியை' என்பர் வடமொழியில். கணவன் 'பர்த்தா' எனப்படுவான். இவ்விரு சொற்களிலும், 'பரித்தல்' 'தாங்குதல்' 'தூக்குதல்' 'சுமத்தல்' என்னும் பொருள் தரும் பகுதிகள் இருப்பதையும் சிந்திக்கவேண்டும்.

'மணம்' என்னும் சொல், நெருங்கிக் கலத்தல், மண்ணின் நலங்களை நிறைவாக நுகரும் வாய்ப்புப் பெறல், புகழார்ந்த வாழ்வு வாழும் நிலைமை பெறல், வாசனை பொருந்திய வாழ்க்கை நடத்தும் வசதி படைத்தல், முதலிய பொருள்களைத் தன்னகத்தே அடக்கிக் கொண்டுள்ளது. மொட்டு மலர்ந்தால்தான், மணம் வீசும் என்னும் உண்மையில், பருவம் அடைந்தால்தான், தமிழர் திருமணம் செய்து கொள்வர் என்னும் உண்மையும், உடன் விளங்குகிறது. குழந்தை மணத்திற்குத் தமிழ் மரபில் இடமில்லை.

தமிழகத்தில் மட்டுமின்றி, பிற மாநிலங்களில் வாழும் தமிழரிடையேயும், அடிப்படையில் தமிழோடு ஒத்த, மொழி பேசுநரிடையேயும், சோலைபோன்று மண அறை அமைத்து, தமிழ்த் திருமணத்தின் பிற பகுதிகளையும் மேற்கொண்டு, திருமணங்கள் நடப்பதைக் காணலாம்.

அவ்வாறான முறையில் பல நூற்றாண்டுகளாக நடந்து வந்த திருமணத்தில், வடமொழி மந்திரங்கள் ஓதப்பெற வேண்டும் என்று நாயக்கர் மன்னர்கள், விரும்பினர்கள்.

உடனே ஆந்திர நாட்டிலிருந்து, தெலுங்கு பிராம்மணர்களை வரவழைத்து அவர்களை ஊருக்கு ஒருவராகக் குடியேற்றி, அந்த அந்தப் பகுதியில், சடங்குகளை வடமொழியில் நடத்திப் பிழைத்துக்கொள்ளும் உரிமையை நாயக்கர் மன்னர் தந்தனர். இன்னும் திருநெல்வேலி வரையில் 'புரோகிதர்கள்' ஆந்திரப் பிராமணர்களாகவே இருக்கின்றார்கள் என்பது, இதனை மெய்ப்பிக்கும். தமிழகத்திலுள்ள தமிழ்ப் பிராம்மணர்களுக்குச் சடங்குகளை நடத்து விக்க இப்புரோகிதர்கள் அழைக்கப்படுவதில்லை என்பதும் கருதத்தக்கது. தம் வகை யினரான தெலுங்குப் பிராம்மணர்கள் வீட்டில் நிகழும் சடங்குகளையுங்கூட இப்புரோகி தர்கள் நடத்துவதில்லை என்பதையும் சிந்திக்க வேண்டும்!

ஏற்கனவே தமிழர் பேணிவந்த மண அறை அமைப்பு முதலியவற்றை அப்ப டியே வைத்துக்கொண்டு, வடமொழி மந்திரங்களைப் பிராம்மணர்களல்லாதார் காதால் கேட் டால்கூடப் பாவம் என்றும், அப்படிக் கேட்குமாறு அவர்களுக்கு அம்மந்திரங்களைச் சொல்வதும் பாவம் என்றும் கருதி, அம்மந்திரங்களால் தன் திருமணத்தைச் செய்துகொள் ளும் மணமகனுக்குப் பூணூல் போட்டு அவனைத் தற்காலிகப் பிராமணனுக்கும் சடங் கையும், உபநயனம் ஆனதும் வேத அத்யயனம் செய்யவேண்டிய வழக்கத்தைக் கொண்டு, வடகலை பயில்வதற்குக் காசி யாத்திரை செல்வது போல நடிக்கச் செய்யும் சடங்கை யும் மண நிகழ்ச்சியில், தெலுங்குப் புரோகிதர் சேர்த்துக்கொண்டார். ஆரியர் மரபை யொட்டிப் பெண்ணை மணமகனுக்குத் தாரை வார்த்துத் தத்தம் செய்யும் சடங்கும் இவ ரால் இந்நிகழ்ச்சியில் புகுத்தப்பட்டது. இடையில் இவ்வாறு புகுத்தப்பட்டனவும், தமி ழர்க்கு வேண்டாதனவுமான, மூன்று சடங்குகளையும் நீக்கி ஆங்காங்கேயுள்ள புரோகி தர்கள் தம் தம் விருப்பப்படி பயன்படுத்திய ஏதேதோ தேவையற்ற வடமொழி மந்திரங் களையும் நீக்கித், நல்லவண்ணம் நடப்பதே தமிழ்த் திருமணமாகும்.

தமிழரின், பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட மரபினைக், காப்பது இத்திரு மணம். புரோகிதர் புகுத்தியனபோக, மற்ற யாவும் பண்டைய தமிழ் மரபைப் பேணும் சிறப்புடையன. தமிழரும், தமிழோடு தொடர்புள்ள மொழி பேசும் ஆரியர் அல்லாத வரும், இன்றும் போற்றும் முறை இதுவே. பல நலங்களைக் கொண்டதும், தமிழர்க்குப் பெருமையளிப்பதும் மூடப்பழக்கம் வழக்கம் என்று ஒதுக்கித் தள்ளிவிடுவதற்கு இல் லாத நிகழ்ச்சிகளையும் அமைப்புகளையுமே பூண்டதுமான, இத்தமிழ்த் திருமணம் நாடெங் கும் நடந்து, தமிழர் மரபைப் போற்றித் தமிழர் மண வாழ்வைச் சிறப்பிப்பதாக!

திருமுறைச் செல்வர்

மறை. திருநாவுக்கரசு

காலை ஆறரை மணி. இப்பெருந்தகை மாளிகையில் புகுந்தேன். முன் கூடத்தில், இனிமையாக எடுப்பான குரலில் திருமுறைப் பாடல்களைப் பண்ணிசையுடன் பாடுவதைக் கேட்டு என்னை மறந்தேன். முதலிற் சம்பந்தரின் தேவாரப்பாடல்கள் பல. என்னால் நிற்க முடியவில்லை. அங்கிருந்த இருக்கையிலமர்ந்துகொண்டேன். அடுத்து நாவரசரின் பத்திமை கனிந்த திருவிருத்தங்கள், திருத்தாண்டகங்கள் பல. கண்களை மூடிக்கொண்டேன். நானே சிவபூசை செய்வது போல் — பாடுவதுபோல் உணர்வுகொண்டேன். தொடர்ந்து சுந்தரர் தேவாரப் பாடல்கள் சில, மன மூருகினேன். பின்பு திருவாசகத்தில் பலப்பல பாடல்கள். அவற்றைத் தொடர்ந்து திருவிசைப் பா, திருப் பல்லாண்டு பெரியபுராணப் பாடல்கள், நாயன்மார் வாழ்த்துக்கள், முருகன், திருமால் புகழ்ப் பாடல்கள், மணியோசை, வழிபாடு முடிந்தது. நானே வழிபாடுசெய்து மனமுருகிய நிலையிலிருந்தேன். பூசையறையின் கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்தார். திருநீறுஅணிந்து சந்தனப் பொட்டுடன் பொலிவான எடுப்பான தோற்றத்துடன் நம் பெருந்தகையர் ஏ.பி சி. நகை முகங்கண்டு எழுந்து நின்றேன், "வாருங்கள்! வாருங்கள்! எப்போது வந்தீர்கள்" என்று பணிவன்புடன் கேட்டார்.

"ஒருமணி நேரமாகின்றது. உங்களுடன் யானும் தொடர்ந்து சிவபூசை செய்தேன். பாடினேன். ஒதுவார்கள்கூட இவ்வளவு அழகாகத் திருமுறைகளை ஓத முடியாது. அருமையான குரல்; இனிமை யாகப் பொருள் விளங்கப் பாடிய திறம் என்னைப் பெரிதும் மகிழ்வித்தது என்றேன்" எல்லாம் தங்கள் ஆசீர்வாதந்தான் என்றார்கள். நான் அவர்கள் தம் வ.உ.சி. கல்லூரியின் ஊழியனாக இருந்தவன். அதையவர்கள் தம் பத்திமை மிகுதியால் வழக்கம்போல் மறந்து எனக்குச் சிற்றுண்டியூட்டினார்கள். தம் திருக்கையால் உண்டியில் நெய் வார்த்து மகிழ்ந்தார்கள். சேக்கிழார் விழாவுக்கும், என் நூற் பதிப்புக்கும் (பெரியபுராண ஆய்வுரைத் தொகுதிகள்) நன்கொடைகளை மனமுவந்தளித்தார்கள். அன்று மாலையே, என்னைத் தம் நிலையமான வ.உ.சி. மகளிர் கல்லூரியில் 'சைவ மாதர்' என்று பேசச்செய்து உடனிருந்து சிறப்பித்தார்கள், மகிழ்ந்தார்கள். இது நிகழ்ந்தது; சென்ற ஆண்டில் (1974ல்).

ஆயிரம் ஆண்டுகட்குமுன், 'இராசராசச்சோழன்—மாமன்னன், தென்கிழக்கு ஆசியா முழுதும் வென்றான். தஞ்சாவூரில் சிவபெருமானுக்குப் பெருங் கோயிலெடுத்தான். மறைந்திருந்த சைவத் திருமுறைகளை (தேவார, திருவாசகங்கள்) வெளியுலகிற்குக் கொணர்ந்தான். நாற்பத்தெட்டு ஓது வார்களை அழைத்து அவற்றைப் பாடச் செய்தான். இவற்றால், "திருமுறைகண்ட ராசராசன்,"

"சிவபாதசேகரன்," "அருண்மொழித் தேவன்" என்னும் பட்டங்களைப் பெற்றான். அவனே மாமன்னன்.

ஆனால், நம் ஏ. பி. சி. யோ பொருட்துறையில் இயல்பான குடும்பத்தில் தோன்றித் தம் பெயர் தள்ளி வ. உ. சி. யின் பெயரால் கல்வி நிலையங்கள் பல கண்டார். செயற்கரிய செயல் பல புரிந்து பெரியாரானார். இராசராசன் திருமுறைகண்டான்; நம் தலைவரோ திருமுறைகளை உளமுருக நூற்றுக் கணக்கில் ஓதிச் சிவநெறி பரப்புகின்றார். எடுப்பான பெருந்தகை தோற்றத்தான இவராற்றும் அரும் பெருஞ்சொல்களும், பத்திமையும், கொடைமடமும் காண்தொறும் காண்தொறும் எனக்கு இப்பெருமகனார் இருபதாம் நூற்றாண்டின் இராசராசச் சோழராகவே காட்சியளிக்கிறார். இவ்வண்ணல் தமிழுலகுய்யப் பல்லாண்டு, பல்லாண்டு வாழ்க! வாழ்க! எனச் சிவபிரானை இறைஞ்சுகின்றேன்.

"தமிழ்ப் பண்பாட்டு உருவம்"

"நண்பர் வீரபாகு அவர்கள், ஆளுங் கட்சியில் இருந்தபொழுது நான் எதிர்க்கட்சியில் அமர்ந்திருந்த பொழுது, கிட்டத்தட்ட நான் அமர்ந்திருந்த இரண்டொரு இருக்கைகளுக்கு அப்பால் அவர்கள் அமர்ந்திருப்பார்கள்.

அவர்கள் அங்கே அப்பொழுது ஆளுங்கட்சிச் சார்பில் எதிர்க்கட்சியைத் தாக்கிப் பேசுகின்ற அந்த வார்த்தைகளை எல்லாம் நான் அங்கிருந்து கேட்டிருக்கிறேன். ஆனாலும் கட்சி மாற்சரியங்கள், கட்சி வேறுபாடுகள் இவைகளெல்லாம் தனிப்பட்ட தாக்குதலாக இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று தமிழன் கட்டிக் காக்கின்ற பண்பாட்டின் உருவங்களாகத் திகழ்கின்ற ஒரு சிலரில் நண்பர் வீரபாகு அவர்களும் ஒருவர் என்பதை நாம் மறந்திட இயலாது."

ஏ. பி. எஸ். மகாலெட்சுமி மகளிர் கல்லூரிப் புதிய கட்டிடத் திறப்பு விழாவில்,
தமிழக முதலமைச்சர், டாக்டர். கலைஞர் மு. கருணாநிதி அவர்கள்.

தர்ம வீரர்

என். இராம தீட்சிதர்

1 க்யாத ஸ்ரீ வீரபாஹூ: ஸகல ஜனஹித:
த்யாக சீலோ தனுட்ய:
வித்யா தானக தக்ஷ: ஸூரகுரு சரணே
பக்திமான் தீர்க்கதர்சீ/
ஜீயாதைச்வர்ய யுக்தோ தன கனக மஹா
ஸம்பதா பத்ரயாச
காமான் ஸர்வான் சலப்த்வா சதமபிசஸமா:
புத்ர பௌத்ராதி யுக்த: | |

2 வித்யாலயம்ச ஜனதாம்ச ஸூதர்ம மார்கம்
பாதும் ஸூபுத்ரஸஹிதான் ப்ரியபந்து மித்ரான்
ஷஷ்டியப்த பூர்த்தி ஸமயே க்ருதவை பவேஸ்மின்
ஸம்ப்ரார்த்தயாமி ம்னஸா குருவாத நாதம்

3 ஜயது ஜயது பூமௌ வீரபாஹூர் தயாளு:
ஜயது ஜயது தஸ்ய பாந்தவா: மித்ரவர்க்கா: |
ஜயது ஜயது வித்யா மந்திரம் மங்களேந
ஜயது ஜயது லோகே தஸ்யநாமா யசஸ்ச

4 ராம தீஷிதநாமாஹம் பாவ பூதேனசேதஸா
ப்ரார்த்தயாமி ஹரிம்தஸ்ய ஷேமம் ஸர்வத்ர-ஸர்வதா

புண்ணிய பூமியாகிய நமது பாரத தேசத்தில் பல மஹான்களும், வீரர்களு தோன்றி அவ்வப்பொழுது தர்மத்தையும், தேசத்தையும் காத்து வந்துள்ளார்கள். ஒவ்வொ மனிதனுக்கும் தேசபக்தி, மனிதாபிமானம்; தெய்வ நம்பிக்கை இம்மூன்றும் இன்றியமையாத வாகும். என்றாலும், இம்மூன்றில் ஒரு குணம் உள்ள மனிதரைப்பார்ப்பதே அரிதாகிய இ காலத்தில் இம்மூன்றும் நிறைந்த சிறந்த புண்ணிய புருஷர் ஸ்ரீ A. P. C. வீரபாகு அவர்கள் மக்கள் நலம் காப்பதே சிறந்த தெய்வ வழிபாடாகும், அதுவே தேச சேவையும் கூட. மனித வாழ-உணவும், கல்வியும் மிகமிக அவசியமாகும். ஸ்ரீ A.P.C. அவர்கள் பல விவசாயிகளுக்கு, பற்ப உதவிகள்செய்து, மறுவாழ்வு அளித்து, உணவு உற்பத்தி பெருக வழிவகுத்தவர். கட்சி பேத

இனபேதமன்றி, உள்ளன்புடனும், பெரும் பிரயாசையுடனும், என்றும் "அழியாத செல்வமாகிய கல்வியை, "இளைஞர்களுக்கு வழங்கிவரும், வ. உ. சி. கல்லூரியை, கலைவாணியின் புனித ஆலயமாய் வளர்த்து, காத்து வருகிறார். ஸ்ரீ A. P. C. அவர்கள் தினந்தோறும் காலையில் தெய்வ வழிபாட்டில் தம்மை மறந்து, கண்ணீர் மல்கி, பாக்களை பாடும்போது, கேட்பவர்கள் நெஞ்சம் உருகும். எனது பெரிய தகப்பனரும், எனது குருவும் உபன்யாஸ உலகில் சக்கரவர்த்தியாக விளங்கியவராகிய சேங்காலிம்புரம் பிரம்ம ஸ்ரீ அனந்தராமதீக்ஷதர் அவர்கள் ஸ்ரீ A. P. C. விபாகு அவர்களின் பக்தியையும் சேவையையும் ஒவ்வொருநாளும் மனமுருகிக் கூறுவார்கள். ஸ்ரீ குருவாயூரப்பன் ஸன்னிதியில் 400 வருஷங்களுக்கு முன்பு, ஸ்ரீ நாராயணபட்டத்திரி என்ற மஹான், ஸ்ரீமத்பாகவதஸாரமாகிய, நாராண்யம் என்னும், கிரந்தத்தை (நூலை) இயற்றியுள்ளார்கள். ஒவ்வொரு சுலோகத்துக்கும், ஸ்ரீ குருவாயூரப்பன், தலையசைத்து ஏற்றுக்கொண்டதாக பெரியோர்கள் கூறுவார்கள். அதில் ஒரு சுலோகத்தில் பட்டத்திரி, 'ஏ! குருவாயூரப்பா! நான் உலகில் எல்லோரையும் சமமாகப் பார்க்க வேண்டும், அஸூயை விரோதம் முதலியவைகளைவிட்டு எல்லோரையும், தெய்வமாக (ஸ்ரீ குருவாயூரப்பனாக) பார்த்துச் சேவைசெய்ய வேண்டு'மென்று கூறியுள்ளார். அந்த நிலையை அடைந்தவர்கள் தான் ஸ்ரீ A. P. C. அவர்கள். இக்கலியில் நேரில் பேசும் தெய்வமாகிய ஸ்ரீ. குருவாயூரப்பன் பெருமையை உபன்யாஸத்தில் கூறும்போது ஸ்ரீ A. P. C. அவர்கள் கண்ணீர்விட்டுப் பரவசத்துடன் கேட்பார்கள். மனிதருள் மாணிக்கமாகிய அன்னரின் மணிவிழா இனிது நடைபெறவும், அவர்களும் அவர்கள் குடும்பத்தினரும் ஆயுராரோக்ய ஐச்வர்யத்துடன் பல்லாண்டு வாழ்ந்து, தெய்வத்தொண்டு, தேசத்தொண்டு, மக்கள்தொண்டு இவைகளை மேன்மேலும் தொடர்ந்து இனிதே செய்து வரவும், ஸ்ரீ குருவாயூரப்பனை, மனதாரப் பிரார்த்திக்கின்றேன்.

ஜனநாயகப் பண்பு

" இப்பண்டகசாலையை நடத்தும் ஏ. பி. ஸி. வீரபாகு அவர்கள், நாங்கள் எதிர்க்கட்சியாக இருந்தபொழுது அவர் ஆளுங்கட்சியில் இருந்தவர். அவர் முன்பு பேசும்பொழுது நாங்கள் எதிர்க்கட்சியினர் பேசுவதைத் தான் பேசி வந்தார். உள்ளதை உள்ளபடியே பேசும் உண்மையான ஜனநாயகப் பண்பு உடையவர் ஏ. பி. ஸி வீரபாகு.

திரு. ஏ. பி. ஸி. வீரபாகு போன்ற தன்னலமில்லா சேவா மனப்பான்மையுள்ளவர்கள் இந்தக் கூட்டுறவுத் துறைக்குப் பணிசெய்ய முன்வரவேண்டும்.

தமிழ்நாடு அரசு மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர்
திரு. செ. மாதவன், பி. காம்., பி. எல். அவர்கள்.

கர்ம வீரர் ஏ. பி. சி.

எஸ். சுப்பையா முதலியார்,

தலைவர், நெல்லை நகர்-காங்கிரஸ் கமிட்டி.

திரு. ஏ. பி. சி. வீரபாகு அவர்களை நண்பர்கள் அன்பாக ஏ. பி. சி. என்றே அழைப்பார்கள். அவர்களைப்பற்றி முழு விபரம் தொகுத்தெழுதுவதற்குரிய சான்று கள் என்னிடமில்லை, 'நான் கண்ட தலைவர் ஏ. பி. சி.' என்ற தலைப்பில் சில கருத்து களைக் குறிப்பிட விரும்புகிறேன்.

காந்தியவாதி:-

உண்மையான காந்தியவாதியாகத் திகழ்கிறார்கள். எளிய வாழ்க்கை, தூய சிந்தனை என்ற காந்தி அடிகளின் கொள்கைக்கு இலக்கணமாக வாழ்கிறார்கள். ஆடம்பர வாழ்க்கையை விரும்பாதவர்கள். அவர்களுடைய இல்லத்துக்குச் சென் றால் இந்த உண்மை புலப்படும். அவர்களுக்கிருக்கிற புகழுக்கும், செல்வாக்குக்கும் உகந்த முறையில் அவர்கள் வீடு நவீன முறையில் காட்சி அளிக்க வேண்டும். சாதாரணமாக வீடு இருக்கும். அவர்கள் தொடர்புள்ள பல வியாபார இடங்களிலும், நிறுவனங்களிலும், தொலைபேசிகள் உண்டு. ஆனால் அவர்கள் வீட்டில் தொலைபேசி கிடையாது. கதர் அணிவதோடு உணவு உண்பதிலும் அவசியமான பண்டங்களையே உண்பார்கள். சர்வோதய சங்கத்தோடு நெருங்கிய தொடர்பு உண்டு. மேயர் நிதியிலி ருந்து கிராமங்களுக்குக் கிணறு வெட்டுவதற்கும், இதர காரியங்களுக்கும் கடன்கள் வழங்கி நிர்வகிக்க அமைக்கப்பட்டுள்ள திருநெல்வேலி மாவட்ட அபிவிருத்தி டிரஸ் டுக்கு திரு. ஏ. பி. சி. தலைவராக இருந்து சிறந்த முறையில் பணியாற்றிவருகிறார். எல்லைக்காந்திகான் அப்துல்காபார்கான் இந்திய துணைக்கண்டத்தில் சுற்றுப்பயணம் செய்த போது ஜெயப்பிரகாஷ் விடுத்த அறிவிப்புப்படி திரு. ஏ. பி. சி. அவர்கள் கணிசமான அளவு நிதி வசூல் செய்து கொடுத்தார்கள். காந்தியப் பொருளாதாரத் தில் நம்பிக்கையுள்ளவர்கள். பொருளாதார தத்துவத்தைக் கேட்டோர் அனைவரும் எளிதில் புரிந்து கொள்ளக்கூடிய வகையில் விளக்குவதில் வல்லவர்.

அரசியல்வாதி:-

காங்கிரஸ் கட்சியின் சார்பில் 10 ஆண்டுகள் தமிழ்நாட்டுச் சட்டமன்ற உறுப்பி னராக இருந்தார்கள். பல பொதுக் குழுக்களில் அங்கம்பெற்று சிறந்த பணியாற்றி யிருக்கிறார்கள். எந்தக் குழுவில் இருந்தாலும் இவர்களுடைய கருத்துக்கு அதிக மதிப்புக் கொடுப்பார்கள். நல்ல அரசியல் ஞானத்தோடு, பொருளாதாரத்திலும்

வல்லுநர். ராஜாஜியின் பக்தர். பெருந்தலைவர் காமராஜுக்கு உற்ற நண்பராக விளங்கினர்கள். நெல்லை மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவராகப் பல ஆண்டுகள் இருந்தார்கள். தொண்டர்களிடம் தனிப் பாச உணர்வோடு பழகுவார்கள். தொண்டர்கள் துன்பப்படும்பொழுது அவர்களுக்குத் தன் கையிலிருந்து பணம் கொடுத்து ஆதரிக்கிறார்கள். திரு. ஏ. பி. சி. சட்டமன்ற உறுப்பினராக இருக்கும்பொழுது மாவட்ட அபிவிருத்திக்குப் பாடுபட்ட உத்தமர். பொதுக்கூட்டத்தில் திரு ஏ. பி. சி. பேசுகிறார்கள் என்று அறிவித்தால் அந்த கூட்டத்திற்கு மக்கள் திரளாக வருவார்கள். அரசியல் பிரச்சனைகளானாலும் சரி, நாட்டின் பொருளாதாரப் பிரச்சனைகளானாலும் சரி கோவையாக, தெளிவாக, கேட்போர் மனத்தெளிவுடன் திரும்பும் வகையில் பேசுகிற ஆற்றலுடையவர்கள்.

கூட்டுறவாளர்:—

பல்வேறு கூட்டுறவு நிறுவனங்களில் தலைவராகவும், நிர்வாகக் குழு உறுப்பினராகவும் இருந்தார்கள். நெல்லை மாவட்டக் கூட்டுறவு மத்தியப் பண்டகசாலை தலைவராகப் பல ஆண்டுகள் இருந்தார்கள். சில ஆண்டுகள் நிர்வாகக் குழுவில் ஓர் உறுப்பினராகப் பணியாற்றனைக்கு வாய்ப்புக் கிடைத்தது. திரு. ஏ. பி. சி. தலைவராக இருந்த நிறுவனத்தில் டைரக்டராயிருக்க வாய்ப்புக்கிடைத்ததைப் பெருமையாகக் கருதுகிறேன். அவர் கூட்டத்தை நடத்துகிற முறையே அலாதியானது. கூட்டத்திற்கு வந்திருந்தவர்களுக்குச் சுதந்தரமாக விளக்கிப்பேச வாய்ப்பளித்துப் பின்னால், தலைவர் என்ற முறையில் தெளிவாக விளக்கி முடிவைக் கூறுவார்கள். அனைவரும் கருத்து வேறுபாடின்றி தக்கமுடிவு என்று ஏற்றுக்கொள்ளக் கூடியவையாக இருக்கும். கூட்டுறவு அமைப்புக்களில் பண்டகசாலைகளை (Consumers-Stores) நிர்வகிப்பதென்பது எளிதான காரியமில்லை. தொழில்நுட்பம் தெரிந்த தனித்திறமையோடு செயலாற்றினால் தான் பண்டகசாலைகள் சிறப்பாக இயங்கமுடியும்! விலைவாசி ஏற்றத்தாழ்வு, சேதாரம் தரம் கெடாமல் பார்ப்பதுபோன்ற அம்சங்களில் கவனம் செலுத்தத் தவறினால் பண்டகசாலை நட்டத்தில் வேலைசெய்ய ஏதுவாகும். ரசாயன உரம், நவதானியங்கள், கைத்தறி ஜவுளி, மில் ஜவுளி, உணவுப்பொருள்கள் போன்றவை பண்டகசாலைகள் மூலமாக விற்பனை செய்யப்பட்டன. தனியாகப் பள்ளி மாணவர்களுக்கு ஆகும் நோட்டுக்கள், ஸ்டேஷனரி சாமான் ஸ்டோர், மெடிக்கல் ஸ்டோர் நடத்தப்பட்டன. எல்லாப் பிரிவுகளும் ஓரளவு லாபம் கிடைக்கக்கூடியவகையில் செயல்பட்டுவந்தன. அரசின் ஏஜண்டாக விநியோகம் செய்த ரசாயன உரம், அரிசி, கோதுமை போன்ற உணவுப் பொருள்களில் அரசின் கொள்கையின் காரணமாக நஷ்டமடைந்திருக்கலாம். திரு ஏ. பி. சி. தலைவராக இருந்த காரணத்தினால் நஷ்டத்தின் அளவு குறைந்தது என்று சொன்னால் மிகையாகாது. பண்டகசாலை ஊழியர்களை நடத்தும் விதத்தையும் அவர்களிடம் படிக்கவேண்டும். வேலையில் கண்டிப்பாக இருப்பார்கள். பலர் அவர்களை

அணுகவே அஞ்சுவார்கள். அதே நேரத்தில் ஊழியர்களுடைய தேவைக்கு ஏற்ப ஊதிய உயர்வு, போனஸ் வழங்குவதில் தாராள மனப்பான்மையைக் காட்டுவார்கள். மத்தியப் பண்டகசாலைக்குத் திரு. ஏ. பி. சி. அவர் காலத்தில் ஆஸ்தியை வருடா வருடம் திரட்டி, அவர்கள் பதவி விலகும்பொழுது பல லட்ச ரூபாய் மதிப்புள்ள கட்டிடங்களையும் இதர ஆஸ்திகளையும் விட்டுச் சென்றிருக்கிறார்கள்.

"இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன் கண்விடல்"

என்ற குறளுக்கு இலக்கணமாக நிர்வாகத்தை நடத்திக் காண்பித்தார்கள். தமிழ்நாடு கூட்டுறவு யூனியன் முக்கிய நிர்வாகக்குழு உறுப்பினராகவும், அகில இந்தியக் கூட்டுறவு அமைப்புகளிலும் திறமையாகப் பணியாற்றினார்கள். மாநாடுகளில் தீர்மானங்கள் விவாதத்திற்கு எடுத்துக்கொண்டால் திரு. ஏ. பி. சி.யின் கருத்து என்ன என்று கேட்பார்கள்.

கல்வி, சமுதாயத் தொண்டு:-

திருநெல்வேலியிலிருந்து தூத்துக்குடிக்குப் பிரயாணம் செய்தால் தூத்துக்குடி எல்கைக்கு வந்தவுடன் வ. உ. சி. கல்லூரி கம்பீரமாகக் காட்சி அளிக்கும். வ. உ. சி. கல்லூரியை உருவாக்கிய முழுப் பொறுப்பு இவரையே சாரும். இது திரு. ஏ. பி. சி. யின் கல்வித் தொண்டுக்கு நிரந்தர நினைவுச் சின்னமாக (Standing Monument) விளங்குகிறது. வ. உ. சி. கல்லூரி வளர்ச்சியைக் கவனித்து வருகிறவர்கள் எந்த அளவுக்கு ஏ. பி. சியின் வாழ்க்கை வரலாறு ஒன்றிஇருக்கிறது என்பதை அறிவார்கள். ஏ. பி. சியின் முழு நேரமும் கல்லூரியின் முன்னேற்றத்திற்காகச் செலவிடப்படுகிறது. இந்தக் கல்லூரி உருவாக்குவதற்குத் திரு ஏ. பி. சி. பட்ட இன்னல்கள் பல. கல்லூரி துவக்குவதற்கு வேண்டிய நிதியைக் குறித்த நாளில் கட்ட முடியவில்லை. அதே நேரத்தில் கல்லூரியை அந்தக் கல்வியாண்டின் துவக்கத்தில் திறக்க முடியவில்லை என்றால் இன்னும் ஓராண்டு தள்ளிப்போட வேண்டியதிருக்கும். இந்தச் சிக்கலான நிலைமையைச் சென்னை சர்வகலாசாலை துணைவேந்தராக இருந்த மறைந்த மேதை டாக்டர் இலட்சுமணசாமி முதலியார் அவர்கள் உணர்ந்து திரு. ஏ. பி. சி. யின் மேல் நம்பிக்கை வைத்து அந்த ஆண்டில் கல்லூரியைத் துவக்க அனுமதி அளித்தார்கள். திரு. டாக்டர் இலட்சுமணசாமி முதலியார் திறமைக்கும் கண்டிப்புக்கும் இலக்கணமாக விளங்கியவர்கள் என்பது உலகம் அறியும். திரு. ஏ. பி. சி. யின் வாக்கில் பூரண நம்பிக்கை இருந்ததால் நிதி பூராவும் கட்ட முடியாத சூழ்நிலைமையிலும் அங்கீகாரம் அளித்தார்கள். திரு. ஏ. பி. சி. யின் வாக்குக்கு எந்த அளவுக்கு மதிப்புக் கொடுத்தார் என்பது இந்த உதாரணத்திலிருந்து விளங்குமென்று கருதுகிறேன்." கல்லூரியில் எம்.ஏ. போன்ற பல பிரிவுகள் கொண்டு வந்து முதல் தரமான கல்லூரியாக இயங்கவைத்த பெருமையும் திரு. ஏ. பி. சி. யைச் சாரும். பி. டி. கல்லூரி ஏற்படுத்தியது முக்கியமான சாதனை

களில் ஒன்று. பெருமுயற்சி எடுத்து, மகளிர் கல்லூரியைத் துவக்கித் தனிக்கட்டிட மும் இயங்க வைத்திருக்கிறார்கள். அண்மையில் மகளிர் கல்லூரிக்குத் தாயார் மகா லட்சுமி பெயரில் ஒரு லட்சம் ரூபாய் நன்கொடை அளித்திருப்பது பெண்கள் கல்வியில் அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சிக்கு ஒரு எடுத்துக்காட்டு. வ. உ. சி. கல்லூரி செயல்படத் துவங்கியதிலிருந்து கணக்கு எடுத்தால், எண்ணற்ற ஏழை மாணவர்கள் குறைந்த செலவில் கல்வி பயில வாய்ப்பளித்த பெருமை திரு. ஏ. பி. சி. க்கு உண்டு.

தமிழ்நாட்டில் ஒரு முக்கிய அரசியல் தலைவராக இருந்து வருவதுடன் சமுதாயத்தில் கல்வி வளர்ச்சியில் பெரும் பங்கு எடுத்துச் சிறந்த சாதனை செய்த புகழும், பெருமையும் அவர்களுக்கு உண்டு. இருபதாம் நூற்றாண்டில் சமுதாயத்தில் கல்விக்காக அரும்பணியாற்றிய தலைவர்களில் ஒருவராக வரலாற்றில் இடம் பெறுவார்கள். திரு ஏ. பி. சி. அவர்களின் சீரியதொண்டு தமிழ்நாட்டில் இன்னும் பல ஆண்டுகள் தொடர இறைவன் அருள் புரிவாராக.

"எப்போதுமே அவசரமாக நாட்டில் எந்த முன்னேற்றத்தையும் காணமுடியாது. நிதானமாக ஆக்கப்பூர்வமாக எடுக்கப்படும் நடவடிக்கைகளின் மூலமாகத்தான் நிரந்தரமான முன்னேற்றம் ஏற்படும்."

சட்டசபைப் பேச்சு—(2—3—1964)

* * * * *

"நிலம் உழுபவனுக்கே சொந்தம் என்று சொன்னால் சீக்கிரமே அதை அவர்களுக்குச் சொந்தமாக்கிக் கொடுத்து விடுவது நல்லது"

சட்டசபைப் பேச்சு—(2—3—1964)

* * * * *

"கூப்பாடு எங்கே அதிகமாக இருக்கிறதோ அதற்கு அதிகமாக கொடுக்கப்பட்டிருக்கிறது..... இப்பொழுது சமூகநீதி, சமூகப்பொறுப்பு இவைகள் எல்லாம் வந்திருக்கின்றன. அதற்கு ஏற்ற வாறு ஷிப்ட் பண்ணவேண்டும்."

சட்டசபைப் பேச்சு—(2—3—1964)

ஒளியன் எழுந்தான், இருளன் ஓடு!

டாக்டர் சாலை இளந்திரையன்

இருட்டுக் காரன் உருட்டுக் காரன்
இனி ஒதுங்கு, போ;
இளமை மேயும் பழமை மோகன்
தனி அகன்று, போ!
திருட்டுக் காரன் திடுக்குக் காரன்
நிலை வொடுங்கவே
தெளி வெழுந்து புதுமை என்னும்
ஒளி எழுந்தது!

பக்தி என்னும் போதை ஏறி
வழி மறந்தவன்
பழக்க மென்னும் இழுக்கில் ஊறி
நடை தளர்ந்தவன்,
சக்தி கொண்ட காலா யாகித்
தடம் பிடித்தனன்;-
சரியும் தப்பும் இவைகள் என்ற
தெளிவு கற்றனன்!

மனிவி மக்கள் அணிக லன்கள்
அடகு வைத்தல் போல்
மனித னென்ற பெருமை தன்னை
மூடக்கி வைத்தவன்;-
நினைவு பொங்கி நெஞ்சு பொங்கி
நேரெ ழுந்தனன்;-
நிகழ்ந்து போன மடமை எண்ணி
நாண மாயினன்!

'அரை வயிற்றுக் கஞ்சிக் காக
அறிவை விற்கவோ?
அடிமை என்றும் மிடிமை என்றும்
தொழுது நிற்கவோ?,...
விரைவு கொண்ட மனித வீறு
கேள்வி கேட்குது;-
வீணில் போன நாள்க ளுக்கும்
சேர்ந் தெழும்புது!

நீரி ருந்தும் பூ வெடாத
தாமரைக் குளம்
நெஞ்சி ருந்தும் வாழ்வி லாத
ஏழையோர் குலம்,-
வேரி ருந்த நோய நிந்து
வெட்டிச் சாய்த்தது;-
வெகுவெ கென்று பொதுமை இன்பம்
பூத்துக் காய்த்தது!

பிறந்தி டத்தைச் சொல்லி, மேலும்
கீழும் வைத்தபேர்
வெல வெலக்கச் செய்து வைத்த
பெரியவர் குரல்,
உறங்கி வந்த ஏழை யோரின்
செவியில் ஏறவே
உலக மங்கை சம நலத்தில்
நடை தொடங்கினள்!

சுற்றிச் சுற்றி அலுத்துப் போன
இந்தப் பூமியில்
தூர நோக்கும் வீர நோக்கும்
வந்து கூடவே,-
நெற்றி மீதில் நின்ற கோணல்
தீர்ந்து போனது;-
நேர் வழிச்சென்று, உலகம் இன்ப
ஊரில் நின்றது!

குதிரை ஏறிக் குதிரை ஏறிக்
கொழு கொழுத்தபேர்
குழி பறிக்கும் குதிரை கண்டு
திகை திகைக்கவே,-
புதுமை யாகிப் புதுமையாகிப்
புவி எழுந்தது;-
பொடுகு பூச்சி சிதறி ஓட
நடை உயர்ந்தது!

மனிதன் என்ற தத்துவத்தை
மறைத்த கேடுகள்
மளம ளென்று வடிந்து போக,
ஒளி எழுந்தது!
பனி குவிந்த இமய வெற்பில்
வெயில் படர்ந்தது;-
மகிழ்வு கொண்ட இனிய கங்கை
நடை தொடர்ந்தது!

மொழியியல்

டாக்டர் சி. பாலசுப்பிரமணியன், எம்.ஏ., எம்.லிட்., பிஎச்.டி.
தமிழ்த் துணைப் பேராசிரியர், சென்னைப் பல்கலைக் கழகம்.

நாகரிகம் இல்லாத மனிதனை இன்றும் நாம் 'காட்டுமிராண்டி' என அழைக்கிறோம். காரணம் என்ன? உடை, வீடு, மொழி முதலியன எல்லாம் நாகரிகத்திற்கு வேண்டியனவாகும். வரலாற்றின் தொடக்க கால மனிதன் உடையின்றி, வீடின்றி, மொழியின்றி இடர்ப்பட்டு வாழ்ந்ததாக அறிகிறோம். இலை, தழை முதலியவைகளை உடைகளாகக்கொண்டு அணிந்து, மலைக் குகைகளிலும், அடர்ந்த மரச் செறிவுகளிலும் வாழ்ந்து, சைகைகளால் தன் கருத்துக்களைப் பிறருக்குப் புலப்படுத்திக்கொண்டு ஆதி மனிதன் வாழ்ந்தான் எனத் தெரியவருகிறோம். சைகைகளிலிருந்து மனித இனம் மெல்ல மெல்ல மொழியைப் படைத்துக்கொண்டது; காட்டிற் கிடைத்த காய்கனிகளை உண்டு பசி தீர்த்துக்கொண்ட மனிதன், நிலத்தை உழுது தனக்கு வேண்டிய தானியங்களை விளைவித்துக்கொள்ளத் தொடங்கினான். பருத்தியைப் பயிரிட்டுக்கொண்டு அதன்வழிப் பஞ்சினைப் பெற்று, அதனை நூலாக நூற்று ஆடைநெய்யக் கற்றுக்கொண்டான். வீடுகளைத் தனக்கெனக் கட்டிக்கொண்டான். இந்தப் படிப்படியான வளர்ச்சிகளே மனித நாகரிகத்தின் வளர்ச்சி என்பர். குறிப்பாகச் சொன்னால் மனிதன் தன் உள்ளக் கருத்துக்களைப் பிறருக்கு உணர்த்தும் வகையில் பயன்படும் வண்ணம் எப்போது ஒருமொழியைப் படைத்துக் கொண்டானோ, அப்போதே நாகரிகம் பெற்றுவிட்டான் என்று கூறலாம்.

மனிதன் இரவில் கனவு காண்கிறான். கனவில் வாய் பிதற்றுகிறான்; சில சொற்களைச் சொல்கிறான். தன்னை மறந்து தூங்கும் பொழுதும் மனிதன் தான் கற்ற மொழியை மறவாமல் நினைவில் கொண்டிருக்கிறான்; வயது முதிர்ந்து கிழவனை பிறரும் தான் இளமையில் கற்றுக்கொண்ட மொழியை மறவாமலிருக்கிறான்.

சைகைகளிலிருந்து மொழி வளர்ந்தது என்று கண்டோம். சைகைகளுக்குக் குறியீடு உண்டு. இந்தச் சைகைகளால் ஒருவர் தாம் கூறவந்த கருத்தினைப் பிறருக்குக் கூறவேண்டுமென்றால் நல்ல வெளிச்சம் வேண்டும். இருட்டானால் முகக் குறிப்புகளையும், கைசாடைகளையும் காண முடியாமற் போகும். இருட்டில் ஒரு செவிடனுடன் எவ்வாறு பேசுவது? இந்த இடர்ப்பாடு வந்துற்றது. கைகள் கொண்டு வேறேர் பணியில் ஈடுபட்டிருக்கும்பொழுது எவ்வாறு சைகைகளால் கருத்தைப் புலப்படுத்த முடியும்? எனவே மனிதன் ஒலி எழுப்பும் குரல்வளையைப் பயன்படுத்தத்

தொடங்கினன். 'தேவையே படைப்புக்குக் காரணம்' (Necessity is the mother of invention) ஆகிறது. இவ்வாறு மொழி பிறந்தது.

'மொழி எண்ணங்களை வெளிப்படுத்தும் கருவி' (Language is a vehicle of thought) என்பர், யெஸ்பர்ஸன் என்னும் மொழிநூலறிஞர். இதற்கு மாறாக, டாலி ரரண்ட் என்பவர், 'தம் கருத்தைப் பிறர் அறியாமல் மறைப்பதற்கு உதவுவதே மொழி, என்று குறிப்பிட்டுள்ளார். சோதவன்கிர்க்கெர்ரெட் என்பவர் இவ்விரு கருத்துக்களுக்கும் மாறுகத் தமக்குக் கருத்து ஒன்றும் இல்லை என்பதனை மறைப்பதற்குப் பலர் மொழியைப் பயன்படுத்துகின்றனர் என்கிறார்.

மறைந்த மொழிநூலறிஞரும் இலக்கிய வித்தகருமான டாக்டர் மு. வரதராசனர் அவர்கள், மொழி மூவகையில் பயன்படுவதாகக் குறிப்பிட்டுள்ளார். "முதலாவதாக அது கருத்துப் புலப்படுத்துவதற்கு உதவும் கருவியாகும். இரண்டாவதாக, சிந்தனை வளர்ச்சிக்கு அது துணை செய்கிறது. மூன்றாவதாக. மறக்கப்படுவனவற்றை மறவாமல் காக்கும் கருவியாகவும் வேண்டியவற்றை வேண்டியபோது அறிய உதவும் கருவியாகவும் பயன்படுகிறது. இவ்வாறு உதவும் கருவியாகப் பயன்படும்போது அது இலக்கியமொழி என்று கூறப்படுகிறது" (மொழி வரலாறு: பக்கம், 18) என்று அவர் குறிப்பிட்டிருக்கக் காணலாம்.

மொழி ஒருவருக்கு விழி போன்றதாகும்.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்" என்றும்

"எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு" (திருக்குறள்: 392)

என்றும் எழுந்துள்ள இலக்கிய மொழிகள் மொழியின் இன்றியமையாமையினைப் புலப்படுத்தும். மனத்தில் நிகழ்வனவற்றை உணர்த்தவே மொழி கருவியாகப் பயன்படுகிறது எனலாம். மொழியியல் என்பது, எடுத்துக்காட்டுடன் இயைந்த உளநூல் (In a sense, therefore, general linguistics may be called applied psychology Pillsbury and Meader) என்று கருதுவாரும் உளர்.

முதன் முதலில் மனிதன் தன் அன்றாட வாழ்க்கையில் அடிக்கடி பயன்படும் பொருள்களுக்குப் பெயர்கள் இட்டுச் சொற்களை அமைத்துக்கொண்டிருப்பான். இம்முறையில் தாய், தந்தை, மகன், மகள், குழந்தை, தண்ணீர், உணவு, உடை, வீடு முதலானவற்றிற்குரிய சொற்கள் மொழியில் முதன் முதலில் ஏற்பட்டிருக்க வேண்டும். தொடக்க காலத்தில் மனிதன் படைத்துக்கொண்ட சொற்கள் அடிக்கடி பயின்று வழங்கிய காரணத்தால் சிறுசிறு சொற்களாக அமைந்திருக்கக் காணலாம். தமிழில் வழங்கும் எண்ணுப்பெயர்களும் (Numericals), மூவிடப் பெயர்களும் (Pronouns) அடிக்கடி வழக்கில் பயின்று வழங்கிவரும்பான்மை காரணமாகச் சிறுசிறு சொற்களாக அமைந்திருக்கக் காணலாம். ஒன்று, இரண்டு, மூன்று,

நான்கு, ஐந்து, ஆறு, ஏழு, எட்டு, ஒன்பது, பத்து என்னும் எண்களை நோக்குக. இதுபோன்றே மூவிடப் பெயர்கள். நான், நீ, அவன் முதலான சொற்களும் சிறு சொற்களாக அமைந்துள்ளன. மேலும் தமிழில் தற்போது என்னுடைய தாய் (My mother), உன்னுடைய தாய் (Your mother), அவனுடைய தாய் (His mother) என்று ஆரும் வேற்றுமை உருபினைச் சேர்த்து வழங்குகின்றோம். ஆனால் பழங்காலத்தில் இவ்வாறு இச்சொற்கள் நீட்டி வழங்கப் பெறவில்லை. சங்க இலக்கியங்களில் என்னுடைய தாய் 'யாய்' என்றும், உன்னுடைய தாய் 'ஞாய்' என்றும், அவனுடைய தாய் 'தாய்' என்றும் குறிக்கப்பெற்றன. இதுபோன்றே 'எந்தை' என்னும் சொல் 'என்னுடைய தந்தை' என்பதனையும் 'நுந்தை' என்னும் சொல் 'உன்னுடைய தந்தை' என்பதனையும், 'தந்தை' என்னும் சொல் 'அவனுடைய தந்தை' என்பதனையும் உணர்த்துவனவாகும்.

"யாயும் ஞாயும் யாரா கியரோ?
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்"

—குறுந்தொகை 40: 1-2

என்னும் தொடர்களில் யாய், ஞாய், எந்தை, நுந்தை முதலான சொற்களைக் காணலாம். இச்சுருங்கிய சொற்கள் விரிந்து பொருள் தந்தன. சுருங்கச் சொன்னால் இச்சிறுசிறு சொற்கள் 'capsule' போல அமைந்து பெரும் பொருள் தந்தன. இன்று அச்சொற்கள் வழக்கு வீழ்ந்து, தாய், தந்தை என்ற படர்க்கையிடச் சொற்களை மட்டும் பற்றிக்கொண்டு, என், உன், அவன் என்ற சொற்களோடு சேர்ந்து சொல்ல வந்த பொருளை உணர்த்துகின்றன. சொற்செறிவிலிருந்து நெகிழ்ந்து சொற்கள் பிற்காலத்தே பிறங்கிய நிலையினைக் காணலாம்.

மற்றொன்றும் காணலாம். சங்க காலத்தில் 'யானை' என்பது ஆண் பெண் எனும் இருபாலினையும் உள்ளடக்கிய பொதுச் சொல்லாகும். 'களிறு' என்றால் ஆண் யானை; 'பிடி' என்றால் பெண் யானை.

"காதல் மடப்பிடியோடும் களிறு வருவன கண்டேன்"

என்பது திருநாவுக்கரசர் தேவாரம். ஆனால் இன்று பேச்சு வழக்கில் களிறு, பிடி என்ற சொற்கள் பயன்படுத்தப் பெறுவதில்லை. அதற்கு மாறாக, ஆண் யானை என்றும் பெண் யானை என்றும் முறையே களிறு, பிடி என்னும் சொற்கள் உணர்த்தப் படுகின்றன. இங்கும் சொற்செறிவிலிருந்து நெகிழ்ச்சியை நோக்கி மொழி வந்து விட்ட நிலையினைக் காண்கிறோம். களிறு, பிடி, யானை என்று மூன்று சொற்களை நினைவிலிருத்திக் கொள்வதில் 'துன்பமும், சோம்பலும்' பட்ட மனம், யானை என்ற பொதுச் சொல் ஒன்றினையே நினைவில் கொண்டு, ஆண், பெண் என்ற பொதுச் சொற்களைக் கூட்டிப் பாலுணர்த்தும் நிலையினைக் காணலாம். ஆயினும் இதனால் தமிழ் சொல்லாட்சி வளம் (diction) ஓரளவு இழக்கப்படுகின்றது என்பதனை உணர வேண்டும்.

"சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே—அதைத்
தொழுது படித்திடடி பாப்பா"

என்றார் கவியரசர் பாரதியார். அவரே,

"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல்
இனிதாவ தெங்கும் காணோம்"

என்றும் குறிப்பிட்டுள்ளார். தமிழ்மொழி பழம்பெரும் மொழி; தொன்மைச் சிறப்போடு தூய நாகரிகச் சிறப்புங்கொண்டமைந்த மொழி. உலகப் பழம்பெரும்மொழிகளோடு ஒப்பவைத்தெண்ணப்படும் உயர்தனிச் செம்மொழி. மாக்ஸ்முல்லர் என்னும் சேர்மானிய மொழிநூலறிஞர், "தமிழ் மிகவும் பண்பட்ட மொழி என்றும், தனக்கே உரிய வளம் வாய்ந்த இலக்கியச் செல்வங்களைப் பெற்றிருக்கும் மொழி" (Tamil is the most highly cultivated language and possesses the richest stores of indigenous literature) என்று குறிப்பிட்டுள்ளார். மேலும் ரைஸ் டேவிஸ் (Rhys Davids) என்னும் அறிஞர், "வடமொழி, எபிரேயம், கிரேக்கம் ஆகிய மூன்று உலக இலக்கிய மொழிகளில் தமிழ்ச் சொற்கள் கலந்திருக்கின்றன" (The three classic languages of the world namely Sanskrit, Hebrew and Greek contain Tamil words in the vocabulary) என்று குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு தமிழ் காலந்தோறும் வளர்ந்து செழித்துக் 'கன்னித் தமிழ்' எனக் களிப்புடன் போற்றத்தக்க திறனுடையதாக விளங்குகின்றது. ஒரு மொழியில் இலக்கியம் எழுந்த பின்னரே இலக்கணம் தோன்றும். தமிழ்மொழியில் இன்று காணக்கூடிய நூல்களில் காலத்தால் முற்பட்ட நூல் தொல்காப்பியமாகும். தொல்காப்பியம் ஓர் இலக்கண நூலாகும். எனவே தொல்காப்பியத்திற்கும் முன்னர் இலக்கியங்கள் தமிழ்மொழியில் நிலவியிருக்கவேண்டும். மேலும் தொல்காப்பியனார் தம் நூலில் பலவிடங்களில் 'என்மனார் புலவர்', 'யாப்பறி புலவர்', நுண்ணிதின் உணர்ந்தோர் கண்டவாறே', 'நெறிதின் உணர்ந்தோர் நெறிப்படுத்தினரே', 'கூறுப' 'மொழிப' 'என்ப' என்றெல்லாம் தமக்கும் முற்பட்டுத் துலங்கிய இலக்கண வழக்கினைக் குறிப்பிட்டிருக்கக் காணலாம். எனவே தொல்காப்பியத்திற்கு முன்னரே தமிழில் இலக்கண நூல்கள் இருந்திருக்க வேண்டும் என்பது ஒருதலை. "அகத்தியம் என்னும் இலக்கண நூல் இருந்து மறைந்திருக்க வேண்டும்" என்பர் ஆராய்ச்சியாளர். எனவே தமிழ்மொழி 'மூன்னைப் பழமைக்கும் பழமையாய்ப் பின்னைப் புதுமைக்கும் புதுமையாய்' நின்றொளிர்கின்றது எனலாம். எனவேதான் மனோன்மணீய ஆசிரியர் பேராசிரியர் சுந்தரம் பிள்ளையவர்கள்,

"ஆரியம் போல் உலகவழக்கு அழிந்தொழிந்து சிதையா வுன்
சீரிளமைத் திறங்கண்டு செயல்மறந்து வாழ்த்துதுமே"

என்று பாடினர். எனவே அமிழ்தினுமினிய நம் செந்தமிழ் மொழியினைக் கண்ணின் இமைபோற் காப்போம்; கவினுடனும் கலையழகுடனும் காலந்தோறும் வளர்ந்து செழிக்கச் செய்து வாழ்வோம்.

கழுகுமலை ஒரு கலைக் கருவூலம்

கு. அருணாசலக் கவுண்டர், திருநெல்வேலி

[மணிவிழாக் காணும் மேதகு பெருந்தகை ஏ. பி. எஸ். வீரபாகு அவர்களுக்கு, கழுகுமலை என்ற தலத்திலே விசேஷ ஈடுபாடு உண்டு. கழுகாசல மூர்த்தியின்பால் கனிந்த பக்தியுண்டு. அவர்கள் அனுபவத்தோடு ஒட்டிநின்று, இத்தல வரலாற்றை மேலோட்டமாக அளிப்பது இக்கட்டுரையின் நோக்கம். —கு.அ.]

கல்லில் இழைத்த காவியம்:

கோயம்புத்தூர் நண்பரொருவர். "திருநெல்வேலிக்கு நான் வருவதாக இருக்கிறேன், அங்கே வந்தால் முக்கியமாய்ப் பார்க்கவேண்டியது என்ன" என்று கேட்டார். அவருக்குக் காட்டவேண்டியது குற்றாலமோ, திருச்செந்தூரோ அல்ல. இயற்கையின் வரப்பிரசாதங்கள் அவை. அவரோ கலைக்கூடங்களான எல்லோரா மகாபலிபுரங்களைப் பார்த்துப் பழகியவர். அருங்கலை விநோதர். "உலகப் புகழ்வாய்ந்தவைதான்; என்றாலும் எங்கேயோ செதுக்கி, எடுத்துவந்து, ஒட்ட வைத்திருப்பதுபோலத் தோன்றுகின்றன. மாமல்லபுரச் சிற்பங்களோ கல்சுவர்களின் உள்ளிருந்து துடித்துக்கொண்டு வெளியே குதிப்பனபோல் அல்லவா தோன்றுகின்றன என்பார் அவர். அவர்போன்ற கலாரசிகர்களையும் வியப்பில் ஆழ்த்தும் விநோதமான கலைச் செல்வங்கள் திருநெல்வேலிச் சீமையில் இருக்கவா செய்கின்றன? இல்லாமல் என்ன? அவைகளைக் காணக் கழுகுமலைச் செல்ல வேண்டும். அதைக் கல்லில் இழைத்த காவியம் என்று சொல்லலாம். கழுகுமலை என்றதுமே அண்ணாமலை ரெட்டியாரின் காவடிச் சிந்தும் பால்குடமும் நையாண்டி மேளமுந்தான் ஞாபகத்துக்கு வரும். அங்கே "மூசுவண்டு வாசமண்டு காலில் மொண்டு தேனை உண்டு, மோஹன முகாரி ராகம் பாடுமே-பாடுவதைக் கேட்கலாம். மேலும் கருணை முருகனைப் போற்றித் தங்கக் காவடி தோளின்மேல் ஏற்றிக் கொழுங்கனலேறிய மெழுகாய் வரும் பக்தர்களைப் பார்க்கலாம். ஆனால், எல்லோராக் குகைகளிலும் மகாபலிபுரக் குன்றுகளிலும் வளர்ந்துவந்த சிற்பக்கலை புராணப் பொலிவுடன் அங்கே உச்சநிலை எய்தியிருப்பதைக் காண்பார் அருமையே.

கழுகுமலை — பெயர்க் காரணம்:

கோயில்பட்டியிலிருந்து சங்கரன்கோயில் பாதையிலே 12-வது மைல் கல்லில் கரிசல் காடும் கரம்பும் சூழ்ந்த புன்செய் பிரதேசத்திலே கழுகுமலையைக் காணலாம். மலை என்பது வெறும் பெயரளவிலேதான். சுமார் 300 அடி மொட்டைப் பாறையே அது. உயரமுள்ள அதன் உச்சியிலே தெரிவது பிள்ளையார் கோயிலும் தீபத்தம்பமுமே. மலைமீது ஏறி அங்கே செல்வதற்குச் சரியான பாதை இல்லை. சற்று சிரமத்துடன்தான் செல்கிறோம். வழியிலே ஒரு குகை தென்படுகிறது.

இதுபோன்ற மலைச் சரிவுகளிலே பாறைகளில் படுக்கைகள்போலவும் ஆசனங்கள் போலவும் செதுக்கப்பட்ட குகைகளிலேதான் தமிழ்நாட்டின் மிகப் பழமையான வரலாற்றுச் சான்றுகள் கிடைக்கின்றன. கி.மு. 3-ம் நூற்றாண்டைச் சேர்ந்த இக்குகைகள் யாவும் சமணம் வளர்த்த முனிவர்கள் தங்கியிருந்த இடங்களே.

இம்முனிவர்கள் வசித்திருந்த மற்றொரு மலைச்சரிவிலே கிஜ்ஜ கூடம் ஒன்று, அதன் பெயரை பிராமிலிபியில் பொறித்திருக்கின்றனர். கிஜ்ஜகூடம், அதாவது தீர்தரகூடம் என்பதற்குக் கழுகுமலை என்பது பொருள். இம்மலைப் பாறைகளிலே செதுக்கப்பட்ட படுக்கைகள் காணப்படுகின்றன. ஆனால் பிராமிலிபிக் கல்வெட்டு இல்லை.

பௌத்தர்க்குச் சற்று முன்னே பின்னே இங்கே சமண முனிவர்களும் குடியேறி, தொடர்ந்து வசித்திருக்கின்றனர். இங்கே காணப்படும் நூற்றுக்கு மேற்பட்ட சமண சிற்பங்களும், கல்வெட்டுகளும் புலப்படுத்தும் தெளிவான செய்திகளால், இம்மலை, சமணரது பல்கலைக்கழகமாக அகில இந்தியாவிலும் முன்னம் பிரசித்தி வாய்ந்திருந்ததை நாம் அறிகிறோம்.

குகைக்கோயில் குகன் :

மலைமீது சமண சிற்பங்களைக் காண்பதற்கு முன், அடிவாரத்திலே அமைந்துள்ள கழுகாசல மூர்த்தியின் கோயிலுக்குச் செல்கிறோம். எட்டயாபுரத்து அரச மரபினர் கட்டி வைத்த விசாலமான மண்டபங்கள் பிரகாரங்களைக் கடந்து செல்கிறோம். சந்நிதி முன் நிற்கிறோம்.

இது ஒரு குகைக் கோயில். பாறையைக் குடைந்து செய்யப்பட்டது. இதை குடபோகம் என்பது மரபு. பாறைகளைக் கோயிலாகக் குடைந்து, குடபோகங்களையும், குன்றுகளை வெட்டிச் சீர் செய்த கற்களைப் பொருத்திக் கட்டுவித்துக் கற்றளிகளையும், கி.பி. 8-ம் நூற்றாண்டிலே காஞ்சிப் பல்லவர்கள்தான் முதன்முதல் செய்வித்தனர். இவை அனைத்தையும் மாமல்லபுரத்திலே காணலாம் என்பர். இத்துறையிலே பல்லவர்க்குச் சளைத்தவர் அல்ல பாண்டியர். பல்லவர்க்கு முன்னதாக அல்லது பல்லவருடன் போட்டி போட்டுக்கொண்டு, பாண்டியர், குடபோகங்களை, அதாவது குகைக் கோயிலை, செய்வித்தனர். இவைகளைப் பெரிய அளவிலே மிகுதியாகச் செய்வித்தது பாண்டியர்தான். பாண்டியரது குகைக் கோயில்கள் முறையாக ஆளப்படவில்லை. பிள்ளையார்பட்டிக் குகைக்கோயில், கி.பி. 5-ம் நூற்றாண்டை ஒட்டியது என்று கருதப்படுவதால். இவ்வகைக் கோயில்களை முதல்முதல் தோற்றுவித்தவர் பாண்டியரே என்பது தெளிவாகிறது.

கழுகாசல மூர்த்தியின் சந்நிதி, ஒரு குகைக்கோயில் சென்றோம். 300 அடி உயரம் உள்ள குத்துக்கல்லின், எத்தகைய உளிக்கும் மசியாத கரும்பாறையை அல்லவா அடிவாரத்திலே அகழ்ந்தெடுத்து, தூண்கள் போதிகைகள் செய்வதற்குப் பாறையை ஒதுக்கிவிட்டு, மற்ற இடத்தை வெட்டி, வேண்டாத கற்களை அகற்றி, கருவறையும் முகமண்டபமுமாகக்

குடைந்து, கோயிலாக்கியிருக்கிறார்கள். 42 அடி நீளம் 20 அடி அகலம் 9 அடி உயரம் வாய்ந்த நீண்ட சதுர மண்டபத்தைத் தூண்கள் நான்கு தாங்கி நிற்கின்றன. தூண்கள் நான்கு தாங்கிப் பொன்முலாம் பூசியதகடுகளாலும் சுவர்கள் சந்தனக் கற் காப்பாலும் மறைந்திருப்ப தால், இவற்றின் பண்டைய வேலைப்பாட்டை நாம் அறிவதற்கில்லை. எனினும் பல்லவ மகேந்திரனின் பாணியில் மிக எளிய அமைப்பைக் கொண்டிருப்பதால் இக்குடை வரைக் கோயில் பாண்டியரது ஆதிக் கோயிலாம். 7 அடி அகலம், 10 அடி உள் நீளம், 9 அடி உயரமுள்ள கருவறையிலே நேர் மேற்கு அல்ல. தென்மேற்குப் பார்த்து கார்த்திகேயன் மயில்மீது காட்சி தருகிறார். மயிலும் வலப் பக்கம் அல்ல. இடப்பக்கம் திரும்பியிருக்கிறது. அவர்முன் வள்ளியும் தெய்வானையும் எதிர் எதிராக நிற்கின்றனர். இத்தலத்திலே எல்லாமுமே எதிரும் புதிருந்தான். ஆதியிலே இது சமணர் கோயிலாய் இருந்திருக்கக் கூடும் என்று கருதுகிறார் பர்கூசன்.

சரித சம்பவங்கள்:

வழிபாடு செய்துவிட்டு, நாமும் வெளியேறி மலையை வலம் வருகிறோம். வலம் வரும்போது, பண்டைய சரித சம்பவங்கள் இரண்டொன்றை நினைவு கூர்கிறோம். 16-ம் நூற்றாண்டின் இடையிலே மதுரை மன்னனான கிருஷ்ணப்ப நாயக்கன் வேண்டுதலின்படி, ஜகவீர ராம குமார எட்டப்பன் மலையாள நாட்டின்மீது படை நடத்திச்சென்று, இரணிய லிலே போர்வென்று திரும்பிவரும் வழியிலே ஊற்றுமலைக்காட்டில் மறைந்திருந்து ஒருவன் எய்த அம்பினால் மரணம் அடைந்தார். இதன் நிமித்தம், மதுரை மன்னர் மரபினர்க்குக் கழுகுமலைப் பிரதேசத்தை எட்டப்பன் ரத்த மான்யமாக வழங்கினான். அதுமுதல் எட்டய புரத்தார் ஆளுகையிலிருந்து வந்த கழுகுமலை வனிதம் 15 கிராமங்களையும் சென்ற நூற்றாண் டிலே அவர்கள் கோயில் பெயருக்கே பட்டா மாற்றி வழங்கிய பெருஞ்செயலை நினைவுகூர்கி றோம். குசக்குடி வழியாகச் செல்கிறோம். அங்கே வழிபாட்டிலிருக்கும் நடுகல் ஒன்றைக் காண்கிறோம். கி.பி. 8-ம் நூற்றாண்டிலே ஆட்சிபுரிந்த பாண்டியன் மாறஞ் சடையனின் 23-ம் ஆட்சி ஆண்டிலே நிகழ்ந்த போர் ஒன்றில் இறந்துபட்ட வீரர் இருவர் நினைவில் நாட் டப்பட்டது இந் நடுகல். அவ்வீரரின் குடும்பங்களுக்கு உதிரப்பட்டி அதாவது ரத்தமான்ய நிலபுலம் வழங்கப்பட்ட செய்தி அக் கல்வெட்டுமூகமாகக் காணப்படுகிறது. அவ் வீரரில் ஒருவன் "பூந்தண்மலி" சேர்ந்தவனும். பூந்தண்மலிதான் பூந்தமலியாய் பூவிருந்தவல்லி ஆகியிருக்கிறது.

சமணதீர்த்தங்கள்:

இந்நினைவுகளோடு மலையை வலம் வருகிறோம். அல்லிக்கேணியைக் கடந்து, "உருண்டமலை திரண்டமலை ஒய்யாரக் கழுகுமலை"யைப் பார்த்தவண்ணம், அதன் வட பாரிசத்திலே அகண்டமாய்ப் பரந்துகிடக்கும் பாறை மீது மேலேறிச் செல்கிறோம். கவன மாய்ப் பாதத்தை ஊன்றித்தான் நடக்கிறோம். இதைக் கவனித்தீர்களா? பாதத்தை ஊன்றி வைக்கும் போதெல்லாம், பாதம் படும் சிற்சில இடங்களிலே பாறையினின்றும் சங்கீதத்துக் குரிய நாதங்கள்—சப்த ராகங்கள் அல்லவா ஒலிக்கின்றன. விஞ்ஞானிகளின் ஆராய்ச்சிக்கு இதை விட்டுவிட்டு, சற்று வடக்கு நோக்கி, மேல் ஏறுகிறோம். தென்புறம் மலைச்சரிவின் நெடுகிலும் 60 அடி உயரத்தில் ஒன்றன் கீழ் ஒன்றாக மூன்று வரிசைகளில் ஒரே சீராய்த்

தோன்றும் இச்சிற்பங்களைப் பாருங்கள். மழித்த தலையுடன் இளமை முறுக்கோடு இருகரங்களும் மருங்கிலே தொங்க முக்குடைக்கீழ் ஞான ஜோதியில் தம்மை மறந்து அவ்வொளியை மௌனமாகவே பரப்பும் வகையில் தோன்றும் இச்சிற்பங்கள், சிற்பக்கலைக்கே பெருமை தரும் செல்வம் அல்லவா? இவையாவும் தீர்த்தங்கரர் உருவங்களே. அன்பும் அருளும் கொண்டு அமைதியின் வடிவாய்த் தோன்றும் இவர்கள் யார்? சமண சமயத்தை வளர்த்த சான்றோர் இவர்கள். இவர்களைத் தீர்த்தங்கரர் என்பர். இச்சொல்லுக்குப் பிறவிப் பெருங் கடலினின்றும் நம்மைக் கரை சேர்ப்பவர் என்பது பொருள். இவர்கள் திகம்பரர்களே. அதாவது அம்மணமாகத் தோன்றுகின்றனர். மெய்ஞ்ஞானியராய் விளைகளை வென்ற இவர்களுக்குக் கௌபீனமும் மிகைதான். பூரண வளர்ச்சி எய்திய இம்மானிடர்களையே கடவுளாகக் கொண்டு ஜைனமதம் வழிபடுகிறது. கண்காணாக் கடவுளை அது ஒப்புக்கொள்ளவில்லை.

அம்பிகை:

இதோ இந்த வரிசையின் இடதுபால் மாடத்திலே பெண் உருவம் ஒன்று அசோகின் கீழ் நின்ற கோலத்தில் தோன்றுகிறது அல்லவா? மகுடம் தரித்துக் காதுகளில் தோடு அணிந்து, வலது கரத்தை, மருங்கிலே நிற்கும் சிறுமியின் சிரசிலே வைத்து இடது கரத்திலே எதையோ ஏந்தி, திரிபங்க நிலையில் ஒய்யாரமாய் நிற்கும் இவள்தான் அம்பிகை. இவளை நேமிநாதரது யட்சி — சாசனதேவதை, அதாவது சேவகி என்பர். இவளது வாகனமாகிய சிங்கம், கம்பீரமாய்த் தலைநிமிர்ந்து நம்மையே நோக்குகிறது. இதன் வால் மேல் நோக்கிச் சுருண்டிருக்கிறது. இதன் அருகே அச்சம் இன்றிச் சிறுவர் இருவர் நிற்கின்றனர். இந்த அம்பிகை தூக்கையுடன் ஒன்றி மறைந்தாள்.

மகாவீரர்:

அதோ வலதுபால் சற்றுப் பெரியதாய்த் தோன்றும் அந்தக் கோஷ்டத்தைப் பாருங்கள். அதன் பிரபாவளியிலே பொறிக்கப்பட்டுள்ள அஷ்டமங்கலங்கள் அலங்காரச் சித்திரங்களின் சிற்றுளி நுணுக்க வேலைப்பாடுகளைச் சொல்லால் விவரிக்க முடியாது. இம்மாடத்திலே முக்குடைக் கீழ் வீற்றிருக்கும் வர்த்தமான மகாவீரர் சிற்பம். செய்நேர்த்தி வாய்ந்தது. காற்று வீசாத இடத்திலே ஆடாமல் அசையாமல் புகைதலுமின்றி, நேராக நின்று எரிந்துகொண்டிருக்கும் விளக்குச் சுடர்போல் அல்லவா அவர் தோன்றுகிறார். தியானமே உறைந்து இறுகிச் சிலையானதோ என்று எண்ணுகிறோம். கீழே தீர்த்தங்கரர் இருவர் அமர்ந்திருக்கின்றனர். முடிதரித்த மன்னன் ஒருவன், மண்டியிட்டு வணங்குவதைக் காண்கிறோம். இவன் பாண்டியன் பராந்தக நெடுஞ்சடையன் ஆகலாம்.

பத்மாவதி:

கீழே தனிக்கோஷ்டத்திலே யட்சி ஒருத்தி, பத்மாசனத்திலே அமர்ந்திருக்கிறாள். அவள் சிரசின் மீது பாம்பின் படம் கவிழ்ந்திருக்கிறது. நான்கு கரம் வாய்ந்த இவள், வலது மேல் கையில் பாம்பு, கீழ்க்கையில் கனி, இடது மேல் கையில் அங்குசம் போன்ற ஒன்று தாங்கி, கீழ்க்கையை மடியில் வைத்திருக்கின்றாள். இருமருங்கும் பணிப்பெண்கள் சாமரம்

வீசி நிற்கின்றனர். இந்த யட்சி பார்சுவநாதரின் சேவகி பத்மாவதி ஆகலாம். சமண மதத் தெய்வங்களிடையே யட்சிக்குத் தனியிடம் இல்லை. தனி அந்தஸ்து இல்லை. தீர்த்தங்கர ரின் சாசன தேவதையாய், சேவகியாய்த்தான் தோன்றுவாள்.

யட்சி வழிபாடு:

கழுகுமலைச் சிற்பங்களிலே யட்சிகளுக்குத் தீர்த்தங்கரரைவிட ஒரு படி அதிகமா கவே முக்கியத்துவம் வழங்கப்பட்டிருப்பதைக் கருதும்போது, யட்சி வழிபாடு தமிழ்ச் சமணத் தின் சிறப்பியல்பு என்பது புலனாகிறது. அறம்புரி நெஞ்சின் அறவோர் பல்கிய புறஞ்சிறை மூதூர்ப் பூங்கண் இயக்கிக்குப் பால் பாயாசம் படைத்து மாதரி வழிபடு வதைச் சிலப்பதிகாரத் திலேதான் காண்கிறோம். இதிலே இயக்கி என்றதும் நாம் இசக்கி என்பதும் யட்சியைத்தான். யட்சியைப் படாரியார் என்னலாம், படாரிதான் பிடாரி ஆனாள். இசக்கியும் பிடாரியும் கிராம தேவதைகளாகவே, பத்மாவதி பகவதியுடன் ஒன்றினாள். பிங்கலந்தை நிகண் டிலே துர்க்கையின் எதிராகப் பகவதி பண்ணத்தி என்பன பயில்கின்றன. திவாகர நிகண்டிலும், பகவதியின் எதிராகப் "பண்ணம் பணத்தி" பயில்கிறது. பணத்தி என்பதற் குப் பாம்பின் படத்தைத் தரிப்பவள் — நாகதேவதை — பத்மாவதி என்பது பொருளாகிறது. சமணரது பத்மாவதி, பகவதி வழிபாட்டிலே கலந்து மறைந்தாள் என்று கருதலாம். மலைச் சரிவிலே 60 அடி உயரத்துக்கு மேல் கலை கலையாய்த் தோன்றும் இந்த ஆன்றோர்களை, கீழ் நிற்கும் நாம் அண்ணாந்து பார்க்கும்போது, அவர்கள் முன் நாம் எம்மாத்திரம்! நமது சிறு மையை அல்லவா உணர்கிறோம். சர்வக்ஞர் அதாவது வினையின் நீங்கி, விளங்கிய அறி வின் முனைவர் அவர்கள். இந்த மகான்களது வடிவத்தை உருவாக்கிய சிற்பி தன்னையே ஒரு சித் புருஷனாக மாற்றிக் கொண்டு, தனது தியானத்திலே கண்ட தெய்வீக உருவங்களைக் கல்லிலே வடித்திருக்கிறான். இந்த உருவங்களிலே உடற்கூறே அவயவப் பொருத்தமோ இல்லைதான். ஆனால் அந்தச் சிலைகளின் மூலம், சாந்தரசத்தை அல்லவா அவன் அள்ளிப் பொழிந்திருக்கிறான். ஆயிரம் ஆண்டுகளுக்குமுன். 300 வருட கால இடைவெளியிலே முன் னும் பின்னுமாய் இவை சமைந்தன வேனும், வேறுபாடு எதுவும் இன்றி ஒரே அச்சில் வார்த்தாற்போலத் தோன்றும் இவற்றின் ஒருமையும் ஒழுங்கிடையும் வியப்புக்குரியன.

கல்வெட்டுகள் தரும் செய்தி:

இந்த வியப்பிலேயே ஆழ்ந்திருந்ததால் ஒரு முக்கிய விஷயத்தை நாம் கவனிக்கத் தவறிவிட்டோம். ஒவ்வொரு சிற்பத்தின் கீழும் ஏதோ வாசகம் எழுதப்பட்டிருக்கிறதே அது என்ன தெரியுமா? அந்த எழுத்து நமக்குப் பழக்கம் இல்லாதது. அதை வட்டெழுத்து என்பர். ஒரு வாசகத்தால் கழுகுமலைக்குத் திருமலை என்ற பெயரும் அந்தக் கிராமம் நெச்சுர நாட்டுத் திரு நெச்சுரம் ஒன்று வழங்கப்பட்டதும் புலனாகிறது. சமண சமய சித்தாந்தங் களை நாள்தோறும் விளக்கிக் கூறுதற்காக, "பதின்மர் வயிராக்கியர்க்கு ஆகாரதானமாக நில புலங்கள் விட்ட செய்தி மற்றொரு கல்வெட்டால் புலனாகிறது. ஒவ்வொரு சிற்பத்தின் கீழும் அதைச் செதுக்குவித்தவர் பெயரும் முகவரியும் பொறிக்கப்பட்டுள்ளன. இதோ இந்தச் சிற்பத்தைச் செய்வித்தது யார் தெரியுமா? திருநறுங்கொண்டை பலதேவகுரவடிகள் மாணாக்கர் கனகவிளம். திருநறுங்கொண்டை, வடஆர்க்காடு மாவட்டத்தில் உள்ளது.

இதோ இந்தச் சிற்பத்தொகுதிகள் யாவும் திருச்சாரணத்துக் குறத்திகள் செய்வித்த திரு மேனிகளாம்.

இங்கே காணப்படும் நூற்றுக்கு மேற்பட்ட கல்வெட்டுகளும் சிற்பங்களும் கி. பி. 8, 9, 10-ம் நூற்றாண்டைச் சேர்ந்தவை. இவை புலப்படுத்தும் செய்திகள் யாவை? மிகப் பெரிய பல்கலைக் கழகம் ஒன்று, பிரபலமான பேராசிரியர்களைக் கொண்டு முந்நூறு ஆண்டு களுக்கு மேல் தொடர்ந்து கழுகுமலையில் இயங்கிவந்திருக்கிறது. தொலைதூரத்திலிருந்து வந்து, அங்கே கல்விபயின்று வெளியேறிய ஆசிரியர்கள் பலர், முனிவர்கள் பலர். வணிகர்களும் உழவர்களும் பற்பலர். ஆண்களே அன்றிப் பெண்களுமே அங்கு மாணவிகளாகவும் ஆசிரியர்களாகவும் இருந்திருக்கின்றனர். இவர்கள் அனைவருமே போட்டிபோட்டுக்கொண்டு கழுகுமலையைச் சிற்பங்களால் அலங்கரித்திருக்கின்றனர்.

சமணத் துறவிகளிடையே ஆண், பெண் பாலார் சேர்ந்து கல்வி பயில்வது கற்பிப் பது என்ற கூட்டுக் கல்வி முறை இருந்ததா? இருந்தது என்று சொல்வதற்கில்லை. மடாலயங் களிலே ஆண் பெண் துறவிகளுக்குத் தனித் தனி இடங்கள் ஒதுக்கப்பட்டிருந்தன. எனினும், கல்விப் பயிற்சியிலே ஓரளவு தேர்ச்சி எய்திய பின் நிபுணத்துவம், தனிப் பெரும் புலமை கருதி ஆண்களான குரவர்கள் ஆசாரியர், பெண்களைச் சீடராகக் கொள்வதிலோ, பெண்களான குறத்திகள் ஆண்களைச் சீடர்களாகக் கொள்வதிலோ தவறில்லை என் றறுதிப் பட்டதைத்தான் கழுகுமலைக் கல்வெட்டுகள் புலப்படுத்துகின்றன.

"பைந்தொடி மகளிராவார் பாவத்தால் பெரிய நீரார். பேடி அலி குருடு-இவர்களைப் போன்றதுதான் பெண் பிறவியும். துறவு பூண்டு, மனத்தை அடக்கி, உடலை வருத்தித் துன்பம் பொறுக்கும் ஆற்றல் அவர்களுக்கு இல்லை. எனவே அவர்கள் வீடுபேறு அடை தல் இல்லை" என்பர் திகம்பர சமணர். தமிகத்திலே திகம்பர சமணம்தான் நிலவியது எனினும் கழுகுமலைக் குறத்திகளைக் கருதும் போது வைராக்கியத்துடன் முயன்றால் பெண் களும் வீடுபேறு எய்துதல் கூடும் என்ற கொள்கையை மேற்கொண்டது, தமிழகத் திகம்பர சமணத்தின் சிறப்பியல்பு ஆகிறது.

விண்ணழி விமானம். மலைத்தளி. வெட்டுவான் கோயில்:-

வடக்கே பாருங்கள். பரந்த பாறைமீது விமானம் ஒன்று, விண்ணிலிருந்து நழுவி விழுந்தது போல் அல்லவா தோன்றுகிறது. இது ஒரு சிவாலயம். கிழக்குப் பார்த்தது. தற்போது கணேசர் அதிலே குடிஏறி இருக்கிறார். மற்றக் கோயில்கள் போல அத்திவாரமிட்டுச் செதுக்கிச் சீர்செய்த கற்களைப் பொருத்திக் கட்டிய கற்றளி அல்ல அது. வானத்திலிருந்து அம்மலை மீது இறங்கிய விசுவகர்மன், அதன் உச்சியிலிருந்து, படிப்படியாக அதை வெட்டிச் செதுக்கி இருநிலை விமானமாகச் செய்துமுடித்து, முகமண்டபமாகவும் கருவறையாகவும் பாறையைக் குடைந்து அம்மலையின் ஒரு பகுதியையே இப்படிக் கோயிலாக மாற்றியிருக்கிறான். இதை மலைத்தளி என்பர். வெட்டுவான் கோயில் என்பர். இதுபோலும் மலைத்தளிகள் ஏழெட்டை மகாபலிபுரத்திலே காணலாம். பல்லவர்கள் இங்கே சிறு குன்றைச் சிகரத்திலிருந்து செதுக்கி ரதம் போன்ற கோவில் ஆக்கினர். பாண்டியரோ அகண்டமான கருங்கற் பாறையை, 30 அடி ஆழம் 6 அடி அகலத்திலே அகழ்ந்து, நீண்ட சதுரமாகத் துண்டித்துத் தனிமைப்

படுத்தி, அதையே பெருங் கோயிலாக மாற்றியிருக்கின்றனர். அசுர சாதனைதான் இது. 48 அடி நீளம், 24 அடி அகலம் 30 அடி உயரம் வாய்ந்தது. கம்பீரமாய்க் காட்சிதரும் இம் மலைத்தளியை உருவாக்க எத்தனை ஆண்டுகள் கழித்தனவோ? எத்தனை ஆயிரம் பேர் வேலை செய்தனரோ? சுமார் 100 லட்சம் கனஅடி கற்களை அல்லவா அப்புறப்படுத்தியிருக் கிறார்கள். சிகரத்திலிருந்து தொடங்கி வேலை நடந்திருப்பதால் விமானம் மட்டும் முற்றுப் பெற்று இருக்கிறது. அடித்தளங்களின் வேலை முடிவுறுமல் அரை குறையில் நின்று விட்டது. எனினும் இதைக் காணும்போது, நம் உள்ளத்தில் ஏதோ ஒருவித உன்னத உணர்ச்சி மேலிடுகிறது. விம்மி மெய்சிலிர்க்கிறோம்.

மண்டபமுகப்பில் சங்கீத சம்மேளனம்:

மண்டப முகப்பிலே அலங்கார வேலை எதுவும் இன்றி, பூதவரியை மட்டும் காண்கி றோம். வரிசையிலே அமைந்த இப்பூதகணங்களுக்குச் சுருள் சுருளான சடைமுடிகளை விதவிதமாய் அமைப்பதிலே சிற்பி தனது முழுக்கற்பனையையும் செலுத்தியிருக்கிறான். ஆடல் பாடல்களிலே மெய் மறந்திருக்கும், இப்பூதங்களிலே மத்தளம் வாசிக்கும் அப்பூதத் தைப் பாருங்கள்—என்ன உற்சாகம் அதற்கு! தாளக்கட்டுத் தவறக்கூடாதே, எவ்வளவோ கவனத்துடன் அது மத்தளம் வாசிக்கிறது. அதன் வாசிப்புக்குச் சபாஷ் போடுமாப்போலச் சில பூதங்கள் தலையை ஆட்டிக் கைகளால் தாளம் போடுகின்றன. தாள லயத்துக்குத் தக அவற்றின் உடம்புகள் முன்னும் பின்னும் சொகுசாய் அசைவது வியப்பே.

புல்லாங்குழல் வாசிக்கும் அப்பூதத்தைப் பாருங்கள். புல்லாங்குழல் கீழ் உதட்டிலே பொருந்தியிருக்கும் நேர்த்தி, குழலின் துளைகளிலே விரல்கள் நடமாடும் வேகம், எல்லாமுமே பிடிப்பாக இருக்கின்றன. குழலோசைக்குத் தக மற்றொரு பூதம் முரசையோ உடுக்கையையோ முழக்குகிறது. அடுத்திருக்கும் பூதம், தன் ரசிகத் தன்மையை வெளிப் படுத்துமாப்போல, முகம் மலர்ந்திருக்கிறது. இந்தச் சங்கீத சம்மேளனத்திலே தலைதெரிக்க நடனமாடும் இந்தப் பூதங்களைப் பாருங்கள். கையிலே அவை பற்றியுள்ள பாம்பு களுக்குச் சித்திரவதைதான், அவை படம் எடுத்துச் சீறுகின்றன. வீணை வாசிக்கும் அந்தப் பூதத்தின் அருகே மற்றொன்று கட வாத்யம் வாசிக்கிறது. இதன் இடது புறம் உள்ள ஒரு பூதத்தின் தொந்தி வயிறு, அந்தக் கடத்தைத் தாங்கியிருப்பது வேடிக்கைதான். மற்றொன்று கையிலே உள்ள சிலம்பை, வலது காதருகே உயர்த்தி ஒலிக்கிறது. சிலகணம் இப்பூதங்கள் நாதோபசனையில் ஆழ்ந்திருப்பதிலே வியப்பில்லை.

விமானத்தின் சிற்றுளி வேலை:

பூதவரியை விடுத்து மேலே விமானத்தைப் பாருங்கள். எட்டாம் நூற்றாண்டின் பாண்டியர் சிற்பக்கலைக்கு இது சிறந்த உதாரணமாகிறது. சிகரத்திலே தூபி காணப்பட வில்லை. கபோதத்தின் மேலே சதுர தளத்தைச் சுற்றிலும் யாளவர். இதன் மீது எண்கோண மான கிரீடம். கிரீவேதத்தின் சைத்திய பஞ்சாங்கங்களைக் கீர்த்தி முகங்களும் சிங்க முகங் களும் மாறி மாறி அலங்கரித்திருக்கின்றன. சிங்கமுகங்களினின்றும் பூங்கொடிகள் மலர்ந்து, இரு மருங்கிலுமுள்ள மகரங்களை இணைத்திருப்பது, விநோதமான சித்திர வேலைப்பாடே. பஞ்சரங்களின் வளைவுகளிலிருந்து சிகரம் வரை வெற்றிடங்களிலே தாமரைகளையும் மலர்ச்

சிரங்களையும் படர விட்டிருப்பது புது மாதிரியாய்ப் பொலிகிறது. சிற்ப நூல்களின் அற்பு தங்களான சித்ர வேலைகள் மலிந்து, தமிழ் நாட்டிலே இதைவிட அதிக வேலைத்திறன் வாய்ந்த சிற்றுளி வேலை வேறு எங்குமே இல்லை.

விமான மேல் தளத்தில்:

கிழக்கே உமாசகிதர்
தெற்கே தட்சிணு மூர்த்தி
மேற்கே நரசிம்மன்
வடக்கே பிரமன்—தோன்றுகின்றனர்.

கிழக்கே பார்த்து, சுகாசனத்து அமர்ந்திருக்கும் உமாசகிதர் இக்கோயில் சிவாலயம் என்பதைத் தெரிவிக்கிறார். சிவனுரின், நான்கு கரங்களிலும் ஒரு கையில் பரசு, மற்றக் கையில் மான், கீழ் வலது கை காணப்படவில்லை. இடது கை மடியிலே சரிந்திருக்கிறது. சடாபாரம், முகத்தின் புன்முறுவலைப் பொலிவுறுத்துகிறது. குண்டலங்களின் கனத்தால் தொங்காதுகள் வார்ந்து வடிந்து தொங்குகின்றன. கழுத்திலே ருத்ராக்க மாலை கவர்ச்சியாய்த் தோன்றுகிறது. மார்பிலே தவழும் பூணூலின் முடிச்சு, புதுமாதிரியாய்த் தெரிகிறது. உதரபந்தனம் எடுப்பாக இருக்கிறது. வாகுவலயம், நாகவடிவமானது. சிறுத்த இடை பருத்த தனபாரத்துடன் உமையின் தோற்றத்திலே பெண்மை நலம் கனிகிறது.

தெற்கே தட்சிணுமூர்த்தி, விநோதமாய்த் தோன்றுகிறார். வலது கால் மடிந்து ஆசனத்திலே கிடக்க, இடதுகால் சரிந்து முயலகன்மீது பதிந்திருக்கிறது. சடாமண்டலம், முக மலர்ச்சியை அழகு செய்கிறது. மேலிரு கரங்களிலும் பரசும் மானும் தரித்திருக்கிறார். மடியிலே மிருதங்கம் காணப்படுகிறது வேடிக்கைதான். இடது கையால் அதை அணைத்து, வலது கைவிரல்களால் பையத்தட்டி, அதை வாசிக்கும் பாவனை மிகவும் நேர்த்தியாய் இருக்கிறது. வேயுறுதோளி பங்கனுகவும் விடம் உண்ட கண்டனுகவும் விளங்கும் சிவனுர், மிக நல்ல வீணை தடவி இன்னிசை பொழிவதைக் கேட்டிருக்கிறோம். இவரை வீணுதர தட்சிணுமூர்த்தி என்போம். கழுகுமலையிலே மிருதங்கம் வாசிக்கும் இம்மூர்த்தி ஓர் அபூர்வப் படைப்பே.

மேற்கே பார்த்துத்தோன்றும் நரசிம்மன், வலதுகால் ஆசனத்து மடிந்திருக்க இடது காலைப் பத்மத்தின் மீது ஊன்றியிருக்கிறார். மேலிருகரங்களிலும் சங்கு சக்கரம் தாங்கியிருக்கிறார். பாவிகளை எச்சரிக்கும் வண்ணம், கீழ் வலதுகையில் கர்ஜனை முத்திரை தரித்திருக்கிறார். இடது கையைத் தொடைமீது வைத்திருக்கிறார். அங்காந்தவாய், அச்சுறுத்துகிறது. பூணூல் ஆரம் வாகுவலயம் கடி சூத்திரம் அனைத்துமே எடுப்பாக இருக்கின்றன.

வடக்கே பார்த்துப் பிரமன் பதுமாசனத்தில் அமர்ந்திருக்கிறான். வஸ்திரத்தைப் பூணூலாகத் தரித்திருக்கிறார். மேலிருகரங்களிலும் கட்ச மாலை கமண்டலம் தாங்கி வலது கீழ்க்கையில் அபய முத்திரை தரித்து, இடது கீழ்க் கையிலே ஏடு ஏந்தியிருக்கிறார். சடைமுடி ஒரே சீராகத் தோன்றுகிறது. முறுவலிக்கும் முகபாவனை, கவர்ச்சியாக இருக்கிறது. ஆசனமாகிய பதுமத்தை இருயானைகள் தாங்கி நிற்கின்றன.

இந்த மேல் தளத்தின் நான்கு மூலைகளிலும் நந்திகள் நான்கு மண்டியிட்டுப்படுத்த கோலத்திலே அனுயாசமாய்க் கிரிவத்தைத் தாங்கியிருக்கின்றன. பின்னங்கால்களிடையே வாலைச் செருகி வைத்திருக்கின்றன. கொம்புகள் குறுகிருயிக்கின்றன. திமில் ஏடுப்பாய் இருக்கிறது. பெருமிதமாய்த் தலைநிமிர்ந்து பார்க்கும் அந்நந்திகள் உல்லாசமாய் ஓய்வுகொள்ளும் பாவனையில் தோன்றுகின்றன. முகத்திலே சிலிர்ப்பு, மூக்கிலே உயிர்ப்பு. கண்களிலே குறு குறுப்பு–இப்படி ஒவ்வோர் அவயவமும் துடிப்புடன் தோன்றுவது வியப்பே.

இதன் கீழ் யானை வரி, நான்கு மூலைகளிலும் யானைகள், யானைகளின் தும்பிக்கை சுருண்டிருக்கிறது.

இத்தளத்தைப் பூதகணங்கள் தாங்கி நிற்கின்றன. ஒரு பூதம் தன் முழுப் பலங் கொண்டு இரு கைகளாலும் கிரிவத்தைத தாங்கும் பாவனையில் நிற்கிறது. வேரொன்று அதற்கு உதவி செய்கிறது. மற்ற பூதங்கள் களியாட்டங்களிலே திளைத்திருக்க, சில பல்லிளித்துக்கொண்டிருப்பது வேடிக்கைதான்.

பூதங்களிடையே தாடி வளர்ந்திருக்கும் குள்ளமான ரிஷிகள் ஏதோ சிந்தனையில் ஆழ்ந்திருக்கின்றனர். இவர்களிலே ஒருவர் அகத்தியர் ஆகலாம். சடைதாடி வளர்த்து, ருத்ராக்க மாலையால் ஆகிய பூணூல் தரித்து, உதரபந்தமாக உத்தரியத்தை அணிந்திருக்கிறார். இந்த ரிஷிகளின் குழுவிலே அந்தக் குரங்குகளைக் கவனியுங்கள். கால்களை ஆட்டி அசைத்துக்கொண்டு, காதோடு காதாய்த் தமக்குள் ஏதோ ரகசியம் பேசிக்கொள்கின்றன.

சைத்திய சாளரத்தின் கீழ்க்கோஷ்டங்களில் ரூப சுந்தரிகள், "சொல்நலங்கடந்த காமச்சுவையைப் பல் உருவமாக்கி, இன்னலம் தெரிய வல்லார் எழுதியது" என்ன நிற்கிறார்கள். இவர்களிலே ஒருத்தி, மேல் மாடத்திலே நிற்கும் கந்தர்வனுடன் கண்ணுமூச்சி விளையாடுகிறாள். மற்றொருத்தி, வலது கையிலே ஆடி ஏந்தி, இடதுகையை ஊன்றி ஒல்கிச் சாய்ந்து ஒசிந்த நோக்கோடும் முகிழ்த்த முலையோடும் நிற்கிறாள். இவளுடைய மேல் தாவணி சரிந்து நழுவத் "தன்னையும் தாங்கலாதாள் துகில் ஒன்றும் தாங்கி நிற்க" அரும்பாடு படுகிறாள். வேரொருத்தி, தாமரைப் பூவைத்தண்டுடன் பிடித்துக்கொண்டு நாணிக்கோணி நிற்கிறாள். இன்னொருத்தி அப்போதுதான் தலைமுழுகி. கூந்தலை ஒரு கையால் தாங்கிக் கோதி உலர்த்துகிறாள். மற்றொரு கை நழுவும் ஆடையை அணைத்திருக்கிறது. இந்த அழகிகள் ஒரு சில ஆபரணங்களையே அணிந்திருப்பது நேர்த்தியாக இருக்கிறது. இவர்கள் பூணூலைத் தரித்திருப்பது விந்தையாகத் தோன்றுகிறது. இடுப்புக்கு மேலாக இவர்களைக் காட்டியிருப்பது இவர்களை நாம் கீழ் நின்று பார்ப்பதால் போலும்.

விமானத்தின் கீழ்த்தளத்திலே அதன் மூலைகளில் காணக்கூடும், மையத்திலே சாலையும் — இவ்விரண்டுக்கும் இடையே சைத்திய பஞ்சரமும், பஞ்சரங்களின் சிகரங்களிலும் வளைவுகளிலும் எல்லாமுமே செய்நேர்த்தி வாய்ந்தவைதாம். கபோதமும், சிங்கம் மகரம் பூங்கொடிகள் போன்ற வேலைப்பாடு நிரம்பியது. சைத்திய பஞ்சரங்களின் மத்தியில் உள்ள கோஷ்டங்களிலே

தெற்கே தட்சிணாமூர்த்தி
மேற்கே விஷ்ணு
வடக்கே விஷபாகரணர் — தோன்றுகின்றனர்.

தட்சிணாமூர்த்தி சடாமகுடம் தரித்து இடது கையைத் தொடைமீது ஊன்றியிருக்கிறார். வலது கால் ஆசனத்திலே மடிந்து கிடக்க, இடது கால் சரிந்து தொங்குகிறது. மார்பில் பூணூலும் தோள்மீது மடிந்த வஸ்திரமும் தோன்றுகின்றன. கடிசூத்ரம் ஆரம் கேயூரம் முதலியவை நுணுக்கமான வேலைப்பாடு கொண்டவை. வாகுவலயம் எளிமையானது. இடது காதிலே தோடு, வலது காதிலே தொங்கமாத்திரம் தெரிகிறது. முறுவலித்த முகம் கவர்ச்சியாய் இருக்கிறது. கீழ் வலது கரம் ஒடிந்திருக்கிறது. மேல் வலது கரம் மான் ஏந்தியிருக்கிறது. கோஷ்டத்தின் கீழே குள்ளர்கள் கைகோத்து வியந்து மேலே நோக்குகின்றனர். இனந்தெரியாது மேற்கே இருந்தவர்கள் இருக்கின்றனர். கோஷ்டத்திலே விஷ்ணு, மகாராஜா போல வீற்றிருக்கிறார். வலது கால் ஆசனத்திலே மடிந்திருக்க இடது கால் பதுமத்தின் மீது ஊன்றியிருக்கிறது. கிரீடம் தரித்திருக்கிறார். வலது கீழ்க்கை ஒடிந்திருக்கிறது. இடது கை ஊன்றியிருக்கிறார். மேல் கரங்கள், சங்கு சக்கரம் தரித்திருக்கின்றன. மார்பிலே பூணூல் தரித்திருக்கிறார். உதர பந்தம், மணிகண்டி ஆரம், மகரகேயூரம்— எல்லாமுமே வேலைப்பாடு மிகுந்தவை. முதுகுப் புறம் திண்டு வைக்கப்பட்டிருக்கிறது. கோஷ்டத்தின் மீது விநோதமான சித்திர வேலைப் பாடுகள் நிரம்பியிருக்கின்றன. சூரிய சந்திரரும் தோன்றுகின்றனர்.

வடக்கே சிவனார், விஷ்பாகரண கோலத்தில் அமர்ந்திருக்கின்றார். ஒரு காதிலே மட்டும் தோடு இலங்குகிறது. ஜடை கொண்டை போல் முடியப்பட்டு அர்த்தநாரியை நினைவூட்டுகிறது. வஸ்திரத்தை யக்நோப வீதமாகத் தரித்திருக்கிறார். இடது கையிலே உள்ள அம்பு, திரிபுரசங்காரத்தை ஞாபகப்படுத்துகிறது. வலது கையிலே நாகம் விஷபா சுரணர் என்ற இவரை இனங்காட்டுகிறது. திரிபுராதியர்க்கும் ஆலகால விஷத்திற்கும் சிவ பக்தர்கள் அஞ்சுவதில்லை என்பதால், அங்கே சிவகணங்கள் அலட்சியமாக இருக்கின்றனர்.

திறந்த வெளியிலே காற்றும் மழையும் கடும் வெயிலும் முழுநிலவும் புதுப்புது அணிகளை அணிவித்து மகிழ்விக்கும் மாபெரும் படைப்பாகிய கழுகுமலைக் கலைக்கூடம் கல்லில் இழைத்த காவியம் போல் அல்லவா தோன்றுகிறது. தந்தையும் மகனும் சேர்ந்து உருவாக்கியது இக்கலைக்கூடம் என்பது செவிவழிச் செய்தி. மலையடிவாரத்தில் தந்தை பாறையைக் குடைந்து குடைந்து குகைக் கோயில் செய்துகொண்டிருந்தபோது மகனே தந்தை அறியாமல் மலையை உச்சியிலிருந்து வெட்டி வந்து விமானத்தை உருவாக்கி முடித்துக் கருவறை அர்த்த மண்டபங்களைக் குடைந்துகொண்டிருந்தானும். யாது காரணமோ மண்டபவேலை முற்றுப் பெறவில்லை. நுட்பமான சிற்றுளி வேலைகளைச் செய்வதிலும், மானிட மிருக இயல்புகளைக் கூர்ந்து கவனித்துப் புலப்படுத்தியிருப்பதிலும் கழுகுமலைச் சிற்பிகள் தேர்ந்தவர்கள். அவர்கள் படைத்துள்ள சிங்கங்கள் மகரங்கள் முதலியவை கலை மரபை அவர்கள் மதித்துப் போற்றியிருப்பதற்கு எடுத்துக்காட்டு. தெய்வ வடிவங்களில் முகபாவங்களுக்கு இசைந்த வகையிலே பூதகணங்களின் மனநிலைகளை அவர்கள் புலப்படுத்தியிருக்கும் விதம் அதிசயமானது. நந்திகள், குரங்குகள் முதலிய மிருக இயல்பை அவர்கள் கூர்ந்து கவனித்திருப்ப

தற்குச் சான்று. தொந்தி வயிறு குறுந்தாள் குறுங்கைப் பூதங்கள், அவர்களுடைய நகைச் சுவைக்கு உதாரணம். தாமரை தாங்கியோ, கை ஊன்றியோ நழுவும் தாவணியை அணைத்தோ கூந்தலை உலர்த்தும் ரூபசுந்தரிகளை உருவாக்கி இடக்கரடக்கல் எதுவுமின்றிப் பெண்மையைப் பிரகாசிக்கச் செய்திருப்பது, கழுகுமலைச் சிற்பிகள் புதிய மாதிரிகளைக் கற்பனை செய்யவல்லவர் என்பதற்குச் சான்று கூறுகிறது. சிற்பத்தின் முன் நின்று அதைக் கூர்ந்து நோக்கும்போது, அதைப் படைத்த சிற்பியின் அனுபவத்திலே லவலேசமாவது நாமும் அடையவேண்டும். இந்த அனுபூதி தங்குவதிலேதான் சிற்பக்கலையின் வெற்றியிருக்கிறது. எத்தனையோ நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்த கழுகுமலைச் சிற்பிகள் தங்கள் படைப்பின் மூலம் இன்றும் நம்மோடு பேசுகின்றனர். நம் கற்பனையைத் தூண்டுகிறார்கள்; நம்மோடு விளையாடுகிறார்கள். இவர்கள் வாழ்க!

" பாரதம் முழுவதும் ஒன்று என்ற முறையில் கொள்கைகள் வகுக்கப்படுகின்ற காரணத்தினால் இந்த மாற்றங்கள் வருகின்றனவே ஒழிய, மத்திய சர்க்கார் மேலதிகாரமுள்ளவர்கள் மாகாண சர்க்கார் அதிகாரம் இல்லாதவர்கள் என்ற காரணத்தால் இம்மாதிரி செய்யப்படுகிறது என்று கூறுவது எந்த வகையில் பொருந்தும் என்று நான் கேட்கிறேன்."

சட்டசபை பேச்சு—(2—3—1963)

* * * * *

" நல்ல முறையில் விவசாயம் நடப்பதற்குக் கூட்டுறவு முறையில் விவசாயத்தை ஊக்குவிக்க வேண்டும்."

சட்டசபைப் பேச்சு—(2—3—1963)

* * * * *

" விவசாயத்தை கமர்ஷியல் முறையிலும் கொண்டு வரவேண்டும் **Large scale farming by joint stock companies** என்ற முறையிலும் ஏற்படுத்த வேண்டும் "

சட்டசபைப் பேச்சு—(2—3—1963)

ஸ்ரீமஹாகுரப்யோ நம!

வீரபாஹுரிதிக்யாத: தேவப்ராம்மணபூஜக:

மிருத்யுஞ்ஜயப்ரஸாதேசதாயு: பிராப்நுயாத் த்ருவம்

பாரத மாதாவின் தவப்புதல்வர்

வடகுடி என். பாபு தீக்ஷிதர்

ஸ்ரீய:பதியான பகவனுல் உண்டுபண்ணப்பட்ட இந்தப் ப்ரபஞ்சத்தில் மனுஷ்ய ஜன்மா கிடைக்க வேண்டுமேயானுல் நிரம்பப் புண்யம் செய்திருக்க வேண்டும். அதிலும் ஒரு விதமான குறைவும் இல்லாமல் மனிதப் பிறவி கிடைக்கவேண்டுமேயானுல் ஸ்ரீபகவானின் பரிபூர்ண கிருபையினுல்தான் கிடைக்கும். அதுவும் ஹிந்து மதத்தில் ஜன்மம் கிடைப்பது ரொம்பவும் புண்யவசத்தினுல்தான் கிடைக்க வேண்டும். ஏனென்றுல் ஹிந்து மதத்திற்கு ஆதாரமாக வேதத்தைச் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த வேதமானது பகவானின் மூச்சுக் காற்றுகச் சாஸ்திரங்கள் தெரிவிக்கின்றன. 'யஸ்யநிச்வஸிதம்வேதார: ॥ என்று கூறப்பட்டிருக்கிறது.

வேதத்தில் மனிதனுகப் பிறந்தவன் ஸௌகர்யமாக இருப்பதற்குப் பல வழிகள் கூறப்பட்டிருக்கின்றன. வேள்விகள் செய்து ஸௌகர்யத்தை அடையலாம். தெய்வத்தை வழிபடுவதனுலும், மந்தரஜபம் செய்வதனுலும், தானம், தர்மம் செய்வதனுலும், ஸத்யம் பேசுவதனுலும், பிறருக்கு ஹிம்ஸை செய்யாமல் இருப்பதனுலும், ஸ்ரீபகவானுடைய அனுக்ரஹம் பரிபூரணமாய்க் கிடைக்கிறது.

ஒருவனுக்கு ஸ்ரீபகவானின் அனுக்ரஹம் கிடைத்துவிட்டதேயானுல் உலகத்தில் அவனுக்கு நினைத்ததெல்லாம் கிடைக்கும் என்பதில் ஸந்தேகம் இல்லை. இதையே ஸ்ரீமத் பாகவதத்தில் ஸ்ரீ சுகாச்சார்யாள் "கிமலப்யம் பகவதிப்ரஸன்னே ஸ்ரீநிகேதனே ॥" என்று கூறியிருக்கிறார்.

ப்ரஹ்லாதனிடத்தில் தகப்பனரான ஹிரண்யகசிபு, நீ படித்த பாடத்திற்குள் உயர்வான பாடம் ஏதுவென்று கேட்டதற்கு, ப்ரஹ்லாதன் "மனிதனுகப் பிறந்தவன் பகவானை பூஜிக்க வேண்டும், அதற்கு ஒன்பது வழிகள் உண்டு" என்று கூறியிருக்கிறார். அதில் பாதஸேவனம் என்று ஒரு வழியைக் கூறினர். பாதஸேவனம் என்பதற்கு வேதத்தில் "பாதோஸ்ய விச்வாபூதானி" என்று பொருள் கூறியிருக்கிறது. அதன் பொருள் என்னவென்றுல் ஒரு மனிதன் ப்ரதிப்பிரயோஜனத்தை எதிர்பார்க்காமல் தேச ஸேவை செய்வதே பகவானுக்குச் செய்யும் பூஜையாகும். அதனுல் அவன் குடும்பமும் அவன் வாழும் தேசமும் ஒரு விதமான குறைவும் இல்லாமல் ஸௌகர்யமாயப் பல்லாண்டு காலம் இருக்கும்.

பிரதிப்பிரயோஜனத்தை எதிர்பார்க்காமல் தேச ஸேவை செய்கிறவர் ஒருவர் உண்டு என்றுல் ஸ்ரீமான் A. P. C. வீரபாஹுப் பிள்ளை அவர்கள்தாம். ஸ்ரீமான் பிள்ளை அவர்கள் நல்ல குடும்பத்தில் பிறந்து தெய்வவழிபாட்டுடன் இருந்து கொண்டு பல மஹான்களின் அனுக்ரஹத்திற்கும் பாத்திரராக ஆகிப் பல தர்மகாரியங்களை முன்னின்று நடத்திக்கொண்டும் தாளத்தில் உயர்வரன வித்யாதானத்தையும் செய்து கொண்டிருக்கின்றர். எல்லாவற்றிற்கும் மேலாகக் கலியுக வரதனனு ஸ்ரீகுருவாயூரப்பனின் மறு அவதாரமாக விளங்கியவரும் எனது பெரிய தகப்பனுருமான சேங்காலிபுரம பிரும்மஸ்ரீ அனந்தராமதீக்ஷிதரின் பரிபூர்ண அனுக்ரஹத்தையும் அன்பையும் பெற்றவர் ஸ்ரீமான் A.P.C. வீரபாகு பிள்ளை அவர்கள். ஸ்ரீமான் பிள்ளை அவர்களுக்கு அன்பர்களும் அவர்களின் குடும்பத்தார்களும் சேர்ந்து ஷஷ்டியப்தபூர்த்திசாந்தி (மணிவிழா) நடத்தி வைக்கிறர்கள். மங்களமாய் ஷஷ்டியப்த பூர்த்திசாந்தி நடந்து ஒருவிதக் குறைவும் இல்லாமல் ஸௌகர்யமாக இருந்துகொண்டு இதே மாதிரி தம்பதிகளாய் சதாபிஷேகம் செய்து கொண்டு பலவருஷங்கள் மார்கண்டேயஸ்வாமி மாதிரி தீர்காயுஸ்ஸுடன் இருக்கவேண்டும் என்று கௌரிஸமேத அமிருத மிருத்யுஞ்ஜயனை, ஸ்ரீபரமேச்வரனை, மனப்பூர்வமாகப் பிரார்த்திக்கிறேன். ஸ்ரீமான் பிள்ளைவாள் அவர்களுக்கும் அவர்களின் குமாரர்களுக்கும் என்னிடத்திலும் எங்கள் குடும்பத்தாரிடத்திலும் அளவு கடந்த விஸ்வாஸம் உண்டு. அதை என்றும் நாங்கள் மறக்கமுடியாது. ஸ்ரீமான் பிள்ளைவாள் அவர்களுக்கு வேதம் அத்யயனம் செய்து யாகம் செய்து உலக நன்மையின் பொருட்டுத் தினமும் இரு வேளையும் அக்நிஹோத்திரம் செய்பவர்களிடத்தில் நிரம்ப விஸ்வாஸமும் பக்தியும் உண்டு.

மேலும் ஸ்ரீமான் பிள்ளைவாள் அவர்கள் தினமும் பூஜை செய்து மனதுருகித் திருப்புகழ் பாடி முருகனை வழிபடும் பொழுது ஸ்ரீவள்ளி தேவஸேனையுடன் முருகன் கேட்டு ரொம்பவும் சந்தோஷப்படுகிறர். ஸ்ரீமான் பிள்ளைவாள் அவர்களும் அவர்கள் குடும்பமும் மேன்மேலும் ஸகலவிதமான க்ஷேமங்களுடன் விளங்க வேண்டு மென்று எனது இஷ்ட தெய்வமான ஸ்ரீஸீதா ராமச்சந்திரனைப் பிரார்த்திக்கிறேன்.

"தொழில் பொருளாதாரத்தை நம்பியிருக்கும் நாடுகளில் உள்ள அளவு கூட நம் நாட்டில் விவசாய உற்பத்திப் பெருக்கம் ஏற்படவில்லை"

சட்டசபைப் பேச்சு—(28—3—1957)

* * * *

"மீன் உற்பத்தியானது எந்த அளவுக்கு உற்சாகமாக விரிவடைகிறதோ அந்த அளவுக்கு நம்முடைய விவசாயப் பொருளாதாரமும் சீர் அடையும் என்ற நம்பிக்கையுடையவர்களில் நானும் ஒருவன்"

சட்டசபைப் பேச்சு—(28—3—1958)

எளிமை எனும் ஒரு ஸதாசாரம்

டி. எஸ். பாலகிருஷ்ண சாஸ்திரி

பாரதநாட்டின் பண்டையப் பண்பாடு எளிமையே. புறத் தோற்றத்திலும், உள்ளத்திலும் எளிமையைக் கைக்கொண்டிருப்பதே சுகவாழ்வின் தத்துவமாகும். நாடு ஒரு காலத்தில் சீரும் சிறப்புமாக இருந்தபோதும், மாதம் மும்மாரி பெய்து, கவிகள் வாயார வர்ணனை செய்துகாட்டிய நிலவளம், நீர்வளம் பெற்றிருந்த காலத்திலும் அவரவர் தம் வாழ்நாட்களைச் சிக்கனமாகவும், ஆடம்பரமின்றியும், தேவைக்குமேல் விரும்பாமல் வாழ்ந்தனர். ஒரு சிலர் ஆடம்பரம் நிலவப் பெருவாழ்வு வாழ்ந்தனர். பணம் படைத்ததால் மாத்திரம் அன்றி, தாங்கள் வகித்த பதவிகளாலும் அந்தத் தகுதியும் நிலைமையும் அவர்களுக்கு ஏற்பனவாகி இருந்தன. பிறர் அதில் குற்றமோ, பொறுமையோ கொண்டதில்லை.

நம் முன்னோர்கள் தேடி அலைந்தது கல்வி நலனையும், (உபசாந்தம் எனும்) தன்மைக்கு ஒழுக்கமுமேயாகும். இதையே பிறர்க்குப் போதித்து வந்தனர். கூழுக்கும் கருஞ்சிக்கும் பாடின ஒரு கிழவி (ஔவை பிராட்டி)யைக் கண்டு மன்னரும் அஞ்சினர், அடிபணிந்தனர்.

ஸத்குரு ஸ்ரீதியாகராஜ ஸ்வாமிகளை ஒரு சமயம் தஞ்சை மன்னன் சரபோஜி தன் சபைக்கு ஸ்ரீஸ்வாமிகளின் குருமூலமாக அழைத்ததும், குருவின் ஆணை என்று ஸ்ரீ ஸ்வாமிகள் அங்குச்சென்று கானம் செய்தாராம். அரசன் மகிழ்ந்து பீதாம்பரம், தோடா, சால்வை, மகாசண்டி இவைகளை ஸ்ரீ ஸ்வாமிகளுக்குக் கொடுத்தாராம். அதை ஸ்ரீ ஸ்வாமிகள் ஏற்று அன்புடன் தம் எதிரே அமர்ந்திருக்கும் தம்முடைய குருநாதர் திருவடியில் அணைத்தையும் வைத்துவிட்டு, திருவையாறு திரும்பினராம்.

இதில் ஒரு கருத்து அறியற்பாலது. அன்று அரசன் கௌரவித்து அளித்த ஸன்மானங்களை அவர் ஏற்றிருந்தாலும், அது அவருக்குப் புகழ்தான். எல்லோரும் அதை அவருக்கு ஏற்றது என்று விரும்பி வாழ்த்தியிருந்தாலும் இன்று இந்தத் தோடாவும் சன்மானங்களும் மறைந்திருக்கும். ஆனால் அவர் அளித்துவிட்ட இசையும், மொழியும், போதமும் புது மெருகுடன் எக்காலமும் யாவர்க்கும் பயன்படுவனவாகும். ஸ்ரீ ஸ்வாமிகள் காலத்தில் விளங்கின, பொப்பிலிகேசவய்யா, ஷட்கலா கோவிந்த மாரன், காட்டூர் கிருஷ்ணய்யர் போன்ற மகாவித்வான்கள் கர்நாடக இசைக்குப் பல பணிகள் புரிந்துள்ளனர். எனினும், ஸ்ரீதியாகராச ஸ்வாமிகளின் பாடல்கள் அமரத்வம் அடைந்துள்ளன. அதற்கு முக்கிய காரணம் இரண்டு. தான் உலகுக்குச் சேவை செய்கிறோம் என்ற எண்ணமே இல்லாதவர். தாம் அடைந்த இசை இன்பத்தையே, தெய்வ சந்நிதியாகக் கண்டு, அந்த நாதப்பெருக்கின் அலைவடிவங்களையே ஸ்ரீ ராமபிரானாக, ஸ்ரீ சிவபிரானாக, ஸ்ரீ த்ரிபுரசுந்தரியாகக்கொண்டு, அதில்

தினைத்துப்போயினர். ஆதலின், அவருக்கு மற்றைய வெளிப்பகட்டுகளும், போலி ஆசாரங்களும் பிடித்தமில்லாமல், அதை அறவே ஒழித்துவிடவேண்டுமென்ற கொள்கையை வற்புறுத்தியுள்ளார். "பரிபூர்ணகாமா" என்ற பூர்வகல்யாணி கிருதியில்,

"ஈகலினனு ஸரிருஞ்சின
ஈன ஜாதி மர்த்புல"

என்று ஒரு அடி வருகிறது. அவர் சொல்லுகிற ஈன சாதி இவர்கள்தாமே. ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகள் அஞ்சியதும் இந்த வேகம் தமக்கு வரக்கூடாதே என்றபடி தினமும் தம் இஷ்ட தெய்வமான ஸ்ரீ ராமபிரானே வேண்டியிருந்தார். உண்மையில் அவர் செல்வச் சீமான். செல்வம் அவரடியில் காத்திருந்தது. அவரோ அதைப் பார்த்ததில்லை. அவர் பார்த்திருந்தவை கீழ்க்கண்ட 'மூகாரி' கிருதியில் அவர் சொன்னவை.

ப்ரேம பக்தி ஸஹஜ வாத்ஸல்யமு
ஸ்ரீமத் ரமாவர கடாக்ஷமு
நேம நிஷ்ட யசோதன மொஸங்கனே
நேர்ப்பு கல்கு தியாக ராஜஹினுத—

(ஸங்கீத சாஸ்த்ர ஞானமு ஸாருப்ய ஸொக்யதமே மனன)

ஸங்கீத சாஸ்த்ரத்தை (உண்மையான அனுபவ) உணர்வுடன் அறிபவர், தெய்வீகநிலை என்ற ஸங்கீதத்தில் தன்மயமாகிவிடும் சுகத்தை எய்துவர். அதுவுமன்றி, அன்புடன் கூடின இறைவன் பக்தி, நல்லோர்கள் நேசம், ஸ்ரீ ரமாவரனுடை, ஸ்ரீ ராமபிரானின் கடைக்கண் திருவருள், இவைகளையும் பெறுவர். தவம்செய்து அடையும் நிஷ்டை என்ற பேரமைதி, ஸமாதி நிலையையும் இந்தச் சங்கீதம் கொடுக்கும். புகழும் பொருளும் பெற்றிடுவார்.

ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகள் எளிய வாழ்க்கையைத்தாமே தமக்கு வகுத்துக்கொள்ளவில்லை. அது அவருக்கு இயல்பாக அமைந்துவிட்டது. அவ்வியல்பு அவருக்கேற்பட்ட உண்மை இயல்பு உயிரைவிட உயர்ந்ததாக ஆகியது. வேறு வாழ்க்கை முறையில் தமமை மாற்றிக்கொள்ள இயலாதவர். இதுவே 'ஸதாசாரத்திற்கு' அடிப்படை. கீழ்க்கண்ட அவர் மொழி,

ஸத்யம்பு நித்யம்பு ஸமரமுன
ஸௌரியம்பு
அத்யந்த ரூபம்பு அமித பலமு
நித்யோத்ஸவம்புகல நீகுருனு
தாஸுடை ள,
ததியம்பு பல்கு ஸ்ரீ தியாகராஜ ஸனித (நீவாடநேகான்)

இக்கருத்தை வெளிப்படுத்துகிறது. இதே நிலையில் மகாத்மா காந்தி விளங்கினர். ஸ்ரீ ஸ்வாமிகளுக்குச் சங்கீதம் கருவியானது. காந்தி மகானுக்குத் தேச பக்தியும், ஏழைகளுக்குச் செய்யும் சேவையும், அவரை இந்த ஸதாசாரத்தில் சேர்த்துவிட்டது. 'ராம' நாமம் அவருக்கேற்ற ஆத்ம சக்தி. மேலே கொடுத்த சாரங்கராக கீர்த்தனையின் விளக்கமாக வாழ்ந்தவர் காந்திபடிகள்.

ஆதலின் எளிமை என்பது உள்ளத்தால் பெறப்படும் உண்மை ஸதாசாரம். இது எவரிடம் விளங்குமோ அவரே செல்வச் சீமான். வாழ்வின் நற்பயன் பெற்றவர். வெகு சமீப காலமாகப் பழகின நான் A. P. C. வீரபாகு அவர்களிடம் இந்த ஸதாசாரத்தைக் கண்டேன். ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகளுக்கு இசையும் காந்தி மகானுக்குத் தீன சேவையும், கருவிகளாக அவர்களே உயர்த்தியது போல், நமது அண்ணல் திரு. வீரபாகு அவர்களுக்குக் கல்விநலம் (வித்யாதானம்) பெருகவும், நாடு செழித்திடவும், உள் அவா என்றும் சுடர்விட்டு ஒளிர்கிறது.

அவருடைய மணிவிழா நன்னாளில் அவருடைய இவ்வுயர்ந்த ஸதாசாரம், மணியும் ஒளியும் போல் எஞ்ஞான்றும் பிரகாசித்துக்கொண்டே இருக்கும். அவருக்குத் திடகாத்திரமும், நீண்ட ஆயுளும் நல்கிடுமாறு எல்லாம் வல்ல இறைவனை வணங்குகிறேன்.

— நன்றி—

"போக்குவரத்துச் சாதனங்களை விஸ்தரித்தால்தான் உண்மையிலேயே நம் நாடு தொழிலாக்கம் பெறமுடியும். போக்குவரத்துத்தான் தொழிலாக்கம் கொடுக்கக்கூடிய சாதனம்"

(சட்டசபைப் பேச்சு—(4—5—1957)

* * * *

"வீரபரம்பரையைச் சேர்ந்த கட்டபொம்மன் தோன்றியது பாஞ்சாலங்குறிச்சிப் பிரதேசம். நம் நாட்டிற்கு விடுதலை வாங்கிக்கொடுத்த பிரதேசம் அது. அந்தப் பிரதேசத்தின் முன்னேற்றத் திற்கு ஆவன செய்யவேண்டும்"

சட்டசபைப் பேச்சு—(4—5—1957)

அறிவுச் செல்வம்

கவிஞர் மீ. ப. சோமு
(சென்னை வானொலி நிலையம்)

1) கையின் அறிவு செயலாகிக்
காணும் வண்ணம் உருவாகி
மையில் மலர்ந்த வடிவாகி
மாண்புப் படங்கள் பலவாகி
வையம் வியந்த கலையாகி
வானம் உயர்ந்த புகழாகி
ஐய, இதுவே ஓவியமாய்
அமைந்த அறிவை உலகறியும்!

2) கல்லின் வடித்த கவிதைகளாம்
கருத்தை மயக்கும் சிற்பங்கள்,
சொல்லில் எழுந்த ஓவியமாம்
சுடரும் ஒண்மைக் காவியங்கள்,
கல்லும் சொல்லும் காசினியில்
காலக் கணக்கின் கணக்கினையே
வெல்லும் கலையாய் நிலைநிற்கும்
விந்தை அறிவை உலகறியும்!

3) பண்ணும் பாவும் இழைகூடிப்
பண்பார் குரல்கள் இசைபாடும்!
கண்ணும் கையும் கருத்தொன்றிக்
கம்பி மொழியில் யாழ்பேசும்!
எண்ணும் உணர்வும் இணைகலந்தே
எழில்மே னியிலே நடமாடும்!
நண்ணும் கவினுர் கலைகளெலாம்
நாடும் உலகும் நன்கறியும்!

4) குலத்தைப் பேணும் மருந்தறிவும்
குடும்பம் பேணும் மனையறிவும்
புலன்கள் அளந்த திசையெல்லாம்
புகுந்து புதுமை புதுமைகளாய்
நிலத்தின் மீதும் விண்மீதும்
நித்தம் படைக்கும் விஞ்ஞானம்
பலத்தை வளர்க்கும் பகுத்தறிவுப்
பாங்கை உலகம் நன்கறியும்!

5) ஐந்து வாசல் வழியேகி
அறியும் இந்த அறிவெல்லாம்
உய்ந்து கனிய உள்ளத்தின்
உள்ளே புகுந்து காண்கின்ற
அந்த அறிவை யாரறிவார்?
ஆன்ம நேய ஒருமையெனும்
சிந்தை அறிவைப் பேரறிவைச்
சித்தர் தந்த தமிழறியும்!

"நம்முடைய பஞ்சாயத்து முறைதான் மற்ற நாடுகளுக்குப் போய் இருக்கிறது என்று சொல்லலாம். பஞ்சாயத்து என்று சொல்லப்படுகிற ஐந்து பேர் கொண்ட குழு என்று புராதனமாகவே சோழன் காலத்திலிருந்து வந்திருக்கிறது"

சட்டசபைப் பேச்சு—(4—11—1957)

* * *

"சட்டசபை உறுப்பினராக இருந்தாலும், பார்லிமெண்ட் உறுப்பினராக இருந்தாலும் ஜனநாயக முறைப்படி அவர்கள் பணியாற்றுவதற்கு உதவிகரமாக இருக்க வேண்டியது சர்க்காரின் பொறுப்பு"

சட்டசபைப் பேச்சு—(19—3—1966)

தொல்காப்பியம் – நூல் வரலாறு

பூ. சாம்பசிவன், எம். ஏ., பி. டி.

ஒருவரை உலகம் மதிக்கின்றது என்றால் அதற்குப் பல காரணங்கள் உண்டு. இவர் இன்னாருடைய மாணாக்கர் என்பதாலேயே சிலருக்கு மதிப்பு உண்டு. சுவாமி விவேகானந்தர், இராமகிருஷ்ண பரமஹம்சரின் மாணாக்கர் என்பதால் அவருக்குத் தனி மதிப்பை உலகம் தருகிறது. மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களின் மாணாக்கர் என்பதால் டாக்டர் உ. வே. சாமிநாதய்யர் அவர்களுக்குத் தனி மதிப்பு உண்டு. தொல்காப்பியர் அகத்திய முனிவரின் மாணாக்கர் என்பதால் அவர்தம் சிறப்பும் உயர்கிறது. அகத்தியர் மாதொருபாகன் எனப்படும் சிவபெருமானின் மாணாக்கர் என்று சிறப்பிக்கப்பெறுகிறார், சிவபெருமான் தமிழர்களின் முழுமுதற் கடவுள் எனப்படுவதால் அவர் வழிவந்த தமிழ் தெய்வத் தன்மை நிரம்பியது என்ற குறிப்பும் இதில் விளங்குகிறது.

இதனை,

> "ஆதியில் தமிழ்நூல் அகத்தியற் குணர்த்திய
> மாதொரு பாகனை வழுத்துதும்
> போத மெய்ஞ்ஞான நலம்பெறற் பொருட்டே"
>
> [தொல்-சொல்-சேனாவரையர் உரை-கடவுள் வாழ்த்து]

என்ற வாழ்த்துப் பாவினால் அகத்திய முனிவர், மாதொரு பாகன் எனப்படும் ஆசிரியனால் தமிழ் என்பதன் இலக்கணம் கற்பிக்கப்பட்டார் என்றறிகிறோம். அகத்திய முனிவரிடம் தமிழ் கற்ற மாணவர் பலராவர். அவருள் தொல்காப்பினர் என்பவர் தன் குடிப்பெயர் தோன்றத் தொல்காப்பியம் என்னும் இலக்கண நூலை இயற்றினர்.

> " வீங்குகட லுடுத்த வியன்கண் ஞாலத்துத்
> தாங்கா நல்லிசைத் தமிழ்க்குவிளக் காகென
> வானே ரேத்தும் வாய்மொழிப் பல்புகழ்
> ஆனாப் பெருமை அகத்தியன் என்னும்
> அருந்தவ முனிவன் ஆக்கிய முதனூல்
> பொருந்தக் கற்றுப் புரைதப உணர்ந்தோன்
> நல்லிசை நிறுத்த தொல்காப் பியனும் "
>
> [பன்னிரு படலம் — பாயிரம்]

என்னும் பாவினால் தொல்காப்பியரது ஆசிரியர் அகத்தியர் என்பதும், அவர் இயற்றிய இலக்கண நூலை முதல் நூலாகக்கொண்டு, குற்றமறக் கற்றுணர்ந்து தம் நூலையாத்துப் புகழ்பெற்றவர் தொல்காப்பியர் என்பதும் தெளிவாகின்றது. அகத்திய முனிவரிடம் தமிழ் பயின்ற மாணவர் பன்னிருவராவர். அவர்தாம் தொல்காப்பியன், அதங்கோட்டாசான்,

துராலிங்கன், செம்பூட்சேய், வையாபிகன், வாய்ப்பியன், பண்பாரன், கழாரம்பன், அவி நயன், பெருங் காக்கை பாடினி, நற்றத்தன், வாமநன் என்பர்.

இதனை,

" மன்னிய சிறப்பின் வானோர் வேண்டத்
தென்மலை யிருந்த சீர்சால் முனிவரன்
தன்பாற் றண்டமிழ்த் தாவின் றுணர்ந்த
துன்னருஞ் சீர்த்தித் தொல்காப் பியன்முதல்
பன்னிரு புலவரும் "

[தொல்–பொருள்–சூத்திரமேற்கோள்–புறப்பொருள் வெண்பாமாலை]

என்னும் பாவினால் அறிகிறோம்.

தொல்காப்பியனால் ஆக்கப்பட்ட நூல் தொல்காப்பியம் எனப்படும். அவிநயன் என்பவரால் எழுதப்பட்ட நூல் அவிநயம் என்றழைக்கப்படும். காக்கை பாடினியால் இயற் றப்பட்ட நூல் காக்கை பாடினியமாகும். நற்றத்தன் பாடிய நூல், நற்றத்தம் ஆகும். இத் தூணைச் சிறந்த அறிஞர்களை மாணாக்கர்களாகக்கொண்டு விளங்கிய பேராசிரியர், அகத்தியர் ஆவர். அவர் இயற்றிய இலக்கண நூல் 'பேரகத்தியம்' எனப்படும். இயல், இசை, நாட கம் ஆகிய முத்தமிழுக்கும் அகத்திய முனிவர் இலக்கணம் எழுதினர். ['அகத்தியனாரால் கூறப்பட்ட முத்தமிழிலும்' — பேராசிரியர் உரை] இப்பெருநூல் முழுதும் நமக்குக் கிடைக்க வில்லை. ஆயினும் பண்டைக்காலத்து உரையாசிரியன்மார் அவ்வப்போது குறித்து உதவிய மேற்கோள்களினால் 'பேரகத்திய'த்தின் சூத்திரங்கள் சில கிடைத்துள்ளன.

['பேரகத்தியம்' – திரு. ச. பவானந்தம் பிள்ளை M. R. A. S , F. R. H. S. (Lond.)

இப் 'பேரகத்திய' மாகிய முந்து நூலைப் பொருந்தக் கற்றுப் புரைதப உணர்ந்து 'தொல்காப்பி யம்' என்னும் இலக்கண நூலைத் தொல்காப்பியர் இயற்றினர். அன்றியும் அக்காலத்து விளங்கிய ஆரியமொழி இலக்கண நூலாகிய 'ஐந்திரம்' என்பதனையும் நிறைவுறக் கற்றறிந்த வர் தொல்காப்பியர். தாம் இயற்றிய நூலில் இயற்றமிழ் ஒன்றனுக்கே தொல்காப்பியர் இலக் கணம் செய்தார். 'ஐந்திரம்' என்ற இலக்கணம் எழுந்த பின்னர், தமிழ்மொழி வளர்ச்சியைக் கருத்தில்கொண்டு, தாம் முதல்நூல் எனக்கொண்ட 'பேரகத்திய' த்தின் இயற்றமிழ்ப் பகுதி யின் பெரும்பாலானவற்றை ஏற்றும், சிலவிடங்களில் வேறுபட்டும் தொல்காப்பியத்தை இயற்றினர் என்க.

சில வேறுபாடுகளை எழுத்து இலக்கணத்திலேயே காண்கிறோம். பேரகத்தியம் — எழுத்தியலில் யகரம், அ ஆ உ ஊ ஓ ஔ என்ற எழுத்துக்களைச் சார்ந்துவரும் என்று கூறப் படுகிறது, எனவே யவநர், யானை, யுகம், யூகம், யோகம், யௌவநம் என்று யகரத்தை முத லாக உடைய சொற்களின் படைப்பையும் வழக்கையும் புலப்படுத்துகிறது.

'யகரம்
அ ஆ உ ஊ ஓ ஔ உடனும்'

[பேரகத்தியம் — எழுத்து வரன்முறைப் படலம் — சூ. 85]

ஆனால் தொல்காப்பியர், யகரம் 'ஆ' என்ற எழுத்து ஒன்றனையே சார்ந்து வரும் என்று கூறி யுள்ளார். நோக்கின் — யவநர், யுகம், யூகம், யோகம், யௌவநம் — இவ்வைந்தினையும் தொல்காப்பியர் விலக்கினர் என்றறிகிறோம். இதன் காரணம் ஆராய்தற்பாலது.

அகத்தில் எழுகின்ற வளி (காற்று) யின் ஒலியால் மொழி பிறக்கின்றது. இவ்வாறு அகத்தெழுவளியிசையால் அந்தணர் மறை ஓதினர். மறையின்கண் விரித்துள்ள மந்திரங் களை நெறிப்படப் பிறர் அறியாது ஓதுங்கால் எழும் காற்றுனது, மூலாதாரத்தினின்றும் எழுந்து தலைமிசைவரை உலவி வருவதால் உண்டாகும் நுண்ணிய ஓசையே அகத்தெழுவளியிசை எனப்படும். இதுவே அந்தணர் மறையில் பேசப்படுவதாகும். தொல்காப்பியனர் கூறும் யாழ் நரம்பின் வழி ஒப்பிட்டுக் கூறும் காற்றுனது, உத்தி முதலாக எழுந்து தலைமிசை வரை உலவிவருவதன்றியும் உறுப்புக்கள் தோறும் அக்காற்றுனது எதிர்ப்புணர்ந்து புறமாக வெளிப்படுவதால், அது புறத்தெழு வளியிசை எனப்படும். இவ்விரு இசைநுணுக்கமும் ஒலிவேற்றுமை அளபினைக் குறிக்கும் வேறுபாடாகும்.

அந்தணர் மறையானது அகத்தெழு வளியிசையாகும். தவவொழுக்கமுடைய அந் தணர் பிறர் அறியாது தம்மூள் தாமே தம் செவிக்குப் புலனுமாறு மறை ஓதுங்கால் ஓசை அளவு வேறுபடுத்திக் காட்டும் முறை அந்தணர் மறையில் உள்ளது என்பது புலனாகும்.

" அகத்தெழு வளியிசை அரில்தப நாடி
அளபிற் கோடல் அந்தணர் மறைத்தே "

[தொல் — எழுத்து — சூ 102]

அந்தணர் மறைத்தே என்றமையால் தமிழ்நாட்டு அந்தணரையே குறிப்பது விளக்கமாகும்

"அளபிறந் துயிர்த்தலும் ஒற்றிசை நீடலும்
உளவென மொழிப விசையொடு சிவணிய
நரம்பின் மறைய என்மனர் புலவர்"

என்று தொல்காப்பியர் கூறுவதால் அகத்தெழும் வளியிசைக்கும் யாழ் நரம்பில் எழும் ஓசைக்கும் உள்ள வேறுபாட்டினையும் புறத்தே ஓர்ந்து உணர்ந்து தெளிந்தே மேற்குறிக் துள்ள ஐந்து சொற்களையும் விலக்கினர். அகத்தியர் தம் காலத்திற்கு முன்னரே நாற்பது எழுத்துக்களால் இயங்கிய வடமொழிக்கும் இலக்கணம் உண்மையான், அதிலும் தான் கரு றுத் தேர்ந்திருந்தார். இயற்றமிழுக்கேயன்றி, இசை, நாடகம் ஆகிய முத்தமிழுக்கும் இல கணம் கண்ட அகத்தியனர் அக்காலத்து வேள்வி முதலியன செய்தலுக்கும் செய்வித்தலுக் கும் உரிய சொற்களாகிய மேற்காட்டிய ஐந்து சொற்களையும் கையாண்டுள்ளார் என்று அறிகிறோம். தொல்காப்பியரும் யாழிசை அளவொடு புணர்த்தியே நூல் செய்துள்ளார். இயற்றமிழ் ஒன்றிற்கே இலக்கணம் சமைத்தார்; பொருளதிகாரம் படைத்து இல்லறத்தார்க்கு ஏற்பவே நூலை இயற்றினர். கருவியால் எழும் ஓசைக்கும் அகத்துக் காற்றுல் எழும் ஓசைக் கும் உள்ள வேறுபாட்டினை அனைவரும் அறியுமாறு உணர்த்தவே மேற்குறித்த ஐந் சொற்களையும் விலக்கினர் என்பது தெளிவாம். அன்றியும் அச்சொற்களேயன்றி, ஆரி மொழிக்கேயுரிய சிறப்பெழுத்துக்களாலாகிய சொற்களும் இன்றியமையாது வேண்டப்படு மாயின் பயன்படுத்தும் முறையையும் ஆசிரியர் கூறியுள்ளார். [தொல்—எழுத்து—சூ 2

அகத்தியரால் 'பேரகத்தியம்' ஆக்கப்படுவதற்கு முன் முந்து நூலாய்ந்து அறிஞரால் நாட்டப்பெற்ற இருபத்தைந்து எழுத்துக்கள் இருந்தன. அகத்தியர் அவற்றோடு எகரம், ஒகரம், முகரம், நகரம், னகரம் ஆகிய ஐந்தினையும் சேர்த்து உயிர்மெய்யெழுத்துக்கள் முப்பது என வகுத்து ஆய்தம் (ஃ) என்ற எழுத்தையும் சார்த்தி முப்பத்தொன்று ஆக்கினர்.

"எஒவ்வும் முறனவும் தமிழ் எழுத்தென்க"

[பேரகத்தியம்—எழுத்து—சூ. 54]

என்றும்,

"ஐந்தொழி எழுத்தெலாம் வடவெழுத் தாகும்"

[பேரகத்தியம்—எழுத்து—சூ. 55]

என்றும்,

அவரே கூறியுள்ளார். இங்கே வட எழுத்து என்பது பொது எழுத்தாகும்.

"பொதுஎழுத் துத்தமிழ்ப் பொருந்துதல் சிறப்பே"

[பேரகத்தியம்—எழுத்து—சூ. 59]

ஈண்டுப் பொது எழுத்து என்று குறிப்பிடப்படுவது ஐந்து தமிழ் எழுத்து ஒழிந்த நாற்பது வடவெழுத்துக்களாகும். 'வடவெழுத்துப் பொது எழுத்தெனப்படும்' என்று அகத்தியனரே கூறியுள்ளதும் காண்க. இருபத்தைந்து இயல்ஒலிப் பொது எழுத்துக்களும் பதினைந்து செயற்கை ஒலி வட எழுத்துக்களும் சால நாற்பதும் வடசொல்லாயிற்று. எனவே 15 நீங்கிய 25 தென் சொல்லே. இங்கு வடக்கு என்ற திசைச் சொல் சுமேரு மலையின் (24° கதிர் மண்டலத்தின் வடக்கு) வடக்குப் பகுதி. 40 எழுத்துடைய சுமேரிய மொழியே வடமொழியாம். அஃதாவது தமிழ், வடசொல் என்ற இருமொழிக்கும் பொதுச் சொல்லேயாம் என்பது தேற்றம். ஆய்தம் ஒன்றும் உடனைச் சேர்த்து முப்பத்து ஒன்று எழுத்து என்பர் அகத்தியர்.

'முதல் உயிர்மெய் ஆய்த முப்பானென்றே'

[பேரகத்தியம்—எழுத்து—சூ. 7]

தொல்காப்பியர், அகத்தியர் கூறிய முப்பத்தோர் எழுத்துக்களுடன் இரண்டு புதிய எழுத்துக்களையும் சேர்த்து மொத்தம் முப்பத்து மூன்று எழுத்து என்பர்.

"எழுத்தெனப் படுவ
அகர முதல னகர விறுவாய்
முப்பஃ தென்ப
சார்ந்து வரல் மரபின் மூன்றலங் கடையே"

தொல்—எழுத்து—சூ. 1]

என்றும்,

"அவைதாம்
குற்றியலிகரம் குற்றியலுகரம் ஆய்த மென்ற
முப்பாற்புள்ளியும் எழுத்தோ ரன்ன'

[தொல்—எழுத்து—சூ 2]

என்றும் கூறினர்.

அகத்தியனுக்கு முன்பு இருந்த இருபத்தைந்து எழுத்துக்களே உடைய மொழி இலக்கணம் இடைக்கழிச் செங்கோடன் இயல்நூல்' என்பதாகும். [கலைமகள் 1922- டிசம்பர் டாக்டர் உ.வே சா. ஐயர் 'தமிழ்ச் சங்கங்களின் வரலாறு' துடிசை கிழார் அ. சிதம்பரனார்] அந்நூல் நரம்பின் மறை எனப்படும் யாழ்நூல் ஓசையின் அளவின்படி இயற்றப்பட்டிருத்தல் வேண்டும். யாழ் ஓசையின் அளபு, இரண்டு மாத்திரை கொண்ட நெட்டெழுத்து ஓசையானதாலும், அவற்றிற் குறுகியதை ஒரு மாத்திரை என்றும் எழுத்து ஒலிக்கு அளபு கொடுத்தார்.

'உன்னல் காலே, ஊன்றல் அரையே
முறுக்கல் முக்கால், விடுத்தல் ஒன்றே'

[பேரகத்தியம்—எழுத்து—சூ 117]

எனவே எழுத்திலக்கணம் ஆக்கிய அகத்தியனும் தொல்காப்பியனும் யாழ் நரம்பில் எழும் ஓசை அளவினையே மேற்கொண்டொழுகினர் என்பது அறியப்படும்.

அகத்தியனர் இயற்றிய 12,000 (பன்னிரண்டாயிரம்) சூத்திரங்கள் இயல், இசை, நாடகம் எனப் பல்துறைப் பொருள்களையும் தழுவியுள்ளன. அவற்றுள் தொல்காப்பியனர் எழுத்து, சொல் பொருள் என்ற இயல்மொழியாகிய இம்மூன்றையுமே பிரித்து, வகுத்து, யாழ் நரம்பு ஒலியளவை அடிப்படையாகக் கொண்டு முறைப்படுத்தினர். இதற்குச் சான்றாக, அவரே, அந்தணர் மறையில் உள்ளது என்று குறித்த அளவைப் போலாது, எழுத்து அகத்தினின்று எழுந்து புறத்தில் போந்து இசைக்கும் மெய்தெரிவளியிசை அளவு, பொருண்மை தெரிகின்ற வளியானகிய ஓசையது மாத்திரையினை வெளிப்படக் கூறுகின்றேன் என்று வேறுபடுத்திக் காட்டியுள்ளார்,

"அஃதிவண் நுவலா தெழுந்து புறத்திசைக்கும்
மெய்தெரி வளியிசை அளவு நுவன்றிசினே"

[தொல் – எழுத்து – சூ. 103]

அகத்தியனர் 40 எழுத்துக்கொண்ட வடஎழுத்து என்பதனைப் பொது எழுத்து என்று கொண்டு, வட எழுத்திற்குச் சிறப்பு எழுத்தாகிய 15 எழுத்து நீக்கி, பொதுவாகிய 25 எழுத்துக்களும் தமிழ்ப் பொருந்துதல் சிறப்பு என

'பொது எழுத்துத் தமிழ்ப் பொருந்துதல் சிறப்பே'

[பேரகத்தியம்—எழுத்து— சூ 59]

என்றார் என்க. இதனை யொட்டியே தொல்காப்பியனர், 'தமிழென் கிளவியு மதனை ரற்றே' [தொல் — எழுத்து — சூ. 386] என்று கூறுகின்றார். 'தமிழ் என் கிளவி' என்பதை நன்கு ஆராய்ந்து உணர்ந்தால் சிறப்பு முகர ஒற்று ஏறிய 'தம்' என்னும் சொல்தானே ஏனைய பொது வெழுத்து – வட எழுத்து எனக் கூறப்படும் 25 எழுத்துக்களும், அவ்வெழுத்துக்களாலாய சொற்களும் 'தமிழ்ச் சொல்' என்பது உணர்த்தி நிற்றல் தெற்றெனப் புலனும். தம் + ழ் = தமிழ் என்றாயிற்று. எனவே தம் எழுத்தும் சொல்லும் கொண்டு வட எழுத்து – வடசொல் என்று பிரித்துக்கூறும் மற்றொரு சாரார் அவ்விருபத்தைந்து எழுத்துக்களில் 'கசடதப' என்னும் ஐந்து வல்லோசை எழுத்துக்களை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வோரெழுத்துக்கும்

மூன்றுவித ஓசை வேறுபட ஒலிக்கும்படி அவ்வொலி வடிவத்தை அமைக்கப் பதினேந்து எழுத்துக்களும், உயிர் எழுத்தில் எகர ஒகரம் நீங்கலாக விளங்கும் பத்து உயிர் எழுத்துக்களோடு, ரு ரூ லு லூ அம் அரை மாத்திரை கொண்ட எழுத்துப்போன்ற புள்ளி வடிவாம் (:) விசர்க்கமும் ஆகிய ஆறினையும் சேர்த்து மொத்தம் இருபத்தொரு (21) புதிய எழுத்துக்களைப் படைத்தனர். இந்தப் புதிய எழுத்துக்கள் இருபத்தொன்றும் 'தமி' எழுத்துக்களாகிய பொது எழுத்துக்கள் இருபத்தைந்தும் சேர்க்கப்பெற்று நாற்பத்தாறு எழுத்துக்கள் கொண்ட செயற்கையோசையொடு சார்த்தி 'ஆரியமொழி' (Samskrit) தோற்றுவிக்கப்பெற்றது. இதுவே, அகத்தியர் காலத்து, முந்திய நூல் (அந்தணர்மறை) ஆய்ந்துணர்ந்ததன் பயனாக உண்டாக்கப்பட்ட வடசொல் இலக்கணம் — 40 எழுத்துடன் ஆறு உயிர் சேர்ந்த ஆரியமொழி என்பது அறியப்படும். எனவே மேற்கூறிய 21 எழுத்துக்களும் ஆரியமொழிக்கே சிறப்பு எழுத்துக்களாக விளங்கினவாதல் தெளிவாம்.

இடைக்கழிச் செங்கோடன் காலத்து 25 எழுத்துக்கள் பற்றிய இயல்நூல் (பின்னிணைப்புக் காண்க) ஆக்கப்படுவதற்கு முன்னே 'பேராற்று நெடுந்துறையன் பெருநூல், என்று ஓர் இலக்கண நூல் இருந்ததாகச் சித்திர எழுத்துக்களால் அறிகிறோம். அப்போது உயிர் எழுத்துக்களில் ஐகாரமும், ஔகாரமும், அவற்று வழித்தோன்றும் யகர வகரமும் ஆகிய நான்கு எழுத்துக்கள் நீங்கிய (21) இருபத்தொரு எழுத்துக்களே இருந்தன அவையாவன : (சித்திர எழுத்துக்கள்)

உயிர் எழுத்து — 8 அ ஆ இ ஈ உ ஊ ஏ ஓ
குறில் — 3 } அ இ உ
நெடில் — 5 } ஆ ஈ ஊ ஏ ஓ
மெய்யெழுத்து - 13 க ச ட த ப
ங ஞ ண ந ம
ர ல ள

சான்றாக, எகிப்திய நாட்டுப் பண்டைக் காலத்து அடையாளம் காட்டும் 21 சித்திரங்கள் (எழுத்துக்கள்) புதைபொருள் ஆராய்ச்சியாளர்களால் கண்டெடுக்கப்பட்டுள்ளது கொண்டு நாம் அறிகின்றோம்.

இக்காலத்திய எகுபது நாட்டுப் பகுதிகள் பண்டைக் காலத்துச் சேர நாட்டின் எல்லைக்குட்பட்டு விளங்கியதென்னும் உண்மைகொண்டு நாம் சித்திர எழுத்துக்களை இடமிருந்து வலமாகத் தமிழ் எழுத்துக்களைப்போலக் காட்டியுள்ளோம். (பின்னிணைப்புக் காண்க). ஆனால் இக்காலத்து எகுபதியர் அச்சித்திர எழுத்துக்களை ஆய்ந்த அறிஞர்கள் வலமிருந்து இடமாக அமைத்துக் காட்டுகின்றனர் என்பது கண்டு தெளிக.

[Ancient Irish compared with the language of the Cuti or Ancient Persians with the Hindustanee, The Arabic and the Chaldean languages - by Lieut. General Charles Vallancey - author of the Vindication of the Ancient History of Ireland - in Dublin 1802]

கருவியிசை (யாழ்நரம்பு)யினை அள்வாகக்கொண்டு தமிழ் எழுத்துக்கள் அமைக்கப் பட்டன என்பதும் ஆராய்தற்பாற்றே. இசைக்கருவிகளில் ஐந்து துளையுடைய இயமும் ஏழு துளையுடைய இயமும் உள்ளனவென்பது இசை நூற் கருத்தாகும். பெரிய பழம் பொருட் காட்சி சாலைகளிலும் (சென்னைப் பொருட்காட்சி சாலை) இவ்விரு வேறுபட்ட துளைக் கருவி களைக் காணலாம். யாழ்நூலின் (சுவாமி விபுலாநந்தர்) கண்ணே குரல் துத்தம் கைக்கிளை என்று பேசப்படும் பண்ணுக்குரிய இசையோசையின் எடுப்பு வகைகள் ஏழு என்று கூறப் படுகிறது. இந்த ஏழு வேறுபட்ட எடுப்பு ஓசைகள் ஏழு நெட்டுயிர் எழுத்து ஓசையேயாம் என்பர். அவையாவன : ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ என்பனவாம். பேராற்று நெடுந்துறை யன் காலத்து விளங்கிய சித்திர எழுத்துக்கள் இருபத்தொன்றும் இடைக்கழிச் செங்கோடன் காலத்து, கோல் எழுத்து வடிவம் அமைக்குங்கால், அவ்விருபத்தொரு எழுத்துக்களோடு ஐ ஔ, இவ்விரண்டின் வழித் தோன்றும் ய வ ஆகிய நான்கு எழுத்துக்கள் ஆக்கப்பெற்று இருபத்தைந்து எழுத்தென ஆயிற்று என்று கண்டோம். ஆதலின் ஐ ஔ எனும் நெட்டுயிர் இரண்டின் ஓசை பேராற்று நெடுந்துறையன் காலத்துக் கிடையா என்பது போதரும். எனவே ஐ ஔ நீங்கிய ஆ ஈ ஊ ஏ ஓ — ஆகிய ஐந்து ஒலிகளே முன்னர் இருந்தன என்ப தற்குச் சான்றாக ஐந்து துளை அமையப்பெற்ற இயமும் ஐ ஔ சேர்ந்த பின்னர் ஏழு நெடில் ஓசை குறிக்கும் ஏழு துளை அமையப்பெற்ற இயமும் ஆக்கப்பெற்றிருந்தது என்பதும் தெளி வாகிறது.

இயம் என்பது கருவிகளின் பெயர், 'பல்லியம் கறங்க' (திருமுருகாற்றுப் படை) என் பர் நக்கீரர். இயம் என்பது இசைக்கும் கருவியேயாயினும் அதனை இயக்குவோன் அரசவை யின் கண்ணும் மற்றும் மங்கலவிழவு நிகழுமிடத்தும் வாழ்த்தும்பொருட்டு இசைப்பதாகும். ஆகவே வாழ்த்து + இயம் = வாழ்த்தியம் என்று மொழிவது இயற்றமிழுக்கு ஏற்புடையதாம். வடமொழியாளர் தமக்குச் சிறப்பு முகரம் இன்மையால் இதனை 'வாத்யம்' என்பர். தமிழ் மொழியில் அச்சொல்லை அப்படியே எழுதும்போது 'வாத்தியம்' என்று கொண்டு இச்சொல் லும் வடசொல்லோ என மயங்கி உரைப்பர் ஒரு சாரார். இடைக்கழிச் செங்கோடன் ஐ ஔ கண்ட பின்னரே, இசை ஐந்திலிருந்து ஏழாயிற்று என்பது வெள்ளிடை மலை.

'பேராற்று நெடுந்துறையன் பெருநூல்' காலத்து 21 எழுத்தாயும், 'இடைக் கழிச் செங்கோடன் இயல்நூல்' காலத்து 25 எழுத்தாயும் 'தமிச்சொல்' என வழங்கப்பட்டு வந்தது. பின்னர் அகத்தியனார் காலத்துச் சிறப்பு முகரம் கண்ட பின்பு 31 எழுத்துக் கொண்ட இயற் றமிழ் மொழியாகி, தொல்காப்பியனார் காலத்தில் 33 எழுத்துக்களோடு கூடிய மொழியாய் வளர்ந்தது. அகத்தியனார் காலத்தே தமிழ்ச்சொல்லுக்குரிய 25 எழுத்துக்களுடன் முன்னர்க் காட்டிய புதிதாகப் படைக்கப்பட்ட 21 எழுத்துக்களும் சேர்ந்து 46 எழுத்துக்களுடைய வட மொழி ஆயிற்று.

உயிர் எழுத்து 16— அ ஆ இ ஈ உ ஊ ஏ ஐ ஓ ஔ — 10
ரு ரூ லு லூ அம் அஃ — 6
மெய்யெழுத்து 30— க ச ட த ப × 3 (வருக்கம்) 20
ங ஞ ண ந ம ———— 5
ய ர ல வ ள ———— 5

அவ்வடமொழியாளர், தமிழ்நாட்டு அந்தணரில் ஒரு சாரார் என்பதும் அவர் சீன நாட்டு மஞ்சள் நிற மக்களோடு நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளவர் என்பதும் அவரே இப்புதிய வடமொழிச் சிறப்பெழுத்துக்களையும் வல்லோசை வருக்கத்தையும் ஆக்கினர் என்பதும், இவ்விருவகைச் சொற்களுக்குமுள்ள சிறப்பெழுத்துக்கள் சாராத எழுத்தும் சொல்லும் இரு மொழிக்கும் பொதுவாய் விளங்கினவென்பதும் நன்கு அறியப்படும்.

தமிழ்ச்சொல் என்றும் வட சொல் என்றும் பாகுபாடு காண்பதற்குக் கருவியாய் விளங்குவது ஒலியின் அமைப்பேயாம். அகத்து எழுகின்ற காற்று, புற உறுப்புக்களின் வாயிலாய் உறுப்புக்களின் அசைவுக்கு ஏற்ப, இயல்பாய் வெளிப்படுதலால் இயல் இசையுடையது தமிழ்மொழி எனப்பட்டது. எனவே இயற்றமிழ் என்னும் பெயர்தாங்கி இன்று காறும் தன்னில் யாதொரு மாற்றமும் இன்றி விளங்குகிறது. ஆதாலாலன்றே, இடைக்கழிச் செங்கோடன் 25 எழுத்துக்களாலாக்கிய நூலுக்கு அவன் பெயராலே, 'இடைக்கழிச் செங்கோடன் இயல்நூல்' என வழங்கப் பெற்றது காண்க. மற்றும் வடசொல்லோவெனின், இயல்பாய், புறத்துறுப்புக்களின் வாயிலாய்த் தோன்றிய எழுத்துக்கள் இருபத்தைந்தில் 'கசடதப' என்னும் ஐந்து வல்லோசை எழுத்துக்களை அடிப்படையாய் வைத்துக்கொண்டு முயற்சியால் ஆக்கிய மூவகை வேறுபாடுடைய எழுத்துக்கள் (வருக்கங்கள்) பதினைந்தும், உயிர் எழுத்துக்களில் புதிதாக ஆக்கப்பட்ட ஆறும் உடனுக, இருபத்தொரு எழுத்துக்களையும் செயல்படுத்தும் பொருட்டு இயல் எழுத்து இருபத்தைந்தோடு சார்த்திச் சொற்கள் செயற்கையாய் ஆக்கப்படுதலால் வடசொல் செயற்கை மொழி (Samskrit—கிரந்தம்) எனப்படுவதாயிற்று.

இக்காரணங்கொண்டுதான்,

'இயற்கைப் பொருளை இற்றெனக் கிளத்தல்'

[தொல்—சொல்—சூ 19]

என்றும்,

'செயற்கைப் பொருளை ஆக்கமொடு கூறல்'

[தொல்—சொல்—சூ 20]

என்றும்,

'ஆக்கம்தானே காரண முதற்றே'

[தொல்—சொல்—சூ 21]

என்றும் ஆசிரியர் கூறுவாராயினர். ஈண்டு 'இயற்கை' என்பது இயல்பாய்ப் புறத்துறுப்புக்களின் அசைவுக்கு ஏற்ப எழுந்த இயல் ஓசையை, அவ்வியலோசையை அடிப்படையாகக் கொண்டு ஆக்கிய ஓசையை 'ஆக்கம்' என்றும், அவ்வாறு செயல்படுத்துதற்கு முதலாக இருந்த இயலோசையைக் 'காரணம்' என்றும் கூறியது வெளிப்படப் புலனும். இருமொழிக்கும் பொது எழுத்துக்கள், சொற்கள் தொன்று தொட்டே வழங்கி வருதலால், இருமொழியாளரும் தங்களில் வேறுபட்டாலும் மூலமொழியில் ஒற்றுமை காணப்படுவது வெளிப்படை.

இன்றும் மேலை நாட்டு அறிஞர்கள், 'இந்தோ—ஐரோப்பிய மொழிகளின் சொற்கள் பல்வற்றின் மூலங்கள் காணப்படுகின்றன என்பது யூகமன்று; அகன்ற ஆராய்ச்சியின் பின்னர் கண்ட முடிவு' என்றும் 'சுமேரிய மொழி மிகப் பழமையுடையது, தமிழில் உள்ள

மிகப்பழைய சொல்வடிவங்களோடு பிற்காலத்தில் வளர்ச்சியடைந்த சுமேரியச் சொல் வடிவங்களை ஒப்பிடும்போது சுமேரிய மொழி தமிழுக்கு இளமையுடையதாகக் காணப்படும்' என்றும் வணக்கத்துக்குரிய எஸ். ஞானப்பிரகாச அடிகளார் கூறுகின்றார். 'சமக்கிருதம், எபிரேயம், கிரேக்கு என்னும் இலக்கிய மொழிகளில் தமிழ்ச் சொற்கள் காணப்படுகின்றன' என்று திரு. ரைஸ் டேவிட்ஸ் கூறுகிறார். வடஇந்தியாவில் சிந்துவெளியில் வாழ்ந்த மொகஞ்சோதாரோ மக்கள் திராவிட மொழியையே வழங்கினர்கள். அவர்கள் வழங்கிய சொற்கள் பெரிதும் தமிழில் காணப்படுகின்றன. இப்பொழுது வழங்கும் மொழிகள் எல்லாவற்றுக்கும் தமிழ் மிகப் பழமையுடையது என்னும் கொள்கையை இது வலியுறுத்துகிறது. 'ஆறுயிரம் ஆண்டுகட்குமுன் மொகஞ்சோதாரோவில் வழங்கிய மொழியில் தமிழ்ச்சொற்கள் நிறைந்துள்ளன' என்று வணக்கத்துக்குரிய பாதிரியார் ஹீராஸ் கூறுகின்றார். இவர் கூறும் திராவிட மொழியானது இயற்றமிழாலியன்ற தமிழ்மொழியேயாம். இவர் தமிழைத் திராவிட மொழி என்று சொல்லுதற்குக் காரணம், ஈழ நாட்டு மன்னனுகிய ஏலேல சிங்கர் (King Ellala) அரண்மனையின் உள்படு கருமத் தலைவராக (Like the Lord-de-Chamberlain in the Buckingham Palace) விளங்கிய திருவள்ளுவரைத் (வள்ளுவன் என்பது அரசன் இட்ட ஆணையை மக்களுக்கு யானை மீதேறியிருந்து அறிவிப்பவன் என்க) திராவிடன் என்றும் அவர் நூலைத் (குறளை) திராவிட மொழி என்றும் மேலைநாட்டு அறிஞன் ஒருவன் அறியாது கூறியது கொண்டு என்பது தேற்றமாம். திராவிடம் என்ற வடசொல் ஓசை எக்காரணம் கொண்டும் இயலோசையாகாது என்பதும் வெளிப்படையே.

வடசொல்லாளர் சென்று குடியேறிய, தமிழ்நாட்டின் எல்லைக்கு அப்பால் வடபகுதியிலும் வடமேற்குப் பகுதியிலும் வாழ்ந்த மக்கள் ஆரிய மங்கோலிய மக்களோடு கலந்து உறவாடினர். இதன் பயனுய் அவர்களோடு பேசுவதற்குத் தகுதியாக, அவர்களிடமிருந்து 46 வகைப்பட்ட எழுத்துக்களைக் கற்றுக்கொண்டு, அவ்வட சொல்லாகிய 46 எழுத்துக்களுடன் ஐந்து வகைப்படும் எழுத்துக்களைச் சார்த்தி 51 எழுத்துக்களாக்கினர் வடவாரியர் என்பார் என்க.

புதிதாகச் சேர்க்கப்பட்ட சீன—பாரசீக மொழி வேற்றுமை காட்டும் வடவாரியார்களது ஐந்து எழுத்துக்களாவன: ஸ, ஷ, க்ஷ, ஜ, ஹ என்பனவாம். இவ்வைந்தையும் சேர்த்து 51 எழுத்துக்களாக்கி, வடவாரியக் கலப்புடையதாய் ஆரிய மொழியையே வடவாரிய மொழியாக (Sanscrit) மாற்றிச் சமைக்கப்பட்டமையாயின் வடசொல்லாம் ஆரிய மொழியே வட ஆரியமொழி (சமஸ்கிருதம்) என வழங்கப்படலாயிற்று.

எனவே 46 எழுத்துக்கொண்ட வடசொல் — ஆரியமொழி இன்றேல் வட ஆரிய மொழி என்ற ஒரு தனிமொழியே தோன்றியிருக்க முடியாதென்பதும் தேற்றமாம். அவ்வாறுகவும் ஆரியர் எனக் கூறும் வடவாரியர்தாமே வடமொழி சார்ந்த எழுத்துப் பெருக்கத்தினை (quantity) வைத்துக்கொண்டு, ஒலிக்குத்தக எழுத்துக்கள் இல்லை என்று கூறலாயினர். தமிழ் மொழியோவெனின், எழுத்துச் சுருக்கமாயினும், எழுத்தின் இயற்றன்மையைக் கொண்டு (quality) விளங்குவது என்பது சொல்லாமலே விளங்கும். ஆகவே, தமிழ்மொழி இயல்பாம் தன்மையுடையதென்பதும் ஏனை மொழிகள் அங்ஙனமின்றி எழுத்துப் பெருக்கம் ஒன்றே யுடையன என்பதும் நன்கு போதரல் காண்க.

இக்கருத்தினைப் பரிதிமாற் கலைஞன் எனப்படும் வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார் தாம் எழுதிய 'தமிழ் மொழி வரலாறு' என்னும் நூலில் நன்கு விளக்கமாகக் கூறியுள்ளார். அஃதாவது 'மொழி மரபிற் கூறப்பட்ட முப்பத்தோர் எழுத்துக்களைக் கொண்டு நாற்பது ஒலிகளை அகத்தியனார் தோற்றுவிக்கிறார். அவற்றுள் ஒன்பது ஒலிகள், ஆறுவல் லோசை வேறுபாட்டினாலும் மூற்றுகர குற்றியலிகர உகரத்தின் வாயிலாய்த் தோன்றும் வேறு பாட்டினாலும் தோன்றுகிற முறையை அவர் அடக்கிக் காட்டுகிறார் என்க. ஆதலின் தமிழ் மொழி இயற்றன்மையுடையது எனப்பட்டது.

இதனால் அகத்தியனார், 46 எழுத்துக்கள் கொண்ட வடமொழியில் வரும் உயிரெழுத்துக்கள் 16-ல் ஆறினை (ரு, ரூ, லு, லூ, அம், அஹ்) நீக்கி 40 ஒலிகளையே 31 எழுத்துக்களில் தமிழில் அடக்கிக் கூறியுள்ளார், என்பது தெற்றென விளங்கும். அவ்வாறு உயிரெழுத்துக்களை நீக்குதற்குக் காரணம் யாதெனின், அவ்வோசைகள் வடமொழிக்கே சிறப்போசை எழுத்துக்களாம். மேற்கூறிய உண்மை மொழிமரபில் முதல் மூன்று சூத்திரங்களால் தெளிவாகின்றது. மொழிமரபு அகத்தியனார் கூற்றே என்பதற்குச் சான்றாக 'பேரகத்திய'ச் சூத்திரம் கீழே தரப்படுகின்றது.

'உத்திரி யிகரமவ் வூரிகரங் குறிய'

[பேரகத்—எழுத்திலக்கணக் காண்டம்—எழுத்துப் படலம்—சூ. 46]

வீடு + யாது = வீடியாது (முற்று கரம்)
செல் + மியா = சென்மியா (மவ்வூர் இகரம்)
கேள் + மியா = கேண்மியா (,,)

'குறிலல்லன தொடர்வலிக் கூடுகரங் குறிய'

[பேரகத்.—எழுத்திலக்கணக் காண்டம்—எழுத்துப்படலம்—சூ. 47]

விறகு, நீறு, தேக்கு, பஞ்சு, மார்பு.

அன்றியும் வடஎழுத்தால் இயன்ற சொற்களில் இருமொழிக்கும் பொதுவாய் உள்ள எழுத்துக்களால் இயங்கி வடஎழுத்துப் பெறுமாயின், அவ்வட எழுத்தை (இலிபியை) நீக்கித் தமிழ் எழுத்தால் (இயல் எழுத்தால்) எழுதுவோமாயின் அவ்வடசொல் (வார்த்தை) இயற்றமிழ்ச் சொல்லேயாம் என்பர் தொல்காப்பியனார்.

"வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே"

[தொல்—சொல்—எச்சவியல்—சூ. 41]

தமிழ்ச் சொல்லுக்கு அடிப்படையாக விளங்கிய 25 எழுத்துக்களைக் கொண்டு வல்லோசை வருக்கம் முதலியனவும், உயிர் எழுத்திலும் அதிக வேறுபாடுகாட்டி எழுத்தை மிகுதிப்படுத்தி 46 எழுத்துக்களாக ஆக்கப்பட்டதே வடசொல்லாகும். அத்தகு வடசொற் கிளவிகளிலுள்ள வடவெழுத்தை மாற்றி இயற்றமிழ் எழுத்தில் எழுதினால் அது தமிழ்ச்சொல்லேயாகும். எடுத்துக்காட்டு: வாரி, மேரு, குங்குமம், மணி (வடமொழி இலிபியை மாற்றி எழுதல்). மேலும் வடசொற்கள் அதற்குரிய சிறப்பு எழுத்துக்களால் தமிழில் வாரா. மேற்

கூறிய ஆறு உயிரினமாகிய எழுத்துக்களே(ரு, ரூ, லு, லூ, அம், அஹ்), ஆரியமொழிச் சிறப் பெழுத்துக்களாம். ஏனை வருக்கம் எனப்படும். அவை தமிழில் வருமாயின், அவ்வாறு பொது எழுத்தோசையினின்றும் சிதைந்தும் மூவேறு வகையாய் ஒலிக்கும் எழுத்துக்களாலும் ஆகிய சொற்களே அவற்றுள் இயற்றமிழ் மொழிக்கு ஏற்புடையனவாக விளங்குவனவற்றை விலக்க மாட்டார் என்பது,

"சிதைந்தன வரினும் இயைந்தன வரையார்"

[தொல்—சொல்—எச்—சூ. 42]

என்னும் நூற்பாவால் அமைந்து கிடக்கக் காண்கிறோம்.

(எடுத்துக்காட்டு)

"அரமிய வியலகத் தியம்பும்
தசநான் கெய்திய பிணைமருணேன்றுள்"

[தொல்—சொல்—சூ. 412 சேனாவரையர் உரை]

இந்திரனாலே ஆக்கப்பட்டதாகப் பேசப்படும் 'ஐந்திரம்' எனப்படும் வடமொழி (ஆரியமொழி) வியாகரணம் 46 எழுத்துக்களால் இயலும் மொழிக்கேயாதல் கீழ்வரும் சூத்திரத்தால் அறியப்படும்.

"ஏழியன் முறைய தெதிர்முக வேற்றுமை
வேறென விளம்பான் பெயரது விகாரமென்
றோதிய புலவனு முளனொரு வகையா
னிந்திர னெட்டாம் வேற்றுமை யென்றனன்" என்ப.

[மேற்கோள் சூ. 14—பேரகத்தியம் காண்க]

எனவே, இந்திரன் என்பான் எதிர்முகவேற்றுமையினை ஒரு வகையான் எட்டாம் வேற்றுமை என்ற குறிப்பாலும், அவனுக்கு முன் ஒரு புலவன் 'பெயரது விகாரம்' என்றான் என்ற குறிப் பாலும் கூறிய இவ்விருவரும் வடமொழி (Sanskrit)க்கே இலக்கணம் அமைத்தனரேயன்றிப் பிறிதின்றுதல் தெளிவாம். எனவே 'ஐந்திரம்' என்னும் நூல் அகத்திய முனிவன் காலத்துக்கு முன்னையதென்க.

ஆகவே, பாணினி என்பான்தான் வடவாரிய முனிவன் ஆதலானும் தமக்கெனப் பேசுமொழி ஒன்றின்மையானும் சீன, பாரசீக மொழிகளின் வேற்றுமையும் ஒற்றுமையும் ஓர்ந்துணர்ந்து 46 எழுத்துக்களாலாகிய வடமொழியாம் ஆரியமொழியை நன்கு பயின்று அவ்வெழுத்துக்களோடு மேலும் ஸ, ஷ, க்ஷ, ஜ, ஹ எனப்படும் 5 எழுத்துக்களையும் சார்த்தி 51 எழுத்துக்களாக்கினன் என்பதே தேற்றமாம் என்க. அம்மட்டோடமைகிலான் பாணினி முனிவன், அம்மொழிக்குத் தானோர் இலக்கணமும் வடமொழி இலக்கணம் பலவாய்ப் பெருகியுள்ளனவற்றையும் தேர்ந்து அம்மொழி இலக்கணங்களைத் தழுவியாக்கினன். அதுவே இன்னும் 'பாணினீயம்' என்றும் 'பாணினீய வியாகரணம்' என்றும் அழைக்கப்படலாயிற்று என்க. வடவாரிய மொழிநூல் என்றுமாம்.

தொல்காப்பியனாரோவெனின், ஆரியமொழிக்கே சிறப்பாயுள்ள எழுத்துக்கள் கலப் புற்று விளங்கும் சொற்கள் வழக்காற்றில் வழங்கப் பெறுவன கண்டு அச்சொற்களும் ஏனைப்

பிறபுலச் சொற்களும் இயற்றமிழின்கண் இன்றியமையாது வேண்டப்படுமாயின் அச்சொற்களைப் பயன்படுத்தலும், அங்ஙனம் பயன்படுத்தப்பட்ட சொற்கள் இஃது எனச் சுட்டியுணர்த்த வல்ல இரண்டு எழுத்துக் குறியீடு கண்டு அவற்றையும் ஆய்தவெழுத்துக் குறியீட்டோடு தொடர்பு காட்டி முப்பதும் மூன்றும் என வேற்றுமையுங் காட்டி முப்பத்து மூன்று என்றுர் என்க.

ஆரியமொழிச் சொற்களும் (Sanskrit) வடவாரிய மொழிச் சொற்களும் (Sanscrit) இயற்றமிழ்ச் சொல்லோசையினின்று வேறுபாடுறக் கண்டு, இயற்றமிழ் ஒலிமுறை கொண்டு அவ்விருமொழிச் சொற்களின் ஓசை வழி அவற்றை இயற்றமிழ் எழுத்துக்களின் உதவியால் எழுதுதல்கூடும் என்பதை விளக்கி, திரு பா, வே. மாணிக்கநாயக்கர் நூல் (ஒலி இலக்கணம்) ஒன்று செய்துள்ளார். எழுத்ததிகாரத்தின்கண் மூலமாகிய முதல் ஒலிகள் மூப்பதனையும் அவற்றோடு கலந்து பிற ஒலிகள் எழுதற்குக் காரணமாகிய சார்பு ஒலிகளையும் இன்னவெனத் துணிந்து அறிந்த திரு. நாயக்கர் அவர்கள், பேச்சு ஒலிகளையுடைய எல்லா மொழிகளின் எல்லாச் சொற்களையும் இயற்றமிழ் எழுத்துக்களின் உதவியால் எழுதுதல் கூடும் என்று நன்கு விளக்கியுள்ளனர். அதனால் எழுத்து ஒலி மூலநூல் உணர்ச்சி (Science of Phonome) தொல்காப்பியர் காலத்தில் தமிழ்நாட்டில் சிறப்புற்று ஓங்கியிருந்தது என்பது தெரிய வருகின்றது. ["தமிழ்மறை விளக்கம்" — திரு. பா. வே. மாணிக்க நாய்க்கர்] எழுத்துக்களின் வரிவடிவம் ஓகாரத்தின் பகுதிகளில் நின்று அமைக்கப்பட்டனவென்றும், அவ்வோகாரமும் இயற்கைப் பொருளின் மூலமாகிய கருவின் வடிவமே என்றும் திரு. நாயக்கர் அவர்கள் கண்டு எழுதியுள்ளனர். அதனால் தொல்காப்பியர் காலத்திலுள்ள வரிவடிவு, தமிழ் மொழிக்கே சிறப்பாக அமைந்துள்ளது என்பதும், அது பிறநாட்டினரிடமிருந்து கண்டு கொண்டதன்று என்பதும் தெளியப்படும். எழுத்து, ஒலிநூல் ஆராய்ச்சிக்கு, திரு. பா. வே. மாணிக்க நாயக்கர் அவர்களின் நூல் (தமிழ்மறை விளக்கம்) பெரிதும் துணைபுரிவதாகும். பரிதிமாற்கலைஞனின் 'தமிழ்மொழி வரலாறு' என்ற நூலும் இவ்வாராய்ச்சிக்குப் பேருதவியாயுள்ளது.

[இக்கருத்தூற்றத்திற்குப் பெருந்துணை புரிந்தவர்—முதுபெரும் புலவர், இந்திய விஞ்ஞானக் காங்கிரசு உறுப்பினர், கரையாள பிள்ளை திரு. உ. போ. முத்துராமலிங்கம் அவர்களாவர்.

பின்னிணைப்பு

1. சித்திர எழுத்துக்கள் — 21 (பேராற்று நெடுந்துறையன் காலம்)
2. இடைக்கழிச் செங்கோடன் காலம் — 25
3. அகத்தியர் காலம் — 31
4. தொல்காப்பியர் காலம் — 33

சித்திர எழுத்துக்கள் 21. பேராந்துநெடுந்துறையன் காலம்.



இடைக்கழிச் செங்கோடன் காலம்—25

உயிர்	10:	அ ஆ இ ஈ உ ஊ ஏ ஐ ஓ ஔ
வல்லினம்	5:	க ச ட த ப
மெல்லினம்	5:	ங ஞ ண ந ம
இடையினம்	5:	ய ர ல வ ள

[உயிர்: 10 (எ, ஒ) நீங்கலாக]

அகத்தியர்காலம்—31

உயிர்	12:	அ ஆ இ ஈ உ ஊ எ ஏ ஐ ஒ ஓ ஔ
வல்லினம்	6:	க ச ட த ப ற
மெல்லினம்	6:	ங ஞ ண ந ம ன
இடையினம்	6:	ய ர ல வ ள ழ
ஆய்தம்	1:	ஃ

[புதிதாகத் தோன்றியவை: எ, ஒ, ழ, ற, ன, ∴ — 6]

தொல்காப்பியர் காலம்—33

அகத்தியர் காலத்திய எழுத்துக்கள்	—	31
குற்றியலிகரம்	—	1
குற்றியலுகரம்	—	1
		33

மனிதர் பற்றிய மதிப்பீடுகள்

டி. என். சுகிசுப்பிரமணியன்
(வாழ்வியல் நாடக அமைப்பாளர்)

உலகம் முன்பிருந்ததுபோல இன்று இல்லை. விநாடிக்கு விநாடி உலகத்தில் மதிப்பீடுகள் நடந்து கொண்டிருக்கின்றன. நாட்டுக்கு நாடு 'அரசியல் மதிப்பீடு, ஏற்றுமதி இறக்குமதி மதிப்பீடு, கல்வி—கலாச்சார மதிப்பீடு' என்று பலதரப்பட்ட மதிப்பீடுகள் நடக்கின்றன.

வாணிப உலகத்தின் ஆதிக்கம் பெருகி வளர்கிறது. அரசியல் வாதிகளின் செல்வாக்கு ஓங்கி வருகிறது. மனிதர்கள், கட்சிகள், கட்டிடங்கள், தொழிலகங்கள், சட்ட மன்றங்கள் எங்கும் மதிப்பீட்டு நோக்கம் சதா வேலைசெய்து கொண்டே இருக்கிறது.

விற்பனைப் பொருள்களின் விலை மதிப்பை அவற்றின் தரம் அவற்றின் நிறுத்தலளவை, அல்லது முகத்தலளவை அல்லது எண்ணலளவை கொண்டு மதிப்பீடு செய்கிறோம். எந்தப் பொருளுக்கும் விலைவைக்கிறோம். **விலை வைக்கிற பொருள்களிடம் மதிப்பு வைப்பது இல்லை. ஐந்து பைசா மதிப்புள்ள குங்குமத்திற்குள்ள மதிப்பு வேறு, ஐந்து ரூபாய் விலையுள்ள செருப்புக்குள்ள மதிப்பு வேறு.** ஆயினும் வாணிபச் சந்தையில் எல்லாப் பொருள்கட்க்கும் விலை உண்டு.

வாணிபப் பொருளாக இருந்தாலும், விலைக்குமப்பால் சிலபொருள்கள்மீது மதிப்பும் மாண்பும் நமக்கு இருக்கும். இதேபோன்று மனிதர்களிடம் நாம் எதற்காக மதிப்பு வைக்கிறோம்? என்னென்ன அம்சங்கள் மனிதர்கள்மீது மதிப்பு வைக்கச் சொல்லுகின்றன? அல்லது என்னென்ன வகை மனிதர்கள் சமுதாயத்தில் மதிப்பைப் பெறுகிறார்கள்?

பிறந்தவர்கள் யாவரும் மதிப்புப் பெறுவதில்லை. கல்லெல்லாம் மாணிக்கக்கல் ஆகுமா? மாணிக்கக்கற்கள் மத்தியிலும் மாணிக்கங்கள் உண்டு. மனிதர்களுக்குள் மனிதர்கள் உண்டு. விதிக்குவிதிபோல வீரருக்குள் வீரன், பெண்களுக்குள் பெண் என்றெல்லாம் சலித்தெடுத்துத் தரம் பிரிப்பார்கள்.

உடல் உறுப்புக்கள் யாவும் இயங்கினால்தான் மனிதன் என்று பெயர். ஆயினும் எண்சாண் உடம்பிற்குச் சிரசே பிரதானம் என்று மதிப்பீடு செய்கிறார்கள். வியர்வை உடலின் பலபாகங்களில் வரலாம். நெற்றிவியர்வைக்குத்தான் மதிப்பு அதிகம். மூளை உழைப்புக்குத்தான் மதிப்பு அதிகம்.

சிரசும், அதன் உழைப்பும் தலைசிறந்தது என்று சொல்லுமாப்போல, மக்களில் தலைசிறந்தவர்களிடம் மதிப்பு வைக்கிறோம். சில சமயம் மிகச்சிறந்த மனிதர்கள் இறந்த பின்னும் அவர்கள்

நினைவையும் நேர்மையையும் தகுதியையும் அவர்கள் விட்டுச்சென்ற ஆக்க வேலைகளையும் தலைமேற் தாங்கித் தொடர்ந்து நடத்துகிறோம்.

மனிதர்களை மதிப்பீடு செய்யும்போது 'இருந்தும் கொடுத்தான், இறந்தும் கொடுத்தான்' என்று போற்றுகிறோம். ஒரு சிலரை 'இருந்தும் கெடுத்தான், இறந்தும், கெடுத்தான்' என்று தூற்றுகிறோம்.

மனிதனை மதிப்பது எதற்காக? எதன் காரணமாக மதிக்கிறோம்?

ஒழுக்கத்திற்காக மதிக்கலாமா? அவனது அறிவுக்காக மதிக்கலாமா? அல்லது தொழிற் திறமை, செல்வம் சேர்க்கும் ஆற்றல் இதற்கு மதிக்கலாமா? மக்கள் மந்தையை மாணிக்க மக்களாக மாற்றும் தலைமைப் பதவிக்காக மதிக்கலாமா? கொள்கைக்காக மதிக்கிறதா? உரிமை வேட்கை ஊட்டுவதற்காக மதிப்பதா? சுதந்திர தாகத்தை ஊற்றெடுக்க வைக்கும் நெஞ்சுரத்திற்காக மதிக்கலாமா?

எத்தைக்கண்டு பிறர்மீது அல்லது பிறரது கொள்கை மதிநுட்பம் இவற்றின்மீது நாம் இச்சை கொள்ளுகிறோம்? மதிப்பீடு செய்தவர்களிடம் மரியாதையும் அன்பு வழிபாடும் செய்கிறோமே எதனால்?

ஒருவரிடம் சீரிய குறிக்கோள்கள் இருக்கலாம் ஆயினும் அவற்றைச் செயற்படுத்துவதில், அணுகும் தன்மைகளில் இவை நமக்குப் பிடிக்காமலிருக்கலாம்.

மற்றொருவரிடம் சீரிய குறிக்கோள்கள் சிறப்பாக இல்லாமல், பிறரை அணுகும் தன்மைகள் சிறப்பாக அமையலாம்.

மனிதனிடம் சிறந்த தன்மைகள், சிறப்பான குறிக்கோள்கள் இருந்து பிறரை அணுகிச் செயல்படும் தன்மைகளும் இருந்தால் நமது மதிப்பீட்டில் அந்த நபர் தனியிடம் பெற்றவராக உயர்ந்து நிற்கிறார்.

இதுபோன்ற மதிப்புக்குள் விழுகிறவர்கள் பலர் நமது கவனத்தையும் கருத்தையும் கவருகிறார்கள். அவர்களை நாம் தரம் பிரிக்கத் தொடங்குகிறோம்.

தோட்டத்தில் விளையும் ஆரஞ்சுப் பழங்களை அதன் உருவம், நிறம், பருமன், கவர்ச்சி போன்ற மதிப்பீடு வைத்து விலை நிர்ணயம் செய்கிறார்கள்.

வைரம், முத்து, பவளம் போன்ற மணிகளை அவற்றின் பருமன், ஒளிச்சுடரும் தன்மைக்கு ஒப்பாகப் பிரிக்கிறார்கள்.

நெல்லும் கரும்பும் பழமும் பயிர்வகையும் தரம் பிரிக்கப்படுகின்றன.

தரம்பிரிக்கும் வகையால் பொருள்களுக்கு விலைவைப்புச் சாத்தியமாகிறது. விலை அதிக மூள்ள சரக்கு உயர்ந்தது; நயமானது; நல்லது. விலைகுறைவான சரக்கு மட்டமானது, போலியானது, ஓரளவு நிலைமை தரவல்லது என்னும் நியதியை அனுசரிக்கிறோம்.

இதே நியதிப்படி பார்த்தால் யாரிடம் பொன்னும் பொருளும் மணச்செழிப்பும் குமிழ்விடு கிறதோ அவனைப் பெரியவனாக மதிக்க வேண்டும். கத்தும் ஆழ்கடலைவிட உண்ணீர் தரும் சிறிய ஊற்று மிகப் பெரிதாக மதிக்கப்படுவதுபோல, லட்சாதிபதிகள் கோடீஸ்வரர்களைவிட அதிக மதிப்பு வாய்ந்தவர்கள் மிகச்சிறிய வாழ்க்கை வடிவத்தில் இருக்கிறார்கள்.

பண்பு, கலை, கவிதை, ஆராய்ச்சி என்னும் இடங்களுக்கு வரும்போது பண விலைக்குள்ள மதிப்புப் போய்விடுகிறது, போயே போய் விடுகிறது என்றுகூட அழுத்தமாகச் சொல்லலாம்,

பயனுக்கு என்று வரும்போது புதிய மதிப்பும் புதிய அளவுகோலும் பிறக்கிறது.

பலதாரம் மணம் செய்தவனைவிட, அவ்வாறு செய்வதே மனிதப் பண்பாகாது என்னும் நியதியை அனுஷ்டிப்பவனைப் போற்றுகிறோம். பிட்சாதிபதியான கலைஞன், கவிஞன், பண்டிதன் லட்சாதிபதியைவிடப் பெரியோன்.

ஆடம்பர அரசனைவிடத் துரும்புபோன்ற துறவி மேலோன்.

பணமுடையார் எல்லாமுடையவரல்லர்; அறிவுடையாரோ எல்லாமுடையவர் என்றெல் லாம் நூதன மதிப்பீட்டு அளவைகள் வைத்துக்கொண்டிருக்கிறோம்.

மனிதனை வயதுக்காக மதிப்பது வேறு; மனிதனை அவன் தரும் வளத்திற்காக மதிப்பது வேறு. சூழன்றும் ஏர் பிடிப்பவன் பின்னால் போவதே உலகம் என்பதுபோல எளிய தோற்றமுள்ள வன் கவர்ச்சிக்காரனைவிட உயர்ந்தோன் ஆகிறான்.

எனவே மனிதனை மதிப்பது வேறு; மனிதத் தன்மையினை மதிப்பது வேறு. மனிதர்களின் வடிவம், வளர்ச்சி ஆற்றல், கல்வி, கேள்வி, செல்வம், இவற்றோடும் நின்றுவிடாத நமது அறிவு இவற் றுக்கு உள்ளும் புறமுமாக நின்று வேறு ஒன்றைத் தேடுகிறது.

அந்த ஒன்று எது?

அதன் பெயர் மனிதத் தன்மை!

மனிதத் தன்மைகள் ஒருவரிடம் இருக்கின்றனவா யென்று எக்ஸ்ரே கதிர்களைப் போல ஊடு ருவிப் பார்ப்பதுதான் மதிப்பீட்டின் நோக்கம்.

மனிதனாக இருந்தும், மனிதத் தன்மை இல்லாதவர்கள் இருக்கலாம். எல்லாச் சிப்பியிலும் நன்முத்துக் கிடைப்பது இல்லை. முத்து இருந்த சிப்பியை எவரும் பாதுகாப்பது இல்லை. முத்தை எடுத்துக்கொண்டு சிப்பியை மறந்துவிட வேண்டும். மனிதனின் எளிமை, வறுமை, சமுதாய அந் தஸ்து இவற்றை மறந்து, அவனிடமுள்ள மனிதத் தன்மையை நாம் போற்றிப் பாதுகாக்கவேண்டும்.

இந்த மனிதத் தன்மையானது வெளிப்படையாகத் தெரியாத ஒருவகைப் பண்பு. அது உறுப்பாக மனிதர்களுக்குள் ஒளிந்து கிடக்கும் திறமை, மனிதர்களிடம் இருக்கும் சக்தி. இவற்றை நாம் மதிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். எவை புறக்கண்ணுல் காணக் கிடைக்கவில்லையோ, அவற்றை அறியவும், அறிந்த பின்பு அவற்றைப் பேணவும், பாராட்டவும் தெரியவேண்டும்.

பச்சிலைகளிலுள்ள மருத்துவச் சக்தியை அறிந்து இதனை வவழிழி வம்சமாக நாம் காப்பாற்று கிறோம். பச்சிலைகள் யாவும் நோய்தீர்க்கும் தாவரம். இதேபோன்று காய்கனி, கிழங்கு, மாவுப் பொருள்கள் தரும் தாவர இனங்களையும் அழியாது பயிரிட்டுப் பாதுகாக்கிறோம்.

மக்களில், சமுதாயத்தின் பசிநீக்கும் தகுதியுள்ளவர்கள், நோய்தீர்க்கும் தகுதியுள்ளவர்கள் என்று இரு சாரார் இருக்கின்றனர். வைத்தியர்களில் மன நோய்தீர்க்கும் வல்லவர்கள் இருக்கிறார்கள். வயிற்றுப்பசி நீக்குபவர்களைவிட அறிவுப்பசி நீக்குபவர்கள் மனிதர்களில் சிறந்தவர்கள்.

மனித சமுதாயத்தின் பசி வகைகளைப் போக்கக் கூடியவர்கள் நமக்குத் தேவை. அதே சமயம் மனிதத்தன்மை நிரம்பியவர்களாய் இருப்போர் மதிப்பீட்டிற்குத் தேவை.

சமுதாயத்தின் அன்றாட வாழ்வு சிறப்புறுவதற்குச் செம்மையை வளர்ப்பவர்கள், ஒழுங்கைப் பேணுபவர்கள் தேவை. பிறர் உரிமைகளில் தலையிடாதவர்கள் தேவை. பிறர் சுதந்திரத்தை மதிப் பவர்களும் நமக்குத் தேவை.

சமுதாயத்தில் பிறந்த மனிதர்கள் யாவரும் நல்லன செய்யமாட்டார்கள். சுயநலம், வாழ் வுப் போராட்டம் காரணமாகத் தீமை செய்தும் வாழ்வார்கள். தீயதன்மைகளை நசுக்குவதற்கும், நல்ல தன்மைகளை வளர்ப்பதற்கும் மாமனம் படைத்தவர்கள் தேவை.

தீயனவற்றை ஒடுக்கும் ஆற்றல் இருக்கலாம் சிலருக்கு. ஆனால் நல்லனவற்றை வளர்க் கும் திறமை இல்லாது போகலாம். நல்லன பேணும் திறமைசாலிகளும் தீயன நீக்கும் திறமைசாலி களும் ஒன்றுகச் சந்தித்து அனுசரணையாக இருக்கும் அறிவு பெற்றுக வேண்டும். அனுசரணைச் சக்திக்கு வலிமை அதிகம். விட்டுக் கொடுக்கும் இயல்பு நிரம்பிய மனிதர்கள் பிறரை உயர்த்த முடியும். தாமும் உயரமுடியும்.

மனிதத்தன்மை என்பதற்கு இரக்கச்சித்தம் என்று மட்டும் பொருள் கொள்ளக்கூடாது. காரியசாதனையாளர்களிடம் கடினச் சித்தத்துடன், ஓரளவு இரக்கச் சித்தமும் இருக்கும். இரக்கச் சித்தம் மிகுதியாக இருப்பவர்களிடம், ஓரளவு கடினச் சித்தமும் கண்டிப்பும் இருக்கக் காணலாம். எந்த மனிதத்தன்மை யாரிடம் வகைவகையாகப் புனைந்து இருந்தாலும், அத்தனை மனி தத் தன்மையும் ஆக்க வேலைக்கும், வளர்ச்சிப் பாதைக்கும் டயன்படுவதாக இருக்க வேண்டும்.

வளர்ச்சியிலும் ஆக்கவேலையிலும், ஈடுபடுகின்ற மனிதத்தன்மைகளை மட்டுமே சமுதாயம் மதிப்பீடு செய்ய முன்வரும்.

பயிரிடும் காலை, பசி நீக்கும் பயிர்வகை என்றும், பணம் குவிக்கும் பயிர்வகை என்றும் இருவகைப்படுத்திப் பயிர்செய்கிறோம். இவ்விரண்டு வகையும் சமுதாயத்திற்குத் தேவை. இரண்டில் எது மிக உயர்ந்த தேவை என்றால் பசிநீக்கும் பயிரே தேவை. இதிலே மனிதத்தன்மை மிகுதி என் பது சான்றோர் கொண்ட முடிவு.

சான்றோர்கள் கடைப்பிடிக்கும் ஒழுங்கும் நியதிகளும் போலீஸ்காரர்கள் கடைப்பிடிக்கும் வீதி ஒழுங்குக்கு ஒப்பு. சமுதாய வீதியில் நடக்கும்போது சான்றோர்கள் அறங்காவலர்களாய் இருக்கிறார்கள். போலீஸ்காரர்கள் காட்டும் ஒழுங்குப்படி நடந்தால் நாமும் நடக்கலாம், பிறரையும் தடை செய்து நடக்க வைக்கலாம். பிறர் நல்வழியைத் தடுப்பவர்கள், தங்கள் நடமாட்டத்தைத் தடுக்க வழிகோலுகிறார்கள்.

விலையும் மகத்தில் தூற்ற வேண்டிய பொருள்கள், போற்றிப் பாதுகாக்க வேண்டிய பொருள்கள் என்று இருவகை இருக்கும்போது, பதர்நீக்கி, மனிதனைப் பாதுகாக்க வேண்டும்.

சொல்லிலே, செயலிலே பயனுள்ளவை பயனில்லாதவை இரண்டும் உண்டு. பயனுள்ள வற்றைப் பாதுகாக்கவேண்டும். இதுவே மனிதத் தன்மையின் அடித்தளம்.

மனிதர்களை உருவத்தால் அன்றி உள்ளத்தால் நிறுத்துப் பார்க்க வேண்டும்.

மனிதர்களை வயதாலன்றி, அறிவால் சிறந்தவர் என்று பிரித்துப் பார்க்கத் தெரிய வேண்டும்.

மனிதர்களில் நெற்றி வியர்வை சிந்தியவர்களைக் காணும் சக்தி வரவேண்டும். கொள்கை கள், உரிமைகள் இவற்றைச் சுட்டிக்காட்ட வல்லவர்களே மக்களில் சிறந்த மனம் படைத்தவர்கள்.

மனிதர்களில் விலை மதிக்கக்கூடிய பெருள்களையும் விலைமதிக்க வொண்ணுத அற்புதங் களையும் தரவல்லவர்கள் இருப்பார்கள். ஒரு சிலர் இருப்பதைக் காப்பதில் வல்லவர்களாகத் திகழ் வார்கள். காத்தலும் மனிதத் தன்மைகளில் ஒன்றே. சிறந்த குணம், சிறந்த கருத்து, சிறந்த செயல் உள்ளவர்களைப் பின்பற்றுகிறவர்களையும் கணிக்கும் ஆற்றல் தேவை.

நல்ல நம்பிக்கைகள், நல்ல கொள்கைகள் நிலவவும் வளரவும் துணை நிற்பவர்கள் மனிதர்கள்.

மனித சமுதாயத்தில் ஒரு சிலர் தடையும் குறையும் சொல்லுவார்கள். தேர்த் திருவிழா வில் வடம் பிடிப்பவர்கள்தாம் தேரை இழுப்பவர்கள். இவர்களே தேரோட்ட விழாவிற்குத் தேவை. இதே சமயம் தேர்ச் சக்கரத்தின் ஓட்டத்திற்கு முட்டுக் கொடுக்கும் நபர்கள் இருக்கிறார்கள். தேரோட் டத்திற்குத் தடை செய்கிற இவர்கள் பாதைவிட்டுப் பிறழாதிருக்கவும் வீதிமருங்கில் சாடி, ஓடித் தேருக்கு ஆபத்து விளைவிக்காமலிருக்கவும் மறைமுகமாக நன்மை செய்கிறார்கள்.

மாட்டிற்கு மூக்கணாங் கயிறு போன்றவர்களும் சட்டசபைக்குள் எதிர்க்கட்சியாளராகவும் வந்து சமுதாய வளர்ச்சிக்குத் தடைவிதித்துப் பாடுபடுகிறவர்களும் மனிதத் தன்மை உள்ளவர்களே.

மனித மனத்தின் மாண்பை எங்கும் காணமுடியும்!

கட்சியை மறந்தும் மனிதத்தன்மையுள்ளவர்களைச் சட்டசபைக்குள் காணலாம்.

ஜாதியப் பக்தியைக் கடந்தும் மனிதத்தன்மையுள்ளவர்களைச் சமய வழிபாட்டில் காணலாம்.

அலுவலகங்களில் நான்கு வர்க்க பேதங்களோ மறந்தும் செயல்படுகிறவர்களையும் காணலாம்.

பிறரிடமுள்ள மனிதத்தன்மைக்கு மதிப்புக்கொடுப்பது மிகப் பெரிய சீலம், மிகப் பெரிய தவம். இந்தத் தவ வேள்விக்கும் நம்மிடையே அதிக எண்ணிக்கையுள்ள நபர்கள் மிகமிக. அந்த நாடு, அந்தமொழி அந்த இனம் ஓங்கி உயர்ந்து வாழ முடியும. புதிய பாரம்பர்யச் சுவட்டைவிட்டுச் செல்லவும் முடியும்.

எந்த மதிப்பீடுகள் செய்தாலும் ஆக்கசக்தியை மதிப்பிடுவது போன்று, மறைமுகமான எதிர்ப்புச் சக்தியைத் தடைசெய்து நேர்மை வழங்கிய மனிதத்தன்மைகளையும் நாம் மதிப்பீடு செய்யத் தெரிய வேண்டும்.

அப்போதுதான் சமுதாயத் தேர் ஒழுங்கான நிலைகாண வந்து நிற்கும்.

மதிப்பீடு என்னும் படிக்கற்கள் இல்லாது போனால் வாணிபம் நடக்காது. கலை பிறக்காது. கட்சிகள் செயலாற்ற முடியாது. நியாயங்கள் நிலவா. மதிப்பீடுகள் தாம் உயர்வு தாழ்வுக்குரிய அடித்தளம். மதிப்பீடுகள் அத்தனை புனிதமானவை.

" இந்தி இந்தியப் பொதுமொழி. ஆகவே அது நம்முடைய கல்வித்திட்டத்தில் கட்டாயப் பாடமாக அமையவேண்டும். தொடர்ந்து இந்திக்குப் போதுமான முக்கியத்துவத்தை அளிப்பதும் நம்முடைய கடமை."

சட்டசபைப் பேச்சு—(2—3—1964)

* * * *

" தொழில் மாற்றத்திற்கு முக்கியக் காரணம் இந்த மாநிலத்தில் ஏராளமான மின்சக்தியைச் சீக்கிரமாக உற்பத்தி செய்திருப்பதுதான்."

சட்டசபைப் பேச்சு—(2—3—1963)

நான் அறிந்த தலைவர்

T. கௌரி,

செயலாளர், காந்தி ஆசிரமம், திருச்செங்கோடு.

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து நாற்பத்தைந்தாம் வருடம், நான் தொழிற்சங்க இயக்கத்தில் ஈடுபட்டிருந்த காலம். நெல்லையில்தான் முதன்முதலாக முயற்சி செய்து வர்த்தகக் குமாஸ்தாக்களுக்கு வாராந்திர விடுமுறையைப் பெற்ற நேரம். இத்தகைய கோரிக்கைகளை நிறைவேற்றும் குறிக்கோளுடன் துவக்கப்பட்டதே 'வர்த்தகக் குமாஸ்தாக்கள் சங்கம்.' இதனுடைய ஆண்டுவிழாவைச் சிறப்பாகக் கொண்டாடும் எண்ணத்துடன் நிகழ்ச்சிகளில் பங்குகொள்ள சிறந்த தலைவர்களையும், சொற்பொழிவாளர்களையும் தேடிக் கொண்டிருந்தோம்.

அச்சமயம் பாரதத்தின் விடுதலை இயக்கத்தில் ஈடுபட்ட பல தேசப் பக்தர்கள், சிறையிலும், சிலர் வெளியிலும், இருந்து வந்தார்கள். காங்கிரஸ் மகாசபை வெள்ளையரின் ஆதிக்கத்தால் தடை செய்யப்பட்டு, அது தன் பணியைத் தொடர முடியாமல் முடக்கப்பட்டிருந்தது. இருப்பினும் சிறையிலிருந்து வெளியே வந்த தியாகச் செம்மல்கள், மீண்டும் விடுதலை இயக்க வேலையைத் தொடங்க வேண்டுமென்றும், காங்கிரஸ் மகாசபை தடைப் பட்டிருந்தாலும், காங்கிரஸ்காரர்கள் சங்கம் என்ற ஸ்தாபனத்தை அமைத்து அதன்மூலம் நம் ஆக்கப் பணிகளைச் செயல்படுத்த வேண்டுமென்றும் விரும்பினர்கள். இந்த எண்ணத்தின் அடிப்படையில் நெல்லை ஸ்ரீசுவாமி நெல்லையப்பர் பெருவீதியிலிருக்கும் கல்யாணி அச்சகக் கட்டிடத்தில் தலைவர்கள் பலர் கூடினர். அக்கூட்டத்திற்கு நாங்களும் சென்றிருந்தோம். எங்கள் நோக்கம், எங்கள் வர்த்தகக் குமாஸ்தாக்கள்சங்க ஆண்டுவிழாவிற்கு ஒரு சிறந்த தலைவரைப் பெறவேண்டுமென்பதே. அக்கூட்டத்திற்கு வருகை தந்தவர்களில் குறிப்பிடத்தக்கவரான, தூத்துக்குடி தியாகி திரு. பெ. கந்தசாமிப்பிள்ளை அவர்களை அணுகினேம். எங்கள் விருப்பத்தைப் புரிந்துகொண்ட திரு. பெ. க. அவர்கள் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டார்கள் :

"தூத்துக்குடியில் A.P.C. வீரபாகு என்ற இளைஞன் மிகவும் முற்போக்கு எண்ணங்களையும், தேசீயக் கருத்துக்களையும் மனதில் கொண்டவனைத் திகழ்கின்றான். பி.ஏ. வரை படித்த அவன் சிறந்த சொற்பொழிவாற்றும் திறன் கொண்டவன். அவனையெல்லாம் உற்சாகப்படுத்தி நம் பணிகளில் ஈடுபடுத்துவது அவசியமாகும். ஆகவே A. P. C. வீரபாகுவை உங்கள் ஆண்டுவிழாவில் பங்கு பெற ஏற்பாடு செய்யுங்கள்," என அன்புடன் கட்டளையிட்டார்கள். ஆனால் அன்று நாங்கள் திரு. A. P. C. V. அவர்களைப்பற்றி நன்கு அறியாததால் ஒரு கணம் சற்றுத் தயங்கினேம். ஆனால் திரு. பெ. க. அவர்கள், எங்களை விடுவதாக இல்லை.

அவர்களுடைய கருத்தை ஏற்று எங்கள் சம்மதத்தைக் கொடுத்தோம். இன்று அதனை நன்றியுடன் நினைவில் கொள்கின்றோம்.

திரு. A.P.C.V. அவர்கள் விழாவினில் பங்குகொள்ள நெல்லைக்கு வந்தார்கள். மந்திரமூர்த்தி உயர்நிலைப்பள்ளியில் அமைந்த ஆண்டுவிழாப் பந்தலுக்கு மேளதாளத்துடன் அவர்களை ஊர்வலமாக அழைத்துச் சென்றோம். அன்றுதான் நெல்லை மாநகர மக்களுக்கும் திரு. A. P. C. V. அவர்களை நன்கு தெரிந்துகொள்ள முதன்முதலாக ஒரு வாய்ப்புக் கிட்டியது. திரு. A. P. C. V. அவர்களின் கம்பீரமான தோற்றமும், மடை திறந்தாற் போன்ற சொற்பொழிவும், நெல்லை நகர வர்த்தகக் குமாஸ்தாக்களுக்குப் புத்துணர்ச்சி அளித்தன. இந்தச் சந்தர்ப்பத்தில்தான் நாங்களும் அவர்களுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பைப் பெற்றோம்.

திரு. A. P. C. V. அவர்கள், தமது வாழ்நாளில் சலியா உழைப்பின் மூலம், பல நிறுவனங்களின் பொறுப்புக்களை ஏற்றுத் திறமையாகச் செயற்பட்டதுடன், காங்கிரஸ் மகாசபையைப் பெரிதும் வளர்க்கும் பணியிலும் முன்னணியில் நின்றார்கள். நெல்லை மாவட்ட காங்கிரஸ் தலைமைப் பதவி அவர்களிடம் வந்தபோது, அக்காலத்திலேயே அவர்கள் சீரும் சிறப்புமாக அப்பெரும் பொறுப்பினையேற்றுத் திறம்படச் செயலாற்றினார்கள். அடிக்கடி ஊழியர்களைக் கூட்டி விவாதித்து, உற்சாகமூட்டி சேவாதள முகாம்கள் அமைத்து இளைஞர்களைத் தேச சேவைக்குத் தயார் செய்தது அவரது பணிகளில் குறிப்பிடத்தக்கதாகும். அவர்கள் மாவட்டக் காங்கிரஸ் கமிட்டித் தலைமைப் பதவியையேற்றிருந்த சமயம் நெல்லை மாவட்ட ஜில்லா போர்டு தேர்தல் நடைபெற்றது. 54 ஸ்தானங்களில் காங்கிரஸ் 52 ஸ்தானங்களைக் கைப்பற்றியது. ஆயினும் இரண்டு இடங்களில் மட்டும் தோல்வியைச் சந்தித்தது. கிடைத்த பெரும் வெற்றியைக் காட்டிலும் அடைந்த இச்சிறு தோல்வியால் பெரிதும் வருந்தினர். தோல்விக்குக் காரணமான சகநண்பர்களின் செயலை நினைத்து அவர்கள் மிகவும் வேதனைப்பட்டார்கள். இந்த நேரத்தில் அவர்களைச் சமாதானம் செய்வது எங்களுக்கு மிகவும் கடினமாக இருந்தது. திரு. A. P. C. V. அவர்கள் பொருளாதாரக் கொள்கையில், காந்தீயப் பாதையையே பெரிதும் விரும்புகிறவர்கள். அவர்களுக்குப் பொருளாதாரக் கொள்கைகளில் அழுத்தமான ஈடுபாடும், சிறந்த ஞானமும் உண்டு. அதற்கோர் உதாரணம்,

திரு. A. P. C. V. அவர்கள் வீட்டில், பசுமாடுகள் வளர்த்து வந்தார்கள். அவர்கள் குடும்பத்திற்குத் தேவையான பாலை அவற்றின் மூலம் பெற்று வந்தார்கள். இந்தப் பாலை வெளியாரிடம் வாங்குவதன் மூலம் அதன் விலையில் மலிவு இருப்பதை அவர்கள் அறிந்திருந்துங்கூட அம்முறை நமது நாட்டிற்கு ஏற்றதல்ல என்று வாதாடுவார்கள். 'ஒவ்வொரு குடும்பமும் தன்னிச்சையாக ஒரு பொருளிலாவது தன்னிறைவு பெறவேண்டும். அம்மாதிரியான உற்பத்திப் பெருக்கத்தில் ஈடுபடுவதுதான் நாம் நம் நாட்டிற்குச் செய்யும் கடமை' என்பார்கள். இதை அவர்கள் கூறும்பொழுது நம் குடும்பத்தில் பசுமாடுகள் இருப்பதின் மூலம் சிறந்த செல்வம் இருப்பதாக நாம் கருத வேண்டும. பால் நம் தேவையைப் பூர்த்தி செய்வதோடு, விவசாயத்திற்குத் தேவையான உரமும் பெறக்கூடிய வாய்ப்பையும் தருகிறது. இவ்விதமாக ஏதாவதொரு சுய தேவையில் ஒவ்வொரு குடும்பமும், ஈடுபடுவதுதான் காந்தீயப்

பொருளாதாரம் என்றும், அதுவே நம்மையும், நம் நாட்டையும் காக்கும் சிறந்த ஆயுதம் என்றும் அவர்கள் அடிக்கடி கூறுவார்கள். இதுபோன்று பலபல அறிவுரைகளை அவர்கள் மூலம் நாங்கள் கேட்டுப் பின்பற்றிச் செல்ல முயன்று வருகிறோம்.

திரு. A. P. C. V. அவர்கள் ஒரு சிறந்த அரசியல்வாதியாக இருப்பினும், சர்வோதய எண்ணங்கள் இந்த நாட்டில் வளர வேண்டுமென்பதில் மிகவும் அக்கறைகொண்ட அன்பராவார்கள். அந்த எண்ணங்களின் காரணமாகக் கடம்பூரிலும், கழுகுமலையிலும், இரண்டு சர்வோதய மாநாடுகள் நடைபெற அவர்கள் பேருதவி செய்தார்கள். "இந்த நாட்டை எந்த அரசியல்வாதியாலும், காப்பாற்ற முடியாது; ஆனால் அண்ணல் காந்திஜி வழியில் வந்த தியாகசீலர்கள் நிச்சயம் நம் நாட்டைக் காப்பாற்றுவார்கள்" என்ற திடமான நம்பிக்கை அவர்களுக்கு உண்டு. இந்த நோக்கத்தால் காந்தீயத் தொண்டர்களுக்கு எப்பொழுதும் உதவிசெய்து வந்தார்கள். எனினும் இதற்காக அரசியல் உலகிலிருந்து எல்லோரும் வெளியே வந்துவிட வேண்டுமென்ற கருத்தையும், அவர்கள் ஏற்றுக்கொள்வதில்லை. அது "காலத்தால் செய்யவேண்டிய பணி" என்று கூறுவார்கள். "எங்களுடைய அரசியல் பணிகளில் காந்தீயப் பணியாளர்களை ஸ்திரமாக்குவதும், ஒரு பகுதியே" என அவர் கூறுவதுண்டு. இந்த எண்ணத்தின் அடிப்படையிலேயே இன்றும் அவர்கள் சர்வோதய அன்பர்களுக்கு மிகவும் உறுதுணையாக இருந்து வருகின்றார்கள். இந்தக் கருத்துடன் நெல்லை மாவட்டத்தில் "கிராமதான முன்னேற்ற நிறுவனம் அமைத்ததன் மூலம், உற்பத்திப் பெருக்கத்திற்கும், விவசாய அபிவிருத்திக்கும் உறுதுணையாக இருந்து வருகின்றார்கள். இந்தப் புனிதப் பணிக்கு மேற்கு ஜெர்மனி அன்பர் திரு. மேயர் அவர்கள் பண உதவி அளித்து வருகின்றார்கள். அவர்கள் வழங்கும் பணத்திற்குச் சமமாக, நம் தேச மக்களிடமும், நன்கொடை வசூல் செய்து, கிராம மக்களுக்குச் சுபிட்சத்தை வழங்கி வருகின்றார்கள். இந்த அரிய பணியை ஜெர்மானிய அன்பரான திரு. மேயர் அவர்களே அடிக்கடி இங்கு வந்து, பார்வையிட்டுத் திரு. A.P.C.V. அவர்களைப் பாராட்டிச் செல்வது மிகவும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

திரு. A. P. C. V. அவர்களைக் காண்பதற்காக அவர்கள் இல்லத்திற்குச் செல்லும் போது, அவர்கள் மிகவும் சுறுசுறுப்புடன், எத்தனை நண்பர்கள் வந்தாலும், அத்தனை பேர்களுக்கும் உரிய பதில்களைக் கையிலிருக்கும் தினப்பத்திரிகையைப் படித்துக்கொண்டே கூறிக்கொண்டிருப்பதை நாம் பார்க்கும் பொழுது ஏதோ அட்டாவதானம் செய்வது போல் நமக்குத் தோன்றும். குறிப்பிட்ட நேரம் முடிந்ததும், வழக்கமாக அவர்கள் வழிபடும் முருகப் பெருமானுக்கு வழிபாடு செய்யச் சென்றுவிடுவார்கள். அந்த நேரங்களில், இறைவன் பேரில் பக்திப் பெருக்கால் அவர்கள் மனமுருகிப் பாடும் பாடல்களைக் கேட்டு நாமும் இன்புறலாம். இதற்குப் பின்பு அவர்களைக் காண விரும்புபவர்களுக்குப் 'பிராவிக்கு' வாருங்கள் என்ற உத்திரவு அவர்களிடமிருந்து கிடைக்கும், அதன்படி அங்கும் ஒரு திருக்கூட்டம் அவர்களைக் காணக் காத்திருக்கும். அத்தனை பேர்களுக்கும் வேண்டிய காரியங்களைச் செய்து கொடுப்பார்கள்.

திரு. A P. C. V. அவர்களிடம் நெருங்கிப் பழகுகிறவர்கள் பல சுவையான சம்பவங்களை அவர்கள் கூறக் கேட்கும் வாய்ப்புக்களைப் பெற்றிருக்கின்றார்கள், அதில் அடியேனும் ஒரிய சிறப்பான வாய்பைப் பெற்றேன்.

ஒரு சமயம் செக்கிழுத்தச்செம்மல் உயர்திரு. வ. உ. சிதம்பரனார் அவர்கள் தமது தள்ளாத வயதில் மற்றுமொரு தேசபக்தரான மாசிலாமணிப்பிள்ளை அவர்களையும் அழைத்துக் கொண்டு, திரு. A. P. C. V. அவர்களைச் சந்திக்க வந்த நிகழ்ச்சி அது. எதிர்பாராதவிதமாகத் தம் எதிரில் திரு. வ. உ. சி. அவர்களைக் கண்ட இளைஞர் திரு. A. P. C. V. அவர்கள் மனம் நெகிழ்ந்து, அவர்கள் வந்த காரியம் குறித்து விநயத்துடன் வினவினார்கள். அப்போது வ. உ. சி. அவர்கள், "இந்த மாசு இல்லா மணியையும், இவர் இந்த நாட்டிற்காகச் செய்துள்ள தொண்டையும், சேவையையும், நீ அறிவாயா?" என வினவி, "இந்த மனிதர் இன்றும் வெள்ளையனை எதிர்த்துத் தைரியமாகப் போராடி வருவதுடன், கதராடைகளும், கதர் குல்லாயும் அணிந்து இத்தூத்துக்குடி நகர வீதிகளிலே வலம் வருகின்றார். இவரது தியாகத்தையும், தீரத்தையும் எண்ணி நாம் அவருக்கு உதவிசெய்ய வேண்டாமா? அத்தகைய சந்தர்ப்பம் இப்பொழுது ஒன்று உனக்கு வந்துள்ளது" என்று திரு. A. P. C. V. அவர்களின் பாட்டியாரிடம், திரு. மாசிலாமணிப்பிள்ளை அவர்கள் கடன்பட்டிருப்பதையும், அதனைத் திரும்பக் கொடுக்க இயலாத நிலையையும் சுட்டிக் காட்டி, உதவும்படி வேண்டினாராம். இதுபோன்ற நிகழ்ச்சிகள்தாம் தேசீயத்திலும், கதர் அணிவதிலும் தமக்கு ஈடுபாடு ஏற்படக் காரணமாக அமைந்தன என உணர்ச்சிப் பெருக்குடன் திரு. A. P. C. V. அவர்கள் குறிப்பிட்டார்கள். இத்தகைய மனம் உருகத்தக்க பல நல்ல நிகழ்ச்சிகளை அவருடன் உலாவச் செல்லும் போது கேட்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்ததுண்டு.

நீண்ட நாட்களுக்குப் பிறகு நான் திருச்செங்கோடு காந்தி ஆசிரமத்தில் பணி செய்யும் நிலையைத் தெரிந்துகொண்ட திரு. A. P. C. V. அவர்கள், என்னிடம் ராஜாஜியின் ஆசிரமத்தில் பணி செய்ய உனக்குக் கொடுத்து வைத்திருக்கிறது என்று கூறி, என்னை ஆசீர்வதித்தார்கள். அரசியல் உலகில் பல ஏற்றத்தாழ்வுகள் திரு. A. P. C. V. அவர்களுக்கு ஏற்பட்டபோதிலும், ராஜாஜி அவர்களின் அன்புக்குப் பாத்திரமாகவே என்றும் திரு. A. P. C. V. அவர்கள் நடந்து வந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

தூத்துக்குடி நகரை அலங்கரிக்கும் வ. உ. சி. கல்லூரியை அவர்கள் நிறுவிய காலத்தில், திரு. A. P. C. V. அவர்களுக்கு ஏற்பட்ட இன்னல்களையெல்லாம் அவர் சொல்ல நான் கேட்டதுண்டு. இதுபோன்ற எண்ணற்ற இன்னல்களைத் தாங்கித் தேசத்திற்காக அரிய பல சேவைகளைச் செய்து, நாட்டுக்காகவும், பிறருக்காகவும் உழைத்து, வாழ்வாங்கு வாழ்ந்து வரும், சிறந்த காந்தீய வாதியான திரு. A. P. C. V. அவர்கள் மணிவிழாக் கொண்டாடும் இந்தச் சந்தர்ப்பத்தில் அவர்களுக்கு என்றும்போல் துணிவுள்ள நெஞ்சத்தையும், எடுத்ததைச் சிறப்பாக முடிக்கும் ஆற்றலையும், என்றென்றும் வழங்க வேண்டுமென்று இறைவனிடம் வேண்டி நிற்கின்றேன்.

அவரது நலம் பெருக, புகழ் சிறக்க, தொண்டு வளர்க என அனைவரும் வாழ்த்துவோமாக!

தமிழக ஆளுங் காங்கிரஸ் தலைவர் வீரபாகு ஊர்வலத்தில்

திரு. சி. எஸ். உடன் ஏ. பி. எஸ். வீரபாகு

வங்க முதல்வர் திரு. ரேயுடன்
நமது ஏ. பி. எஸ். வீரபாகு

கோவை அரசியல் மகாநாட்டில் **Hon. Sri** சவான் அவர்களுடன்
நமது ஏ. பி ஸ். வீரபாகு

டில்லியில் மாகாண தலைவர்கள் மகாநாட்டில் நமது ஏ. பி. ஸி. வீரபாகு
உரையாற்றுகிறார் (1971)

விடுதலைப் போர் வீரர்

K. S. ராமசாமி

கம்பீரமான தோற்றம். திருநீறும். குங்குமமும் அணிந்த ஆன்மீக உள்ளங்கொண்ட புன்னகை முகம். தூய வெள்ளை ஆடை அணிந்த சுறுசுறுப்பான மனிதர். அஞ்சாநெஞ்சம் கொண்டவர். அரசியல் அனுபவமும், சமூக சேவையும் இவரது தனிச் சிறப்புக்கள்.

திரு. A. P. C. என்றாலே சில சிறந்த பண்புகளும் சிறப்புக்களும் முன் நிற்கின்றன. திரு. வீரபாகு அவர்களைப் பார்ப்பவர்களுக்கு அதற்குள் இவருக்கு மணிவிழாவா என்று தோன்றும். அவருடைய அரசியல் வாழ்வு, சமூகத்தொண்டு இவற்றைத் தெரிந்தவர்களுக்கு இவருக்கு இப்பொழுது தானே மணிவிழா என்று கேட்கத் தோன்றும்.

நண்பர்களுக்கெல்லாம் சிறந்த நண்பர். முடிவெடுத்து ஒரு காரியத்தை ஆரம்பித்துவிட்டால் முடிக்காமல் நிற்கமாட்டார். விடாமுயற்சியினால் பல பெரிய காரியங்களைச் சாதித்தவர்.

வ.உ.சி. கல்லூரி தூத்துக்குடிக்கே ஒரு சிறந்த அணிகலனாக விளங்குகின்றது. ஊருக்குப் பெருமையளிக்கும் உன்னத ஸ்தாபனம். தேச வீரர் சிதம்பரனார் பெயரைத் தாங்கி மாணவர்களுக்குத் தேசபக்தியையும், அறிவு ஒளியையும் வழங்கி வருவதுகண்டு நாம் எல்லோரும் பெருமைப்படுகிறோம்.

திரு A. P. C. அவர்கள் சிறந்த விடுதலைப் போர் வீரர். ஆங்கிலேயே ஏகாதிபத்தியத்தை எதிர்த்துக் காந்தியடிகள் புரிந்த அஹிம்சைப் போரில் சிறை சென்றிருக்கிறார்கள்.

நாடு சுதந்திரம் பெற்றபின் தமிழ்நாடு சட்டமன்றத்தில் இருமுறை உறுப்பினராகப் பணியாற்றியுள்ளார்கள்.

நெல்லைமாவட்டத்தின் பொருளாதார முன்னேற்றத்தில் மிக்க அக்கறை கொண்டவர். விவசாய வளர்ச்சிக்காகச் சர்வோதய சங்கத்தின்மூலம் அரிய பெரிய சேவை செய்துள்ளார்கள். கூட்டுறவு, கல்வி அபிவிருத்தியில் போற்றற்குரிய சேவை செய்துள்ளார்கள்.

ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்டவர். சர்வாதிகாரத் தன்மையை எதிர்ப்பவர்.

நம் நாட்டின் எதிர்காலத்தில் நம்பிக்கை கொண்டவர். நம் நாட்டில் முற்போக்குத் திட்டங்கள் நடைபெறவேண்டுமென்றால், ஜனநாயகம் பாதுகாக்கப்பட வேண்டுமென்றால் இன்று இந்திரா காந்தியின் தலைமைதான சிறந்தது, இந்திய தேசீயக் காங்கிரஸால்தான் முடியும் என்பதை உணர்ந்து கஷ்டமான நிலையில் கட்சிப் பொறுப்பை ஏற்று, தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் பதவியை அலங்கரித்தார்.

அன்னாருக்கு 60 ஆண்டு என்றால் தமிழ்நாடே அவர்களை வாழ்த்துகிறது. மேலும் பல்லாண்டுகள் அவர்கள் ஊக்கத்துடனும் உற்சாகத்துடனும் கட்சிப் பணியும் தேசப் பணியும் ஆற்றிட வேண்டுமென்று எல்லோரும் வாழ்த்துகிறோம்.

வரலாற்றுத் தென் கடலில் ஒரு முத்துக்குளிப்பு

பி. ஸ்ரீ.

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து முப்பத்திரண்டாம் ஆண்டு, மே திங்கள், பதின்மூன்றில் பண்டித ஜவஹர்லால் நேரு, சிறையிலிருந்து ஒரு வரலாற்றுத் திருமுகம் 'தென் இந்தியப் பெருமக்கள்' என்ற தலைப்பில் வரைந்துள்ளார். அதில், தமிழ் மக்களின் வரலாற்றில் ஆழமுக்குளித்து எடுத்த சில முத்துக்களைக் காண்கிறோம். அதை ஒட்டி எழுந்ததுதான் விளக்கமும் விமரிசனமுமான இச்சிற்றுரை.

கிறிஸ்து சகாப்தத்தின் தொடக்கத்தில் பாண்டிய மன்னர் தலைமையில் சமயச் சார்பின்றிப் புலமைச் சார்பில் சங்கம் நடந்ததையும் தமிழ் வளர்ந்ததையும் உலக வரலாற்றில் ஒரு புதுமை நிகழ்ச்சியாகச் சுட்டிக் காட்டுகிறார் பண்டித நேரு.

அந்தக் காலத்திலேயே இயற்றமிழ், இசைத் தமிழ், நாடகத் தமிழ் என்னும் முத்தமிழாக நம் தாய்மொழி வளர்ந்திருந்தது. இது நம் முன்னோரின் அழகிய உள்ளப்பாங்கையும் நுண்கலை ஆர்வத்தையும் நன்கு புலப்படுத்துகிறது.

'முத்தும் முத்தமிழும்' தந்தது பாண்டிநாடு என்பது கம்பன் வாக்கு. இந்தச் சொற்றொடர் பாண்டிநாட்டார் கலை வளர்ச்சியோடு அதற்கு முன்னோடியாகச் செழிப்பான ஒரு பொருளாதாரத்தையும் அமைத்துக்கொண்டனர் என்பதையும் நினைவூட்டுகிறது.

பாண்டிநாட்டைத் தமிழ்நாடு என்று சிறப்பித்துப் பேசுவர் புலவர்கள். ஆதிகாலத்தில் தாய்மொழி வளர்ப்பிலே சிறப்பாகப் பணிபுரிந்தது

'ஆதி இன்னதென்று
ஓதுதற்கு அரிய
வழுதியின் தொழுகுலம்'

தானே.

பண்டையரான பாண்டியர் சங்கம் வைத்துத் தமிழைச் சிறப்புற வளர்த்தனர் என்பதை நம் மக்கள் மறந்ததில்லை. 'கூடலின் ஆய்ந்த ஒண் தீந்தமிழ்' என்ற மணிவாசகம் ஒரு காட்சி. அண்மையில், பெயர் விழையாப் புலவர் ஒருவர், 'அந்நாள் அருந் தமிழை ஆதரித்த பாண்டியர்' எனக் கூறியிருப்பதும் அந்த வழிவழி நினைவைத்தானே.

சங்கம் என்ற வடசொல்லோ, அந்தப் பொருளில் கழகம் என்ற சொல்லோ குறள் முதலான பண்டை நூல்களில் காணப்படவில்லை. ஆகவே சங்கம் இருந்ததில்லை எனக்

கூறும் நூதன விவேகிகளான ஆய்வாளரும் உண்டு. பாண்டியர்களின் சில வழிவழிச் செய்திகளை அறிவிக்கும் செப்பேட்டுச்சாசனத்தில் 'மதுராபுரிச் சங்கம் வைத்த' செய்தி பொறிக்கப்பெற்றுள்ளது. சங்ககாலத்திற்குப் பிற்பட்ட சாசனச் செய்தியாயினும் இது பாண்டிய மரபினர் தலைமுறை தலைமுறையாகப் பெருமையுடன் நினைவிலே வைத்துக் கொண்டிருந்த பெருஞ்செய்தி. சங்கம் என்ற பெயரில்லாமலே பாண்டியர்கள் புகழ்பெற்ற புலவர் குழுக்களை ஆதரித்துத் தமிழ் வளர்த்து வந்தனர் எனக் கூறுவது பொருந்துவதே. சங்கம் பற்றிய நேருவின் குறிப்பு வெறும் சிப்பியன்று, ஓர் ஆணிமுத்து.

சங்கம் வைத்த பாண்டியர்கள் 'இந்திய வாழ்வுப் பேரிதிகாசம்' என்று போற்றப்படும் மாபாரதத்தைத் தமிழாக்கம் செய்ததாகவும் மேலே சொன்ன சாசனம் அறிவிக்கிறது. வியாச பாரதம் கிரேக்க மகாகவியான ஹோமர் கண்ட சமுதாயத்தை விடப் பண்பட்டதும் கொடுமை குறைந்ததுமான ஒரு மக்கட் சமுதாயத்தை எடுத்துக் காட்டுகிறது.

வியாசர் யார்? இந்தியாவுக்கு இதிகாசம், வேதம், வேதாந்தம் என்னும் முப்பெருந் துறைகளையும் முறை செய்தனர் என்பர். கிருஷ்ண—த்வைபாயன வேதவியாசர் என்பது இம்மாமேதையின் முழுப்பெயர். இதன் முதற்பகுதி இவரது கருநிற மேனியையும், இடைப் பகுதி இவர் தீவில் பிறந்தவர் என்பதையும் குறிக்கின்றன. இப்பெயரே இனத்தூய்மை ஒரு கற்பனை என்பதைச் சுட்டிக்காட்டுகிறது. "நதி மூலம் ரிஷிமூலம் பார்க்கலாமா?" என்று நம் மக்களிடையே சாதாரணமாக வழங்கி வருவதையும் சாதி இன வெறியர் சிந்திப்பாராக. மாபாரதத்தையும் சங்கச் சான்றோர் மொழி பெயர்த்திருக்கலாம்.

வடஇந்திய உறவும் வெளிநாட்டுத் தொடர்பும்:

இந்தியாவின் தென்கோடியிலுள்ள நிலப்பகுதி மிகப்பழங்காலமுதல் ஒரு சுதந்திர நாடாக விளங்கியது. அசோக சக்கரவர்த்தியின் கல்லெழுத்து முதலியவற்றால் இது அறியப் படுகிறது. இந்த மகதப் பேரரசுக்கு உட்படாமலே வட இந்தியாவுடன் இணைந்திருந்தது தமிழகம் என்பதையும் நேரு தம் வரலாற்றுக் கடிதத்திலே நினைவூட்டுகிறார்.

ஆம், இச்சுதந்திரத் தமிழகம் ஒதுங்கித் தனிவாழ்வு வாழவில்லை. இதற்கு வெளி நாட்டுத் தொடர்புகளும் உண்டு. இந்நாட்டுடன் சங்ககாலத்தில் கிரேக்கர்களும், ரோமாபுரிப் பேரரசினரும் வாணிபத் தொடர்பு கொண்டிருந்தனர். யவன நாட்டு மது வகைகளும் பூந்தாழிகளும், அணி விளக்குகளும் தமிழ்நாட்டுத் துறைமுகங்களில் இறக்குமதியாயின. சிற்ப வேலைகளில் கைதேர்ந்த யவனர்களை 'யவனத் தச்சர்' என்கிறது சங்கப் பிற்காலத்துப் பௌத்த நூலான மணிமேகலை. பாண்டிய அரசனது அரண்மனை வாசற் காவலாளிகளாக யவனர்கள் நியமிக்கப் பட்டிருந்தனர். சோழ நாட்டுப் பூம்புகாரிலிருந்த குடியிருப்பைப் போன்ற யவனச்சேரியொன்று மதுரைக்கருகில் இருந்தது. சங்க நூல்களில் காணப்படும் இத்தகைய செய்திகளைக் கிரேக்க நூல்களும் உறுதிப்படுத்துகின்றன.

ரோமாபுரிச் சக்கரவர்த்தியான அகஸ்டஸ் சீசருக்குப் பாண்டிய நாட்டிலிருந்து தூதர்கள் அனுப்பப்பட்டனர். இவர்கள் அப்பேரரசனால் பன்முறை வரவேற்கப்பட்டனர். இது கிரேக்க நூல் தரும் செய்தி; கிறிஸ்து சகாப்தத்திற்கு முற்பட்ட செய்தி. தூதரை அனுப்பிய பாண்டியன் கடைச்சங்க காலத்திற்கு முன்பே வாழ்ந்திருக்கவேண்டும்.

சேரன் ஒருவன் *யவனர்களுடன் போரிட்டதாகச் சங்க இலக்கியத்தில் காணப்படுகிறது. அச் சேரன் தென்குமரியையும் யவனர் வளநாட்டையும் ஆண்டதாகத் தெரிகிறது. யவன மரக்கலங்கள் 'பொன்னெடு வந்து கறியொடு' (மிளகோடு) திரும்பியதாக வரும் சங்கப் புலவர் வாக்கையும் நேரு அறிந்திருக்கிறார்.

மிளகோடு மிக நேர்த்தியான மெல்லிய பட்டுத் துணிகள் முதலியவற்றையும் வாங்குவதற்காக ரோமாபுரி மகாராச்சியத்திலிருந்து ஆண்டுதோறும் 50 லட்ச சவரன் மதிப்புள்ள தங்கமும் வெள்ளியும் ஏற்றுமதி செய்யப்பட்டன. அக்காலத் தமிழகம் செல்வச் சிறப்புடனும் தொழில் திறம் வாணிபத் திறம் முதலியவைகளுடனும் விளங்கி அப்பழைய உலகில் பேரும் புகழும் பெற்றிருந்ததை ஜவஹர்லால் நேரு எடுத்துக்காட்டியுள்ளார். நேரு குறிப்பிடாத இரண்டு செய்திகளையும் நாம் நினைவூட்டிக்கொள்ளலாம்.

செங்குட்டுவன், நெடுஞ்செழியன் முதலான சங்ககாலத் தமிழ் மன்னர்கள் மறைவேள்விகள் செய்ததிலிருந்தும், அக்காலப் பாண்டியருள் ஒருவன் 'பல் யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி' எனப் பெயர் பெற்றிருப்பதிலிருந்தும் அந்நாளிலேயே வட இந்திய வைதிகக் கொள்கைகள் தமிழர் பழங் கொள்கைகளோடு இணைந்திருந்தன என்று தெரிகிறது. வடமவண்ணக்கன் பெருஞ்சாத்தனர்' என்ற சங்கப் புலவரின் பெயரிலுள்ள முதல் அடை மொழி அவர் குடும்பம் வடநாட்டிலிருந்து குடியேறியது என்பதைச் சுட்டிக்காட்டுவது தானே.

இச்சங்ககால நாகரிகத்திற்கு ஒரு முடிச் சோதியாகத் திகழ்ந்தவர் திருவள்ளுவர். இவரைக் கிரேக்க மகான் சாக்ரடீசுடனும், நம் தேசத் தந்தையான மகாத்மா காந்தியுடனும் ஒப்பிடுவது பொருத்தமே. இவர் திருக்குறளைத் தமிழர் பொதுமறை எனலாம். உலகிற்கே ஒரு பொதுவான—சமயச் சார்பற்ற—அறநூல் என்றும் துணியலாம். இவ்வுண்மையைச் 'சமயக் கணக்கர் மதிவழி கூறுது, உலகியல் கூறிப் பொருளிது என்ற வள்ளுவன்' எனக் கூறிய இடைக்காலப் புலவர் நன்குணர்ந்திருந்தார். உலகியல் வாழ்வின் உத்தமநெறிநூல் என்ற புகழ் வள்ளுவர் வாய் மொழிக்கு அன்றுபோல் இன்றும் உரியதே.

சங்கச் சான்றோர்களின் தலைவரான வள்ளுவரை நேரு குறிப்பிடாவிட்டாலும் காந்தியடிகள் அறிந்து போற்றியுள்ளார். விஜேபா அடிகள் தமிழறிந்தவராதலின் திருக்குறளை மூலத்திலேயே கற்றுணர்ந்து பாராட்டியுள்ளார். திருக்குறளை மறுவற ஓதி யுணர்ந்தவர்கள் தென்னகத்திற்கும் வடநாட்டிற்கும் இடையே அமைந்த ஒரு நல்லறச் சேதுவாக இதை மதித்துப் போற்றுவர் என்பது திண்ணம்.

அகன்ற தமிழகம் (Greater Tamil Nadu)

சங்ககாலத்திற்குப் பின் பல்லவர்கள் காஞ்சியைக் கைப்பற்றித் தலைநகராகக் கொண்டு ஆட்சி செலுத்துவராயினர். ஆதிபல்லவர், மூலத் தமிழிலிருந்து பிரிந்திருந்த

* இந்த யவனர் வள நாடு அரேபியாவிலோ அல்லது ஆப்பிரிக்காவின் கீழ்க்கரையிலோ ஒரு சிறு நாடாக இருந்திருக்கவேண்டும் என்பது வரலாற்றுப் பேராசிரியரிர் கே. ஏ. நீலகண்ட சாஸ்திரியாரின் கருத்து. இப்பிரதேசங்களில் தமிழர்கள் குடியேறியதைப் புலப்படுத்தும் சில பழைய சின்னங்கள் காணப்படுகின்றன.

தெலுங்கருக்கும் தமிழருக்கும் இடையே ஒருமைப்பாட்டை நிலைநிறுத்தினர். மலேசியாவில் இந்தியர்கள் குடியேறியதற்குப் பல்லவர்களே முதற் காரணமாவர். குப்த மன்னர்கள் முதலான வடநாட்டுப் பேரரசர்களைப்போல் பல்லவருக்கும் அனைத்திந்திய வரலாற்றில் இடமுண்டு.

கி.பி. முதல் நூற்றாண்டு தொடங்கிப் பல நூற்றாண்டுகள் வரையில், இந்தியர் மலேயா நாட்டுக்கும் கம்போடியாவுக்கும், ஜாவா, சுமத்திரா, போர்னியோ முதலிய தீவுகளுக்கும் சென்று குடியேறினர். அப்பொழுது அவர்கள் நாகரிகத்தையும், பண்பாட்டையும் கலைகளையும் உடன்கொண்டு போயினர். பெரிய இந்தியக் குடியேற்றங்கள் கடாரம் என்ற பர்மாவிலும், தாய்லாந்து என்ற சயாமிலும் இந்தோசீனத்திலும் காணப்பட்டன. தொடர்ச்சியாகக் குடியேறியவர்களில் பெரும்பாலோர் பல்லவர்காலத் தமிழகத்திலிருந்து சென்றவர்களே. போர்னியோவிலும் பிலிப்பைன் தீவுகளிலும் வாழ்ந்த மக்களுக்குப் பல்லவத் தமிழகத்திலிருந்து குடியேறியவர்கள் எழுதப் படிக்கக் கற்றுக் கொடுத்தார்கள். இப்படி ஓர் 'அகன்ற தமிழகம்' அந்நாளில் உருவாகி இருந்தது.

பக்திக்கிடையே பகுத்தறிவு பூத்தது

தென்னகம் வடநாட்டுடன் பொருள்-வாணிபம் செய்ததோடு கருத்து-வாணிபத்தையும் அதிக அளவில் நடத்தியது. பல்லவர் காலத்திலே இந்து சமயம் மறுமலர்ச்சி பெற்றது தமிழகத்தில். சிந்தனைக்குப் பேர்போனது வடநாடு; கலைத்திறனுக்குப் பேர்போனது தென்னகம் என்ற கருத்தைப் பொதுவாக அறிஞர்கள் ஒப்புக்கொள்வர். எனினும், பல்லவர் காலத்திலே தோன்றிய நாயன்மார்களும் ஆழ்வார்களும் சிந்தனையைக் கலையாக்கி மக்களுக்கு வாரி வழங்கிய செய்தியைக் குறித்து நேருவின் திருமுகம் ஒன்றும் பேசவில்லை.

ஆழ்வார்-நாயன்மார்களின் பண் சுமந்த பாடல்கள் சங்க இலக்கியங்கள்போல் பண்டிதர்களுக்கு மட்டுமல்லாமல் மக்கள் அனைவருக்கும் பொதுஉடைமையாகப் பயன்படக் கூடியவை. இவற்றை 'மக்கள் இலக்கியம்' என்று சிறப்பித்துக் கூறலாம்.

இத்தகைய பக்திமணிகளைக் குறிப்பிடாவிட்டாலும் நேரு, இவர்கள் தோற்றுவித்த பக்தியுகத்தினிடையே அன்றையத் தமிழகப் பகுதியான வடக்குக் கேரளத்தில் (மலையாளத்தில்) தோன்றிய ஆதிசங்கரரை அறிமுகப்படுத்துகிறார். 'தென்னிந்தியாவில் ஓர் ஆச்சரிய மனிதராகத் தோன்றினார் இவர்' என்ற பீடிகையுடன் சங்கரரின் பணிகளைக் கூறுகிறார்.

பல்லவ மன்னர்கள் ஆதரவில் மறுமலர்ச்சி பெற்றுவந்த இந்து சமயத்திற்குப் புதிய வேதாந்த அடிப்படை அமைத்துக் கொடுத்தவர் சங்கரர். தமிழகத்தில் தோன்றிய மறுமலர்ச்சியை அகில இந்திய அறிஞர்களிடையே பரவச்செய்தன இவரது சாதனைகள். சங்கரரின் அத்வைதக் கொள்கையை நேரு 'பகுத்தறிவுக்கு ஒத்த இந்துமதம்' எனக்காட்டுவது பால்டாய்சன் என்ற ஜெர்மன் பண்டிதர் முதலானோரின் கருத்தோடு ஒருமித்த கொள்கையாகும்.

குமரிமுதல் இமயம்வரை பாரததேசம் முழுவதும் சுற்றுப்பயணம் செய்து நாலுதிசை மூலைகளிலும் நாலு மடங்களை அமைத்து, அறிவுத் துறையில் தம் வாதத்தினால் வெற்றி பெற்றார் சங்கரர்.

சங்கரர் சமயத் துறையிலும் கலைத் துறையிலும் இந்தியா அடைந்திருந்த ஒற்றுமையை உணர்ந்து செயற்கரும் செயல்கள் புரிந்தார். குறுகிய காலத்திலே, அதாவது 32-ஆம் வயதில் இமயத்திலுள்ள கேதாரத்தலத்தில் (கேதார்நாத்) காலமாவதற்குள், சங்கரர் இந்திய மக்களின் பகுத்தறிவையும் சிந்தனைகளையும் தட்டி எழுப்ப முயன்றார். பொதுவாகச் சமயத் தலைவர்கள் நம்பிக்கையை அடிப்படையாகக்கொண்டு மக்கள் உணர்ச்சிகளைத் தூண்டி விட்ட அக்காலத்திலே சங்கரரின் சாதனை அற்புதமானது என்கிறார் நேரு. இந்த ஞானப் பெரு வீரருக்கு உலக வரலாற்றிலே மகா அலெக்ஸாண்டர், நெப்போலியன், இராசராச சோழன் முதலியவர்களைக் காட்டிலும் சிறப்பான இடம் உரியது என்றும் முடிவு கட்டுகிறார் அவர்.

கோயில் நாகரிக உச்சநிலை

சங்கரருக்குப்பின் அதே 9-ம் நூற்றாண்டில் பல்லவரும் பாண்டியரும் வீழ்ச்சியுற்றனர். அப்பால் சோழப் பேரரசு மீண்டும் உரம்பெற்றுத் தழைத்தோங்கியது. சோழர்களின் பெரிய கப்பற்படை அரபிக்கடலிலும் வங்கக் குடாக்கடலிலும் பெருமிதமாக உலவியது. காவிரியாறு கடலுடன் கலக்கும் சங்கமுகத்தில் பலநாட்டு வணிகர்களும் பண்டம் பகர்ந்து விற்ற பூம்புகார் என்ற காவிரிப்பூம்பட்டினத்தைச் சோழர்கள் தலைமைத் துறைமுகமாக்கிக்கொண்டனர். 10-ம் நூற்றாண்டின் இறுதியில் மகமதியர் வட இந்தியாவில் படையெடுத்தபோது இராசராச சோழன் இலங்கையை வென்று தன் ஆதிக்கத்தைப் பரப்பிச் சோழப் பேரரசை நிலைநிறுத்தினன். ஆனால் தனிமுடிகவித்தாளும் அரசைக் காட்டிலும் இப்பேரரசனை வசீகரித்தது பக்திக் காதல். தஞ்சைப் பெரிய கோயில்தானே இவனது அழியாத வெற்றிச் சின்னம்? இக் கோயிலைப் 'பிரிட்டிஷ் கலைக்களஞ்சியம்' (9-ம் பதிப்பு) இந்தியாவிலேயே தனிப் பெருஞ் சிறப்பு வாய்ந்த கோயில் எனக் குறிப்பிடுகிறது.

'உலகத்திலேயே கோயில் கட்டும் கலையில் மிகச் சிறந்தவர்கள் தமிழர்கள்' என்றும் அக்கலைக்களஞ்சியம் அறிவிக்கிறது. கப்பல்கட்டும் தொழிலில் சிறந்தவர்களாக இருந்தது போல், கோயில் கட்டும் கலையிலும் சிறந்து விளங்கினர்கள் நம் முன்னோர்கள்.

பெரும்பாலும் சமயச் சார்பின்றி வளர்ந்திருந்த சங்ககால நாகரிகம் பல்லவர் காலத்திலேயே—கோயில் நாகரிகமாக வளர்ந்தது சோழப் பேரரசுக் காலத்தில் இக்கோவில்—நாகரிகம் உச்சநிலையுற்று வானமறிந்தது அனைத்தும் அறிய முயன்ற இந்துமகா சமயமாகப் பரிணமித்தது. இதில் இராசராச சோழனுக்குத் தனிப்பெரும் பங்கு உண்டு.

இருபெருஞ் சோழவீரர்கள்: தந்தையும் மைந்தனும்

இராசராசனைத் திருமுறை கண்ட சோழன் என்றும் கூறுவர். தேவாரப் பாடல்களில் ஈடுபாடு அதிகம். ஆனால் அவை மக்களிடையே வழங்காமல் சிதம்பரத்தில் இருப்பது தெரிந்து அவற்றை முறைப்படுத்தி வெளியிடவேண்டும் என்று தீர்மானித்தான் இராசராசன். நம்பியாண்டார்நம்பியின் உதவியால் தன் நோக்கத்தை இனிது நிறைவேற்றிக்கொண்டான்.

செயற்கரிய வீரச் செயல்கள் புரிந்து அமைதி பெறுத அரசன் உள்ளம் பெரிய கோயிலைக் கட்டி ஓரளவு ஆறுதல் பெற்றது. தேவார ஞானப் பூங்கோயிலை நிலைநிறுத்திய பின் இவன் மனநிறைவு பெற்றான்.

இராசராசசோழன் மகனை முதலாம் இராசேந்திர சோழன் என்ற கங்கைகொண்ட சோழன் தன் பட்டப்பெயரை அமைத்துக் 'கங்கைகொண்ட சோழபுரம்' என்ற புதிய தலை நகரை நிர்மாணம் செய்ததுடன் கங்கைகொண்ட சோழேச்சரம் என்ற புதிய கோயில் ஒன்றையும் கட்டி முடித்தான். இத்தலைநகரம் இன்று சீர்குலைந்து சிறு கிராமமாக இருக்கிறது. இக் கோயில் விமானமோ சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த இராசேந்திரனது வெற்றித் தூண்போல் இன்றும் விளங்குகிறது. கங்கைகொண்டசோழன் போர் யானைகளை மரக்கலங்களில் ஏற்றிக்கொண்டு போய் பர்மாவை வென்றதையும் வடஇந்தியாவில் வங்க அரசனைத் தோற்கடித்ததையும் நேரு கூறுகிறார்.

சோழப் பேரரசில் இராமனுசரும் கம்பனும்

பல்லவப் பேரரசில் சிகரஜோதியாகச் சங்கரரைக் காட்டியது போல், சோழப் பேரரசில் சிகரஜோதியாக விளங்கிய இராமானுசரை நேரு குறிப்பிடவில்லை. இராமனுசர், ஆழ்வார்களின் கொள்கைகளுடன் வேதாந்தக் கொள்கைகளையும் இசைத்து, 'தன்னுயிர் தன்னைக் கொண்டு தான் பிழைத்திடுதல் இன்றி மன்னுயிர்க்காகத் தன்னை'யும் அழிக்கத் துணிந்த தியாகவீரர். 'பதினேராம் நூற்றாண்டில் வாழ்ந்த நெஞ்சுத் துணிவுள்ள சமுதாயச் சீர்திருத்த வாதி, என்பர் ஆர். சி. தத்தர் (R. C. Dutt) என்ற வடநாட்டு வரலாற்றாசிரியர். காந்தியடிகளுக்குச் சுமார் 900 வருஷங்களுக்கு முன்பே ஹரிஜனங்களுக்குத் "திருக்குலத்தார்" என்ற பெயர் சூட்டி ஆலயப் பிரவேசமும் செய்வித்த தனிப் பெருமை இராமனுசருடையதே! இவற்றை நேரு குறிப்பிடாதது வியப்பே!

சோழப் பேரரசின் இறுதிக் காலத்தில் வாழ்ந்த கவிச்சக்கரவர்த்திக் கம்பனையும் நேரு அறிந்துகொண்டதாகத் தெரியவில்லை. தமிழகப் பெருமக்களின் வரலாறு ஒழுங்காக எழுதப்படாததே இதற்குக் காரணமாயிருக்க வேண்டும்.

நேருவின் வரலாற்றுக்குறிப்புக்களில் சில தரமான முத்துக்களைக் காண்கிறோம். தமிழ் மக்களின் வரலாற்றை விரிவாக எழுதுவோருக்குப் பொதுவாக இவரும் ஒரு நல்லவழிகாட்டி.

" தேசியப் பொருளாதாரப் பிரச்சனையில்—ஒரு பிரச்சனையை முடிப்பதில், நடைமுறை அணுகுதலில் சமூகத்திலுள்ள மூலதனத்தை முதலீடு செய்தவர்களுக்கும் உழைப்புச் சக்தியைக் கொடுப்பவர்களுக்கும், உற்பத்தி செய்த பொருளை அனுபவிப்போருக்கும் இடையில் பல்வேறு கருத்து மோதல்கள் ஏற்படுவது இயற்கையே."

—பாங்குகளைத் தேசியமயமாக்கியது சரியா?
என்ற பேச்சிலிருந்து

"தியாக சீலர்"

ஈ. வெ. கி. சம்பத்

திரு. ஏ. பி. சி. அவர்கள் சீரிய நற்றலைவராய் செயலாற்றும் நற்றொண்டராய், ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் புலமையும், சொல்லாற்றலும் மிக்க சொல்வலராகத் திகழ்பவர். அரசியலில், நுணுக்கங்கள் அறிந்த நல்லறிவாளராக விளங்குபவர், என்றுமே தெளிந்த சிந்தனையாளராகவும், தனித்ததோர் கண்ணோட்டத்தில் பிரச்சனைகளைக் காணும் திறம் கொண்டவராகவும் திரு. ஏ. பி. சி. அவர்கள் திகழ்பவர் என்பதை அவரை அறியும் வாய்ப்புப்பெற்ற அனைவரும் உணர்வர். சிந்தனைத் தெளிவும் சொல்லாற்றலும் மிக்கவராய் விளங்குவதோடு, கண்ட முடிவின் பால் நிற்கும் உள்ளத் திண்மையும் கொண்ட ஓர் உன்னதத் தலைவராக எழுந்த திரு. ஏ. பி. சி. அவர்களின் திறன் எவரையும் ஈர்க்கும் தன்மை படைத்தது. அச்சம் அவர் அறியாத ஒன்று. அவரது ஆண்மையும், எதிர்ப்புக்களுஞ்சா உறுதியும் சோதனை நேரங்களில் எல்லாம் வெளிப்பட்டு நின்றவை.

ஆக்க ரீதியான பணிகளில் அவருக்கு உள்ள நாட்டம், எப்பொழுதும் தொடரும் ஒன்றாகவே கண்டு வருகிறோம். செய்யும் அனைத்திலும் செம்மை மிளிரும் செய்வகை நேர்த்தி அவருக்கு என்றும் எதிலும் கைவந்த பெருந்திறன்.

ஈடுபடும் தொண்டு எதுவாயினும் அதற்குத் தன்னை முழுக்க ஒப்படைக்கும் சீராளர். பிறர் துயர் துடைக்க உவந்து முன்வரும் இயல்பு அவரது உடன்பிறப்பு.

முதுமையின் முத்திரையைப் பதிக்காமலேயே அறுபதாண்டுகள் அவரைத் தாண்டிப் போயுள்ளது என்னும் செய்தி அவரைக் காண்போருக்குப் பளிச்செனத் தெரியும்.

பாகுமொழி பயில, அவர் இனிமையின் தொகுப்பாகவும் காட்சி தருவார். ஆனால் அநீதிகள் கண்டு கொதித்தெழுகையில் அவர் வெடிக்கும் எரிமலையாகத் தோன்றுவார். அவரது தோற்றப் பொலிவு, பண்பும் வீரமும் கொடையும், உதாரமும், அறிவும், ஆற்றலும் ஒருங்கிணைந்த ஒரு பேருருவாகவே என்றும் எவர்க்கும் தோன்றிட எழும் ஒன்று. திரு. ஏ. பி. சி. அவர்கள் ஆழ்ந்த நட்புக்கு ஓர் இலக்கணமாகவே திகழ்பவர். நட்பின் தரத்தில் சிறிது வீழ்பவர்களையும்கூட அவரால் பொறுத்துக் கொள்ள முடிவதில்லை..... காரணம், அவர் என்றும் அத்தவறை செய்வதில்லை!

எடுத்த காரியத்தை முடிக்கும் திறல் வீரர்.....முடிக்க இயலும் என்னும் காரியங்களை மட்டுமே எடுப்பவர். அரசியலில், வந்த பதவிப் பெருவாய்ப்புகள் பலவற்றை 'வேண்டற்க' எனத் துறந்த செம்மல்.

வள்ளுவர் கூறிய 'கண்ணோட்டம்' என்னும் நாட்சண்யம் மிகக் கொண்டவர், ஆனால் சபலத்திற்குத் துளியும் இரையாகா மனத்திண்மையும் நேர்நோக்கும் கொண்ட செம்மல்.

நாடு வாழத் தன்னை என்றும் தரச் சித்தமாக உள்ள தியாகசீலர், திரு. ஏ. பி. சி. அவர்கள் நீடுவாழ்வதில் நமக்குப் பயன் உண்டு.

எங்கள் கூட்டுறவுத் தந்தை

ச. கன்னையா

ச. ஆழ்வார்

"இடிக்குந் துணையாரை ஆள்வாரை யார்ரே
கெடுக்குந் தகைமை யவர்"

என்ற வள்ளுவப் பெருமானின் வாக்குக்கேற்ப வலிமையை எங்களுக்குத் தந்துள்ள தலைவர் திரு. ஏ. பி. சி. வீரபாகு அவர்கள்,

களவு பொய் காமம் கோபம் முதலிய குற்றங்காய்ந்தார்
வளமிகு மனையின் வாழ்க்கை நிலையினர் மனைப்பால் உள்ள
அளவைகள் நிறை கோல் மக்கள் ஆவோடு மேதி மற்றும்
உளவெலாம் அரசின் நாமம் சாற்றும் அவ்வொழுக்கலாற்றூர்

என அப்பூதியடிகள் நாயனாரைச் சேக்கிழார் பெருமான் வாழ்த்துதல் போன்று வாழ்ந்துவரும் நன்னாளில்,

"பூ மழை புனல் மழை புதுமென் சுண்ணத்தின்
தூமழை தரளத்தின் தோமில் வெண் மழை
தாமழை நெரிதலிற் றகர்ந்த பொன் மழை
மாமழை நிகர்த்தன"

என்று கவிச்சக்கரவர்த்தி கம்பர் இராமர் பட்டாபிஷேகம் குறித்துப் புகழ்ந்தாற்போல் நிகழும் மணிவிழாவில், எம் தலைவரின் செறிவு, நிறைவு, செம்மை, செப்பு முதலிய இலக்கணங்களை நாங்கள் நினைவுபடுத்தத் தவறினோமானால், கல்லாப் பிழையும், கருதாப் பிழையும், கசிந்துருகி நில்லாப் பிழையும், நினையாப் பிழையும், சொல்லாப் பிழையும், துதியாப் பிழையும், தொழாப் பிழையும் எல்லாப் பிழையும் எங்களைச் சேருமென்ற, நன்றி உணர்வோடு,

"எய்தற்கரியது இயைந்தக்கால் அந்நிலையே
செய்தற்கரிய செயல்"

என்பதற்கேற்பச் செயல்பட்ட தலைவர் அவர்களின் செயல்திறனை இவண் சிறிது விளக்க முயலுகிறோம்.

தென்பாண்டித் துறைமுகமாம் தூத்துக்குடி; முத்துக்குளித்தலில் எவ்வாறு சிறப் புற்று விளங்குகின்றதோ, அவ்வாறே வாழையடி வாழையாகச் சைவப்பெருங்குடி வேளாளர் குலத்துதித்த உத்தமத் தலைவராம் திரு ஏ. பி. சி. வீரபாகு அவர்கள், தமிழகக் கூட்டுறவில் தமக்கெனத் தனி அத்தியாயம் அமைத்து, தமக்கே உரித்தான சிறப்புமிக்க சேவைகளில் முத்திரை பதித்து, தூத்துக்குடி நல்முத்துப்போல் சிறந்து விளங்குவது சொல்லித்தெரியவேண் டியதல்ல. தாம் ஒரு சிறந்த காங்கிரஸ் அரசியல் வாதியாக இருந்தபோதிலும்கூட, கூட்டுற

வின் அடிப்படைத் தத்துவமான கட்சி சார்பற்ற தன்மையை வழுவாது, செயல்படுத்தி, தமது தலைமையின்கீழ்ப் பல கூட்டுறவு ஸ்தாபனங்களில், அதன் ஆக்கவேலைகளையும், மேம் பாட்டையும் பெருக்கப் பல அரசியல் கட்சி சார்புள்ளவர்களையும்கூட வேலைக்கு அமர்த்திச் செயல்புரிந்ததும், புரிந்துவருவதும் போற்றுதற்குரியன.

"காக்கை கரவாக் கரைந்துண்ணும் ஆக்கமும்
அன்ன நீரார்க்கே உள "

என்ற பொய்யாமொழிப் புலவனின் சமதர்மக் கருத்திற்கேற்ப, கூட்டுறவு இயக்கத்திலும் பல் வேறு துறைகளில் செயல்திறன் காட்டிய ஒரு மேதை என்றால் மிகையல்ல.

மாநில, மாவட்ட, நகர அளவில் தலைவர் ஈடுபட்ட கூட்டுறவுச் சங்கங்கள் பல. அவற்றில், வந்தார், வாழ்ந்தார், போனார் என்றில்லாது, சொன்னார், செய்தார் என்று ஊரார் நாளும் சொல்லும் வண்ணம் சரித்திரம் படைத்த சிறப்பு நிகழ்ச்சிகளையே இங்கு உங்கள் சிந்தனைக்கு விருந்தாக்குகிறேம். இவரது ஆழ்ந்த சிந்தனைச் சக்தியும், சிறப்பான ஆக்கப்பூர்வ மான செயல்திறனும் கண்டு வியந்த தமிழக அரசு, பல கூட்டுறவு ஆலோசனைக் குழுக்களில் இவரை நியமித்துக்கொண்டதென்பது, தலைவர் அவர்களின் திறன் விளங்கப் போதுமான தாகும்.

1) Madras State High level Committee on Co-operation
2) State Advisory Committee on Co-operation
3) State Co-ordination Committee on Co-operation

(The Constituted — 1962)

சென்னை மாநிலக் கூட்டுறவு வீற்பனைச் சங்கங்களின் இணையம், சென்னை மாநிலத் தொழிலியல் கூட்டுறவு வங்கி, தமிழ்நாடு கூட்டுறவு யூனியன், "கூட்டுறவு" சஞ்சிகை ஆசிரியர் குழு ஆகிய மாநில அளவு நிர்வாகக் குழுக்களில் பங்கேற்றுத் தலைவர் செய்துள்ள சிறப்பான பணிகள் பல.

தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டத்தைத் திருத்தி அமைக்க 1961ல் அரசால் நியமிக்கப்பட்ட அமைப்புக் குழுவில் — Select Committee on Co-operative Act — (Amend-ment Bill) நியமனம் செய்யப்பட்டு, கூட்டுறவுச் சங்கங்களில் இருந்த சிரமங்களையும், சட்டத் திலுள்ள சிக்கல்களையும் தீர்ப்பதற்கான அரிய பல ஆலோசனைகளைக்கூறிச் சட்டமாக்கிய தோடு, இன்ன சமுதாயத்திற்குக் கூட்டுறவில் வாய்ப்பின்னை நல்கும், பெரு நோக்குடன், கூட் டுறவுச் சட்டத்தில், "ஒருவர் ஒரே சமயம் ஐந்து கூட்டுறவுச் சங்கங்களுக்கு அதிகமாக நிர்வாகக் குழுவில் அங்கம் வகிக்கலாகாது" என்ற சீரிய சட்டத் திருத்தத்தை, தமது நெருங் கிய நீண்டகால நண்பர்களின் எதிர்ப்பையும் பொருட்படுத்தாது, சட்டமாக்கியது, தலைவர் அவர்களின் சுயநலமற்ற போக்கிற்கும், பதவியே தமது குறிக்கோளல்ல என்பதற்கும் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

மாநிலத் தொழிலியல் கூட்டுறவு வங்கி (Madras State Industrial Co-opeative Bank) யின் நிர்வாகக் குழுவில் செயல்பட்டபோது, தொழிலாளர்களுக்குத் தொழிலியல் பெரு

நிலங்களில் (Industrial Estate) தொழிற்சாலைகள் அமைக்க, சொத்துக்களை மட்டுமே ஈடாகக் கொண்டு கடன் வழங்கிவந்த முறையை மாற்றி, அவர்கள் அமைக்கவிருக்கும் தொழிற்சாலையின் உற்பத்தித் திறனை ஈடாகக்கொண்டு, கடன்வசதி வழங்க வழிவகுத்தது தலைவர் அவர்களின் தனிப்பெரும் முயற்சி மட்டுமல்லாது உழைப்பாளர்கள் பால் உள்ள உள்ளன்பும் ஆகும்.

State Bank of India Circle Committee of Co-ordination in Co-operating Credit என்ற குழுவில், அதிகாரப்பற்றற்ற ஒரே உறுப்பினராக அரசினரால் நியமிக்கப்பட்டுச் செயலாற்றியபோதுதான் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கடன் வழங்குவதில் சிவப்புநாடா முறையில் ஏற்படும் காலதாமதத்தைத் தவிர்க்கவும், மாநில, மாவட்டக் கூட்டுறவு வங்கிகள் மூலம்தான் கூட்டுறவு சங்கங்கள் கடன்பெற வேண்டுமென்ற விதியினால் ஏற்படும் அதிகமான வட்டி விகிதத்தைக் குறைப்பதற்காகவும், கூட்டுறவுச் சங்கங்கள் நேரடியாகவே, ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவில் கடன் வசதிபெற வழிவகுத்ததோடு, தாம் தலைமை வகிக்கும் திருநெல்வேலி மாவட்டக் கூட்டுறவுச் சங்கத்திற்கு, இம் மாநிலத்திலேயே முதன் முதலாவதாக இக் கடன் வசதியைப் பெற்றுக்கொடுத்து அமுலாக்கவும் செய்தது தலைவர் அவர்களின் தனிப்பெரும் செயல்திறனென்பதில் ஐயமில்லை.

திருநெல்வேலி மாவட்டக் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலையின் தலைவராக 1948 முதல் 1971 வரை (23 வருடங்கள்) தொடர்ந்து பணியாற்றியது யாவரும் அறிந்ததே! இரண்டாம் உலகப் போருக்குப்பின் 1942ல் நெல், அரிசி போன்ற உணவுப்பொருட்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுக் கிடைக்காமல் மக்கள் அவதியுற்றபோது, இப்பண்டகசாலையின் துணைத்தலைவராக மட்டும் இருந்தபோதிலுங்கூட, தமக்கே உரிய சேவா மனப்பான்மையில் தலைவர் அவர்கள் அரசை அணுகி, இம் மாவட்டத்தில் நெல் கொள்முதலையும், அரிசி விநியோகத்தையும் இம் மாவட்டப் பண்டகசாலைக்கே ஏகபோகமாக பெற்றுக்கொடுத்து, நெல் கொள்முதலையும், உணவுப்பொருட்கள் பங்கீட்டு விநியோகத்தையும், செவ்வனே செயல்படுத்திய செயல் வீரரெனப் போற்றப்பட்டார்கள். கொள்ளை லாபமே குறியெனக் கொண்டிருந்த வணிகர்கள், பெருநிலக்கிழார்களின் கடும் எதிர்ப்பிற்கிடையில் கொள்முதலையும், பங்கீட்டையும் திறம்படச்செய்த தலைவர் அவர்களின் தீரம் குறித்து, அந்நாளைய வருவாய்த்துறை அலுவலர்கள் இன்றளவும் போற்றிப்புகழ்வது பெருமைப்படத்தக்கதாகும். 1948ல் தலைமைப் பொறுப்பேற்ற பின்பும், 1958-59லும், 1964-65 முதல் 1966-67 வரையிலும், அதாவது உணவுப் பொருட்களில் தேசீய நெருக்கடி ஏற்படும் காலங்களிலெல்லாம், இவரது தலைமைகொண்ட இம் மாவட்டப் பண்டகசாலை, அரசின் திட்டங்களுக்கேற்ப, நிபந்தனையின்றி, தேசீய உணர்வுடன் செயல்பட்டு, உணவு நெருக்கடியைப்போக்கப் பெரிதும் உதவியது என்பதை மறக்க இயலாது. இம் மாவட்டப் பண்டகசாலை செயல்பட்ட சிறப்புகளை எடுத்துக்காட்டியே, 'அரசே நேரடியாக உணவுப் பங்கீட்டை எடுத்து நடத்தலா'மென அப்போதைய மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. எம். எம். ராஜேந்திரன் ஐ. ஏ. எஸ்., அவர்கள் அரசுக்குச் சிபார்சு செய்தார். இது தலைவர் அவர்கள் கூட்டுறவில் பெருமதிப்போடு வணிகம் செய்தார்களென்பதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும் என்பது தெளிவு.

இம்மாவட்டச் சங்கத்தின் நிதிவசதியை அதிகமாகப் பெருக்கி மாநிலத்தின் வேறு எந்த மாவட்டச் சங்கமும் பெற்றிராத அளவில் தூத்துக்குடி, திருநெல்வேலி, கோவில்பட்டி, ஸ்ரீவைகுண்டம், ஆகிய இடங்களில் சொந்தமாக அலுவலக, கிடங்குக் கட்டிடங்களையும், சங்கரன்கோவில், தென்காசி, அம்பாசமுத்திரம், நாங்குநேரி, ஸ்ரீவைகுண்டம் ஆகிய ஊர்களில் அரசுக் கடனுடன் மிகப் பெரிய உரக் கிடங்குகளையும், இன்றைய மதிப்பில் சுமார் பதினைந்து இலட்ச ரூபாய் மதிப்பில் ஏற்படுத்தியுள்ளது தலைவர் அவர்களின் ஏற்றத்தரும் செயலாகும்.

அரசின் திட்டத்தால் ஏற்படுத்தப்பட்ட கூட்டுறவு நவீன அரிசி ஆலைகள் அனைத்தும் அவற்றின் அமைப்பு முறையால் நன்கு செயல்படாத காலத்தில், தமது தொழில் நுணுக்கத்தாலும், செயல் திறனாலும் தூத்துக்குடியில் இம்மாவட்டச் சங்கத்திற்காகத் திட்டமிட்டுச் சிறப்பான அம்சத்தோடு (Semi Type is difference in between Modern and old system) 1964-ல் நிர்மாணித்து, இன்றளவும் திறம்பட, பழுதேதுமில்லாது இயக்கிவருவது குறித்து, மாநில பொறியியல் வல்லுநர் பலர் பாராட்டி வருவது பெருமைப்படத்தக்கதாகும். 1964-ல் சுமார் ஐந்தரை இலட்சம் ரூபாய் செலவில் உருவாக்கப்பட்ட, இவ்வரிய அரிசி ஆலைக்கும், அதன் எட்டுக் கிடங்குகளுக்கும், 'தமிழ்நாடு சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷ'னின் இன்றைய மதிப்பீடு சுமார் ரூபாய் பதினைந்து இலட்சமெனக் கூறும்போது, பெரிய தொழில் நுட்பமுள்ள இவ்வாலையை நிர்மாணிக்கத் திட்டமிட்டது தலைவரின் செயல் திறனுக்கு ஓர் அழியாச் சின்னமாகும். இன்றைய உணவு நெருக்கடியில் அரசினருக்குத் தயங்காது பெரும் பகுதி நெல்லை அரிசியாக்க இந்த ஆலை முழு மூச்சாக இயங்கி வருவதில், தலைவரின் முன்னேக்கு ஒவ்வொரு வினடியும் நினைவுக்கு வருவது திண்ணம்.

"வீறெய்தி மாண்டார் வினைத்திட்பம் வேந்தன்கண்
ஊறெய்தி உள்ளப் படும்" (குறள்)

இவ்வாறு இச்சங்கத்தின் நிதி வசதியைப் பெருக்கியதோடு மட்டுமல்லாது, மாநிலத்தில் வேறு எந்த மாவட்டச் சங்கமும் செயல்படாவண்ணம், கூட்டுறவு மத்திய வங்கியிலிருந்து கடன் வசதி ஏதும் பெறுமலே 1953 முதல் 1963 முடிய சுமார் பத்தாண்டு காலம் தன்னிறைவுச் சங்கமாகச் (Self Reliant Society) சொந்த மூலதனத்திலேயே மிக லாபகரமாக இம்மாவட்டச் சங்கம், வணிகம் செய்து வந்தது என்றால், தலைவரின் தன்னிகரில்லா நிர்வாகத் திறன் நினைவுக்கு வரும்.

மொத்த விற்பனைப் பண்டகசாலைகள், தாமே சில்லரை விற்பனை நிலையங்கள் திறந்து, அத்தியாவசியப் பொருட்கள் விநியோகம் மூலம், விலைவாசி ஏற்றத்தைத் தடுக்க வேண்டுமென்ற திட்ட அடிப்படையில் அரசு அளித்த கடன் வசதியைப் பெற்று, அதன் மூலம் பிரதம பண்டகசாலைகளுக்கே இம்மாவட்ட சங்கத்திலிருந்து அதிகக் கடன் வசதியளித்து, அரசு கொள்கைக்கு மாறுக, "மொத்த விற்பனைப் பண்டகசாலையே சில்லரை விற்பனை நிலையங்கள் திறந்து செயல்பட்டால், ஆங்காங்கே உள்ள பிரதம பண்டகசாலைகளின் வணிகம் நசிந்துவிடுமெனவும் அதனால் பரவலான கூட்டுறவுக் கொள்கை வளர்ச்சி தடைப்படுமெ"னவும் தத்துவரீதியாக அரசுக்கு விளக்கமும் கொடுத்த ஒரே மாவட்டச் சங்கத் தலைவர் நம் தலைவரே.

மாவட்ட மொத்த விற்பனைச் சங்கம் மூலமாக, பிரதமப் பண்டகசாலைகளின் வளர்ச்சிக்கு உதவும் வகையில் அடிக்கடி அவைகளின் பிரதிநிதிகளின் கூட்டங்கள் நடத்தி, பலப் புதிய திட்டங்கள் வகுத்து வழிகோலியதோடு, பிரதமப் பண்டகசாலைகளின் ஒத்துழைப் பிற் கேற்ப ஊக்கப்பரிசுகள் வழங்கியதும் குறிப்பிடத்தக்கது. மேலும் அவ்வப்போது இச் சங்கச் சிப்பந்திகளின் கூட்டங்களை நடத்தி, பணிசிறக்கச் செய்வதோடு, சிப்பந்திகள் உண் மையாகவும், பாசத்துடனும் பணிபுரிய உதவியது பாராட்டுக்குரியது. இம்மாநிலத்திலேயே வேறு எந்த மாவட்டச் சங்கமும் செயலாக்காத காலத்திலேயே, சிப்பந்திகளின் குழந்தை களுக்குப் பள்ளிப் புத்தகச் செலவு, குடும்ப வைத்தியச் செலவு, பிரசவ உதவித் தொகை முதலிய வசதிகள் அளித்து வந்ததும், அதிக லாபமீட்டிய காலத்தில், சட்டப்படியான அதிக 3 மாத போனஸிற்கும் அதிகமாக ஊக்கப் போனஸ் கொடுத்து உதவிய இத்தலைவரது செயல் நன்றியுடன் பாராட்டத்தக்கதாகும்,

இம்மாவட்டச் சங்கத்தின் வணிக முறையில் பல ஆண்டுகளுக்குப் பின் ஏற்படக் கூடிய மாற்றங்களையும், சிரமங்களையும், அதனைத் தீர்ப்பதற்கான வழிவகைகளையும் முன் கூட்டியே "தீர்க்கதரிசன"மாகக் கூறி வந்ததுண்டு. இரசாயன உர மொத்த விற்பனையை மொத்த விற்பனைப் பண்டகசாலைகளிலிருந்து எடுத்துவிட அரசு திட்டமிடுவதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்பே, இம்மாநிலத்தில் வேறு எந்த மாவட்டச் சங்கத் தலைவரும் முடிவு செய்யாத காலததில், இரசாயன உரத் தேக்கத்தால் இச்சங்கம் பெருமளவு நஷ்டமடைய நேரிடுமென்பதைத் தீர்க்கதரிசனமாகத் தெரிந்தே, இவ்வணிகத்திலிருந்து இம்மாவட்டச் சங்கத்தை உடனடியாக விடுவிக்க வேண்டுமெனச் செயற்குழுத் தீர்மானம் இயற்றி, அரசுக்கு முதன்முதலாகச் செய்து தந்த ஒரே தலைவர் எங்கள் தலைவரே! இந்நிலை சரிவரச் செயல்பட்டிருக்குமானால் இச்சங்கத்திற்குப் பிற்காலத்தில் ஏற்பட்ட பெருமளவு நஷ்டம் தவிர்க்கப்பட்டிருக்குமென்பது நினைவு கூரத்தக்கது மட்டுமல்ல;

"அறிவுடையா ராவ தறிவார் அறிவிலார்
அஃதறி கல்லாத வர்"

என்ற உலக மகாக் கவிஞன் வள்ளுவனின் வாக்கும் நினைவுக்கு வரும்.

மதுரைப் பாண்டியநாடு கூட்டுறவுப் பயிற்சிக் கழகம், திருநெல்வேலி மேலைத் தளவாய் கூட்டுறவுப் பயிற்சிக் கழகம் ஆகியவற்றின் நிர்வாகத்தில் பணியாற்றி அரிய பல திட்டங்களைச் செயலாக்கியதும் மறக்கத்தக்கதல்ல.

சேம்பர் செங்கல் அதிக அளவில் உற்பத்தியாகாத காலத்தில், வல்லநாட்டில் அரிஜனத் தொழிலாளர்களுக்குமட்டுமென, வல்லநாடு அரிஜனச் செங்கல் தொழிலாளர் தொழிலியல் கூட்டுறவுச் சங்கத்தை நிறுவி, அதன் லாபம் முழுவதும் அதன் தொழிலாள உறுப்பினர்களையே சேரும் என்ற இலட்சியத்துடன் செயல்பட்டதும், இரண்டாண்டுகளி லேயே அவர்களுக்கு ஒருவருட ஊதியத்தைப் போனஸாகக் கொடுக்கச்செய்ததும் மிகச் சிறப்பானவை. தலைவர் அவர்களின் சீரிய திட்டத்தால் தமது குறைவான பதவிக் காலத்திற் குள்ளேயே, 25 சதவித தொழிலாளர்களுக்குத் தொழிற்சாலைப் பகுதியிலேயே இலவசக் குடி யிருப்பு வசதிகள் ஏற்படுத்திக்கொடுத்தது நினைவுபடுத்தத் தக்கது. அரசியல் மாற்றம்

காரணமாகத் தலைவர் அப்பணியைத் தொடர்ந்து முற்றுப்பெறச்செய்ய இயலாதது அத் தொழிலாளர்களது துரதிருஷ்டமே!

இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியவர்களுக்காக, குறிப்பாகப் பெண்களுக்காகவே திருச்செந்தூர் குடிசைத்தொழிலியல் தொழிலாளர் கூட்டுறவுத் தீப்பெட்டித் தொழிற்சாலையை, திருச்செந்தூரில் நிறுவி 1956-57லேயே மிகக் குறைவான கூலி விகிதமுள்ள காலத்திலும்-பெண்களுக்கு ரூபாய் 1-50 தினக்கூலி வழங்கியது தலைவர் அவர்களின் அபூர்வத் திட்டமாகும்.

இரண்டாம் உலகப் போருக்குப்பின் நாட்டில் ஏற்பட்ட உணவுப்பொருள் தட்டுப்பாட்டை நீக்க அரசின் கொள்கைக்கேற்பவும், அப்போதைய மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. விஸ்வநாதன் ஐ.ஏ.எஸ்., அவர்களின் வேண்டுகோளுக்கிணங்கவும், 1942ல் தூத்துக்குடி கூட்டுறவுப் பண்டகசாலையையும் அதன் பத்துக் கிளைகளையும் தலைவர் தூத்துக்குடி நகரில் நிறுவி, அத்தியாவசியப் பொருட்கள் விநியோகத் திறத்தால், விலைவாசி ஏற்றத்தையும், உணவுப்பொருள் நெருக்கடியையும் இந் நகரில் நீக்கியது நீங்கா நினைவாகும். தமக்கே உரிய சிறப்பான சிந்தனைத் திறத்தால், தொழிலாளர்கள் அதிகமாக வசிக்கும் பகுதியான எஸ். எஸ். பிள்ளை தெருவில் இதன் தலைமையிடத்தை அமைத்துச் செயல்படுத்தி, தொழிலாளர்களுக்குப் பண்டகசாலையின் சேவை தாமதமின்றிக்கிடைக்க உதவியது மிகச் சிறப்பானது. இப்பண்டகசாலை திறம்பட இயங்கித் தலைவர் அவர்கள் தலைமையின்கீழ்த் தொடர்ந்த பணியால் 25 ஆண்டுகள் சேவைபுரிந்து, சொந்தக் கட்டிடத்தில் வெள்ளிவிழாக் கொண்டாடிய போது, அந்நாளைய தமிழகக் கூட்டுறவுத்துறை அமைச்சர் மாண்புமிகு. மாதவன் அவர்கள் தலைவர் அவர்களின் அபூர்வ செயல்திறனை, அவர்கள் மாற்றுக்கட்சித் தலைவராக இருந்த போதிலும் வெளிப்படையாக, மிக வெகுவாகப் பாராட்டியது என்றென்றும் எண்ண இனிமையானது.

தமிழகத்திலேயே முதன்முதலில், வீடு இல்லாதவர்களுக்கும், குறைந்த வருவாய் உள்ளவர்களுக்கும் மட்டுமே வீடு என்ற விசேட நிபந்தனையுடன் ரூ. 3000, ரூ. 5000ல் குறைந்த செலவில் வீடுகட்ட, 'தூத்துக்குடி கூட்டுறவு வீடுகட்டும் சங்க'த்தை 1946ல் நிறுவி, அதன் தலைவராக இன்றும் தொடர்ந்து பணியாற்றி வருவது பெருமைப்படத்தக்கது. இத்தகைய நிபந்தனை ஏனைய வீடுகட்டும் கூட்டுறவுச் சங்கங்களில் மிகப் பிற்பட்ட காலத்தில்தான் அரசினரால் அமுல்படுத்தப்பட்டது என்பது,

"பெருமை யுடையவர் ஆற்றுவர் ஆற்றின்
அருமை யுடைய செயல்"

என்ற பொய்யாமொழிக்கு ஒப்பானதாகும். மேலும் இது மிகச் சிறிய அளவில் ஆரம்பித்து இன்று ஒரு பெருநகராகத் திகழ்வதோடு, கப்பலோட்டிய தமிழன், செக்கிழுத்த செம்மல், தமிழ்வீரர் வ. உ. சி. யின் பெயரில் அழியாச் சின்னமாக நகரை அலங்கரிப்பது அருமையானதாகும்.

தூத்துக்குடி நகர் வாழ் மக்களுக்காக அவர்களின் நலன் கருதி, முன்கடன் தீர்க்கவும் ஏற்கனவே சொந்தமாக உள்ள வீட்டைப் புதுப்பிக்கவும், கூடுதல் பகுதிகள் கட்டவும்,

புதிய வீடுகள் நிர்மாணிக்கவும் தூத்துக்குடி கூட்டுறவு வீடு அடமான பாங்கு, தலைவரின் பெருமுயற்சியால் 1962ல் இந்நகரில் நிறுவப்பட்டு, இன்றளவும் தலைவர் அவர்களின் தலைமையில் சிறப்பாகச் செயல்புரிந்து, புதுவீடுகள் நிர்மாணத்திற்காக மட்டும் தற்போது சுமார் ரூபாய் இருபது லட்சம் வரை கடன் வழங்கிச் சிறந்த பணியாற்றுவது தலைவர் அவர்களின் மிகச் சிறந்த நிர்வாகத் திறனுகும்.

மாநிலத்திலேயே கூட்டுறவு முறையில் தொழிலியல் பெருநிலங்கள் (Industrial Estate) சிவகாசி, தூத்துக்குடி இரு ஊர்களில் மட்டுமே நிறுவப்பட்டன. தூத்துக்குடி கூட்டுறவு பெருநிலத்திற்குத் தலைவர் அவர்கள் பொறுப்பேற்று அதனைத் திறம்படக் கட்டி முடித்தார்கள். தலைவர் அவர்களின் சிறப்பான திட்டங்களைச் செயல்படுத்து முன், அரசியல் மாற்றம் காரணமாக அவர்கள் அப்பணியைத் தொடராது விலக நேர்ந்தது அதன் துரதிருஷ்டமே!

தலைவர் வாழும் வாடித் தெருவைச் சுற்றிலும், பரதகுல (மீனவர்) மக்கள் மிகுதியாக வாழ்வதால், அவர்களது நெருங்கிய தொடர்பு காரணமாக, அம்மக்கள் படும் அவதிகண்டு பொறுக்காமல், அம்மக்களின் பொருளாதார மேம்பாட்டிற்காக,

"முகநக நட்பது நட்பன்று, நெஞ்சத்து
அகநக நட்பதே நட்பு"

என்ற வள்ளுவரின் வாக்கிற்கேற்ப, உதவிசெய்யும் பெருநோக்கில், அவர்கள் நெஞ்சம் மலரும்படியாக, 'தூத்துக்குடி மீனவர் கூட்டுறவுச் சங்க'த்தை முதன்முதலில் இந்நகரில் ஏற்படுத்திக் கொடுத்த பெருந்தன்மையை யாரும் மறக்க முடியாது. இந்நகரில் எத்தனையோ பரதகுலப் பிரமுகர்கள் இருந்தபோதிலும், இம்மீனவர் கூட்டுறவுச் சங்கத்திற்கு Special Development Officer's D. O. R. C. 47 / 49 dated 31-1-50ன் பிரகாரம் Chief Promotor ஆக இருந்து இச்சங்கத்தை வளர்ச்சியுறச் செய்துள்ளதில் மீனவர்கள்பால் தலைவர் அவர்களுக்குரிய அன்பு விளங்கப் போதுமானது.

தலைவர் அவர்களின் ஒழுக்கம், செயல்திறன், மனோதைரியம், தமக்கே உரித்தான தனிப்பாணி, தீர்க்கதரிசனம் முதலியவற்றை நோக்குங்கால், நமது நினைவுக்கு வருவதெல்லாம் கவியரசர் தாகூரின் கீதாஞ்சலி கீதமே!

"எங்கே மனம் அச்சமின்றி விளங்கு கின்றதோ
தலைநிமிர்ந்து நிற்கின்றதோ,
எங்கே அறிவுக்குத் தளையில்லையோ,
எங்கே வாய்ச்சொற்கள் உண்மையின்
அடித்தளத்திலிருந்து வருகின்றனவோ,
எங்கே செம்மை, நிறைவை நோக்கி
தளரா முயற்சி தன்கைகளை நீட்டுகின்றதோ,
எங்கே அறிவெனும் தெளிநீர் ஓடை

உயிரற்ற பழக்கமெனும் பழங்காட்டுப்
பாலைமணலில் போய்ச் சுவறிவிடவில்லையோ,
எங்கே எண்ணமும் செயலும் மென்மேலும்
பரந்து விரியும் வண்ணம்
என் மனத்தை நீ இட்டுச் செல்கிறுயோ
அங்கே அந்தச் சுதந்திர வான்வீட்டில்
என் தந்தையே,
எனது நாடு விழித்து எழுவதாக!

இத்தகைய அரும்பெரும் தலைவர் அவர்கள் பல்லாண்டு வாழ்ந்து, அவர்களின் அரும்பணியின் நற்பயன் அனைத்தும், இந்நாட்டு மக்களுக்கும் நல்கும்படியான வாய்ப்பினை நல்க, இம்மணிவிழா நன்னாளில், இறைவனை உள்ளார்த்தமாக வேண்டுகின்றோம்.

" படித்துவிட்டு அனைவரும் அரசாங்கத்தை நம்பிக் கொண்டிருப்பது நல்லதல்ல. படித்துப் பட்டம் பெற்றவர்கள் சிறு தொழில்களில் நாட்டம் செலுத்த வேண்டும். 'கோழி வளர்ப்பு' 'பன்றி வளர்ப்பு' போன்றவையெல்லாம் லாபம் நிறைந்த தொழில்கள். 'பன்றி' என்று இங்கு நான் குறிப்பிடுவது வெள்ளை நிறப் பன்றியை.

— பஞ்ச எதிர்ப்பு இளைஞர் முகாம் ஆரம்ப விழாவில், வேடநத்தம் கிராமத்தில் திரு. ஏ. பி. ஸி. வீ. அவர்கள் பேசிய பேச்சிலிருந்து. (1973)

நாடகக் கலையைத் தோற்றுவித்தவர் தமிழரே!

நாரண-துரைக்கண்ணன்

"உலகம் ஒரு நாடக அரங்கம்; அவ்வுலகில் வாழும் ஆண், பெண் அனைவருமே நாடக மாந்தர்கள்; இயற்கைக் காட்சிகளெல்லாம் வண்ணத் திரைகளாலாகிய காட்சிச் சோடனைகள்; வாழ்க்கை நிகழ்ச்சிகள்தாம் நாடகத்துக்கான கதைகள் ஆகும்."

இவ்வாறு நம்நாட்டுத் தத்துவஞானிகள் உலக வாழ்வை நலம்புனைந்து உரைத்திருக்கின்றனர். ஆயினும், நம்மில் பலர் ஆங்கில நாடகக் கவிஞரான வில்லியம் ஷேக்ஸ்பியர்தான் இப்பரந்த உலகத்தை ஒரு நாடக மேடையாகவும் ஆண் பெண்களாகிய மனிதர்களை நாடக நடிகர்களாகவும் கற்பனை செய்து கவி பாடியிருக்கிறார் என்று வியந்து பாராட்டுகிறார்கள்.

ஷேக்ஸ்பியர் 'As you like it" என்ற தம் நாடகமொன்றில் இவ்வீதம் புனைந்துரைத்திருக்கிறார் என்பது உண்மை; என்றாலும், அந்த ஆங்கில நாடக மேதை * உலகத்தை ஒரு நாடக அரங்கமாகவும் மக்களை நடிகர்களாகவும் வாழ்க்கையநுபவம் முழுவதையும் நாடகக் கதையாகவும் மக்களின் ஏழு பருவங்களை நாடகத்தின் ஏழு அங்கங்களாகவும் கற்பனை செய்து பாடியிருப்பதற்கு முன்பே, நம் முன்னோர் உலகத்தை நாடக மேடையாகவும் மனிதர்களை நடிகர்களாகவும் கற்பித்துக் கூறியிருக்கின்றனர்.

அண்ட சராசரங்களையெல்லாம் இயக்கி வரும் முழுமுதற் பெருங்கடவுளையே மெய்ஞ்ஞானிகள் நடராசனாகக் கண்டார்கள். இப்பிரபஞ்சம் முழுவதையுமே நடராசப் பெருமான் நடனம் ஆடும் அம்பலம் என்றும் சிதாகாசத்தில் அவன் இடையறாமல் ஆடிக்கொண்டிருப்பதையே நடனம் என்றும் இப்படி ஆடும் நடனத்தால்தான் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்தொழில்களும் நடக்கின்றன என்றும் அவனுடைய இந்நடனமே உலக உயிர்களையெல்லாம் இயக்கிச் செயல்பட வைக்கின்றன என்றும் இந்நடனம் கணநேரம் நின்றாலும் அண்டபகிரண்டமெல்லாம் தப்பித்துப் போய்விடும் என்றும் சர அசரங்கள் அனைத்தும் உயிர் அற்றுச் சவமாய் விடும் என்றும் முற்றுணர்வுடைய முனிபுங்கவர்கள் மொழிந்திருக்கின்றனர்.

---

*"..... All the world's a stage,
And all the men and women merely players;
They have their exits and their entrances;
And one man in his time plays many parts;
His acts being seven stages....." — Shakespeare

அம்பலவாணன் ஆடுங்கூத்தினுல்தான் அகில லோகமும் செம்மையாக இயங்கிக் கொண் டிருக்கிறது. உலகிலுள்ள ஒவ்வோர் உயிரும் பந்தபாசங்கள் உருவாக்கித் தரும் கதைகளுக்குத் தக்க வாறு உடம்பைத் தாங்கி நடிக்கிறது. அவை நடிப்பதற்கேற்ப உலகக் காட்சிகள் திரைச் சீலைகள் போல் மாறுகின்றன.

அங்கு இங்கு என்னுதபடி எங்கணும் நிறைந்திருக்கும் இறைவன் நாடகச் சூத்திரதாரி போல் உயிர்களுடன் ஒன்றுயும் உடனுயும் வேறுயும் இருந்து உலக வாழ்க்கையாகிய நாடக அரங்கில் ஆணவம், கன்மம், மாயை எனப்படும் மும்மலங்களால் கட்டப்பட்ட கதைகளுக்கேற்ப வேடம்தந்து அதாவது உடம்பைத் தந்து நடிக்க வைக்கிருன் என்று தத்துவமாகவும் சொல்கிருர்கள் மாதவ யோகிகள்.

உலகையும் உயிர்களையும் செயற்படுத்த ஆடும் இறைவனையே சைவசமயத்தினர் அம்பல வாணன், கூத்தரசன், நடராசன் என்ப் பெயரிட்டு அழைத்துத் துதிக்கின்றனர். வைணவ சமயி கள் அரங்கநாதன் என்று போற்றுகின்றனர்.

ஆகவே, இறைவனின் இந்நடனத்திலிருந்துதான் நடனம், நாட்டியம், கூத்து, நாடகம் எனப்படும் அருங்கலைகள் பிறந்திருக்கின்றன. மனித வாழ்வே நாடகமாகப் பரிணமித்திருக் கிறது என்று நாம் உணரவேண்டும்.

இத்தத்துவங்களை நன்கு உணர்ந்தவர்கள் உலகப் பழங்குடியினரான தமிழர்களே யாவர். ஆகவே, நாடகக் கலை முதன் முதல் தமிழர்களிடமிருந்தே உண்டாயிருக்கிறது என்றல், அதை யாரும் மறுக்க முடியாது.

உலகம் ஒரு நாடகச் சாலை என்று நம் நாட்டுப் பேரறிஞர்களோ ஷேக்ஸ்பியர் போன்ற பிற நாட்டுப் பெரும் புலவர்களோ யார் சொல்லியிருந்தாலும் இதுதானே உண்மை?

இந்த உலக நாடக மேடையில் எத்துணை விதமான நாடகங்கள்? எத்துணை நாடக மாந்தர் கள்? எத்துணை விதமான குணஞ் செயல்களையுடைய நாடக மாந்தர்கள்? இந்நாடக அரங்கில் எத்தனை வண்ண வண்ண இயற்கைக் காட்சிகள்? இந்த வாழ்க்கை நாடகங்களை நடத்தி வைக்கும் சூத்திரதாரி யான முழுமுதற் பெருங்கடவுளை நம் மூதாதையர் நடராசன் என்று அழைத்தது எவ்வளவு பொருத்தம்? அப்படி அவனைக் கூத்தபிரான் என்று கூப்பிட்ட நம் முன்னோர் எத்துணைப் பேரறிவுடையவர்கள்? முதலும் முடிவுமில்லாத இந்த வாழ்க்கை நாடகங்களை நடத்தி வைப்பதற்குத் தானே அம்பலவாணன் ஒரு கணமும் ஓய்வு ஒழிவில்லாமல் நடனமாடிக் கொண்டிருக்கிருன்?

ஆறறிவுடைய மனிதர்களிடம் இயற்கையாகவே நடிப்புக்கலை அமைந்திருக்கிறது. அவர்கள் பேசுந்திறனைப் பெறுவதற்கு முன்னர், முகபாவத்தின் மூலமாக, கண் முதலிய அங்க அசை வுகள் மூலமாக, அதாவது மெய்ப்பாட்டின் வாயிலாகத் தங்களுடைய உள்ளங்களிலிருந்து எழும் உணர்ச்சிகளையும் எண்ணங்களையும் ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொள்ளலாயினர் என்று ஆதி மனித வரலாறு கூறுகிறது. ஆகவே, நாட்டியம், நாடகம் எல்லாம் இந்த முகபாவங்கள், உடல்

உறுப்புக்களின் இயக்கங்கள், மெய்ப்பாடுகள் ஆகியவைகளிலிருந்தே உண்டாயிருக்கின்றன. பாவம், முத்திரை, அபிநயம் ஆகியவை கொண்ட நாட்டியமே காலப் போக்கில் நாடகமாகவும் உருப்பெற்றி ருக்கிறது.

வெறும் ஆடலும் பாடலுங் கொண்ட நடனம் நாட்டியம் எனப்படுகிறது. முழுவதும் கதை தழுவி நடிக்கப் படுவது நாடகம் என்று சொல்லப்படுகிறது.

கூத்து என்பது ஒரு கதையின் ஒரு பகுதியை ஒருவரேனும் ஒரு சிலரேனும் ஆடிக்காட்டு வது; கதையே தழுவாது ஒரு பாடலின் பொருளை முகம், கண், கை, கால் முதலான உறுப்புக்களின் இயக்கங்களால் ஆடிக்காட்டுவதும் விழாக்காலங்களில் ஒருவரோ, ஒரு சிலரோ பாட்டுங் கொட்டுங் கொண்டு மகிழ்ச்சியோடு ஆடுவதுமாகும். நாடகம் என்பதோ முழுவதும் கதை தழுவி வருங் கூத் தாகும்.

இந்நாடகக் கலை உலகில் முதன்முதல் தமிழகத்தில்தான் தோன்றியிருக்க வேண்டும். ஏனெனில், உயிரினங்கள், அதிலும் மனித இனம், முதன்முதல் தோன்றியதே கன்னியாகுமரியோடு முடிவுறுமல் தெற்கே நெடுந்தூரம் வரைப் பரவியிருந்த இலெமூரியா கண்டத்தில் தான் அதாவது, பஃறு நாடு முதலிய நாடுகளும், குமரிக்கோடு, மணிமலை முதலிய மலைகளும், முத்தூர், கபாடபுரம் முதலிய ஊர்களும் பஃறுளியாறு, குமரியாறு முதலிய ஆறுகளும் கொண்ட தமிழ்நாட்டில்தான் என்று நில நூல் ஆராய்ச்சியாளர்கள் கருத்துத் தெரிவித்திருக்கின்றனர். உலகில் முதன்முதல் மொழி, கலை நாகரிகங்கள் மண் தோன்றிக் கல் தோன்றுக் காலத்தே வாளொடு முன்தோன்றி மூத்தகுடி தமிழ்க் குடி என்று சிறப்பித்துக் கூறப்படும் தமிழ்நாட்டு மக்களிடம் தான் செழித்தோங்கியிருக்கின்றன; தமிழ் மக்கள் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே மொழி, கலை நாகரிகங்களைப் பெற்றிருந்தனர் என்பதை மெய்ப்பிக்கச் சான்றுகள் பல இன்றுங் கிடைத்துக் கொண்டே யிருக்கின்றன.

உலகில் தோன்றியுள்ள பல மொழிகளுள்ளே மிகப்பழைய மொழிகள் ஐந்து என்பதும்; தமிழ், சமஸ்கிருதம், ஈப்ரூ, இலத்தின், கிரேக்கம் ஆகிய அந்த ஐந்து மொழிகளில் நம் தீந்தமிழ் மொழி யொன்றே இன்றளவும் சீர் இளமைத் திறத்தோடு மக்களால் பேசப்பட்டு வருகிறதென்பதும் மற்ற நான்கும் உலக வழக்கு ஒழிந்து ஏட்டளவில் நின்றுவிட்டன என்பதும் ஆராய்ச்சியாளர்களுடைய முடிந்த முடிவுமட்டுமல்ல; நாம் கண்கூடாகக் கண்டு வரும் உண்மையுமாகும்.

ஆகவே, உலகில் முதன்முதல் தோன்றிய தமிழ்நாட்டு மக்களிடையேதான், மொழி, கலை, நாகரிகம் ஆகியவைகள் முதன்முதலாக உண்டாயிருக்கவேண்டும். எனவே, நாட்டியம், நாடகம் ஆகிய அருங்கலைகள் தமிழ் மக்களிடம்தான் உருவாகியிருக்க வேண்டும். அறுபத்து நான்கு கலைகளுக் குந் தாய் நாடகக்கலை தான் என்று அறுதியிட்டுக் கூறலாம்.

மக்கள் வாழ்க்கையில் விளையாடும் விளையாட்டே நாடகம் என்று பெயர் பெற்றது என்பார் மறைமலையடிகளார். நாடகம் என்னுஞ்சொல் விளையாட்டு என்னும் பொருளையுடையது என்பதற்கு அவர் மாணிக்கவாசகப் பெருமான் அருளிச் செய்த 'நகவே தகும் எம்பிரான் என்னை நீ செய்த

செய்த நாடகமே, என்ற திருவாசகத் திருச்சதகத்தில் வரும் அடியைச் சான்றாகக் காட்டியிருக்கிறார். பொது மக்கள் எல்லோரும் நாடகத்தை ஆட்டம் என்று வழங்கி வருதலும் உற்று நோக்கற்பாற்று. இன்னும் இது 'குதி' என்னும் முதனிலையிற்றோன்றிய 'கூத்து' என்னுஞ் சொல்லாலும் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, 'விளையாட்டு, நாடகம், ஆட்டம், கூத்து, என்னுஞ் சொற்களெல்லாம் முதலில் ஒரே பொருளையுணர்த்துவனவாய்ப் பின்னர் நாடக முறைகள் பல்கப்பல்கச் சிறிது சிறிது பொருள் வேற்றுமையுடைய வாயின வென்க' என்றும் அவர் விளக்கியிருக்கிறார்.

ஆங்கிலத்தில், 'Drama' வை play என்றுஞ் சொல்வதைப் பார்க்கும் போது மறைமலையடிகளாரின் இக்கூற்று உண்மை என்று உறுதியாகிறது.

இந்நாடகம் முதன்முதல் மரத்தால் செய்த பாவைகளைக்கொண்டு ஆடிக்காட்டி மரப்பாவைக் கூத்து என்று தொடங்கித் தோல்பாவைக் கூத்தாக வளர்ந்து பொதுவாகப் பொம்மலாட்டம் என்ற பெயர் பெற்றுப் பின்னரே, பொம்மலாட்டம் நடத்தி வந்த சூத்திரதாரிகளான மனிதர்களே கூத்து என்ற கவின்கலையைக் கற்று நாடகமாடும் அளவுக்கு வளர்ந்திருக்கிறது என்பதை வரலாற்று முறையில் நாம் காணலாம்.

'சிவபிரானும் உமாதேவியுமே முதன்முதல் நாடகத்தையுண்டாக்கினர்' எனக் கூறும் மறைமலையடிகள் 'முத்திராராட்சசம்', 'மாலதி மாதவம்' ஆகிய நாடக நூல்களின் ஆசிரியர்களும், 'மாளவிகாக்கிநிமித்திரம்' என்ற நாடகத்தில் காளிதாசரும் நாட்டிய சாஸ்திரத்தில் பாணினி முனிவரும் இக்கருத்தை வலியுறுத்தியிருப்பதாக ஆதாரங்காட்டியிருக்கிறார். மகாமகோபாத்தியாய உ. வே. சாமிநாத ஐயரவர்களும், ''நாடகத்திற்குப் பரமாசாரியார் சிவபெருமானென்று பழைய நூல்களால் தெரிய வருகின்றது'' என்று 'முத்தமிழ்' என்ற தம் கட்டுரையில் குறிப்பிட்டிருக்கிறார்.

மேலும் மறைமலையடிகளார், ''பண்டைக்காலத்தில் நாடக நூல் உண்டானது தமிழ் மக்களுக்குள்ளேதாம் என்று அறிதல் வேண்டும்.... நடனமும் நாடகமும் கூத்துமெல்லாம் முதன் முதல் கண்டறிந்து நூல்கள் எழுதினோர் பண்டைத் தமிழாசிரியர்களேயாதல் நன்கு பெறப்படா நிற்கும், இதனுலன்றே தொன்றுதொட்டு இயலும் இசையும் நாடகமும் தமிழுக்கே உரியவாதல் தெரிந்து சான்றோரெல்லாம் தமிழை 'முத்தமிழ்' என வழங்கி வருகின்றார்'' என்று கூறித் தமிழில் நாடகக் கலை முதன்முதல் தோன்றி வளர்ந்து பிறமொழியாளரால் பின்பற்றப்பட்டது என்ற உண்மையை நிலைநாட்டியிருக்கிறார்.

இயற்றமிழும் இசைத் தமிழும் நாடகத் தமிழும் ஒன்றுக்கொன்று இணைந்த நிலையில் தமிழ் மக்களின் வாழ்க்கையை வளஞ்செய்திருக்கின்றன. அதன் பயனாகவே, நல்ல கலை இலக்கியங்கள் நிரம்ப ஏற்பட்டிருக்கின்றன. இளங்கோ அடிகள் இயற்றித் தந்துள்ள நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் இயல், இசை, நாடகம் ஆகிய மூன்றிலும் சிறந்து விளங்கும் முத்தமிழ்க் காப்பியம் என்ற பெருமையைப் பெற்றிருக்கிறது. இக்காப்பியத்தில் வரும் அரங்கேற்றுக் காதை மூலம் பண்டைத் தமிழ் நாட்டில் நாடகக் கலை மக்களால் போற்றி வளர்க்கப்பட்ட நிலையை நாம் நன்கு அறிகிறோம்.

ஏ. பி. ஸி. அவர்களுக்கு மணிவிழா நகரெங்கும் பொதுவிழா

எம். எஸ். செல்வராஜ், (Ex. M. L. A.)

ஏ. பி. ஸி. தமிழ்நாட்டின் எந்த அரசியல் கட்சியில் ஈடுபட்டிருப்பவர்களும் கற்றோரும் உற்றோரும் உடனே தெரிந்துகொள்ளும் பழக்கப்பட்ட பெயர். திருவாளர் ஏ. பி. ஸி. வீரபாகு அவர்களின் இப்புகழ் மணக்கும் பெயர் நாடு முழுமையும் பரவிவரக் கிடைத்த சந்தர்ப்பமே, தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவராக அவர்களிருந்த காலமாம். அப்பெரியாரின் முழுத் திறனும் நாடு அறியப் போதுமான அவகாசம் அப்பொறுப்பில் அவர்களுக்கு இல்லாமல் போயிற்று! எனினும் கிடைத்த குறுகிய கால அளவில் தமிழ்நாடு முழுமையும் காங்கிரஸ் கட்சியின் இளம்பயிருக்கு ஊன்று கால்கள் நடப்பட்டன. அப்பயிரும் கொடி படர்ந்து பலனளிக்கும் காலம் அண்மை எதிர்காலத்திற்குரிய தாயிற்று.

திரு. ஏ. பி. ஸி. அவர்களின் வாழ்வில் இயல்பாய்ப் பெற்ற பாக்கியங்கள், பக்தி, கல்வி யறிவு, பண்பு, திறன் முதலிய அணிகளால் அழகுபெற்று மிளிர்கின்றன. காண்போர், அணுகுவோர், கேட்போர் உள்ளத்தில் இயல்பாகவே மரியாதையுடன் கூடிய ஓர் இனந்தெரியாத அச்சம், ஒச்சம், அடக்கம் ஏற்படுகின்ற அளவிற்கு ஆன்ம ஒழுக்கத்தால் உயர்பீடம் அமைத்துக்கொண்டவர். அண்டியவர்க்கு அபயம் அளித்து வாழ்வளிக்குந் தாளாளர்.

பள்ளிப்பருவம் முதலே தம்மை ஒரு தேசீயக் கட்சியிலே பிணைத்துக்கொண்டாலும் எல்லாக் கட்சியினரும் மரியாதையுடன் ஆலோசனை ஏற்கும் அளவிற்கு முதிர்ச்சியுள்ள அரசியல் வாதி.

கல்விப் பணி, கூட்டுறவுப் பணி, சட்டசபைப் பணி, பூஜ்ய வினோபாவின் புனிதப் பணி ஆக ஏற்கும் எப்பணியிலும் சீரும் சிறப்பும் மிக்க நீங்கா நினைவைப் பதிக்கும் தனி இடத்தைப் பெற்றுக்கொள்ளும் தீரமும் திறமும் மிக்க உழைப்பாளி.

பல்துறைக் கல்விக்கூடங்கள் பல அவர் சிந்திய வியர்வையின் உயர் சின்னங்கள். கற்றோர் முன் ஒரு களிரேறு. மற்றோர்க்கு மதியூகி, மாற்றாரும் மதிக்கும் வண்ணம் திருமந்திரமும் கைவல்ய தந்திரமும், மருந்தும்...மஹிசுவாமிகள் யந்திரமும் இன்ன அன்ன கற்ற மேதை.

மதங்களெல்லாம் நன்னெறி மார்க்கங்கள் என மதித்து மகிழும் மனநிலை. அகத்தின் அழகு சிந்தும் முகம். தவழும் தம்பீர நெற்றியில் தவச்சின்னம்.

தாய்த்தமிழும் ஆங்கிலமும் கொஞ்சும் நா நலன். அன்னை பாரதத்தின் அமுதப் பொது மொழி இந்திக்கு இதயத்தில் உயரிடம் பதித்துப் பரந்த பாரதத்தைப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னும் பின்னும் உற்றுநோக்கும் உயர் ஞானம்.

கருத்துமிகும் இலக்கியங்கள் பலகற்றுக் கற்றவற்றைக் கசடறச் சொல்வதிலே, பொருளாதாரத் துறை உணர்த்தும் பொருள் மிகு பேச்சினிலே, ஆழமான விஷயங்களையும் அப்பாவிக்கும் உணர்த்தும் நாவன்மை.

மத்திய அரசுத்துறை ஊழியர்களின் போராட்டத்திற்கு முன்னோடி மகாநாடு தூத்துக்குடியில் நடைபெற்றுகிறது, மத்திய அரசுக்கு எதிராகத் தூண்டும் அரசியல் தலைவர்களின் தடல்புடல் பேச்சுக்கள் ஆரவாரமாக அமைந்த தூற்றில. விரும்பி அழைத்தவர்கள் முகத்தைச் சுளித்தார்கள். எனினும் அகத்தைத் தொட்ட பேச்சு திரு. ஏ. பி. ஸி. வீரபாகு அவர்களின் கருத்தமைந்த, தர்க்க ரீதியான பேச்சு, சிங்கத்தைக் குகைவாயிலில் சந்தித்த தீரம்.

இத்தனையும், இனி எத்தனையோ! இவை அத்தனைக்கும் ஆதி அரன் நினைவும் அதன் அடியொற்றி அமையும் நெறிவாழ்வும் என வாழ்ந்து காட்டும் திருவாளர் ஏ. பி. ஸி. வீரபாகு வாழ்க பல்லாண்டு, வாழ்ந்து, சத ஆண்டு காண்கவே.

" உற்பத்தித்துறையில் ஒரு பொருளைக் குறித்த எல்லா உரிமைகளையும் பெற்றுள்ள நிலையே ஏகபோகமாகும். எந்த ஒரு தேசத்திலும் உற்பத்தித் துறையில் ஏகபோகம் வகிக்கும் கும்பலைக் கட்டுப்படுத்தாது போனால், அந்தத் தேசத்தில் ஒரு சிலரின் ஆதிக்கத்தைத் தடுத்து நிறுத்த முடியாது."

—பாங்குகளைத் தேசியமயமாக்கியது சரியா?
என்ற பேச்சிலிருந்து

ராஜாஜி அவர்கள் வ. உ. சி. கப்பலை மிதக்கவிடல் (1948)

தூத்துக்குடி இந்தியன் சேம்பர் ஆண்டுவிழா சிம்ஸன் குரூப்
அனந்தராமகிருஷ்ணன் உரையாற்றுகையில்
நமது ஏ. பி. ஸி. வீரபாகு தலைமை வகித்தல்

கல்லூரி முதல்வர்களுடன் நமது தலைவர் வீரபாகு

ஏ. பி. எஸ். மகாலெட்சுமி கல்லூரியை
தமிழக முதல்வர் ஆரம்பித்து வைத்தல்
30—6—74



சாயர்புரம் போப் கல்லூரியை
நமது ஏ. பி. எஸ். வீரபாகு ஆரம்பித்து வைத்தல் (1962)

வீரபாகுபிள்ளைத் தமிழ்

அ. செகதீசன், எம்.ஏ.
(வ.உ.சி. கல்லூரி, தூத்துக்குடி.)

பிள்ளைத் தமிழ்க்கும் பெருமைவர 'வீரபாகு
பிள்ளைத் தமிழ், என்றே பேசிடுவேன் —பிள்ளையெனும்
பிள்ளை,யார்? சொல்லுரிமைப் பிள்ளைத் தமிழ்கொள்ளப்
பிள்ளையார் காப்பே பிடிப்பு!

1 காப்புப் பருவம்

உலகெலாம் கொண்டாடிக் கலமாகக் கொண்டணிய
ஊட்டும்வெண் முத்துச் சிப்பி
ஓயாமல், ஆழி,அலை நாவில்'திரு மந்திரம்'
ஓதவும், கரையில் வந்து
குலம்மிகப் பொன்மணலில் கொள்கைமுத் தின்றிடவும்,
குமரனைக் கூவு கின்ற
கொண்டைச் சேவல்பாது காத்திடக் கொண்டுபோய்க்
குடியெலாம் உதவ, வீதி
வலம்வரும் புகழ்த் தூத்துக் குடியினில், 'வாடி'யாம்
வள்ளல்கள் வாழு மனையில்,
வளர்குலக் கொழுந்தாக வந்திடும் பிள்ளையை,
வரலாற்று வீர பாகை
நலந்தரும் திருவேலும், நாடுரா ஜாங்கோயில்
நாயகர், பச்சைப் பெருமாள்
நாமங்கொள் சாஸ்தாவும், பாகம்பிரி யாள்பதியும்
நாளெலாம் காத்திடுக வே!

2 செங்கீரை

(கீர்=சொல். செங்குதலை சிந்திச் சாய்ந்தாடுதல்)

முத்தமிழ்த் துறையெலாம் முன்னேற்று வாயென,
மூசிழத்திடும் வாய்சி வக்க,
முப்பொருள் உண்மையை மூன்றுவிரல் திருநீறு
மூக்காலும் கணித்தி ருக்க,
சித்தர்ப ரம்பரை சீர்ப்படும் என்று வெண்
சிரிப்பெலாம் சித்தி யற்ற,
செல்வமாம் சம்பந்தப் பிள்ளையார் செங்கெறித்
திருமுறை யிசைய ரும்ப,
தத்துவக் காப்பீடு தழைத்து நேர் வருமெனச்
சாற்றுமென் குதலை சிந்த,
தடைபலாத் தேசியப் படைவிட்டுக் கால்மாறிச்
சாயாத திறம்வி ளங்கச்
சித்திரப் பொன் மேனிச் செயலாண்மைச் சிவகா!
செங்கீரை யாடி யருளே!
சிவமாகி எனையாண்ட செந்தில்வேல் துணைவனே!
செங்கீரை யாடி யருளே!

3 தாலப்பருவம்

(தாலாட்டு)

(வேறு)

கண்ணெளி வழங்கிடும் கருத்துமு காமெனக்
கல்லூ ரிச்செயலாய்க்
கவினுறு நிறுவனம் வ. உ. சி. எனும் கலைக்
கலங்கரை விளக்கிட்டாய்.
பெண்ணெளி பெறுமெனும் பெயர்மகா லட்சுமி
பெருமையைத் தலக்கிட்டாய்.
பெருங் குடி யிருப்பென பேரா சிரியர்க்குப்
பெய்வரம் மனையிட்டாய்!
உண்ணமு தாகென எண்ணரும் பலதுறை
ஊட்டிட, மக்களெலாம்
ஒருமையின், கேவைகள் நிறைவினில் நின்னிழல்
உறங்கினர்! காலமெலாம்
தண்ணருள் தந்திடக் கண்விழித் திருந்தனை...!
தாலெலோ தாலேலோ!
தடைபல வென்றிடு நடைபயில் நாயக
தாலெலோ தாலேலோ!

4 சப்பாணி

(கையோடு கைசேர்த்துக் கொட்டுதல்)

(வேறு)

தேசியச் சுடர்விளக் கேற்றிய குமரனின்
திருக்கரக் கொடிக் கம்பமோ,
தேவையாய்க் கூட்டுறவு திகழ்வித்த பொதுநலச்
சேவையின் திருச்சின்னமோ
வீசிடும் சமுதாய வெங்கடல் நடுமடு
விரைந்தாடும் தீய சக்தி
வெறியேறும் அரக்கராய் விளைமரா மரங்களை
வீழ்த்திடும் வெற்றி வேலோ,
பேசியே அரசியல் பூசாத கொள்கையின்
பிரணவத் துதிக்கைகளோ,
பிடிப்பாகும் சமதர்மப் படிப்பாகும் பாதையில்
பிடித்தேகும் நம்(ரி)க் கையோ!
கூசுபொருள் தேடாத தேசநலக் கைகளால்
சப்பாணி கொட்டி யருளே!
கொத்தடிமை கட்டழிய வைத்தமுதல் செட்டியார்!
சப்பாணி கொட்டி யருளே!

5 முத்தப்பருவம்

(வேறு)

மணிவா சகரின் காலத்தை
மாற்றி விளக்கும் மதி,முத்தோ,
மணிவா சகமாய் ஆராய்ச்சி
மடைபோல் திறக்கும் நடைமுத்தோ,
பணிவா சகமாம் அலுவலகப்
பண்பா ராய்ச்சி, படைமுத்தோ,
பரமன் அடியே பாடிடுவார்
பக்தி மூற்கும் பணிமுத்தோ,
*துணிவா சகமாம் அரசியலின்
தூக்கு சீரின் தொகைமுத்தோ
தொட்ட இடமெல் லாம்துலங்கும்
துறைதோ றள்ளும் துறைமுத்தோ,
அணிவா சகமாம் ஆங்கிலத்தும்
அருஞ்சிந் தனைச் சொல் முத்தந்தா!
ஐயா, தூத்துக் குடிமுத்தின்
அழகும் தோற்க முத்தந்தா!

* துணிவு + ஆசு + அகம் = துணிந்த குற்றமுள்ள அகம் ஆன

6 வாராஹி

(வா! என்று அழைப்பது)

(வேறு)

பாலியாய்க் கிடந்திட்ட பருமணல் உலகத்தைப்
பல்கலைச் சோலை யாக்கிப்
படிக்கின்ற மாணவர் பிடிக்கும் நூல் எழுத்தெலாம்
பதிவாகி வருகை தந்தாய்;
மேலைவாய்ப் பின்றியே மேவுநற் கல்வியின்
மெருகின்றி ஒதுங்கு வோர்க்கும்
மீட்டும்யாம் இசையாகப் 'பதிவுக்கட் டணவிடுதி'
வேண்டுமென் றியற்றி, ஞானச்
சோலைசூழ்ந் திடுவகையில் ஏழையர் வயிற்றினில்
சோறாக வருகை தந்தாய்;
தூக்குசீர்த் திருத்தொண்டத் தொகையாக நாள்தோறும்
சுமன்றலா வலைய வந்தாய்!
மாலைவாய் மகியாக, மாநிவரும் பருவத்தும்
மன்னும்மனை யாக, எங்கள்
மனமேடை யினில் தங்கி மகிழவே மன்னவா!
வருகவே! வருக வேஈ!

7 அம்புலிப் பருவம்

(வேறு)

பிறையாகி அரிவாளாய்ப் பிறங்கும் திங்காள்!
பிழையாத அறிவாளி இந்தப் பிள்ளை!
பின்னும் நீ குறையாகித் தேய்ந்து தேய்ந்து
பெய்தப்பும் மையிருட்டாய் மறைந்து போவாய்;
நிறைவாகி நாள்தோறும் வளர்ந்து யர்ந்து
நிலவுலகின் நெஞ்சகவாள் புகழைப் பாய்ச்சி
நேர்த்தோன்றும் இப்பிள்ளை! 'அமிழ்தம்' பெய்யும்
நிலா!என்பார்; சொல்லமிழ்தம் நிலவி நிற்கத்
துறைதோறும் கலைபொழியும் வீரம் பாகு!
தொகைக் களங்கம் உனக்குண்டெ! பிள்ளை பூசைத்
தொட்டழுத்தும் மைப்பொட்டும் களங்கம் ஆமோ?!
தொடர்ந் தன்பில் அமெரிக்கர், ருஷ்யருந்தாம்
சிறையாக உனைவலைக்கச் சேர்ந்த போதும்
செப்பமுற வாழும்வகை அளித்திட் டாயா?
சேர்ந்தோர்க்கும் அன்புநீர், அறிவுத் தென்றல்
செழிக்கவிடும் பிள்ளையிடம் ஆட வாவே!

8 சிற்றில்

(சிற்றிலை அழிக்காதே! என வேண்டுதல்)

(வேறு)

கல்லூரி வளாவிலே ஒவ்வொரு கணத்திலும்
கட்டடம் எழுப்பு கின்றாய்;
காப்பாக வீட்டமைப் புக்கழகம் கண்டுநேர்க்
கண்ணுற வ. உ. சி.யின்
சொல்லாறும் பெயரிலே சிதம்பர நகர் ஆகச்
சூழொழிற் குடிய ளித்தாய்;
சுவையாக நின்பெயர் சூட்டுக என்னவும்
சூடாக மறுத்து விட்டாய்;
ஒல்லாத கடற்கரை யோரத்தே, பரதவர்
உயிர்வாழக் குடியி ருப்பென்(று)
உயர்மனை இல்லங்கள் உருவாக்கி உதவினை!
ஓயாமல், கால மெல்லாம்
எல்லையே இல்லாமல் இல்வாழ்க்கைப் பேரில்லம்
எழுப்பவே எறும்பு, பாம்பாம்
எதிர்ப் புற்றுச் 'சிற்றிலை' அழிப்பதோ! ஐயனே!
எம் சிற்றில் சிதைத்தி டாதே!

9 சிறுபறை

(சிறுபறை முழக்க வேண்டுதல்)

(வேறு)

அன்னையே ஊட்டித் தந்த
அன்னைதற் றமிழில் ஆழ்ந்தே
அருங்கலை இலக்கி யங்கள்,
ஆளுடை பிள்ளை ஞான
முன்னவன் திருமு றைகள்
முதலீட்டுப் பொருளா தார
முறைபயில் தத்து வங்கள்,
முழுவர லாற்று நூல்கள்,
இன்னமும் தோய்ந்து, தேனின்
இசை,அர சியலின் ஆக்கம்
இயலும்சொற் பொழிவென் முக
ஏறிடும் மேடை தோறும்,
சென்னைச்சட் டம்மன் றத்தும்
செம்மையே பேசும் நாவாம்
சிறுபறை முழக்கு வாயே!
சிந்தனை எழுப்பு வாயே!

10 சிறுதேர்

(சிறுதேர் உருட்டும்படி வேண்டுதல்)

(வேறு)

அன்பினுல் மகன்மையே கொண்டருளும் மகாலட்சுமி
அம்மையும், சொக்க லிங்க
அண்ணலும், வரமுதல் ஆக்கிய பரமசிவம்.
அன்னைஉல கம்மை யுந்தாம்
இன்பினுல் ஆசியுரை வழங்கவும். தனலட்சுமி,
இருந்தூட்டும் தான்ய லட்சுமி
இயங்குதை ரியலட்சுமி, இணைந்தவீ ரியலட்சுமி
இல்வாழ்க்கை விஜய லட்சுமி,
நன்றருளும் 'சொக்கு'முதல் ஒன்றும்ஆண் எழுவருடன்,
நங்கை,ஓர் உலக மாள் ஆம்
நந்தாவி ளக்கின்ற சந்தான லட்சுமி
நாட்டுமகா லட்சுமி யாம்
வென்றருளும் துணைவியுடன், விளங்குதிரு மண'மணி
விழா'த்தேர் உருட்டி யருளே!
விழியாரக் கண்டுருக வீரபாகு வேந்தனே!
விழாத்தேர் உருட்டி யருளே!

" சோஷலிசம் என்பது ஒரு பொருளாதாரக் கோட்பாடு, சமுதாய வளர்ச்சியை நோக்கிச் செல்லும் திசை வழியே விஞ்ஞானப்பூர்வமாகக் காட்டும் தத்துவம். ஆனுல் ஒவ்வொரு வளர்ச்சிக் கட்டத்தி லும் மக்களின் தேவையை அது பூர்த்தி பண்ணும்."

* * * * *

" இந்திய அரசின் ஆதிக்கத்திலுள்ள பொதுத்துறை நிறுவனங்களின் வளர்ச்சியே சோஷலிச சமுதா யத்தை உருவாக்கும் அடித்தளமாகும்."

—பாங்குகளைத் தேசீய மயமாக்கியது சரியா? என்ற பேச்சிலிருந்து

ஏ. பி. ஸி. வீரபாகு வாழ்க்கைக் குறிப்புகள்

பூ. சாம்பசிவன், எம். ஏ., பி. டி.

முன்னுரை

தமிழ்நாடு நான்கு வகை நிலங்கள் உடையது. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்பவை அவை. இந்நாநிலங்களையும் நாற்பாற் குலத்தார் மேற்பார்த்து ஆண்டனர் என்ப. அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்போர் வேளாண்மையும் வணிகமும் புரிந்து நாடு காத்து நலம்புரிக் கொள்கையினராய்க் கடவுள் வழிபாடியற்றி வந்தனர். வேற்றுமையில்லா விழுத்திணைப் பிறந்த நாற்பாற் குலத்தாருள் வணிகர் பலரும் மருதத்திலும் நெய்தலிலும் சிறந் திருந்தனர் என்ப.

நெய்தலங் கடற்கரையில் பூம்புகார்ப்பட்டினம், நாகப்பட்டினம், கொற்கைப்பட்டி னம், காயற்பட்டினம், குலசேகரப்பட்டினம் முதலியவை பெருந்துறைமுகங்களாகவும் இடையிடையே சில ஊர்கள் சிறு துறைகளாகவும் இருந்தன. உள்நாட்டு வர்த்தகமும் வெளிநாட்டு வாணிகமும் இத்துறைமுகங்கள் வழியே நடைபெற்றன. பாண்டிநாட்டுப் பழம்பதியாகிய கொற்கைக்கு அருகில்-மாறேக்கத்து நாட்டில் மன்னர்குடாக்கடலில் அலை யின்றித் திகழும் அமைதிக் கடற்கரையில் அமைந்துள்ளது திருமந்திர நகரமென்னும் தூத் துக்குடி. இங்குக் கடல் ஒலியும் இல்லை, காடுகளில் பேய் மிகுதியிருந்தும் பேய்ங் காற்று ஒலியும் இல்லை. இறைவிக்கு இறைவன் மந்திரம் கூறியதின் விளைவு இஃது என்றும், எனவேதான், திரு மந்திர நகரமாயிற்றென்றும் கூறுப. உப்புநீர் மிகுந்த கடற்கரை நகரில், குடிதண்ணீர் அரிதாதலின் நாடோறும் மக்கள் ஊற்று நீரையே உண்பர். ஆழமின்றி, தூற் றத்தூற்றப் புதிதாகத் தோண்டி நாடோறும் நீர்கண்டு குடிக்க வேண்டியிருந்ததால் "தூற்றுக் குடி" ஆயிற்று என்றும் கூறுப.

இந்தப் பட்டினத்தின் பாடி வீடு வாடித்தெரு என்பதாகும். கோட்டை கொத்தளங் களுடன் கூடிய குறுநில மன்னர்போல் வாழும் வணிகர் இல்லங்கள் நிறைந்த தெரு. கடற் கரையை அடுத்த, நகரின் கீழ்க் கோடியிலுள்ள, கட்டுக்காவலுள்ள வீதி. இங்குத்தான் நகர்த் தலைவர் என வாழ்ந்த பிரதானி செட்டியார் என்ற பரமசிவன் செட்டியார் வாழ்ந்தார். பரம் பரைச் சைவ வேளாளர் குலத்தில் உதித்த பிரதானி செட்டியார் பெருங்குடி வணிகராய்த் திகழ்ந்தார். வாடித்தெருவை வேலியிட்டுக் காத்தவர் எனலாம். சைவ வேளாண் செட்டி யார் (வெள்ளாஞ் செட்டியார்) மரபின் மன்னரென விளங்கினர். இத் தெருவைப்பற்றி கால்டுவெல் ஐயரவர்கள் "வாடி என்ற சொல் டச்சு மொழியில், உயர்ந்த இந்துக்கள் வாழும் குடியிருப்பு" (Compound)என்றும், 'வாடித்தெருவினர் முத்துக்களின் விலையை நிர்ணயிப்பதில்

வல்லவர்' என்றும் எழுதியுள்ளார். பிரதானி செட்டியாரின் பேரும் புகழும் மேனாட்டினரை இவ்வாறு எழுதச்செய்ததுபோலும்.

பிரதானி செட்டியார் ஈழநாட்டுடனும் பிறவெளி நாட்டொடும் 'சண்முகப்புரவி' என்ற உருமூலம் கப்பல் வாணிகம் புரிந்தார். அவர்தம் மகள் திருமணத்திற்கு யாழ்ப்பாணத்துப் பந்தல்காரர்கள் வந்து மணப்பந்தல் வேய்ந்ததாகக் கூறுவர். சண்முகப்புரவி என்ற கப்பலின் உரு ஒன்று, வீடு கட்டியதில் பயன்படுத்தப்பட்டுள்ளதாம். வணிகர் கோமானுக வாழ்ந்த பிரதானி செட்டியார்-பரமசிவன் செட்டியார் நாடோறும் பூவும் புகையுமாய்ப் பூசை செய்யும் புண்ணியர். தமெக்கென வாழாப் பிறர்க்குரியர். அறம்பல புரியும் நிரம்பிய உளத்தர். சைவவணிகராய செட்டியார் நகரின் மேற்கில்-நடுவில் கயத்தாற்றுக்குறுநில மன்னரால் கட்டப்பெற்றுள்ளதாகக் கூறப்படும் சிறிய சிவன்கோயிலைப் பெரிதாகக் கட்டி மகா மண்டபம் அர்த்த மண்டபங்கள் அமைத்து, சங்கரராமேஸ்வரர், பாகம்பிரியாள் திருக் கோயிலைச் செப்பனிட்டார். சிந்தை குளிரக் குடநீராட்டு விழா (கும்பாபிஷேகம் செய்தார்). அன்று பிறந்த தம் மகனுக்குச் 'சங்கரபாகம்' என்று பெயரிட்டு மகிழ்ந்தார். இன்றும் இப் பெயர் வாடித்தெருவில் சிறந்துள்ளது. எத்தனையோ சங்கரபாகங்கள்! பலப்பல பரம சிவன்கள்!

சிவன்கோயில் அருகே பெருமாள் கோயிலும் புதுக்கி, ஊரின் வடக்கே சந்தனமாரி யம்மன் கோயிலும் பெருக்கி உதவினர். இவ்வாறு சிவபக்தியில் சிறந்த செட்டியார் குடும் பத்துடன் கீழரிலிருந்து மேலூர் வந்து 10நாட்கள் தங்கியிருப்பதற்குத்''தங்கு விடுதி'' ஒன்றும் கட்டி, திருவிழாவும் முட்டின்றி நடத்திச்சென்றார். இந்த விடுதிதான் அப்போது சிவன்கோயி லருகில் நகர் மன்றப் பயணி விடுதி (Municipal Rest House) யாக விளங்குகிறது. பரமசிவன் செட்டியார் என்ற பிரதானி செட்டியாருக்கு 5 ஆண்மக்களும் 3 பெண் மக்களும் இருந்தனர். கந்தசாமி செட்டியார், சங்கரபாகம் செட்டியார், ஆறுமுகம் செட்டியார், இராமநாதன் செட்டி யார், வீரபாகு செட்டியார், (ஏ.பி.ஸி. வீரபாகு அவர்களின் பாட்டனார்) சண்முகத்தம்மாள், சொர்ணத்தம்மாள், பகவதி அம்மாள்-இவர்களாவர். மக்களைப் பெற்ற மன்னராகிய பிரதானி செட்டியார் 1864 ஆடித்திங்கள் பூவுலக வாழ்வை நீத்தார்.

பிரதானி செட்டியார் மக்களுள் ஐந்தாமவராகிய வீரபாகு செட்டியார், வணிகக் குடும்பத்திற்குரிய எண்ணும் எழுத்தும் பயின்றார். ஆங்கிலமும் அருந்தமிழும் வல்லவர். ஏற்கனவே ஊர் வழக்குகளை யெல்லாம் தீர்த்துவைக்கும் முதலாளி குடும்பத்தைச்சார்ந்த செட்டியார் 'முதல்தர வழக்கறிஞர்' (வக்கீல்) ஆனார். வக்கீல் வீரபாகு பிள்ளை என்று விளங் கலானார். (வாணிகம் செய்யும் வேளாளர், 'செட்டியார்' என்றும், உத்தியோகம் பார்ப்பவர், 'பிள்ளை' என்றும் பட்டம் தரிப்பது வழக்கம்) டச்சுக்காரர் போன்ற வெளிநாட்டார் வருகை யால், வாடித்தெரு வணிகரின் வெளிநாட்டு வாணிகம் தடைப்பட்டது. அயலார் வருகையால் நாடு சுதந்திரம் இழந்ததை யெல்லாம் எண்ணிய வக்கீல் வீரபாகு தேசீய உணர்வால் உந்தப் பட்டார். இந்தியத் தேசீய காங்கிரஸில் சேர்ந்தார்.சென்னையில் கூடிய 2-வது அகில இந்தியக் காங்கிரஸ் பிரதிநிதியாகச் சென்றார். மக்கள் பணிபுரிந்த வழக்கறிஞர் 19-5-1891ல் நகர் மன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். துணைக் கலெக்டர் (ஆங்கிலேயர்) தலைமை யில் துவங்கிய முதல் நகர்மன்றக் கூட்டத்தில் கலந்துகொண்டார். 20-12-1899 வரை நகர்

மன்ற உறுப்பினராயிருந்து 1900ல் மறைந்தார். 1885-86ல் நகரம் ஐந்து வார்டுகளாகப் பிரிக்கப்பெற்று 16 உறுப்பினர் கொண்ட நகர்மன்றம் (Municipal Council) அமைக்கப்பெற்றது. (10 தேர்ந்தெடுக்கப்பட்டவர் 5 நியமன உறுப்பினர் ஒருவர் பணிப்பொறுப்பு) (Ex-offico) முதல் தேர்தல் 12-10-1835ல் நடந்தது. ஜே.எம்.பி.ரோச் விக்டோரியா முதல் நகர்மன்றத் தலைவரானார். பின்னர் சேவியர் மோத்தா பர்ணாண்டசும், ஜி. செல்விஜனரும் ஆயினர். நகர் மன்றத்திலும் நீதிமன்றத்திலும் பணியாற்றி, நெடும்புகழ் தேடி மறைந்தார் வீரபாகுபிள்ளை. அவர்தம் ஆண்மக்கள் இருவர். ஒருவர் பரமசிவனார் (ஏ.பி.ஸி. வீரபாகுவின் தந்தையார்) மற்றவர் ஆறுமுகம் செட்டியார். பின்னவர் பிள்ளைப்பேறின்றி மறைந்தனர். முதல்வர் பரமசிவனார், ஓட்டப்பிடாரம் ராம. உ. அ. சங்கரநாராயணபிள்ளை மகள் உலகம்மாளை மணந்தார். உற்றார் உறவினர்க்கு உறுதுணையாய் நின்று உதவும் உளங்கொண்ட உத்தமர். சுற்றம் தழாஅல் என்பதற்கு இலக்கியமாகத் திகழ்ந்தார். "மகனறிவு தந்தையறிவு" அன்றே? நீதிமன்றப் பணி புரியும் நேர்மையரானார். வாடித் தெருவினர் புதுக்கிப் பெருக்கிய சொர்ணவிநாயகர் கோயில் (மட்டைக்கடை பிள்ளையார் கோவில்) சென்று வழிபடுவார். அவர்தம் மனைவியார் உலகம்மாள் பக்தியில் சிறந்தவர். விரதங்கள் பல இருப்பார். ஓட்டப்பிடாரம் உலகம்மன் என்ற தெய்வம் அம்மையார்க்கு நேர்க்காட்சி தரும் அளவுக்கு அவர்தம் இறைமாட்சி இருந்தது. அம்மன் அருளால் குடும்பத்தில் நிகழும் நிகழ்ச்சிகளை முன்கூட்டியே கூறும் அருட்டிறன் பெற்றிருந்தார். இத்தகைய அருளாற்றால் இருவருக்கும் மூன்று பெண்மக்களும் ஓர் ஆண் மகவும் தோன்றினர். அக்காள் கலியாணி அம்மாளுக்குப் பின்னர் அருமைத் தம்பி வீரபாகு (ஏ. பி. ஸி. வீரபாகு) தோன்றினர். மகாலட்சுமி, கோமதி என்ற இரு தங்கையர்களும் பிறந்தனர்.

பிறப்பு

மூன்றாவது பெண்ணாகிய கலியாணி அம்மாள் தோன்றியபின், தமக்கு ஆண் மகவு அருளவேண்டுமென்று உலகம்மாள் விரதங்கள் இருப்பார். பௌர்ணமியில் பொங்கல் இடுவார். நேர்ச்சைகள் செய்தார். கவளம் கவளமாக ஏழைக் குழந்தைகளுக்கு உணவளிப்பார், உடையளிப்பார். பாலகன் வேண்டுமெனப்பாடு கிடந்தார். பகவான் இரங்கினார். 1915-ம் ஆண்டு மே மாதம் 5-ம் நாள் சித்திரைத் திங்கள் 23-ம் தேதி உத்திராட நன்னாளில் ஆண்மகவு பிறந்தது. பரமசிவனார் குழந்தையைப் பார்த்தார். திருவருளை வியந்து வாழ்த்தினார். குடும்ப சாஸ்தாவாக விளங்கும் அரசடி (ஊருக்கு 5 மைல் வடக்கில் உள்ள ஊர்) பச்சைப்பெருமாள் அய்யனார்க்குப் பூஜை செய்தார். வளம் நிறைந்த வாடித்தெரு, நாட்டிற்குப் புதிய தலைவரைத் தந்தது என்ற உணர்ச்சியும் கொண்டிருப்பார். வாடித்தெரு ஒவ்வொரு தலைமுறையிலும் பெருந்தலைவரைத் தந்து மகிமும் தன்மையுடையது. குறுநில மன்னர் போன்ற செல்வர்கள் பெரிய வீடுகள் சிலவற்றைக் கட்டியும் நடுத்தர வீடுகளில் தங்கள் உறவினர்களைக் குடியேறச் செய்தும் ஒற்றுமையுடன் ஒரே குடும்பமாக வாழ்ந்த சிறந்த தெரு. பெரிய தோட்டம் ஒன்றை விலைக்கு வாங்கி, நாற்புறமும் வேலியிட்டு வாடியாக்கி 100 வீடுகள் வரை கட்டி வேளாண் மரபு சைவச் செட்டியார்கள் வாணிகம் செய்து வளம் பெருக்கிய தொன்மையான தெரு வென்ப. தெருவின் மேற்குப் பக்கம் கோயில்களிலுள்ளது போலப் பெரிய கல்நிலை, கதவுகள், கிழக்குப் பக்கம் சிறிய நிலை, இரும்புக் கதவு, வடபுறம்

வண்டிகள் வந்து போகத் திறப்பு வாயில் ஆகியவற்றுடன் விளங்கியது. பிரதானிச்செட்டியார் பல்லக்கில் சென்றார். பல்லக்குச் சாவடி இருந்த இடம் இன்றும் உள்ளது. திருமூலம் செட்டியார், பிச்சன் செட்டியார் ஆகியோர் இரு குதிரைப் பீட்டன் (சாரட்டு) வண்டியில் சென்றனர். உறவினர்களும் அவசியம் நேரிட்டால் செல்வார்கள். வண்டிகளைப் பயன் படுத்துவர். இவ்வாறு பிறர் வாடாமல் எல்லாரும் ஒரே நிலையில் எண்ணும் பெருந்தகையாளர் கள் சிறந்திருந்த தெருவில்தான் திரு. பரமசிவனுர்க்குப் பாலகன் தோன்றினர். திருதிரு வென்று விழித்த தீரக்குழந்தைக்குப் பெயர்சூட்டும் நாள் வந்தது. தம் அருமைத் தந்தையின் பெயராகிய 'வீரபாகு' என்று திருநாமம் சூட்டினர்.

இளமை:

குழந்தை வீரபாகு குறுகுறு நடந்து சிறுகை கொட்டி, இட்டும் தொட்டும் விளையாடி யது. வரம் கிடந்து தோன்றிய பிள்ளையின் கண்களில் அருள்ஒளி கான்றது. அன்பான குழவி யின் தவப்பயன், அத்தை மகாலட்சுமி அம்மாளின் உள்ளத்தைக் கவர்ந்தது. இந்த அத்தை, யாரெனில், தந்தை பரமசிவனுரின் பெரியப்பா (வக்கீல், வீரபாகு பிள்ளையின் தமையனுர். *பிரதானிச்செட்டியார் சிவன் கோயில் கும்பாபிஷேகம் நடத்திய நன்னாளில் தோன்றியவர்) சங்கரபாகம் செட்டியாரின் மகள் ஆவர். செல்வச் சீமானின் தவப் புதல்வி அம்மையாரை வாடிக் தெரு பெருவணிகர், ஆ. ப, சொக்கலிங்கம் செட்டியாருக்கு மண முடித்தனர். ஒன் பது தலைமுறைக்கு முன், முத்துமாடன் செட்டியார் இளைய மகன் பச்சைமுத்து செட்டியார் வழியினர். ஆனல் மூத்த மகன் அய்யம்பெருமாள் செட்டியார் வழியில் தோன்றிய சங்கர பாகம் செட்டியார் மகளைச் சொக்கலிங்கம் பிள்ளை மணந்தார். ஒரே வழியினரில் திருமணம். "ஒட்டனுக்குப் பின் உறவில்லை" என்பது முதுமொழி. ஆ. ப. என்பது பெரிய பெயர், சிறப் பான எழுத்துக்கள். ஆறுமுகம் செட்டியார் மகன் பச்சைப்பெருமாள் செட்டியார் என்பவர் பெரிய வள்ளல். சத்திரம் சாவடிகள் கட்டி, மானியங்கள் எழுதி வைத்தார். சிவன் கோயில், விநாயகர் கோயில், அம்மன் கோயில்களில் விழாக்கள், மூட்டின்றி நடைபெறுவதற்கு லட்ச ரூபாய்க்குமேல் மதிப்புள்ள சொத்துக்கள் எழுதி வைத்தார். சத்திரம் தெரு இன் றும் உள்ளது. இந்தச் சத்திரத்தில்தான் சுவாமி வந்து இறங்குவார். 'சைவ சித்தாந்த சபையும் இங்குதான் தொடங்கப் பெற்றது. இத்தகு அறச்செல்வரின் புதல்வர் சொக்க லிங்கம் செட்டியார் மனைவிதான் மகாலட்சுமி அம்மாள். இந்த அம்மையார் தம் அண்ண னுரின் மகன் — (மருமகன்) வீரபாகுவை மகன்மை பூண்டார். எதிர்வீட்டில் தோன்றிய இன்பக்குழவியை எடுப்பார். உணவளிப்பார். தன் பெறலரும் செல்வமெனக்கருதி வளர்த் தார். தாய் தந்தையரின் அன்பும் அத்தை மாமா அரவணைப்பும் வீரபாகுவின் வளர்ச்சியைப் பன்மடங்காக்கின.

கல்வி:

குழந்தை யில்லாக் குறை தீர்த்த வேம்பு (தாயார் அழைக்கும் செல்லப் பெயர்) என்ற வீரபாகுவை மகாலட்சுமி அம்மாள் எடுத்துத் தாலாட்டுவார், சீராட்டுவார். பொட் டிட்டு வெல்வெட் சட்டையணிவிப்பார். காதுகளில் வைரக் கடுக்கன் அணிவிப்பார். நடை பயின்றபின் தன் செல்வப் பிள்ளைக்குக் கழுத்தில் டாலர் இணைத்த இரண்டு வடத் தங்கச்

சங்கிலி, கைக்கு முன்று தங்க வளையல்கள், இடுப்பில் தங்க அரைஞாண், கால்களில் வெள்ளிச் சதங்கை, தண்டைகள் அணிவித்து அழகு பார்ப்பார். நல்ல உருவுடன் வளரும் புண்ணியப் புதல்வனைப் பார்த்துப் பார்த்துப் பூரிப்படைவார். ஆ. ப. சொ. அவர்களின் அருமந்த புதல்வன் ஐந்து வயதடைந்தான். பள்ளிக்கு வைக்கும் பருவம். ஆயிரத்துத் தொள்ளாயிரத்து பத்தொன்பது விஜயதசமிக்கு மறுநாள் ஆயுத பூஜையன்று வீரபாகுவிற்கு அட்சராப்பியாசம் தொடங்கியது. முகப் பொலிவுடன் ஆடி ஓடி வரும் முதலாளி வீட்டுப் பிள்ளையின் கல்வித் தொடக்கம் தனிச்சிறப்புடன் நிகழ்வதைக் கேட்கவும் வேண்டுமோ! வாடி முழுதும் பந்தல். தோரணங்கள், ஊர்ச்சாப்பாடு, திருமணக் கோலம் பூண்டது, தெரு வெல்லாம். ஏடு தொடங்கியவர் சங்கரநாராயணன் செட்டியார் என்ற பாலு வாத்தியார். தி. ச. தொடக்கப்பள்ளி நடத்திய அந்த ஆசிரியர் கைராசிக்காரர், கண்டிப்பானவர். ஆசிரியர்க்கு உயர்ந்த ஆடை, மேலாடைகள். பையன் வீரபாகுவிற்கும் சரிகைக்கரை வேட்டி, வெல்வெட் சட்டை அணிவித்துச் சைவ முறைப்படி திருவிளக்கின் முன் அரி ஓம் நம, குருவே துணை தொடங்கப் பெற்றது. பெரியோர்கள் திருநீறு பூசி வாழ்த்தினர். பின்னர்ப் பாசிப் பல்லக்கில் ஊர்வலம், தன் அன்புக் குழவி வீரபாகுவும் ஆசிரியர் பாலு வாத்தியாரும் மட்டுமா அமர்ந்தனர்? பிறர் நலம் பேணும் பெருந்தகை சொக்கலிங்கம் செட்டியார் (ஏ. பி. சி.) தம் உறவினர் (பூட்சு) ஆறுமுகம் செட்டியார் மகன் வழித்துணை ராமனையும் (சேது) உடன் அமரச் செய்து ஊர்வலம் வரச் செய்தனர். சிறப்பு மேளமாகிய நெல்லை சின்ன சுப்பையாக் கம்பர் பல்லக்குமுன் நாகசுரம் வாசிக்கப் பெருங்கூட்டத்துடன் ஊர்வலம் வந்தது கண் கொள்ளாக் காட்சி. அரசன் வீட்டுப் பிள்ளையென மதிக்கும் பெருமையன்றே இது.

ஊர்வலம் முடிந்ததும் மேலாடை முழுவதையும் களைந்தெறிந்து விட்டுப் பையன் ஓடினான். எளிமை நாடிய உள்ளம் இளமையிலேயே தோன்றியது. ஆடம்பர பவனியை வெறுத்தது குழந்தையோ? மாமனார் — வளர்ப்புத் தந்தையாகிய ஏ. பி. ஸி. அவர்கள் யாது செய்தார்? மிகவும் முரண்டுக்காரன் என்று சிரித்து வாழ்த்தி வாரி எடுத்து அணைத்தனர். விளையும் பயிர் முளையிலே! இவ்வாறு முதல் வகுப்பு, தி. ச. பள்ளியில் படித்து மூன்றும் வகுப்பு அருகிலுள்ள கால்டுவெல் உயர் பள்ளியில் தொடங்கியது. அப்பள்ளி கிறிஸ்தவர்கள் நடத்துவது. ரெவரண்ட் ஞானக்கண் கால்டுவெல் பள்ளியில் மேனேஜராகப் பணியாற்றி வந்தார். அவருக்கு வீரபாகுவின் பெயரில் உயிர். சிறுவன் சொல்லுகிற நாளன்று பள்ளிக்கு விடுமுறை. அவர் தேவாரப் பாடலில் ஈடுபாடுடையவர். அதிலும் 'மாதர்பிறைக் கண்ணியானை' என்னும் பாடலில் மெய் மறப்பார். சைவப் பையனாகிய வீரபாகு அங்கு நன் முறையில் பயின்றார் சில சமயம் கூட்டத்திற்குக் கடவுள் வணக்கம் பாடச் செய்தால், உடன் தேவாரம் பாடுவார். ஆயிரத்துத் தொள்ளாயிரத்து இருபத்து மூன்றில் மாதர் பிறைக் கண்ணியானை என்ற திருப்பாடலை மனங்குளிரப் பாடினார். வாடித் தெருவில் இருந்த வாலிபர் சங்கத் (Juvenile Association) தினர் தேவாரம் பாட வேண்டுவர். உடன் 'பொன்னார் மேனியனே' பதிகத்தைப் பண்ணுடன் பாடி உருகுவார். இன்றும் இப்பாடல்கள் இவர்தம் தினசரிக் காலைப் பூசையில் இடம் பெற்றுள்ளன. ஆயிரத்துத் தொள்ளாயிரத்து இருபத்து நான்கில் பிளேக் நோய் நகரில் ஏற்பட்டது. பாளையங்கோட்டை பிச்சிவனத் தெருவில் உள்ள பாட்டியார் வீட்டிற்குச் சென்றபோது அங்குள்ள பஜனை மடத்தில் தேவாரம் பயில்வாராம்!

கால்டுவெல் பள்ளியில் ஆயிரத்துத் தொள்ளாயிரத்து முப்பத்து மூன்றில் எஸ். எ
எல். ஸி. முடித்து, நெல்லை ம. தி. தா. இந்துக் கல்லூரியிலே இண்டர் மீடியட் வகுப்
படிப்பைத் தொடர்ந்தார். அப்போதே மாணவப் பருவத்திலேயே கல்லூரிக்காக ஏ
மாணவர் நிதியாக ரூபாய் ஆயிரம் வரை நிதி திரட்டிக் கொடுத்தார். தலை மாணாக்கரா
செல்வாக்குப் பெற்றிருந்தார்.

அதன் பின்னர், சென்னை லயோலா கல்லூரியில் பி. ஏ. (பொருளாதாரம்) பட்
பயின்று ஆயிரத்துத் தொள்ளாயிரத்து முப்பத்தைந்தில் தேறினர். மாகாண வரிசையில்
தார். ஆயிரத்துத் தொள்ளாயிரத்து முப்பத்து நான்காம் வருடம் மாணவராக இருக்
போது கவி தாகூர் அவர்களிடம் சாந்தினிகேதம் வகைக்கு நிதி உதவி செய்ய மாண
குழுவில் பங்கு கொண்டார்.

ஏழைகள் மீது இரக்கம் கொள்ளும் உள்ளம் எப்போது பூத்தது? சென்னைய
தமக்கு வரும் பணத்தில் ஒரு பகுதியை மீதி வைத்து அதை மாதந்தோறும் ஓர் ஏ
மாணவர் படிக்க உதவியளித்தார். இந்த உள்ளம்தான், பெரியவரானதும் சில பையன்க
படிக்க முழு உதவி செய்வதாகக் காய்த்துப், பின் இரண்டாயிரத்து எழுநூற்று மாண
பயிலும் கல்லூரியாகக் கனிந்தது போலும்! கல்வியில் அவர் கொண்ட ஆர்வமும் எ
யார்க்குக் காட்டும் அன்பும் மாணவர் பருவத்திலேயே சிறந்து விளங்கின. சென்னைய
படிக்குங்கால், இந்திய தேசீய காங்கிரஸ் மீது பற்றுடையவரானர். இயல்பாகவே
வுள்ளம் படைத்த வீரபாகு, தேசீயப் போராட்டத்தில் ஈடுபாடு கொண்டதில் வி
பாகுமோ? ஓர்கால் திரு. சத்தியமூர்த்தி அவர்களுக்கும் ஆற்காடு இராமசாமி முதலியார்க்
நடந்த தேர்தலில் சத்தியமூர்த்தி அவர்கட்குத் தீவிரமாக வேலை செய்தார். இதுதான்
பாகுவின் தேர்தல் கன்னிப்போர்ப் பயிற்சிக்கட்டம் எனலாம். இன்று அனைத்துக்க
யினரும் வியக்கும் வண்ணம் "தேர்தல் வல்லார்" என்று அவர்தம் திறம் போற்றப்படுகிற
பால்ய வாழ்க்கை பற்றிய சுவையான பகுதிகளின் குறிப்புகள் சித. இசக்கிமுத்துச் செட்
யார் அவர்களால் அறிவிக்கப்பட்டன.

பள்ளிக்கு வந்த நாளிலேயே ஆடம்பர ஆடையை உதறிய வீரபாகு, பருவம் வ
அறிவறிந்ததும் 17 வயதில், 1931ல் தேசீய உள்ளம் படைத்த தீரர். கதர் கட்டலாகு
ஐ. சி. எஸ். படிக்க விரும்பினாலும் அன்புத் தந்தையார் தடுத்தார். தேசிய உள்ளமு
தடுத்தது. சென்னையில் கல்வி முடித்து, ஊர் ரும்பினர். 1937ல் வாடித்தெருவில் வ. உ
பெயரால் நூலகம் தொடங்கினர். தேசீய இயக்கத்தில் கருத்திருத்தினர். தீவிரவாதிக
திருக்கூட்டம் அவர்தம் வீரவுள்ளத்தைக் கவர்ந்தது. வ. உ. சி. யின் வீரவரலாறு அ
இதயத்தை ஈர்த்தது. வ. உ. சி. பெயரால் வீரவநல்லூர் தீவிர காங்கிரஸ் தலைவர் திரு.
பாகு செட்டியாரால் நூலகத்தைத் திறந்து வைக்கச்செய்தார். கலைகளில் ஈடுபாடு வளர்ந்த
நாடோடிப்பாடல்கள், நாட்டுப்புறக்கலைகள் பற்றிய ஆர்வம் மிகுதி. வண்ண
பேட்டை வடிவேலு என்பாரின் வில்லுப்பாடைக் கேட்டார். அதிலிருந்து இத்தகு கலை
ளில் ஆர்வம் காட்டினர். ஓர்கால் நகரின் தலையாய திருவிழாவாம் தசரா தொடங்கிய
மைசூருக்கு அடுத்தபடி பல்லாயிரக்கணக்கில் மக்கள் வெள்ளம்போல் திரண்டு வரு
தூத்துக்குடி தசரா உற்சவம்தான். இவர்கள் முன்னோர்களால் கட்டப்பெற்றுக் காக்கப்பெ

கோயில் "சந்தனமாரியம்மன் திருக்கோயில்" ஆகும். ஆ. பச்சைப்பெருமாள் செட்டியார், அறங்காவலராயிருந்தபின் இவர்தம் பாட்டனார் (தாய்வழி) சங்கரநாராயண பிள்ளை மேற் பார்வையில் அக்கோயில் சிறந்திருந்தது. தசராவின்போது பெரியகாட்டன் ரோடிலுள்ள பள்ளிவாசல் பக்கம் சப்பரம் வரும்போது மேளதாளங்களை நிறுத்திவிடவேண்டும். ஓர் ஆண்டு நம் வீரபாகு சப்பரத்துடன் செல்லும்போது இச்செய்தி அவரிடம் கூறப்பட்டது. உடன் வெகுண்டு அடிமேளத்தை, விடு சப்பரத்தை என்று கூறி வீரத்துடன் நடத்திச்சென் றதைக் கண்டு எல்லோரும் வியந்தனர்.

திருமணம்:

திட்டமிடும் தீரர் வீரபாகு சுறுசுறுப்புள்ளவர். "தூத்துக்குடி பாங்க்" (The Tuticorin Bank) ஏற்படுத்திச் சில காலம் செயல்பட்டார். இலக்கியம் பயின்று பண்பட்ட உள்ளம் வட்டித் தொழிலைக் கைவிடச் செய்தது. மாமனார் ஏ. பி. ஸி. மறைந்தபின் அத்தை மகா லட்சுமி அம்மாளுடன் தாய் தந்தையர், சகோதரிகள் எல்லோரும் வதிந்தனர். அன்பு அத்தை செவிலித்தாயார்—தம் அருமந்த மைந்தனுக்குத் திருமணம் புரிந்து மகிழ முந்தினர். திருநெல்வேலியில் பேரும் புகழுமாய் விளங்கிய ஓவர்சியர் திரு. எஸ். ஆர். வேலாயுதம் பிள்ளையவர்கள் மகளை மகாலட்சுமியம்மாளை 3—2—1941ல் திருமணம் செய்வித்தார். முதலாளி வீட்டுப் பிள்ளையின் திருமணம் மிகச் சிறப்பாய் நிகழக் கேட்பானேன்? மறுவீடு மிகமிகச் சிறப்பாகக் கச்சேரிகள், பாலசரஸ்வதி பரத நாட்டியம் சூழ ஊரில் திருவிழாவாக விளங் கியது.

அரசியல் நுழைவு:

உள்ளூரிலுள்ள பருத்தி ஆலை, கடை, கொழும்பிலும் சென்று ஏற்றுமதி இறக்குமதி வாணிகம், கழுகுமலை ஆலை—இவற்றையெல்லாம் கண்ணும் கருத்துமாய்க் கவனித்தார். இவர் தம் பேராற்றலும் நல்லொழுக்கமும் ஊரிலிருந்த பெரியோர் பலரைக் கவர்ந்தது. குறிப்பாகக் காங்கிரஸ் தலைவராய் விளங்கிய திரு. பெ. கந்தசாமிப் பிள்ளை என்பவர் இவர்தம் அறிவாற் றல் காங்கிரஸ் கட்சிக்குப் பயன்படக் கருதினர். நம் வீரபாகுவை அணுகினர். அடிக்கடி வந்து பேசிப் பழகித் தம்பால் ஈர்த்தார். ஏற்கனவே தேசீய உணர்வுடைய வீரபாகு, காந்தி, நேரு, திலகர், திரு. வி. க., வ. உ. சி. போன்றோர் நூல்களைப் பயின்று தேசப் பக்தி கனன் றெழுந்த உளத்தராயிருந்தார். பெருகனை (பெ. க.) தம் முயற்சியில் வெற்றி பெற்றார். இவர் காங்கிரஸ் இயக்கத்தில் இறங்கினர். அரசியலில் 1941-ல் பிரவேசித்தார். இவர்தம் சொல்லும் செயலும் காங்கிரஸை விரைவில் வளர்த்தன. 1943-ல் தமிழில் இனிமையாகப் பேசிக் காங்கிரஸை வளர்த்த தமிழ்த்தென்றல் திரு. வி. கல்யாணசுந்தர முதலியார் நகருக்கு வந்தார். இயல்பாகவே சைவப்பற்றும் தமிழ்ப்பற்றும் நிரம்பிய வீரபாகு, தலைவர் திரு. வி. க.வை வாடித் தெருவில் சொற்பொழிவாற்ற அழைத்தார். புது உலகம் பற்றிய பொருளில் பேச இசைந்தார். ஆனால் வரவேற்புரை கூறிய வீரபாகு நேச நாடுகள் அயல் நாடுகள் என்ற இரு கட்சிகளில் எந்தக் கட்சி புது உலகத்தை அமைக்கும் அல்லது காந்தி மகாத்மா வழியில் புது உலகம் அமையுமா? என்று தொடங்கிப் பேசிய பேச்சை இன்றும் எல்லோரும் போற்றுவர். திரு. வி. க., காந்தியின் புது உலகம் பேசுமாறு ஆற்றிய வரவேற்பு, இவர்தம் அறிவாற்றலுக்குச் சான்று என்றார்.

தேர்தல் திறனில், அப்போது சட்டமன்றத் தேர்தல்களில் சி.எ.ந. சின்னக்கண்ணுப் பிள்ளை, ஏ. ஆர். ஏ. எஸ். துரைசாமி நாடார் போட்டி ஏற்பட்டபோது இவர்தம் பேச்சும் செயல்திறனும் சி வ. பிள்ளையவர்களுக்கு உழைத்ததில் வெளிப்பட்டதை ஊரார் அறிந்தனர். காங்கிரஸ் காரர்கள் இவர்தம் ஆற்றலை உணர்ந்து நகர காங்கிரஸ் கமிட்டித் தலைவராக்கினர். மாகாணக் கமிட்டி உறுப்பினராக்கினர். 1945ல் நெல்லை மாவட்டக் காங்கிரஸ் கமிட்டித் தலைவ ராயுமாக்கினர். மாவட்டம் முழுவதிலும் காங்கிரஸ் முழக்கம் கேட்குமாறு செய்தார். கூட் டங்களில் வீரம் செறிந்த பேச்சுக்களால் பல்லாயிரம் மக்கள் ஈண்டுவர். ஏழை மக்கள் துயர் துடைக்கத் திட்டங்கள் பல தீட்டினர். 1947-ல் நாடு சுதந்திரம் பெற்றவுடன் அவர் நகரையே விழாக்கோலம் காணச் செய்தார். பொது நிலையங்களில் எல்லாம் மூவர்ணத் தேசீயக் கொடி ஏற்றினர். மாணவர்களின் சட்டைகளில் தம் கையினல் தேசீயக் கொடியை அணிவித்து மகிழ்ந்தார்.

காங்கிரஸ் இயக்கத்தில் கவனம் செலுத்தினலும் வாணிகத்தை மறந்தாரில்லை. தூத்துக்குடி-இலங்கை ஏற்றுமதி இறக்குமதி சங்கம் இவரால் தோற்றுவிக்கப்பட்டு, இன்றும் நடந்து வருகிறது. வணிக நிலையங்கள் எல்லாம் இவர்தம் ஆற்றலைப் பயன்படுத்த முனைந் தன. இந்திய வர்த்தகக் கழகத்தில் (Indian Chamber of Commerce) தலைவராக 1947—49, 1957—70 ஆக 15 ஆண்டுகள் பணிபுரிந்தார். துறைமுகக் கழகத்தின் (Port Trust) ஆட்சியி லும் பல ஆண்டுகள் தொண்டாற்றிப் புகழ் படைத்தார். அவர்தம் அறிவாற்றலால்தான் தூத்துக்குடித் துறைமுக வளர்ச்சித் திட்டம் செயல்பட்டு, நகரம் ஒரு குட்டி சென்னைப்பட்டி னமாகிறது என்றால் மிகையாகாது.

கூட்டுறவு:

கூட்டுறவே நாட்டுயர்வு என்ற கொள்கையைக் கொண்ட தலைவர் வீரபாகு நெல்லை மாவட்டக் கூட்டுறவு மத்தியப் பண்டகசாலை இயக்குநராக 1943ல் ஆனர். இவர்தம் கெழுதகை நண்பராய் இருந்த ஜே. எல். பி. ரோச் விக்டோரியா, மாநில அமைச்சரானதும் அந்தப் பெரிய நிறுவனத்தைக் கட்டிக் காத்து வளர்க்கும் திறமையுள்ள ஏ. பி. ஸி. வீரபாகு அவர்களையே பண்டக சாலைத் தலைவராக 1949 ல் ஆக்கினர். 3 இலட்சமாயிருந்த சொத் துக்களை 46 இலட்சமாக்கினர். நகரின் நடுத்தர, ஏழைகள் நலனுக்காகத் தூத்துக்குடி கூட் டுறவுப் பண்டகசாலையைத் தோற்றுவித்து அதன் செயலாளராக 27 ஆண்டுகள் பணி யாற்றினர்.

1947ல் ஏழை நடுத்தர மக்கள் குடியிருப்பாக நகரில் மேற்கில் மையவாடிக்குத் தெற் கில் காலி மனையை வீடுகளாக்கத் திட்டமிட்டு, தூத்துக்குடி கூட்டுறவு வீடு கட்டும் சங்கம் தொடங்கினர். அதன் பயனைச் சிதம்பரநகரிலுள்ள 170 வீடுகளும், கடற்கரைக் காலனியில் உள்ள 170 வீடுகளும் கட்டப்பெற்று அனைத்து வசதிகளும் உடையவையாக ஆக்கப் பெற் றுள்ளதை அறியாதார் யார்? 1965 ல் கூட்டுறவுத் தொழிற்பேட்டை உருவாக்கினர். கூட் டுறவு வீடு அடமான வங்கு, வல்லநாடு அரிஜன செங்கல் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங் கம், ஹார்வி கூட்டுறவுச் சங்கம், தமிழ்நாட்டுக் கூட்டுறவு யூனியன் ஆகிய எல்லாக் கூட்டுற வுப் பணிகளிலும் ஈடுபட்டுத் தமிழ்நாட்டின் தலைசிறந்த கூட்டுறவாளர்—கூட்டுறவுத் தந்தை என்று கூறத்தக்கவரானர். அரசு கூட்டுறவுக் குழுவில் நியமிக்கப்பட்டார். ஆறு ஆண்டு

கள் சென்னை மாநிலக் கூட்டுறவு அபெக்ஸ் மார்க்கெட்டிங் சங்க டைரக்டராக நியமனம் ஆனர். மாநில பாங்கு இணைப்புக்குழு வட்டத்தில் பிரதிநிதியாகப் பணியாற்றினர். கூட்டுறவு இயக்கம் வளரப் பெரிதும் பாடுபட்ட பெருந்தகை தென்பிராந்தியக் கூட்டுறவு இணைப்புக் (Co-ordination) கமிட்டியிலும் பணிபுரிந்தார். மாவட்டப் பாரதி மண்டபக் கமிட்டியில் விழாக் குழுத் தலைவராய்ப் பணிபுரிந்து சிறந்தார். எட்டையபுரம் பாரதிவிழாவில் இடையருது ஆண்டுதோறும் சென்று கலந்துகொள்வார். மாவட்ட உணவுக் கமிட்டித் தலைவராய் அமர்ந்து மக்கள் குறைகளைக் களைந்தார். இவர் அங்கம் வகிக்காத கமிட்டியே இல்லை என எதை எடுத்தாலும் "ஏ. பி. ஸி. யைக் கேளுங்கள்" என்னும் அளவிற்கு ஈடும் இணையுமிலா மக்கள் தலைவர் ஆனர்.

கல்விப் பணி :

சிற்றூர்கள் சென்று ஏழ்மையின் இன்னலை அறிந்த தலைவர், மக்களுக்குக் கல்வியை அளித்தாலன்றி, விடுதலை பெற்ற நாட்டில் நல்ல தலைவர்கள் தோன்றுவது அரிது என்றுணர்ந்து, தாம் போற்றி வணங்கும் வீரத்தலைவர் வ. உ. சி. பெயரால் கல்வி நிலையம் காணத் துடித்தார். அத்தலைவர் பெயரால் "வ.உ.சி. கல்விக் கழகம்" என்ற அமைப்பைப் பதிவுசெய்தார். 1949—1951-ல் வ.உ.சி. கல்லூரி நிறுவ முடிவுசெய்து அந்நாளைய முதல் பாரத ஜனதிபதி ராஜேந்திர பிரசாத் அவர்களை, அடிக்கல் நாட்ட ஏற்பாடு செய்தார். அவர் அந்த நாளில் வர இயலாது போன்தால் திருவாவடுதுறை ஆதீனகர்த்தர் ஆசிகூற அன்றைய முதல் அமைச்சர் திரு. குமாரசாமி ராஜா அவர்கள் அடிக்கல் நாட்டினர், அரிதின் முயன்று 80 ஏக்கர் நிலத்தை அரசிடமிருந்து, ஆர்ஜிதம் செய்யப்பெற்றுக் கல்லூரியை ஆண்டு தோறும் தம் பிள்ளையெனப் போற்றி வளர்த்து, பெரும் கலைக்கோயிலாக ஆக்கினர். நெல்லை, மதுரை செல்ல வேண்டிய ஏழைமக்கள் இங்கு உள்ளூரிலேயே வீட்டிலிருந்து கல்விபெற்றுப் பல்லாயிரக் கணக்கான பட்டதாரிகள் உருவாகக் காரணமானர். இன்று மதுரைப் பல்கலைக் கழகத்திலேயே பெரிய கல்லூரி வ.உ.சி. கல்லூரிதான். வெள்ளிவிழாக் காணும் கல்லூரி வானளாவி நிற்கும் கட்டிடங்கள், வண்ணமலர் பூத்துக் குலுங்கும் மரங்கள், கோயில் குடை வரை வாயில்போன்ற நுழைவாயில் எல்லாம் சேர்ந்து கலைக்கோயிலே ஆம். வ. உ. சி. ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியும் அருகிலே அமைந்துள்ளது. 1959 ல் அதன் மாதிரி உயர் பள்ளி சுப்பையா வித்யாலயம் ஆண்கள் பள்ளியை வாங்கிப் பெரிதாக்கினர். சென்னைப் பல்கலைக் கழகச் சென்ட் உறுப்பினராக இரு பருவங்கள் பணியாற்றினர்.

சட்டமன்றப் பணி :

1957 ல் சென்னைச் சட்டமன்ற உறுப்பினராக (M.L.A.) ஸ்ரீவைகுண்டம் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டார். 1962 லும் தேர்தலில் வென்று 1967 வரை சட்டமன்றப் பணிபுரிந்தார். சட்டமன்றத்தில் பேசிய அவர்தம் பேச்சுக்களில் பின்வரும் பல நிகழ்ச்சிகள் முன்னரே கூறப்பட்ட தீர்க்கதரிசனத்தைப் புலப்படுத்தும். தெளிவான சிந்தனையால் தோன்றிய கருத்துக்களை எதிர்க்கட்சியினரும் பாராட்டினர். தரமாகப் பேசக்கூடிய ஒரு சில உறுப்பினர்களில் ஏ. பி. ஸி. அவர்களும் ஒருவராவார் என்று கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் குறிப்பிட்டார். முன்உணர்வுடைய முதறிஞர் என்று பலரும் பாராட்டினர். எடுத்துக்காட்டாக 16-9-47 மாவட்டக் காங்கிரஸ் தலைவராய் இருந்த போது காங்கிரஸின் வருங்காலப்

பணி குறித்து அனைத்து இந்தியக் காங்கிரசுக்குக் கடிதம் எழுதினர். அதில் காங்கிரஸின் குறிக்கோள் சோஷலிஸ ஜனநாயகம் மட்டுமன்று. விவசாயிகள், தொழிலாளர்கள் வாழ்க்கைத்தரம் உயர்வதற்குச் தூளுரைத்துக்கொள்ள வேண்டும் என்றதில் நேருஜி போன்றவர்கள் பின்னர்ப் பேசிய ஜனநாயக சோஷலிஸக் குடியரசுத் தத்துவத்தை எல்லோருக்கும் முன்பே எழுத்தில் வடித்த தீர்க்கதரிசனம் எத்தகையது! அந்தக் கடிதத்தின் நகல் கீழே தரப்படுகிறது. மற்றச் செய்திகளும் புலப்படுத்தும்.

A SHORT NOTE ON THE DRAFT CIRCULAR ON THE FUTURE ROLE OF CONGRESS

In general, the draft plan of the Congress is consistant with th march of the times and the D.C.C. of Tinnevelly is offering the following suggestions:-

The object of the Congress shall be not only the establishment of a Socialistic Democracy but such a state will be pledged to raise the standard of living of peasants and workers, instead of merely attempting to equalise the existing economic disparties.

The party shall draw out a detailed programme of action setting the goal clearly as a free and equal socio-economic Democracy, clearly demarcating the stages of realisation. Social improvement programme can be divided into Agriculture, Industry, and intellectual equipment.

Agricultural waste lands should be brought under cultivation by apportioning them among the landless class through Co-operative Farms.

Temple and other monastery lands to be given to cultivating peasants in return for a nominal rent,

Fixing a minimum optimum holding, therby preventing subdivision and fragmentation of lands.

Affording statutory facilities for forming Cooperative Farms.

Propaganda regarding the advantages of cooperation; and these can be cited as some of the features in our programme of improving Agriculture.

Industries: Nationalisation of big Industries such as Steel, Iron and Transport.

Decentralising certain Industries such as Textiles etc. without adversely affecting the existing production during the switch-over period.

Exploring the possibilities of starting indigenous industries by analysing the imports and encouraging the starting of the same on Cottage Industries basis.

This line of action will convince the masses that Congress is really out to implement the economic programme and at the end of 3 or 5 years they will be enjoying concrete results.

Since the success of much of the constitutional efforts for establishing a progressive

socialistic Democracy depends upon the amount of co-operation of the masses given voluntarily and willingly and also the character of the members in charge of carrying out the programme of action. Two things are necessary.

1. Voluntary statistics for all important items taken village-war through the help of the village committees and thereby preparing regional programmes of action for short periods.

2. A machinery to select personnel to implement such short programme, the chief crieterion of selection being integrity of character and equipment.

The party's constitution should be strict and clear in all aspects, so that, in future, formation of groups based on individuals or ideologies different from Congress may be definitely discouraged. The Mass basis of the Congress can be maintained only by retaining the four anna membership which is also indirectly financing the Congress. But to safeguard the interests of the Congress from falling into the hands of opportunists by merely organising enrolment of members, Electoral Colleges may be formed, the members of which alone are eligible to contest the election to Congress committe and such a body can be given powers of co-option whenever the total strength falls below a certain minimum; and also that will be a way for fresh blood to enter. The qualifications for becoming such a member of the Electoral College may be prescribed by the A.I.C.C. What our D.C C is very particular of is that on no account the Congress should be a body manned by a few, entirely out of touch with the masses.

அரசியல் தியாகிகளுக்கு நிலம் வழங்குவது தொடர்பாகவும் தச்சநல்லூர் பொதுவழி (Pathway) பற்றியும் 12-4-1948ல் எழுதியதற்கு அப்போதைய நிலவருவாய்த்துறை அமைச்சர் திரு. காசா வெங்கட்ராவ் அவர்கள் 16-6-1948 ல் உடன் பதில் எழுதியதை நோக்குமிடத்து அமைச்சர்கள் அவர்களை மதித்துப் போற்றியது தெளிவாகும். அந்தக் காலத்திலேயே 1947 மார்ச் மாதம் 7-ம் நாள் அரசுக்கு எழுதிய கடிதத்தில் விவசாயிகளுக்குக் கிணற்றை ஆழப்படுத்தும் (போரிங் செட்) கருவிகளும் வெடி மருந்தும் சிமெண்டும் உடன் அளிக்கப் பட வேண்டும் என்று வற்புறுத்தினர். அடுத்த வாரத்திலேயே அரசுச் செயலர் மாவட்டக் கலெக்டரிடம் ஆவனபுரிய ஆணையிட்டார். விவசாயிகளுக்குக் கிணறுகள் தேவையென் றும் தண்ணீர் தேவைக்கு மேலும் அவற்றை ஆழப்படுத்துதல் பற்றியும் 1947 ல் சிந்தனை யிட்ட நம் தலைவர் 1965ல் சர்வோதய கிராமதான டிரஸ்ட் ஏற்படுத்தி, அதன்மூலம் நாங்கு நேரி, சங்கரன்கோவில் வட்டங்களில் 300-க்கும் மேற்பட்ட கிணறுகள் தோண்டுவதற்கு உதவினர். 1947-ன் கனவு 1965-ல் நனவாயிற்று. 1960 மணிமுத்தாறு நீர்ப்பாசன அணைக் கட்டு அமைப்பதற்கு அரசு கடன் எழுப்பியது. இந்த மாவட்டத்தில் இத்திட்டம் வெற்றி பெற மாவட்டக் காங்கிரஸ் தலைவரவர்கள் மக்கள் துயர் களைய முன்வந்தார். தம் செல்வாக் கால் பத்து இலட்சம் ரூபாய் வசூலித்துக் கொடுத்தார். எதிர்பார்த்ததைவிட அதிக வசூல் கிடைத்ததால் இவர்கள் திறமையைப் பாராட்டிப் பொதுப்பணித்துறை அமைச்சர் எழுதியதை மாவட்டக் கலெக்டர் ஆர். எஸ். சுப்பையா பிள்ளை 4-8-1950 கடிதத்தில் புகழ்ந்துள்ளார்.

பின்தங்கிய மீனவர்கட்குக் கூட்டுறவுச் சங்கம் ஏற்படுத்தி அதற்குத் திருநெல்வேலி மத்திய கூட்டுறவுப் பண்டகசாலையின் பொதுநல நிதியிலிருந்து பணம் பெற்றுத் தந்த செய்தியைத் தனி அபிவிருத்தி அதிகாரியின் 31-1-1950 தேதிக் கடிதம் விளக்கிக் கூறும். மகாத்மா காந்தி நினைவு (ஸ்மாரக் நிதி) நிதிக்கு ஒரு இலட்ச ரூபாய் வரை பிரித்து அளித்ததை மேலிடத் தலைவர்கள் வியந்து பாராட்டினர். பின்தங்கியவர்களுக்கும் கிராமப்புறத்தில் வாழ்பவர்களுக்கும் விவசாயிகள், தொழிலாளர்கள், அரிஜனங்கள் முதலியவர்களுக்கெல்லாம் தம் பதவியினால் எத்துணை அதிகம் உதவ முடியுமோ அவ்வளவு உதவியுள்ளார். தமக்கென வாழாப் பிறர்க் குரியாளர்.

வங்கிப் பணி:

திருநெல்வேலி 'தி சௌத் இன்டியா பாங்கில்' 1956 ல் டைரக்டராஞர். 1964 முதல் 1971 வரை அதன் செயற்குழு சேர்மேனுயிருந்தார். 6 கிளைகளாயிருந்ததை 30 கிளைகளாகப் பெருக்கினர். பாங்குத் தொழிலின் அடிப்படைத் தன்மைகளைப் புரிந்து பல்வேறு சீர் திருத்தங்கள் செய்தார். வங்கி வணிகம் பன்மடங்கு பெருகிற்று. வங்கி ஊழியர் சம்பளத்தை உயர்த்தினர். ஒழுங்கு முறைகளை உருவாக்கினர். அனைவரும் வியக்கும் வண்ணம் நிறுவனம் முன்னேறியது. "இன்டஸ்டிரியல்" கூட்டுறவு வங்கியிலும் கூட்டுறவு யூனியனிலும் சிறப்பாகப் பணிபுரிந்தார். கூட்டுறவு இதழின் (Co-operative Journal) ஆசிரியர் குழுவில் அங்கம் வகித்து அரும்பணியாற்றினர்.

சர்வோதயத் தொண்டு:

சர்வோதய இயக்கம் தொடங்கிய காலந்தொட்டு அதில் பெரும் பங்கேற்றார். கடையனுக்கும் கடை என்ற கொள்கையை இளமை தொட்டே எண்ணிச் செய்யப்பட்ட தலைவருக்குச் சர்வோதயப் பணி இனிக்குமன்றே? கடம்பூரிலும், கழுகுமலையிலும் இரு பெரும் மாநாடுகள் நடத்திப் புகழ்பெற்றார், அரிய பல திட்டங்களை அளித்தார். இந்தியாவில் முதன்முதலாகக் கிராமதான அபிவிருத்தி டிரஸ்ட் ஏற்படுத்திக் கிணறுகள் தோண்டுவதற்கு எளிய தவணைக் கடன் கொடுத்து ஏழைகள் வாழ்வு மலர இனிய திட்டம் தந்ததை ஜெயப்பிரகாசரே கண்டு வியந்தார். மேற்கு ஜெர்மன் வள்ளல் மேயர் என்பவரின் பேருதவி இத்திட்டத்திற்குக் கிடைக்கும் வகை செய்து பல இலட்சம் ரூபாய் பெற்றார். நிதி ஒழுங்காகச் செலவிட உரிய பணியாளர்களை நியமித்து, நேர்மை காத்து அனைவரின் பாராட்டையும் பெற்றார். மேயர் பால்பண்ணை, சங்கரன்கோவிலில் ஏறுநடை போடுகிறது.

சமயம்:

இத்துணைப் பொதுப் பணிகளுக்கு இடையிலும் நாள்தோறும் வீட்டில் காலையில் பூஜை அறையில் அமர்ந்து குறைந்தது ஒரு மணி நேரம் பூவும் புகையுமாய்ப் பூசை செய்வார். ஆன்மார்த்த பூஜையில் முருகன் படமும் வேலும் வைத்துத் தொடங்கி, மகா சக்கரம் விஷ்ணு சக்கரம் மூலமந்திரங்கள் உருவங்களுடன் கூடிய சிறு கோயில் போலக் காட்சியளிக்கும் அறையில் உருக்கமாகத் தம்மை மறந்து புரியும் வழிபாடு சொல்லும் தரத்ததோ? ஸ்ரீலஸ்ரீ பன்றிமலை சுவாமிகளிடம் தமிழ் மந்திரோபதேசம் பெற்றார். இளமையிலிருந்தே நன்கு பண்ணுடன் பாடும் பீடுபெற்றமையால், திருமுறைகள், பாசுரங்கள், பிள்ளைத்தமிழ்

ஆகியவற்றை வாய்குளிரப் பாடுவர். நெற்றியில் நீறும் திருவண்ணுமலை மையும், குங்குமத் திலகமும் நீங்காதிருக்கும். செந்திலாண்டவனிடம் அளவற்ற பக்தி. அடிக்கடி திருச் செந்தூர் சென்று முருகப்பெருமானை வணங்கி வழுத்துவர். ஏற்கனவே முன்னோர் இயற்றிய ஷஷ்டி திருநாள் திருக்கல்யாணக் கட்டளையன்று நேரில் சென்று நடத்துவர். சமயநூல்கள் சாத்திரங்களை மூலநூல் மூலம் கற்றுத் தெளிவார். கற்றூர் மாட்டுக் கேட்டும் சிந்திப்பார். "சைவ சித்தாந்த சபை" ஆண்டு விழாக்களில் தவறுமல் கலந்துகொள்வார். சில ஆண்டு களில் தொடக்கவுரையாற்றித் தம் கருத்துக்களை வெளியிடுவார். "சித்தாந்தம்" தருவதே அறிவுக்குப் பொருத்தமான கோட்பாடு என்ற முடிவுடையார். இருப்பினும் வேதாந்த வித்துக்களையும் பேணுவார் சேங்காலிபுரம் அனந்தராமதீட்சிதர் அவர்களிடம் அளவற்ற அன்பு பூண்டார். அவர்தம் பேருரைக்கு ஏற்பாடு செய்தார். பிற ஊர்களிலும் சென்று அவர் உரைகேட்டுப் போற்றுவர். சம்பந்தர் பாடல்களின் இயற்கை நலத்தை எண்ணி வியப்பார். மணிவாசகர் காலம் கி. பி. 9-ம் நூற்றாண்டே என்று ஆராய்ச்சி முடிவை வெளியிடுவர். இளமைப் பருவத்தே நகரவிடுதி முன் ஜெகவீரபாண்டியனர் கூறிய கந்த புராண விரிவுரையை வியப்பர். இவ்வாறு புராண இதிகாசங்களிலும் ஈடுபட்டுப் புதுவிளக்கம் தரும் புண்ணிய சீலர். ஒருவனைப் பற்றி ஒருகத்திரு" என்ற உண்மையினை உளம் நெகிழ விளக்குவர். ஒழுக்கத்தின் உறைவிடமாயினர்.

இலக்கியம்:

திருக்குறளில் ஆர்வம் உடையவர். வாழ்த்துப் பாடல்களைப் பொதுக்கூட்டங்களில் விளக்கி மகிழ்வர். சங்க இலக்கியங்கள், ஐம்பெருங்காப்பியங்கள், சிற்றிலக்கியங்கள், ஆகியவற்றில் ஈடுபாடு உள்ளவர். இலக்கிய விழாக்களில் பேசுவர். புதிய கண்ணோட்டத் துடன் பழைய நூல்களை அணுகும் முறை, கோவையாக நிரலே அறிந்து பொருள்விளக்கும் புலமைத் திறன், எளிய நல்ல தமிழில் புரிய வைக்கும் பாங்கு — ஆகிய சிறப்புக்கள் இவர்க்கே உரியவை. நெல்லை மாவட்ட நூலக ஆணைக்குழுவின் தலைவராயிருந்து (1966—1970) நூல் படிக்கும் பழக்கத்தை வலியுறுத்திப் பரப்பினர். அவர்தம் அப்போதைய சொற் பொழிவுகள் அவருடைய ஆழ்த்தகன்ற நுணங்கிய நூல் அறிவிற்குச் சான்று பகரும் தன்மை யன. இலக்கியச் சங்கங்களிலும் மாநாடுகளிலும் விரும்பி வேண்டி இவர்தம் தலைமையை நாடுவர். இவர் சொற்பெருக்காற்றும் பெருஞ்சொற்கொண்டல் எனப் பெயர் பெற்றார்.

"முதலாளி" என்று எல்லோராலும் அழைக்கப்படும் குடும்பத்தைச்சார்ந்தவர். இவர்தம் வளர்ப்புத்தந்தை ஏ. பி. சொக்கலிங்கனர் இவரைத் தம் கண்ணின் மணியெனக் காத்துவளர்த்தார் இவர்தம் ஆற்றலையும் பதவிகளில் பணிபுரியும் பெற்றியினையும் கண்டு களித்தாரில்லை, 35 வயதிலேயே அவர் மறைந்ததால்! அவர் தம் அன்பு மகன் வீரபாகுவை எல்லோரும் முதலாளி என்பர். அது மட்டுமா? அந்த மாமனர் எத்தனை உள்ளன்பு கொண்டிருந்தார் என்பதை, இன்று எல்லோரும் ஏ.பி.எஸ். என்ற மூன்று எழுத்துக்களையே கூற அறியலாம். ஏ பி சொக்கலிங்கம் செட்டியார் அவர்கள்தாம் ஏ. பீ. ஸி. ஆவர். இவர்களைக் குறிப்பிட ஏ பி ஸி வீ என்று யாரும் கூறுவதில்லை. ஏ.பீ.ஸி. என்றே அழைப்பர். தம் நன்றியை அவர்கள் பெயர் வழங்குமாறு செய்வதன் மூலம் காட்டி மகிழ்கிறார் போலும். என்னே இறைவன் திருவருள்!

ஏழைகள் திருமணம் செய்ய உதவி உறவினர்களில் - ஏழை பணக்காரர் வேறு பாடின்றி நன்மை தீமையில் கலந்துகொள்ளல், தீபாவளி தோறும் 250 ஏழைகளுக்கு உடை யளித்தல், குற்றம் புரிந்தோரைக் கடிந்து மன்னித்தல், பணியாளர்களின் குடும்பத்திற்கு உதவி செய்தல், பகைவனுக்கும் அருளுதல், உதவுதல், எதிர்க்கட்சிக் காரர்க்கும் இயன்ற உதவிபுரிதல்—இத்தகைய இயல்புகளில் சமுதாயம் ஒன்றே என்ற கண்ணோட்டம், ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற செயற்பாடு, நகரத்தில் எந்த நல்ல பெரிய செயல்களிலும் இவரே முதல் ஆள், முதலாளி.

எளிய கதர் ஆடையை அணிவர். எதிலும் திட்டவட்டமான முடிவு எடுப்பர். எதை யும் துணிந்து கூறும் உள்ளம் உடையவர். நேர்மை நாணயத்தின் இருப்பிடம். சாதிவேற்றுமை பாராட்டுவதில்லை. பிராமணர்களின் பிரிய நண்பர். நாடார்களின் நம்பிக்கைக்கு உரிய அன்பர். கம்மவார் நாய்க்கர்களின் கண்ணனைய காவலர். அரிஜன மக்களின் அல்ல லுக்கு அடலேறு. பிற்பட்டோர் நலம் பேணும் பெருந்தகை. கிறிஸ்தவப் பரதவர்களின் துணைவர். சைவப் பெருமக்களின் தனிப்பெருந்தலைவர், எதை எண்ணினாலும் எடுத்தாலும் மக்களை மையமாக வைத்தே செயல்படுவர். சமுதாய நலமே—பொது நலமே மூச்சும் பேச் சும்—எல்லாம்! மக்கள் பணியே மகேசுவரன் பணி என்னும் குறிக்கோள் உடைமையினால் மக்கள் உள்ளத்தில் தனியிடம் பெற்ற மாபெரும் தலைவர் ஆனார். தமிழ் நாட்டின் தனிப் பெருந்தலைவராகத் தகுதியுள்ள 'ஏ. பி. ஸி.' அனைத்து இந்தியாவிற்கும் அறிவுரை கூறும் நாள் தொலைவில் இல்லை. மணிவிழாக் காணும் மன்னவர், ஆயிரம் பிறை காணும் அருநாயகராகிப் பல்லாண்டு சிறக்க எல்லாம் வல்ல இறை அருள் புரிக.

"பொதுமக்களின் சேமிப்புப் பொருளாதார வளர்ச்சிக்கு நாட்டின் உற்பத்தித் திறனைப் பெருக்கிப் பயன்படுத்தவேண்டும். ஷேமநல அரசாங்கம் (Welfare State) இதில் கவனம் செலுத்துவது இன்றியமையாத கடமை ஆகும்."

* * * *

"இந்தத் தேசத்தில் வேலையில்லாதோரின் பிரச்சனை அதிகரித்துக் கொண்டு போகின்ற நிலவரம் நீடிக்காமல் தடுத்து நிறுத்த அரசு தவறுமானால் தேசத்தில் பேரபாயம் விளையும்."

—பாங்குகளைச் தேசீய மயமாக்கியது சரியா? என்ற பேச்சிலிருந்து

தலைமுறை


முத்துமாடன் செட்டியார்
அய்யம்பெருமாள் செட்டியார்
பச்சைமுத்து செட்டியார் (ஆ. ப. வழி)
மாடன் செட்டியார்
கருப்பன் செட்டியார்
மசிவன் செட்டியார்
மாத்தானத்தம்மாள்
இராமநாதன் செட்டியார்
சுப்பிரமணியன் செட்டியார்
யம்மாள்
வள்ளிமயில்
சின்னசண்முகம்
கந்தசாமி செட்டியார்
(மீனவி சண்முகத்தம்மாள்)
ஆறுமுகம் செட்டியார்
திருக்கைவேல் செட்டியார்
வீரபாகு செட்டியார்
(வாரீஸ் இல்லை)
சீனி செட்டியார்
பிரதானி செட்டியார் என்ற பரமசிவன் செட்டியார் (1864 ஆடி)
கரபாகம் செட்டியார்
ஆறுமுகம் செட்டியார்
இராமநாதன் செட்டியார்
வீரபாகு செட்டியார்
(மீனவி கல்யாணி அம்மாள்)
சண்முகத்தம்மாள்
சொர்ணத்தம்மாள்
மசிவன் செட்டியார்
மகாலட்சுமியம்மாள்
(ஆ. ப. சொக்கலிங்கம் செட்டியார் மீனவி)
(வளர்ப்புத் தாய்தந்தை)
பரமசிவன் செட்டியார்
(மீனவி உலகம்மாள்)
(தாய் தந்தை)
ஆறுமுகம் செட்டியார்
(வாரீஸ் இல்லை)
ஆ. ப. சொக்கலிங்கம் செட்டி
(மீனவி மகாலட்சுமி அம்ம
(8-ஆம் தலைமுற
கல்யாணி அம்மாள்
வீரபாகு
மகாலட்சுமி
கோமதி
மீனவி மகாலட்சுமி அம்மாள்
(S. R. வேலாயுதம் பிள்ளை மகள்)
உலகம்மாள்
வேலாயுதம்
சண்முகம்
ஆறுமுகம்
சங்கரபாகம்
கணேசன்

நான் ஏன் நேசிக்கிறேன்?

எஸ். ஏ. முருகானந்தம், எம் பி.

திரு. ஏ. பி. சி. வீரபாகு அவர்களும், நானும் அரசியல் உலகில் மாறுபட்ட கருத்துடையவர்கள். தூத்துக்குடி நகர அரசியல் வாழ்வில், பல சந்தர்ப்பங்களில், நாங்கள் இரண்டு பேரும், அவரவர் கட்சிக் கொள்கையில் உறுதியாக நின்று, போரிட்டு வந்தவர்கள்.

1952-ம் ஆண்டு, நான் தூத்துக்குடி நகர்மன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட போது, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் முடிவின் அடிப்படையில், உயர்திரு வி. வி. தமுஷ்கோடி நாடார் அவர்களை, நகர்மன்றத் தலைவராக்க, நான் முழுமூச்சாகப் பாடுபட்டேன். அதேபோல், திரு. ஏ. பி. சி. வீரபாகு அவர்கள், திரு. எம். வி. சுந்தரவேல் அவர்களை, நகர்மன்றத் தலைவராக்கப் பாடுபட்டார்கள். அப்பொழுது நாங்கள் இருவரும், இருதுருவங்களாக நின்று, கடுமையான அளவில் விமர்சனம் செய்துகொண்டதை இந்த நகர மக்கள் எளிதில் மறந்திருக்கமாட்டார்கள்.

அடுத்து, நடந்த நகர்மன்றத் தேர்தலில் நான் வெற்றி பெறக்கூடாது என்பதற்காக, தம்முடைய தொகுதியில்கூட, தமக்காக வீடு வீடாகச் சென்று வாக்குகள் கேட்காத திரு. வீரபாகு அவர்கள், என்னுடைய வார்டில் உள்ள வீடுகளில் வாக்குகள் கேட்டார். அவருடைய வேட்பாளர் வெற்றிபெற அயராது பாடுபட்டார்.

1958-ம் ஆண்டில், தூத்துக்குடி சட்டமன்றத் தொகுதிக்கு, நடைபெற்ற, சரித்திரப் பிரசித்திபெற்ற உபதேர்தலைப்பற்றி நகரமக்கள் நன்கு அறிவார்கள்.

கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளராக நானும், காங்கிரஸ் வேட்பாளராக, சாமுவேல் அவர்களும், தி. மு. க. வேட்பாளராக, சிவசாமி அவர்களும் போட்டியிட்டோம்.

Pongal and Deepavali mornings when we go to greet him. Is this because he knows that we need much more than his own blessings?

To Sri-la-Sri Panrimalai Swamigal, Sri A. P. C. Veerabahu has long and deeply owed a fealty and following rarely seen in our days. Like a child eating his sweets in silent and thankful joy alone fully absorbed, Sri A. P. C. Veerabahu never broadcasts his reverence and affection for these great saints. He speaks no word of the many temples and "ashrams" he has brought into being. But the holy infection has caught on with his family and many around him.

Some of us say that Sri A. P. C. Veerabahu has a great partiality for the Lord Subrahmanya at Tiruchendur. In proof, they speak of his annual celebration of Thirukkalyanam to the Lord, the day after "Soora Samharam". Another man affirms that Sri A. P. C. Veerabahu's devotion to Sri Guruvayoorappan is the latest but not the least. A third person tells us that Sri A. P. C. Veerabahu worships the "Kanni Deivam". This is all like what they said of Sir C. P. – that he performed a special penance to Angaaraka and that is why he rose to great eminence! I can't forget also another strange person who said, "When C. R. dropped Sengalipuram, A. P. C. Veerabahu took him up" What funny fancies we are capable of? And what do these guesses, gossips, and investigations avail us? Can we not paddle our own canoes?

Indeed, the real thing for us to realise and emulate is that the fount and source of Sri A. P. C. Veerabahu's ceaseless, varied and marvellous service to man and God are his deep faith in and faithful following of true religion.

If by birth he is a Hindu, by his sanctified spirit and deep scholarship, he belongs to all religions. At many platforms for religion and culture, he has spoken and shown his spell-bound listeners that true religion is a life to be lived, not spasmodically but unremittingly. As Sri A. P. C. Veerabahu himself has exemplified, a clean life, an open mind, and an unveiled spiritual perception alone can lead man to God, for indeed man and God are in truth one, not two. "Ekam-Adh dhviteeyam" - "Naanyah panthaa"-There is no other way.

It is this vision of life that Sri A. P. C. Veerabahu shows to you and me, in thought, word and deed, in true worship of God and service to mankind. He is a diamond Soul of many facets, all brilliant and strong. He is what the Theosophist would readily recognise as God's Agent, an "elder Soul", accustomed through countless births to serve mankind and lead it to God.

Leadership qualities are in-built with such men. With them, life has certainly been no bed of roses. They are keenly aware, as they have experienced it, that "He who runs must pay for his speed" and that "Heaven itsef must be cheap indeed were it not for the wisdom of the tears". Such men keep the Heaven's Gods themselves in debt to them.

Today, on this auspicious occasion, you and I can tell Sri A. P- C. Veerabahu only what Nancy told Rosemaylie in Dickens's "Oliver Twist,'– "If there was more like you, there would be fewer like me! There would! there would!" And, perhaps, the only gratitude you and I can show him today is to try to become like him some day.

I may assure you that this is no easy task, but one ought to begin it some time, for nothing else is worthy, and in God's Gracious Plan called Evolution, there is no escaping it.

AN ORATOR AND A FRIEND OF LABOUR

G. RAMANUJAM

General Secretary, Indian National Trade Union Congress

I have the unique privilege and pleassure of working with Shri. A. P. C. Veerabahu for the last 28 years. The first contact with him was in the year 1947 when I came over to Tamilnadu to survey the field for organising Hindustan Mazdoor Sevak Sangh. He was already very popular among the younger generation in the Congress. There was great enthusiasm among Congressmen, particularly the youth, as we were then on eve of attaining our Independence.

I approached him to seek his assistance in mobilising young and enthusiastic persons for organising labour on the illustratious model of the Textile Labour Association, Ahmedabad, founded and fostered by Mahatma Gandhi. Shri. A. P. C. Veerabahu was ready with his positive response, and since then, he has been extending the Labour Movement a helping hand whenever it stood in need of the same in Tamilnadu.

He was the Chairman of the Reception Committee of the Textile Workers' Conference organised under the banner of INTUC in Tamilnadu at Vikramasingapuram in 1949. Although that Conference was held in Tinnevelly district, it really sorted out the problems posed by the textile workers of Coimbatore, and ultimately paved the way for the setting up of a Textile Tripartite Enquiry Committee for the then State of Madras. That Conference also resulted in securing compensation to the thousands of workmen retrenched in the Coimbatore textile industry in 1948.

Our colleagues in Tinnevelly district, both at Tuticorin and Vikramasingapuram, have been largely drawing upon his guidance and assistance from time to time.

He is a forceful speaker, and in those days when Trade Union platforms were largely used for speaking on politlcal subjects, he could manage to speak for hours on Purely labour problems. He was always heard with rapt attention and respect. He

was also greatly known for his contribution to the development of the Co-operative Movement in the State.

He was throughout a great sympathiser and supporter of the INTUC Movement. The working class was therefore happy when he was nominated President of the Tamilnadu Congress Committee. His period marked one of close co-operation and better understanding between the INTUC and the Congress in the State.

He is a great patriot and a true democrat.

On this occasion of his 61st year, I have great pleasure in offering him felicitations not only on my behalf but also on behalf of the workers organised under the INTUC in Tamilnadu.

I wish him many more years in the service of the country!



தமிழக ஆளுநர்
திரு. K. K. ஷா அவர்களுடன்
நமது ஏ. பி. ஸி. வீரபாகு



கப்பலோட்டிய தமிழன்
வ. உ. சி.யின் நூற்றாண்டு விழா
நினைவாக தபால் தலை வெளியீட்டு
விழாவில் பிரதமர் இந்திரா காந்தி,
உ. பி. முதலமைச்சர் திரு. பகுண
ஆகியோருடன் ஏ. பி. ஸி. வீரபாகு

தூத்துக்குடி துறைமுக விழாவில் நமது ஏ. பி. எஸ். வீரபாகு

THE SCIENTIFIC APPROACH TO RELIGION

T. V. KAMALASAMY, B.A.

Very often we find conflict betweens the young and the old in their outlook on religion. Some of the educated young people look upon the persons devoted to religion as blind, superstitious and dogmatic in their pursuit of religion and religious practices. They seem to feel that the old people's beliefs cannot stand scientific scrutiny and hence they scoff at their religious practices. Further, they assert that while the Western countries are advancing in Science and Technology, we are all steeped in ignorance and idle talk of religion.

The young people will do well to understand that the scientifically advanced West is more and more in quest for spiritual truths from India. The sages, seers, philosophers and saints have inspired the people both in the West and the East and guided them with the light of knowledge and wisdom in temporal as well as spiritual spheres.

Even the greatest of scientists have now come to feel that there is some Super-Natural Powers beyond the limits of their scientific learning, research and knowledge, just as educated young men are trying to find out whether there is any scientific basis for the religious doctrines and practices. Thus we find the modern trends. The wide gap which existed hitherto between science and religion is slowly being narrowed down. And there is a growing understanding in all the nations around of all truths behind the Puranas, Ithihasas, Epics and the Philosopies of our country.

Great saints, sages and Mahatmas are not mere fictious figures and products of imagination. Great Saints and Mahatmas have been appearing in our midst from time to time, from ancient times down to the present day. Even today, we have in our midst saints like His Holiness Panrimalai Swamigal who is a shining illustration of the judicious combination of the ancient and

modern wisdom. His great spiritaul force is a marvel to the people of the East and West alike.

These saints have so developed certain humane faculties spiritually as to create certain phenomena which rise above the scrutiny of science and research. It is here where the people devoted to religions and religious leaders are able to witness the wonders of spiritual force. These saints are God-Men and they can really help the earnest seekers to realise God.

Thiru. A. P. C. Veerabahu Pillai is real seeker after Truth and his religious beliefs are based on scientific approach. He is one who can interpret the teachings of the great Saivite and Vaishnavite saints and Acharyas. His deep study of Tamil Literature and religious works have made him a leader among men, a guide, friend and philosopher and his qualities of head and heart have made him, not only a trusted political leader among patriotic Tamilians, but also one who can lead mankind nearer to God.

VEERABAHU, THE EDUCATIONIST

A. A. A. CHETTIAR
Correspondent, 'The Mail', Tuticorin.

MR. Veerabahu! I have known you from childhood and you used to call us, Chockan, Kuttalam and me, — affectionately 'TRIO' when meeting us and appreciating our activities of which we were very proud.

At a time when there was no college in Tuticorin, the poor and middle classes had to send their wards to the colleges in Palayamcottai, Madurai and Trichy. With firm determination and selfless ambition, you ventured to start a a college and to name the Temple of Education after the great patriot and pioneer in shipping, the late Mr. V. O. Chidambaram, and the local Municipal Council under the Chairmanship of Mr. M. V. S. Sundarvel, graciously contributed Rs. 1 lakh and that was helpful in your endeavour.

The foundation stone was laid in June, 1949 and I attended the function. When I asked you, 'Will the college be started next year?', you replied without hesitation, "It would function as proposed" and you made it come true.

Your achievements in political, social and educational fields are well known in Tamilnadu.

Your variegated virtues, iron will, kind heartedness, frankness in expression and boldness in action, are too well known to need any reference.

You are a powerful orator in Tamil as well as in English. Your speeches are a source of inspiration and guidance to the public in general and the student community in particular.

Your Gandhian thought and action have made your life one long dedicated service, and your interest in the Sarvodaya Movement of Vinoba Bhave, has enbaled you to render great service to the village adopted by the Sarvodaya Committee of which you are the President.

May God, the Almighty, shower His Blessings on you and give you many more years to render yeoman service to the Nation!

EVENTS IN A NOTABLE LIFE

Father's Name	:	V. Paramasivan Pillai
Mother's Name	:	Ulagammal
5th May, 1915	—	A. P. C. Veerabahu (alias Vembu) was born at Tuticorin.
October, 1919	—	Initiation in School. (Vidyaarambham)
1919-1922	—	Education in T. S. Hindu Elementary School (Now called V. A. A. Muthulakshmi Ammal Hindu Elementary School, Keelur, Tuticorin.)
1923-1931	—	Education at Caldwell High School, Tuticorin.
1931 1933	—	Education at Hindu College, Tirunelveli. (Now called M. D. T. Hindu College)
1933-1935	—	Education at Loyola College, Madras.
1936-1941	—	Late Mr. P. Kandasamy Pillai, Secretary, Town Congress Committee initiates Sri A. P. C. into Congress activities at Tuticorin.
3rd Feb. 1941	—	Marries Sow. Mahalakshmi Ammal, daughter of Sri S. R. Velayutham Pillai of Tirunelveli.
1942	—	Founder Secretary of the Tuticorin Co-operative Stores.
1942-1950	—	Founder Secretary, Ceylon Exporters' and Importers' Chamber, Tuticorin.
1942-1946	—	Enters business and establishes a branch at Colombo, Ceylon.
1945	—	Starts Mahalakshmi Works, Ettayapuram Road, (Paddy hulling, Flour mill, Oil mill and Cotton Ginning.)
1946-1951	—	Was elected as President, District Congress Committee, Tirunelveli.)
1947	—	Founded V. O. C. Educational Society, Tuticorin.
1948-1950 1957-1969	—	President, Indian Chamber of Commerce, Tuticorin.
1948-1950	—	Member, Tuticorin Port Trust.

1948-1971	—	President, Tirunelveli District Co-operative Stores and Marketing Society Ltd , Tuticorin.
1948	—	Becomes a Director of the Swedeshi Steamship Company Ltd.
1949	—	Founded the Chidambara Nagar Co-operative Building Society,
1949	—	Founded V. O. Chidambaram Pillai Educational Society, Tuticorin.
1951	—	Established the V. O. C. College.
1955	—	Founded V. O. C. Teachers' Training College, Tuticorin.
1956-1971	—	Director, South India Bank Ltd., Tinnelvelly.
1957-1967	—	Member, Madras Legislature., for 2 terms.
1957-1962	—	Member, State Planning Board.
1957-1967	—	Member, Consulative Committee on Co-operation and Education.
1957-1967	—	Member, Tamil Nadu Congress Working Committee.
1958-1964	—	Member, Senate, University of Madras.
1959-1970	—	Founder President, Ele. School Children Midday Meals and Other Aids Association, Tuticorin.
1962-1968	—	Member, Zonal Credit Committee on the State Bank of India and Member Industrlal Co-operative Bank.
1963-1967	—	Member, State Electricity Board, Madras.
1963	—	Founder President, Industrial Co-operative Estate, Korampallam, Tuticorin.
1965-1971	—	Chairman, South India Bank Ltd., Tirunelveli.
1966	—	Founded District Gramadhan Development Trust.
1966-1969	—	Chairman, Tirunelveli. Local Library Authority.
1967	—	Member, A. I. C. C. (All India Congress Committee)
1971-1973	—	President, Tamil Nadu Congress.
1973	—	Vice-President, Hindi Prachar Sabha, Tamil Nadu.
1973	—	Founded A. P. C. Mahalakshmi College for Women.

RAJAJI'S PROPHECY ON SRI A.P.C.V'S SUCCESS

The following extract from Revered C. R.'s "Dear Reader" in the "SWARAJYA" (June 10, 1972—page 26) shows the Elder Statesman's appreciation of Sri A. P. C. V's work.

> *"What I hear from workers in Tirunelveli district is very heartening. Dedicated work is being carried on in favour of abstention from intoxicating liquors and demanding the restoration of Prohibition in Tamil Nad. The Convener of Tamil Nad Congress (R), Sri A. P. C. Veerabahu, is giving all his moral support to this movement. A day will soon arrive when Mr. Karunanidhi will see the great error he has put round his neck like a mill-stone. The women in the State are against Mr. Karunanidhi's error and the women are a half of the people by numbers and much more than a half in moral strength".*

Later events have shown us that both Rajaji's wishes and Sri A.P.C.V's efforts have been fruitful.

MATTERS PRINTED AT: ST. MARY'S INDUSTRIAL SCHOOL PRESS, TUTICORIN-628003.

दक्षिण के सरदार श्री. ए. पी. सी. वीरबाहु

हरिहर दुरैस्वामी

इसी साल फरवरी महीने में हमारे कालेज में सरदार पटेल की शताब्दी मनायी गयी। उस दिन श्री. ए. पी. सी. वीरबाहु ने अत्यक्षता करते हुए सरदार पटेल और उनके बाद जो जो हमारे देश के गृह मंत्री बने उन पर सरसरी निराह डालकर कहा – आज सरदार पटेल के जैसों के नेतृत्व से वंचित देश अराजकता का शिकार हो रहा है और वे इस बात के साक्षी हैं कि कभी कभी समस्त देश एक व्यक्ति पर निर्भर रहता है तथा उस एक व्यक्ति का प्रभाव युग युगों तक चलता है। फिर उन्होंने सरदार पटेल के जीवन से संबन्धित अनेकों राजनैतिक घटनाओं पर प्रकाश डालकर अपने ऐतिहासिक ज्ञान और गंभीर चिन्तन से श्रोताओं को चकित कर दिया। सैकडों युवक जमा थे और सरदार पटेल के व्यक्तित्व का विस्तृत परिचय पाकर गद्‌गद् हो गये। विपक्षी दलों के बाजारु और द्वेष पूर्ण किन्तु सारहीन भाषणों को न तुनकर ऊब जानेवाले छात्र श्री. ए. पी. सी. के उस दिन के भाषण से यह समझ सके कि कोई भाषण कैसे गाँभीर्यपूर्ण होने पर भी सरल, शिक्षणात्मक तथा प्रभावात्मक भी हो सकता है। ऐसे दस पन्द्रह भाषण, हमारे छात्र गण सुन सकें तो फिर उन्हें राष्ट्रीयता के विरुद्ध खींचने का प्रयास किसी भी वक्ता से संभव नहीं होगा। ऐसे ही व्यकित देश के निर्माता होते हैं।

सभा के विसर्जित होने के बाद उस दिन के आयोजन पर छात्रों ने संतोष प्रकट करते हुए मुझ से कहा - प्रतिमास एक दिन ऐसे भाषण का, प्रबन्ध करना चाहिये। तब हम अपने देश के आसन्न भूतकाल की सही राजनैतिक परिस्थिति से खूब परिचित हो सकेंगे। हम कदीम भूतःकाल का इतिहास पढते हैं और नवीनतम नेता कहलानेवालों का भाषण सुन पाते हैं। निकट भूत के त्यागमय एवं सफल नेताओं के आदर्श जीवन से हम अनभिज्ञ ही रहते हैं। छात्रों का अभिप्राय सुनकर मेरे मन में यह ख्याल हो आया कि क्या हमारे देश ने इस व्यक्ति का पूरा उपयोग कर लिया है। नहीं, एक शतांश का भी उपयोग नहीं किया है। घडे के अंदर रखे हुए दीपक की भांति ये नेता दक्षिण के सुदूर कोने में अपनी अपरिमित आंतरिक शक्ति का उदात्त रुप प्रदर्शित कर रहे हैं। यदि यह व्यक्ति देश के इस सुदूर कोने में न होकर देश की राजधानी में रहें तो देश का कितना लाभ होगा, यह सोचेते सोचते उस लौह पुरुष सरदार पटेल का ही याद हो आया। पटेल के जैसे ही वीरबाहु भी निर्भीक हैं। कभी न झुकनेवाला स्वभाव उन्की खासियत है। सुडौल, शक्ति सम्पन्न शरीर में शेर का दिल है। "स्वस्थ शरीर स्वस्थ मन" की कहावत को

चरितार्थ करनेवाला यह लौह पुरुष अगर राज्य अथवा केन्द्र सरकार में सुयोजित पद रहे तो देश समझ पायगा कि केवल गुजरात ने ही सरदार पटेल का जन्म न दिया, बल्कि तमिलनाडु ने भी एक सरदार पटेल का जन्म दिया है। सरदार पटेल से वीरबाहु चालीस वर्ष, उम्र में छोटे हैं। साठ साल के इस व्यक्ति की आँखों में जोशीले युवकों का तेज है। चाल में स्वस्थ युवकों की स्फूर्त्ति है और विषय के परिशीलन एवं तर्क रीति में एक वैज्ञानिक की पैनी दृष्टि तथा एक अधिवक्ता का चातुर्य है। समझौता इस व्यक्ति के स्वभाव के विपरीत है। जिन विषयों में समझौता करना आत्मा का हनन हो उन विषयों में समझौता कैसे संभव होगा। समझौता उन्हीं व्यक्तियों के किए है जो समयानुकूल बदल सकते हों और देश हित के बदले अपने हित को ही अधिक महत्व देनेवाले बनें। इनके विचार कुछ आधार भूत सत्यों पर आधारित हैं। आधार भूत सत्यों का त्याग ही समझौता हो तो वह समझौता इन्हें नहीं चाहिए। इनके इसी गुण को कुछ लोग इनकी प्रगति में बाधक मानते हैं। लेकिन वही तो इनकी प्रगति का मूल है। अगर उच्च पदों की प्राप्ति और उन पदों में चिपके रहने के षडयंत्र ही प्रगति हों तो ऐसी प्रगति इन्हें अवांछनीय है। इनकी प्रगति निस्सीम है। दूसरों के बल एंव समर्थन का मुँहताज न रहकर अपनी आन्तरिक शक्ति पर केन्द्रित है। यही तो सच्ची प्रगति है। ऐसे प्रगतिशील व्यक्ति हमेशा के लिए छिपे नहीं रह सकते। इन्हें आगे आना ही होगा। ऐसे जयोतिर्मय प्रकाश में इनके आने का समय बहुत दूर नहीं है। चिन्तन, मनन और स्वाध्याय तथा निर्माण कार्यों के द्वारा ये शक्ति सम्पन्न बन रहे हैं। यह शक्ति सम्पन्नता इन्हें देश के केन्द्र में ला देगी और देश की निर्माण शक्ति जाग उठेगी। सरदार पटेल का रिक्त स्थान तमिलनाडु के इस लौह पुरुष के द्वारा पूर्ण होगा।

लोकमान्य तिलक के समकालीन तमिल भाषी नेता वी. ओ. चिदम्बरम पिल्लै के नाम पर इनका निर्मित महा विद्यालय मदुरै विश्वविद्यालय से सम्बद्ध कालेजों में सब से बडा है। इनकी माता ए. पी. सी. महालक्ष्मी नाम पर एक महिला महाविद्यालय शहर की दूसरी और तूतिकोरिन की सीमा को बढा रहा है। सहकारी समितियों, सहकारी बैंकों और सर्वोदय संस्थाओं के निर्माण द्वारा तूतिकोरिन से आगे बढकर तिरुनेलवेली जिले भर में अपना प्रभाव डाला है। आजकल दक्षिण भारत हिन्दी प्रचार सभा की तमिलनाडु शाखा के उपाध्यक्ष के रुप में विविध आँधियों से कमजोर बनी हुई संस्था को मजबूत बनाने में संलग्न हैं। प्रेम से प्रेमी मिलते हैं तो सेवा से भगवान मिलते हैं। अपनी सेवाओं द्वारा भगवान का साक्षात्कार करनेवाले श्री वीरबाहु भक्ति के कार्यों में भी अपना समर्थ हाथ बँटा रहे हैं। तूतिकोरिन का कोई भी दैव कार्य इनका संबल पाकर फूल फूल उठा है। शिव मन्दिर का ऊँचा गोपुर इनकी कल्पना का ही साकार रुप है। आशा है कि इनका नाम भी गोपुर की भांति सारे भारत में दीप्त हो उठेगा।

निर्भीक नेता

पुरुषोत्तम लोकनिन्दा से दूर, सब दिल अजीज़, सर्वजन-प्रिय, कर्मवीर, निर्भीक, स्पष्ट वक्ता नेता श्री ए. पी. सी. वीरबाहूजी के बारे में कुछ लिखने बैठा तो मन ने कहा – क्या लिखोगे? सचमुच पसोपेश में हूँ। क्या लिखूँ? मुझ अकिंचन की कलम उनकी बडाई का क्या वर्णन करे? कबीर ने कहा :—

सब धर्ती कागद करूं, लेखनी सब बनराय।
सात समुंदर मसि करूं, गुरुगुन लिखा न जाय॥

राजनीति के कई चेलों के वे गुरु है। उनकी राजनीति नीति पर आधारित है। सुबह शाम दल बदलनेवाले नेताओं को जब मैं देख रहा हूं, तब श्री वीरबाहूजी की मूर्ति मुझे विंध्यांचल सी दीखती है। जिस दल के वे है उस दल के वे पक्के है। जब दल ने अपना रुख बदला वे चुप रह गये। दल के कार्यों में भाग लेने हजारों शक्तियां काम कर रही है। ये अचल है।

मैं अपना जहोभाग्य मानता हूँ कि श्री वीरबाहूजी राजनीति से अस्थाई रूप में अलग है। इन दृढव्रती नेता का समय देश का धन है। अपने कालेज और कितनी ही शैक्षणिक संस्थाओं के ये प्राण है। वे संस्थाएं प्राण दान पायें जिसके लिए राजनीति इनको छोड दे।

सामाजिक अव्यवस्था के लिए शत्रु है। इस परशुराम का परशु ही इस अव्यवस्था को दूर कर सकती है। शत्रु पर सीधीवार करते है। मगर शत्रु का दिल नहीं दुखता। सामाजिक दुरवस्था का उनके हृदय में व्रण हैं। यद्यपि ये उस व्रण निवारण के योग्य डाक्टर है, फिर भी इलाज की सामग्री के अभाव में चुप है।

गाँधीय पथों के पथिक है। गाँधीय संस्थाओं के प्राण है। अतएव हिन्दी प्रचार सभा तथा सर्वोदय संघ से नाता रखते है। समस्याएं उनके सामने कुछ नहीं है। समस्यावों की तह तक पहुँचने की उनमें जो समझ है वह अन्य नेताओं में मैं ने नहीं पाया।

मानव की व्यक्तिगत कठिनाई से उनके दिल की चोट से परिचित ये नेता हर दिल अजीज है तो आश्चर्य क्या? मैं जब भी उनसे मिलता हूँ समस्या, चिंता, उत्क्षन लेकर जाता हूँ। मिलकर लौटता हूँ निश्चिंत और निश्चल होकर सबका निवारण मिल जाता है। मुझे अब आश्चर्य इस बात का है कि साठ साल के इस वय में इन्हें सौ साल का अनुभव कैसे मिला?

इन महामना के साठवीं वर्षगांठ के उपलक्ष्य में मैं सर्व शक्तिमान ईश्वर से कर जोड बिनती करता हूँ कि आप इस महान व्यक्तित्व संपन्न नेता को चिरायु व निरोग रखें।

इ. तंगप्पन

திருமிகு ஏ. பி. ஸி. வீரபாகு

மணிவிழாச் சிறப்புமலர்

பாராட்டு விழா, பட்டமளிப்பு விழாத் தொகுப்புரை

3—5—75

ஈகர்மன்றத் தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர், மணிவிழாக் குழுத்தலைவர்
திரு. M. S. சிவசாமி அவர்களது வரவேற்புரையின் சுருக்கம்.

திரு. ஏ. பி. ஸி. மிகச்சிறந்த நேர்மையாளர். யாராக இருந்தாலும் சரி. கவர்னராயிருந்தாலும் சரி. அமைச்சராயிருந்தாலும் சரி. நாட்டின் மிகப் பெரிய தலைவராயிருந்தாலும் சரி. தவறு என்று திரு. ஏ. பி. ஸி. அவர்கள் கண்டு விட்டார்களேயானால், 'தவறு' என்றுதான் இடித்துரைப்பார்களே அல்லாமல், தாட்சண்யத்திற்காகத் தலைவணங்குகின்ற இழி தன்மை அவர்களிடம் என்றுமே குடிகொண்டிருந்ததில்லை என்று நான் இச்சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகின்றேன். நேர்மையான அரசியல்வாதி. தயவு தாட்சண்யத்திற்காகத் தலைவணங்காத வணங்கா முடி மன்னன், அரசியலில் மாபெரும் மேதை என்றெல்லாம் அவரைச் சொன்னால் மிகையாகாது. இந்த மாவீரனின் உருவச் சிலையை இந்தக் கல்லூரியின் முன்னால் வைக்கவேண்டும் என்று என்னுடைய தணியாத ஆசையை இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொண்டு எல்லோரையும் இந்தக் காரியத்திற்கு என்னுடன் ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

முன்னாள் முதலமைச்சர் திரு. பக்தவத்சலம் தலைமையுரையிலிருந்து

இன்றைக்கு, திரு. ஏ. பி. ஸி. வீரபாகு அவர்களுக்கு மணிவிழாக் கொண்டாடும் இந்த நேரத்தில் அரசியல் பாதையிலேயே இல்லாமல் அரசியலை விட்டு விட்டு பல கட்சியைச் சார்ந்தவர்கள் பல நோக்கு கொண்டவர்கள் எல்லோரும் இங்குக் கூடியிருக்கிறோம். இப்படிக் கூடியிருக்கிறோமென்றால் இது அன்னாரின் சிறப்புக்களைத்தான் காட்டுகிறது. மாவட்டக் காங்கிரஸ் தலைவராயிருக்கும்போதிலிருந்து இன்றுவரை பல சந்தர்ப்பங்களில் நான் பார்த்திருக்கிறேன். நான் நேற்று கூட அவரை அவர் வீட்டில் வைத்துப் பார்த்தேன். நண்பர் திரு. சிவசாமி சொன்னதுபோல அன்றைக்குப் பார்த்ததுபோலவே இன்றைக்கும் இளமை மாறாத தோற்றத்தோடு இருக்கிறார் என்று சொன்னால் மிகையாகாது.

சட்டமன்றத்தில் பத்து ஆண்டுகள் இருந்திருக்கிறார். அப்பொழுது நான் அவரை உன்னிப்பாகக் கவனித்திருக்கிறேன். அவர் பேசும்பொழுது உருப்படியாகப் பேசுவார். அதற்காக மற்றவர்களைக் குறை கூறுவதாகக் கொள்ளக்கூடாது. திரு. ஏ. பி. ஸி. அவர்கள் எழுந்து நின்று பேச ஆரம்பித்தால் மற்றவர்களுக்கு அதுபற்றி விருப்பமில்லை, அவர்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என்பதைப்பற்றிக் கவலைப்படாமல் தைரியமாகத் தம்முடைய கருத்தைக் கூறுவார். ஆணித்தரமாகப் பேசுவார். காந்தீயத்தில் பற்றுக்கொண்டவர். தெய்வ நம்பிக்கை மிக்கவர்.

முன்னாள் கல்வி அமைச்சர் திரு. அவினாசிலிங்கம் அவர்கள் மணிவிழா நாயகர் திருமிகு வீரபாகு அவர்களுக்குப் பொன்னாடை போர்த்தித் தமது பாராட்டுரையில் :

இந்த மணிவிழாவில் கலந்துகொள்ள எனக்கு மிகவும் மகிழ்ச்சி. எனக்கு வாய்ப்பு அளித்த அன்பர்களுக்கு நன்றி. மனிதனை மனிதனுகப் பார்க்கும் பழக்கம் நமக்கு வரவில்லை. ஒருவரைக் கட்சி நோக்கத்தோடு பார்க்கிறோம், மத நோக்கத்தோடு வேறு சிலர் பார்க்கிறார்கள். அவன் பணக்காரன் என்கின்ற முறையிலே வேறு சிலர் பார்க்கிறார்கள், இவன் படித்தவன் படிக்காதவன் என்கின்ற நோக்கத்தோடு வேறு சிலர் பரிசீலிக்கிறார்கள். ஆனால் அனைத்திற்கும் மேலாக நாம் மனிதனை மனிதனுகப் பார்க்கவேண்டும். எந்தவிதத் துன்பத்திலும் தர்மத்தைப் பின்பற்றி எவனொருவன் தான் நினைத்த காரியத்தைச் செய்துமுடிக்கின்றானே அவன்தான் மனிதன்.

சுயநலம் உள்ளவனுக்குச் சக்தி பிறப்பதில்லை. மகத்தான காரியத்தைச் சாதித்தவர்கள் எல்லாம் தெய்வத்தை நம்பிக்கையோடு வழிபட்டவர்கள். "நானேயோ தவம் செய்தேன்" என்று சொல்கிறார் மாணிக்கவாசகர். "சிவாய நம எனப் பெற்றேன்" அவ்வளவுதான் நான் செய்ததெல்லாம் "தேனையாய் இன் அமுதமாய் தித்திக்கும் சிவபெருமான் தானே வந்து என் உளம் புகுந்து அடியேர்க்கு அருள் செய்தார்." ஆதலால் சக்தி பெற, ஆண்மை பெற, வீரம் பெற மகத்தான காரியங்கள் செய்ய வழி இருக்கிறது. கொஞ்சம் சுயநலத்தை விட்டு, தான் என்பதை விட்டு, எனக்கு என்பதை விட்டு, தேசம் என்பதை நினைத்து சக்தி கொடுக்கட்டும் என்று நினைத்தால் சக்தி பெருகும் திரு. வீரபாகு போன்றவர்கள் தொடர்ந்து நல்ல பல காரியங்கள் செய்வதற்கு விடாமுயற்சியை மேற்கொண்டால் வெற்றி பெறுவர் என்பது உறுதி!

சிலம்புச் செல்வர் ம. பொ. சி.
அண்ணல் திரு. வீரபாகுவின் திருவுருவப் படத்தைத் திறந்துவைத்துப் பேசியபோது,

காங்கிரசில் நான் அனுமதிக்கப்பட்டு இருந்தவரை நண்பர் வீரபாகுவும் நானும் ஒரே கட்சிக்காரர்களாக இருந்தோம். காலத்தின் கோலங் காரணமாக அதற்குள்ளேயே கோஷ்டிச் சண்டை போட்ட காலம் ஒன்று இருந்தது. அப்போதுகூட ஒரே கோஷ்டியில் இருந்தோம். இப்பொழுது கட்சியும் இல்லை; கோஷ்டியும் இல்லை. பின் ஏன் வந்தீர் என்று கேட்டால் தமிழராக இருக்கிறோம் அந்த ஒரு பாவத்திற்காகத்தான் வந்து சேரவேண்டிய கடமை எனக்கு இருக்கிறது என்பேன். அருமையான ஓர் ஆக்கவழிப் பணியில் அவர் தம் அறிவையும் ஆற்றலையும் செலுத்தி வருகிறார். காந்தியடிகள் விடுதலை பெற்ற இந்தியாவில் என்னவெல்லாம் நடக்க வேண்டுமென்று விரும்பினாரோ அந்த ஆக்க வழியில் அவர் சென்று என்னைவிடவும் ஒரு தூய காந்தியவாதியாக இருப்பதற்கு வாய்ப்புப்பெற்று இருக்கிறார். ஆதலால் அவரை வாழ்த்துவது என்னுடைய காந்தியப் பணிக்குக் கடமையாகும் என்று எண்ணி இங்கு வந்தேன். அறுபது நிறைந்துவிட்டால் மட்டும் மணிவிழா ஆகிவிடாது. அறுபது நிறைந்து மனைவியோடும் இருந்தால்தான் அதன்பெயர் மணிவிழா. ஒருவனைத் திருமணம் செய்துகொள்ளும் எல்லாச் சகோதரிக்கும் இரண்டு தாலி கட்டிக்கொள்ளும் வாய்ப்புக் கிடைப்பது பெரிதும் அரிது. திருமதி வீரபாகு அவர்களுக்குத்தான் இரண்டாம் தாலி கட்டிக் கொள்ளும் பாக்கியம் திரு. வீரபாகு அவர்களால் கிடைத்திருக்கிறது அது எவ்வளவு புண்ணியம்.

சாதி, மத வேறுபாடின்றி ஏழை, பணக்காரன் வித்தியாசமின்றி இன்றைக்கு எல்லோரும் கல்வி கற்க முன்வந்திருப்பதைப் பார்க்கிறோம். இவ்வாறுகக் கல்வித்துறையில் மகத்தான புரட்சி ஏற்பட்டு இருக்கப் பார்க்கிறோம். அந்தமாதிரி ஒரு மாற்றத்தை ஏற்படுத்த நண்பர் ஏ. பி. சி. வீரபாகு

முன்னாள் முதலமைச்சர்
திரு. எம். பக்தவத்சலம்
தலைமை தாங்கி வீற்றிருக்க,
திரு. எம். எஸ். சிவசாமி, எம்.பி.
வரவேற்புரை நிகழ்த்துகின்றார்.

மணிவிழாக் கண்ட தம்பதியர்க்கு
குழுவின் சார்பாகப்
பரிசளிக்கப்படுகிறது

முன்னாள் கல்வி அமைச்சர்,
திரு டி. எஸ். அவினாசிலிங்கம்
செட்டியார் அவர்கள்
மணிவிழாக் கண்ட
அண்ணாலைப் பாராட்டி
மகிழ்கின்றார்.

மணிவிழாக் கண்ட
அண்ணலின் மைந்தர் டாக்டர்
ஏ. பி. ஸி. வீ. வேலாயுதம்
அவர்கள் பங்குகொள்ளும்
ஹரிகேசநல்லூர்
திரு. கிருஷ்ணன் குழுவினரின்
வயலின் இசை நிகழ்ச்சி

வ. உ. சி. கல்லூரி ஆசிரியப் பெருமக்களின்
சார்பாகக் கல்லூரி முதல்வர்
திரு. அ. சுப்பையா, எம், ஏ. அவர்கள்
"கீதை உபதேசத் தேர்" ஒன்றைப்
பரிசாக வழங்குகின்றார்,

மணிவிழா நிகழ்ச்சிக்கு வருகை
தந்த திரளான ஆண்மக்கள்.

மூன்றுகொண்டு இருக்கிறார். நான் அவர்களை எல்லாம் பார்க்கும்போது எனக்குக் கொஞ்சம் பொறுமை ஏற்படுகிறது. இருந்தபோதிலும் செய்ய வாய்ப்பில்லாத எனக்கு நல்ல பணி செய்பவர்களை வாழ்த்துகின்ற பெயராவது கிடைத்ததே என்று பெருமைப்படுகின்றேன்.

திரு. கே. எஸ். இராமசுவாமி
(தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி)

"அவருடைய சேவையை நான் பார்க்கும்போது நூறுண்டு காலத்தில் செய்யவேண்டிய வேலைகளைத் தம்முடைய அறுபதாண்டு காலத்தில் முடித்திருக்கிறார் என்று சொன்னால் அது மிகையாகாது. நண்பர் ஏ. பி. எஸ். வீரபாகு அவர்கள் சமூகத் தொண்டினாலும், தேச பக்தியினாலும் இந்த மிகப் பெரிய கல்லூரியைத் தேசபக்தர் சிதம்பரனார் பெயரிலேயே நிலைநாட்டியிருக்கிறார், இந்த வட்டாரத்திலேயே மதுரைப் பல்கலைக் கழகத்திலேயே மிகப்பெரிய முதன்மையான கல்லூரியாக ஏராளமான மாணவர்களைக் கொண்டிருக்கிறது. தூத்துக்குடித் துறைமுக முன்னேற்றத்தில் மிகுந்த அக்கரை காட்டியிருக்கிறார். நான் அதை அவர் அருகிலிருந்து பார்த்திருக்கிறேன். அவர் நிர்வகித்து வருகின்ற ஸ்தாபனங்கள் அனைத்தும் அவருடைய நிர்வாகத் திறமையை நமக்கு நன்கு காட்டுகின்றன."

திரு. எஸ். ஆர். சுப்பிரமணியம்
(தலைவர், சர்வோதய மண்டல், சென்னை)

"பல ஏழை மாணவர்களுக்குக் கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக இந்தக் கல்லூரியின் மூலம் கல்வி அளித்துச் சிறந்த தொண்டாற்றிப் புண்ணியம் சேர்த்து வருபவர். சென்ற முப்பது வருடங்களாக நான் திரு. வீரபாகு அவர்களைச் சந்தித்துப் பழகி வருகிறேன். அவருடைய உள்ளம் இறைவன் இடத்திலே அசையாத பக்திகொண்டிருக்கின்ற காரணத்தினால் வரும் இனிய தலைமுறையினரும் அம்மாதிரி இருக்கவேண்டுமென்று எண்ணி வருகிறார். அவர்கள் பதவியைவிட, கட்சியைவிட நாடு பெரியது என்ற எண்ணம் கொண்டவர். நாடு நேர்மையான, ஒழுங்கான பாதையில் செல்ல முறையான, ஒழுக்கமான கல்வி ஒன்றால்தான் முடியும் என்ற எண்ணம் கொண்டு சிறந்த கல்விப் பணி செய்துவருகிறார்."

திருமதி. ஆர். வஜ்ரேஸ்வரி

"எனக்கு வாழ்த்துக்கூற அருகதை இல்லை. ஆனால் பாராட்டுவதில் நான் பெருமையடைகிறேன். பழங்காலத்தில் சொல்லுவதுபோல ஆல்போல் தழைத்து, அருகுபோல் வேரோடி, வேம்பு போல் தன்னலமற்று மனம் பரப்பிச் சேவை செய்துவருகின்ற அண்ணலும் அவர்கள் கடமைகளுக்கு எல்லாம் கைகொடுக்கும் அம்மையாரும் பல்லாண்டுகள் வாழ்ந்து, இந்த மூன்று கல்வி ஸ்தாபனங்களும் தொடர்ந்து வளர்ந்து பாரதத்தின் பெருமை நிலைநிறுத்துவது குறிக்கோளாக வேண்டுமென்று ஆண்டவனைப் பிராத்திக்கின்றேன்.

திரு. அன்பு வேதாசலம்

"நானும் முப்பது ஆண்டுக் காலம் பொதுவாழ்க்கையில் இருந்திருக்கிறேன். பெரியவர்கள் அத்தனைபேரிடமும் நான் பழகி வந்திருக்கிறேன். என்னுடைய வாழ்வில் கண்ட ஒரு முழு மகன் திரு. ஏ. பி. எஸ். என்று சொன்னால் அது மிகையாகாது. தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள், பிற மாவட்டத்தைச் சேர்ந்தவர்களை அவ்வளவு சுலபமாகப் பாராட்டமாட்டார்கள். ஏன் என்றால், அது

எங்களுடைய இயல்பான குணம். நான் மனம்விட்டுச் சொல்கிறேன். என்னுடைய மூப்பது ஆண்டுப் பொதுவாழ்விலே நேர்மையான ஒரு தலைசிறந்த பெரிய மனிதனைக் கண்டேன் என்றால் அது ஏ. பி. எஸ். ஒருவரேதாம். தமிழகத்தில் காங்கிரஸின் பொற்காலம் என்று ஒன்று இருக்குமேயானால் அது ஏ. பி. ஸி.யினுடைய காலம்தான்''.

தொழில் அதிபர் பொள்ளாச்சி மகாலிங்கம் 4—5—75

தமிழகத்தின் சுதந்திரப் போராட்டக் காலத்திலும், அதற்குப் பின்னர்ப் புதிய வாழ்வு பெற்ற பாரதத்தினுடைய முன்னேற்றத்திலும், அரசியல்துறை, கல்வித்துறை ஆகியவற்றிலும் மிகச் சிறப்பாகப் பணிபுரிந்து வந்த திரு. ஏ. பி. சி.யிடம் ஆசி பெற வந்திருக்கிறேன். நண்பர் வீரபாகு தமிழகத்தின் சிறந்த அரசியல்வாதிகளில் ஒருவர். எனக்கும் அவருக்கும் ஓர் ஒற்றுமை என்ன வென்றால், எங்கள் இருவருக்கும் அரசியல் ஒரு 'பார்ட் டைம்'. எப்போது அவருடைய சேவைகள் அரசியலில் இருக்கிறவர்களுக்குத் தேவைப்படுகிறதோ அப்பொழுது அங்குப் போய் வேண்டிய நல்லதைச் செய்துவிட்டு அவர்களுக்குக் கஷ்டமாகவோ, சிரமமாகவோ தோன்றும்போது அங்கிருந்து விலகிக் கல்வி, மற்றும் சமுதாயப் பணிகளில் ஈடுபட்டு நற்சேவைகளைச் செய்து வருவதில் நண்பர் வீரபாகு தனி அக்கரை காட்டுபவர்.

சமீப காலத்தில் காங்கிரஸ் இரண்டாகப் பிரிந்தபோது தமிழகத்தில் ஒரு பகுதிக்குத்தாம் தலைமை ஏற்று வெகுச் சிறப்பாகக் கட்சிப் பணியைச் செய்துவந்தார். ஆனால், திடீரென்று தங்களுடைய நிலையான பதவிக்கு எங்கே இவரால் ஆபத்து ஏற்பட்டுவிடுமோ என்று அஞ்சி, இவரை ஓய்வு எடுக்கச் செய்துவிட்டார்கள் சில பதவி ஆசை பிடித்த அரசியல்வாதிகள். நீண்டகால எதிர் காலத்தின் தேவைகள் எல்லாம் சிந்தித்துச் செயலாற்றக்கூடிய தலைவர்கள் ஒரு சிலர்தான். அந்தத் தலைவர்களை மதித்து ஏற்று ஆதரவு கொடுத்து எந்தச் சமுதாயம் வாழ்த்துகின்றதோ அச் சமுதாயத்தின் வாழ்க்கை சிறப்புள்ளதாகவும், வளம் உள்ளதாகவும் இருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. சிறந்த ஜனநாயகவாதியாக விளங்கி வருகின்ற நண்பர் வீரபாகுவின் மணிவிழாவினைக் கொண்டாடுகின்ற இந்த நேரத்தில் அவருடைய வாழ்க்கையிலிருந்து இந்தச் சமுதாயம் கற்றுக் கொள்ளவேண்டியது காந்தியக் கொள்கைகள் வழிப்பட்ட இத்தப் பாடமே.

திரு. ஈ. வி. கே. சம்பத்

ஏ. பி. சி. அவர்களின் சிறப்புக்கள், தொண்டுகள், அவர்களின் இனிய பண்புகள் இந்தத் தொகுப்புகளைப்பற்றி அவரோடு பயில்வதற்கும், தொடர்புகொள்ளுவதற்கும், உறவை வைத்துக் கொள்ளுவதற்கும் வாய்ப்புக் கிடைத்தவர்கள் பேசத்தொடங்கினால் அதற்கு ஒரு முடிவே இருக்க முடியாது. அவர் ஒதுங்கியிருக்கிறார் என்று சிலரே சொல்லுவதும், அவர் ஒதுங்கியிருப்பது நல்லது என்பதும், அது ஒரு சிறந்த தத்துவம் எனத் தத்துவாசாரம் சொல்லுவதும் ஆகிய இவற்றையெல்லாம் நாம் அனுமதிக்க முடியாது. த. நா. கா. க. தலைவராக இருந்தால்தான் அரசியல் என்பதல்ல. இன்றைக்கு எங்கள் செயற்குழுவில் அவர் செயற்குழு உறுப்பினராக இருக்கின்றார், செயற்குழு கூட்டத்திற்கு அவர் வருவதில்லை. ஆனால் தலைவர்கள் நாங்கள் இங்கு வந்து அவரைக் கலந்துகொண்டு, அவர் வந்தால் எப்படி இருக்குமோ அதைவிட அதிகமாகவே அவருடைய ஆலோசனைகளை வாங்கிச் சென்றிருக்கிறோம்.

அந்த ரகசியங்கள் வேண்டுமென்றால் வெளியிலுள்ள சிலருக்குத் தெரியாமல் இருக்கலாம் தவிர, அவருடைய அறிவால் நாங்கள் பெறும் ஆதாயத்தையும், வலுவையும் நாங்கள் பெருமல்

மணிவிழாக் கண்ட
அண்ணலின் திருவுருவப்
படத்தைத் திறந்து வைத்து,
சிலம்புச் செல்வர்
சிறப்புரை நிகழ்த்துகின்றார்.

முன்னாள் கல்வி அமைச்சர் திரு. டி. எஸ்.
அவினாசிலிங்கம் செட்டியார் அவர்கள்
மணிவிழாக் கண்ட அண்ணலுக்குப்
பொன்னாடை போர்த்தி
பெருமகிழ்வடைகின்றார்.

மணிவிழாக் கவியரங்கத்தில்
வாகீசக் கலாநிதியின்
தலைமைக் கவிதை

பட்டமளிப்பு விழாவில்
திரு. எஸ். ஏ. முருகானந்தம்,
எம். பி. அவர்களை
வரவேற்றுப் பேசுகின்றார்.

மணிவிழா மலர் வெளியீட்டு விழாவிற்குத்
தலைமை தாங்கிய தொழிலதிபர்,
பொள்ளாச்சி திரு. நா. மகாலிங்கம்
அவர்களின் தலைமை உரை.

தொழிலாளர் நல அமைச்சர்
மாண்புமிகு
திரு. கே. இராசாராம் அவர்கள்
மணிவிழா மலரை
வெளியிடுகிறார்

ஏமாறக்கூடியவர்களாக இன்றைக்கு இல்லையென்று நான் ஸ்தாபனத்தில் ஏதோ பங்கு பெற்றிருக் கிறவன் என்ற முறையில் சொல்லிக்கொள்கிறேன். இவரைப் பொறுத்தவரையில் 'அஞ்சா நெஞ்சன்' என்று துணிந்து கூறலாம். அவர் பொதுவாக எதிர்ப்புபற்றிச் சபலத்திற்கு உட்பட்டுச் சலனம் அடைவது கிடையாது. அவ்வளவு அபாண்டங்களையும், அவதூறுகளையும் அவர்மீது பொதுவிலே பொழிந்து அவரை மாசுபடுத்த முடியுமா என்று முயன்ற நண்பர்களைக்கூட, அவருடைய வாழ்த்துவோர் பட்டியலில் இருந்ததைப் பார்த்தபொழுது இதுதான் ஏ. பி. சி. அவர்களின் வெற்றி என்று நாங்க நினைத்துக்கொண்டேன். காரணம் எந்த எதிர்ப்புக்கும் அவர் வளைந்து இருப்பாரேயானால் இந்தப் பெருமைக்கு ஆளாகமுடியாது. எதிர்க்கின்ற அவர்களை அவர் எதிரியாகக் கருதுவதில்லை. எதிர்ப்புகளைச் சந்தித்திருக்கிறார், சமாளித்திருக்கிறார். தவிர எதிர்க்கின்ற ஆசாமிகளை வெறுப்பது, கண்டு பொருமுவது, குமைவது என்பது அவரிடம் கிடையாது. பல நேரங்களில் அவரைக் கோபமுள்ளவராகப் பலபேர் பார்க்கின்றார்கள். கோபம் என்பது இருக்கிறதே, அது ஒரு மனிதனுக்கு நல்ல பாதுகாப்பான விஷயம் என்பது ஒருவகையில் என்னுடைய கருத்து. காரணம் அந்த அழுக்குகள் உள்ளேபோய் தங்கிக் குடைந்துகொண்டு இருப்பது கிடையாது. அப்படியே வெடித்து அந்த நேரத்தில் என்ன சேதாரமோ, அவ்வளவுதான் நமக்குச் சேதாரம். தவிர ஏ. பி. சி. அவர்களிடத்து இருக்கின்ற கோபம் என்னவென்றால், அந்த நேரத்தில் அது அவருக்குப் பிடிக்கவில்லையென்றால் வெடிப்பார். வெடித்ததோடு விஷயம் முடிந்துவிடும். அடுத்த கணம் மறுபடியும் நண்பர் ஆவதற்கு எதிரிக்கு வாய்ப்புக் கொடுத்துவிட்டார் என்று பொருள். உள்ளத்தில் வைத்துக் கருவறுப்பது என்பது கிடையாது. இந்த நிலையிலே திரு. ஏ. பி. சி. வீரபாகு அவர்களின் மணிவிழாவிலே கட்சி அடிப்படையில்லாமல் எல்லா மாற்றுக் கட்சியினரும், முன்னணியில் இருக்கின்ற தலைவர்களும் வந்து அன்னாரைச் சிறப்பித்து பாராட்டுகின்றார்கள் என்றால் இது அவர்களின் மேலான சிறப்புக்குத் தனி எடுத்துக்காட்டு என்றுதான் என்னால் சொல்லமுடிகிறது.

மாண்புமிகு திரு. ராசாராம் அவர்கள்
மணிவிழா மலரை வெளியிட்டுச் சிந்திய முத்துக்களில் சில : IV

இந்த விழாவில் நான் ஒருவன்தான் அமைச்சர் என்ற முறையில் கலந்துகொள்கிறேன் என்று நினைக்கிறேன். என்னுடைய மற்ற அமைச்சர்களைக் குறிப்பிடவில்லை. மத்திய அமைச்சர்கள் வந்திருக்கலாம் என்று நினைத்தேன். இங்கு வந்தவுடன்தான் இந்த மணிவிழாவை ஏறத்தாழ அரசியல் கலப்பில்லாமல் நடத்துவதை நான் பார்க்கிறேன். திரு. ஏ. பி. சி. நல்லபடி உழைக் கின்ற பக்குவத்தைப் பெற்றவர்கள் என்பதை நான் பல நண்பர்கள் மூலம் அறிந்திருந்தேன். அவற்றை எல்லாம் காணுகின்ற வாய்ப்பு, சி. சுப்பிரமணியத்தைத் தேர்ந்து எடுப்பதற்காக கிருஷ்ணகிரியில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலிலே கூட்டாக நாங்கள் தேர்தல் வேலை பார்த்தபோது கிடைத்தது. அரசியலிலே கணக்குப் பார்த்துச் செலவழிப்பதோ, கணக்கு எழுதுவதோ கிடையாது. நண்பர் வீரபாகு அவர்கள் வியாபாரியாக இருக்கின்ற காரணத்தினால் அவர் கணக்கு எழுதி அரசியல் நடத்துவதை நான் நேரில் கண்டிருக்கிறேன்.

தமிழகத்தில் இந்திரா காங்கிரஸ்....., இந்திரா காங்கிரஸ் என்ற ஒரு கட்சி இருக்கிறது. அந்தக் கட்சி நண்பர்கள் கொஞ்சம் பொறுத்துக்கொள்ள வேண்டும். அந்தக் கட்சி இருக்கிறது என்று சொல்லுவதற்கு யாராவது ஓர் அஸ்திவாரம் போட்டு, அதற்குக் கிளைகளை உருவாக்கித் தமிழ் நாட்டில் கொடிபோட்ட ஒரு மாகானுபாவர் ஒருவர் உண்டு என்று சொன்னால் என்னுடைய அருமைத் தலைவர் வீரபாகு தவிர யாரும் கிடையாது எனலாம். அதற்கு முன்னாலேயே அப்படி ஒரு தலைவர் இருந்ததில்லை. அதற்குப் பின்னால் வந்தவர் நல்லவர். அவ்வளவுதான். கருத்து வேறுபாடு காரணத்தினால் பிரிந்துவிட்ட காமராஜர் ஆனாலும் சரி, டில்லியிலிருக்கின்ற சுப்பிரமணியம்

ஆனாலும் சரி, தமிழ்கூறும் நல்லுலகம் பெற்றெடுத்த சான்றோர்கள் ஆனாலும் சரி, பல்வேறு இயக்கத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி, அவ்வளவுபேரும் ஏ. பி. சி. அவர்களின் உயர்வே. அவர்களின் சொத்தைத் தானமாக வைத்து இந்தக் கல்லூரியை ஆரம்பித்துவைத்த பாங்கை, கூட்டுறவுத்துறைக்கு அவர் ஆற்றிய பணியை இந்நகரத்தில் பல அறக்கட்டளைகள் செய்த காரியத்தைப் பாராட்டாதவர்கள் இல்லை. ஏ. பி. சி. அவர்கள் இளமையிலிருந்து எப்படியெல்லாம் உயர்ந்தார்கள் என்பதற்கு ஆதாரப்பூர்வமான கட்டுரைகள் இந்த மலரிலே இடம் பெற்றிருக்கின்றன. நான் வெளியிடுகின்ற இந்த மலர்தான் விளம்பரமேயில்லாத முதல் மலர். சத்தான கருத்துக்களைக் கொண்ட கட்டுரைகள், சிறப்பான கல்வியைப்பற்றிய எண்ணங்கள் ஆகியவைகளை இந்த மலர் தாங்கியிருக்கிறது. எந்தவிதமான கெட்ட சகவாசமும் இந்த வசதிபடைத்த பெரிய குடும்பத்தைச் சேர்ந்தவருக்கு இல்லை என்பதைப் பார்க்கும்போது, எவ்வளவு ஒழுக்க உணர்ச்சியோடு அரசியலில் நேர்மையான வாழ்க்கை வாழ்ந்து வருகிறார் என்பதைப் பார்க்கும்போது சமுதாயத்தில் இவரேபோல் ஒழுக்கத்தோடு இருக்கின்றவர்தாம் பல நற்காரியங்களைத் திட்டமிட்டுச் செயல்பட முடியும் எனலாம். மேலும் பொதுமக்கள் இவருடைய நற்பணிக்காகக் கொடுக்கின்ற ஒவ்வொரு காசும் அவர் சொந்த வாழ்க்கைக்குப் போகாது என்பதை இந்நகர மக்கள் மட்டுமல்ல, நாட்டு மக்கள் அனைவரும் நன்கு அறிந்த ஒன்று. நண்பர் வீரபாகுவிற்கு ஏற்பட்டிருக்கின்ற பெருமையில் முக்கால்வாசி அந்த அம்மையார், தாம் ஏற்றுக்கொண்ட வாழ்க்கைத் துணைவரோடு கொள்கையில் எந்தவித மாறுபாடோ, வேறுபாடோ காணாமல் அவர் வகுத்த திட்டங்கள், நல்ல திட்டங்களாகத்தான் இருக்கமுடியும்; அவர் சொல்லுகின்ற பாதை நல்ல பாதையாகத்தான் இருக்கமுடியும், அவர் போகின்ற வழி அவருக்கு மட்டுமல்ல, நாட்டு மக்களுக்கும் நல்லதாகத்தான் இருக்கும் என்று நம்பி வாழ்க்கைத் துணைவியாக இருந்த காரணத்தினால்தான் பெருமையோடும், நல்லபடியாகவும், நாடு போற்றும்படியாகவும் மணிவிழாக் காணும் வகையிலே வாழ்ந்து இருக்கிறார்கள். மணிவிழாக் காணுகின்ற மணமக்கள் வாழ்க வாழ்க எனக் கூறி அமைகிறேன்.

திரு. S. V. சிட்டிபாபு (மதுரைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர்)
அறக்கட்டளையை ஆரம்பித்துவைத்து ஆற்றிய உரையில்,

பல்கலைக் கழகத் துணைவேந்தர் என்று இல்லாமல் பல்கலைக் கழகத்தின் சார்பிலே இந்த இனிய திருமண விழாவில் கலந்து கொண்டதை எண்ணி எண்ணிப் பூரிப்படைகின்றேன். மணி விழாக் காணும் பெருந்தகை நண்பர் திரு. வீரபாகு அவர்கள் எத்துணை அளவுக்கு எல்லோருடைய மனத்திலும் நிலையான இடம் பெற்றிருக்கிறார், என்பதைக் கண்கூடாகக் காண்கின்றோம். நகரம் மட்டுமல்ல பாரத நாடு முழுவதிலும் அவர் பெயர் பரவியிருப்பதை நாம் பார்க்கின்றோம்.

ஏ. பி. ஸி என்று நாம் சொல்லும்போது, அந்த மூன்று வார்த்தைகளுக்கு நான் கற்பித்துக் கொண்ட பொருள் என்னவென்றால், A for Agility. எந்த ஒரு காரியத்தையும் வேகமாக, விவேகத் துடிதமாக சரியாகச் சிறிதுகூடச் சலிக்காமல், பணியாற்றக்கூடிய அந்தச் சிறப்பு உணர்வு இருக்கிறதே அதைத்தான் ஆங்கிலத்தில் agility என்று சொல்லுகின்றோம். P for Placidity. அவரைப் பார்க்கும் பொழுது மலை போன்ற பெருஞ்சங்கடங்கள் ஏற்பட்டாலும்கூட அந்தப் புலன்களையெல்லாம் அடக்கி நிலை தியாது அடங்கிய தோற்றம் என்ற வகையிலே அப்படியே சற்றும் சலனம் இல்லாமல் "எந்தவித எதிர்ப்புச் சக்தி இருந்தாலுங்கூட அதை என்னால் சமாளிக்கமுடியும்!" என்கின்ற தோற்றத்தை அவர் முகத்தில் காணமுடிகின்றது. C for Civility; ஆம், எல்லோரிடத்திலும் மிகவும் கூழகமாக நயமுடன் இனிமையாகப் பழகக்கூடிய பாங்கு படைத்தவர் என்பதை C காட்டுகின்றது. இவையெல்லாம் சேர்ந்ததொரு கலவையாக எந்தக் காரியமும் அது எத்தகைய ஒரு கடுமையான காரியமாயிருந்தாலும்கூடப் பலதரப்பட்ட திறமைகளைத் தன்னகத்தே கொண்டு

தொழிலாளர் நல அமைச்சர்
மாண்புமிகு.
திரு. கே. இராசாராம் அவர்கள்
மணிவிழாக் கண்ட
அண்ணலுக்கு
"அறநெறிச் செம்மல்"
என்னும் பட்டமளிக்கின்றார்.

தவத்திரு.
குன்றக்குடி அடிகளார்
மணிவிழாக் கண்ட
அண்ணலுக்குப் பொன்னாடை
போர்த்தி மகிழ்கின்றார்.

மதுரைப் பல்கலைக் கழகத்
துணைவேந்தருடன்
மணிவிழாச் செயலாளர்கள்.

மதுரைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர்,
திரு. எஸ். வி. சிட்டிபாபு அவர்கள் அறக்கட்டளையைத்
தொடங்கி வைக்கிறார்கள்.

மணிவிழாக் கண்ட அண்ணலுக்குத் திருப்பத்தூர் தமிழ்ச்
சங்கத்தின் சார்பில் தவத்திரு. குன்றக்குடி அடிகளார்
"தமிழவேள்" என்னும் பட்டமளிக்கின்றார்.

வென்று மிளிரக் கூடிய ஓர் அருமையான வர்ணஜாலம் வைரமாகின்ற காரணத்திலேல் சொல்லு கின்றேன். அந்த V கூட அவருடைய Versatility யைத்தான் காட்டுகின்றது என்று சொல்லு வேன். இந்த நான்கு எழுத்துக்களில்தான் எவ்வளவு அருமையான பொருள் பொதிந்திருக்கிறது! தெரிந்தோ தெரியாமலோ அவர்கள் வைத்த பெயருக்குத் தகுந்தாற்போல் அந்த எழுத்துக்களுக்கு ஒரு புனிதத் தன்மையைக் கொடுப்பதுபோல் தம்முடைய வாழ்க்கையை அமைத்துக் கொண்டார் என்று சொல்லலாம். இத்தகைய பெருந்தகைகளை நம்மால் உலகத்தில் எத்தனை பேரைக் காணமுடியும்? விரல்விட்டே எண்ணிவிடலாம் என்று சொல்லுங்கள்! அத்தகைய பெருந்தகையாக விளங்குகின்றார் திரு, ஏ. பி. சி. வீ.

இக்கல்லூரியைக் கடந்த ஒரு திங்களுக்கு முன்பு சுற்றிப் பார்க்கக் கூடிய வாய்ப்புப் பெற் றேன். இந்தக் கல்லூரியின் வாசலைப் பார்த்தவுடன்,

> "Education is but the golden gateway
> to the enchanted realms of thoughts and action"

கல்வி வேள்வி நடாத்தி வரும் இந்த அறநெறிச் செம்மலுக்கு விழாக் கொண்டாட நாம் இங்குக் கூடியிருக்கிறோம். இவர் விடுதலை வீரர் மட்டுமல்ல; தேசாபிமானி மட்டுமல்ல; சமூகத் தொண்டர் மட்டுமல்ல; தியாகசீலர் மட்டுமல்ல; சைவச் செம்மல் மட்டுமல்ல. இன்று கல்விக் காவலராக இருக்கின்றவர்களுக்கெல்லாம் காவலராக இருந்து கல்விக்கு ஒரு மணி மகுட மாக இருக்கின்ற காரணத்திலேல்தான் இன்று பல்கலைக் கழகமே இங்கு என் மூலமாக வந்திருக் கிறது என்பதை நான் திட்டவட்டமாக எடுத்துக் கூறமுடியும்.

பட்டம் அளிப்பு:-

'தமிழவேள்'

குன்றக்குடி அடிகளார்:-
திருப்பத்தூர்த் தமிழ்ச்சங்கத்தின் சார்பில் வழங்கி வாழ்த்தியருளினர்.

சிந்தனையைத் தூண்டி வளர்ப்பது மொழி; கருத்தை வளர்ப்பது மொழி; உணர்வுகளைச் சீராக்கி வளர்ப்பது மொழி; அது இன்றேல் மனிதன் நிச்சயமாக வளர முடியாது. ஆக எந்த நாகரிக வளர்ச்சிக்கும் நாயகமாக அடித்தளமாக அமைவது மொழிதான், பழைய காலத்தில் மொழியை வெறும் மொழியாகப் பார்த்தது கிடையாது. இப்பொழுது சிலபேர் சொல்லுகிறார்கள் தமிழ் வேறு தமிழன் வேறு என்று, தமிழ் வேறு தமிழர் சமயம் வேறு நாகரிகம் வேறு என்றும் பிரிக்கிறார்கள். உலகத்தில் வேறு எந்த மொழியைப் பிரித்தாலும் பிரிக்கமுடியும், தமிழை அதனுடைய நாகரிகங்களிலிருந்து பிரிக்கவே முடியாது. அதனால் தான் சேக்கிழார், "அசைவில் செழுந் தமிழ் வழக்கே அயல்வழக்கின் துறைவெல்ல" என்றார். தமிழகத்தின் சமயம் வென்றதைத் தமிழனுடைய நெறி வென்றதை தமிழகத்தினுடைய பண்பாடு வென்றதை சைவம் வென்றது என்று சொல்லாமல் சமயம் வென்றது என்று சொல்லாமல் தமிழ் வழக்கு வென்றது என்று சொன்னார். தமிழ் என்று சொன்னாலே அதற்குப் பண்பாடு என்று பெயர். எனவே நண்பர் வீரபாகு அவர்கள் தமிழ் உணர்ச்சி உடையவரா? நாட்டுக்கு அப்படித் தெரியாது. காரணம் தமிழுக்காக அவர் எந்தக் கிளர்ச்சியும் செய்ததில்லை. காரணம் அவருடைய நோக்கம் வேறு, தமிழை வளர்ப்பதுதான் என்பதே தவிரத் தமிழுக்குக் கிளர்ச்சி செய்ய வேண்டுமென்பது அவருடைய நோக்கமல்ல. அவர் நல்ல தமிழிலே பேசுவார். தமிழ் இலக்கியத்திலே ஈடுபாடு. நல்ல தமிழ் இலக்கியப் பயிற்சி. இன்னும் தெளிவாகச் சொன்னால் நாயன்மார் இயற்றித் தந்த

திருமுறையில் நிறைந்த ஈடுபாடு. அந்த ஈடுபாடே அவர் தமிழைப் பேசுவதற்குப் பதிலாக, எழுதுவதற்குப் பதிலாக, அந்தத் துறையில் வாழ்ந்து காட்டவேண்டும் என்று வேணவா கொள்ளச் செய்தது. எனவே அவருக்குத் 'தமிழவேள்' என்ற சிறப்புப் பட்டத்தை 107 புலவர்களோக் கொண்ட திருப்பத்தூர் தமிழ்ச்சங்கம் வழங்குகிறது,

"அறநெறி அண்ணல்"

அறநெறி வளர்ந்தால்தான் சமுதாயம் மேம்பாடு அடையமுடியும். மொழியோடு வளருகின்ற விரிந்த பண்பாடே அறநெறி எனப்படும். உயர்ந்த அறநெறிதான் உலகத்திற்கு உயிராக இருக்கிறது. இதுவரையில் உலகம் இயங்கிக்கொண்டிருக்கிறது என்று சொன்னால் அறிந்தோ அறியாமலோ இன்னமும் சில அறநெறியாளர்கள் நாட்டில் இருப்பதுதான் காரணம் என்பதிலே கருத்து வேறுபாடு இருக்கமுடியாது. அந்த உயர்ந்த அறநெறியை நம்முடைய வீரபாகு அவர்கள் கடைப்பிடிக்க வேண்டுமென்ற உணர்வுடையவர்கள். யாரோடும் கடிந்து பேசமாட்டார். கருத்து வேறுபாடுகள் உடையிடங்கூடக் கண்ணியமாக இருப்பார். அவருக்கும் எனக்கும்கூட கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டதுண்டு. அல்லது ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டதுண்டு. இடி இடித்ததுண்டு; மின்னலில்லை. ஆனால் மழை பொழிந்தது என்று சொன்னால் அது எவ்வளவு அற்புதமாக இருக்கிறதென்பதைப் பார்க்கலாம். அந்தப் பெரிய பண்பாட்டின் வழியாக அவர் வளர்ந்து வந்ததின் காரணமாக அவற்றை மலரினும் மெல்லியதாக அடையவேண்டு மென்ற பெரு நோக்குடையவராய் அறநெறி உள்ளத்தினை உடையவர் என்ற காரணத்தினால்தான் இந்த 'அறநெறி அண்ணல்' என்ற சிறப்புப் பெயரை இந்தத் தூத்துக்குடி நகரத்திலிருக்கிற சைவசித்தாந்த சபை வழங்குகிறது.

"சிவநெறிச் செல்வர்"

நண்பர் ஏ. பி. ஸி. வீரபாகு அவர்களின் நெஞ்சில் நீங்காத இடம் பெற்றிருக்கின்ற குன்றக்குடி திருவண்ணுமலை ஆதினத்தின் சார்பில் "சிவநெறிச் செல்வர்" என்ற சிறப்புப் பெயரை வழங்கி, பாராட்டுகின்ற பெருமை எனக்குக் கிடைத்திருக்கிறது. நண்பர் வீரபாகு அவர்கள் பல ஆண்டுகளாகத் தொடர்ந்து மிகுந்த ஈடுபாட்டுடன் பூஜைசெய்து தெய்வத்தை ஆராதித்து வருகின்றவர்கள், ஆதலின் இத்தகைய பட்டத்திற்கு உரியவராகின்றார்,

திருவண்ணமலை ஆதீனத்தின் சார்பில் தவத்திரு. குன்றக்குடி அடிகளார் "சிவநெறிச் செல்வர்" என்னும் பட்டத்தை, மணிவிழாக் கண்ட அண்ணலுக்கு, அளிக்கின்றார்.

ஆதீனங்களுக்கு முன்னே மணிவிழாக் கண்ட அண்ணலின் நன்றிச் சொற்பெருக்கு.

நிகழ்ச்சிக்கு வருகைதந்த திரளான பெண்மக்கள்

மணிவிழாக் கண்ட அண்ணலுக்குச் சைவ சித்தாந்த சபையின் சார்பில் "அறநெறி அண்ணல்" என்னும் பட்டம் சூட்டுகின்றார், தவத்திரு குன்றக்குடி அடிகளார்.

மணிவிழா நிகழ்ச்சிகளின் இறுதிக் கட்டம்: நன்றி நவிலல்.

5 - 5 - 75 காலை

கவியரங்கம்

(வைரச் சிதறல்கள்)

தலைவர் முன்னுரை.

(இ. வா. ஜகந்நாதன்)

(ஆசிரியர் துதி)

பாட்டால் மலியும் சுவைகெழும் பண்டைச் சங்கத் தார்பனுவல்
ஏட்டால் மலிந்து வளர்ந்தவற்றை இரையாக் கொளும்செல் வாயில்மண்
போட்டான், எடுத்தே ஆராய்ந்து புதுக்கிச் செதுக்கி மணிபோல
நாட்டார்க் களித்த எம் சாமி நாத ஆசான் பதம் போற்றி.

(அவையோர் - புலவர்)

வெம்மை மிகுந்த சென்னையினை விட்டுப் பயணம் புறப்பட்டேன்;
வேக மாக ஓர்நண்பர் மேவி எங்கே செல வென்றார்;
தண்மை மிகுந்த மலர்ச்சோலை சாரப் புறப்பட் டேன் என்றேன்;
தழைத்த சோலை எங்குள தித் தணியா விருப்பம் ஏனென்றார்;
பொய்ம் மை மிகுந்த மொட்டைமரம், பூவில் லாத முட்காடு
பொலிந்த ஈரம் இலாத்தருக்கள் புழுங்கிக் காயும் காட்சிகண்டேன்.
செம்மை யில்லா இச்சூழல் சிலநாள் தணந்து குளிர்ச்சிமிகத்
திகழும் பொழிலைச் சார்ந்தின்பம் சேரச் செல்வேன் என்றேனே.

எங்கே உள்ள தச்சோலை இயல்பை விரிப்பாய் எனக் கேட்டார்?
எழிலார் தூத்துக் குடிநகரில் இருப்பதந்தச் சோலை; என்றும்
மங்கா அன்புக் குளிர்ச்சிஉண்டு, மாறுச் சாந்த மணமுண்டு;
வஞ்சம் சேர்ந்த தன்னலமாம் மூட்க ளில்லா மாண்புண்டு;
பொங்கார் வத்தோ டிறையடியைப் போற்றிப் பணியும் கனியுண்டு
புலவர் தம்மைப் புரக்கின்ற பொற்பார் இனிய நிழலுண்டு
கங்கா நதிபோல் தூய்மையுண்டு; கவிஞர் தேச பக்தியினிற்
கலங்கா வயிரம் மிகவுண்டு; காணக் காண மகிழ்ச்சிதரும்.

என்றேன்; அப்பால் ஏகுகையில் இல்லாள் வந்தாள்; புன்முறுவல்
இலக எங்கே போகின்றீர் என்றாள்; இங்கே வன்சொல்லாம்
குன்றுக் கனல்சேர் வெங்காற்றில் குமைந்து வாடித் துயருற்றேன்;
குளிர்ச்சி யுள்ள தென்றல்தவழ் குன்றம் காணப் புறப்பட்டேன்

என்றேன்; பொதிய மலைநாடி ஏகு வீர்கொல் எனக்கேட்டாள்.
இதுவுந் தண்ணந் தமிழ்மணக்கும் எழிலார் குன்றம்; இன்சொல்லாம்
தென்றல் வீசும்; ஈகையெனும் திருவார் அருவி கொழித்திருக்கும்
திகழும் தூத்துக் குடியினிலே சிறக்கும் குன்றம் இதுவெனறேன்.

பின்னர்ச் செல்ல என்மைந்தன் பெயர்வ தெங்கே எனக்கேட்டான்
பேசும் பேச்சு வெறுங்காற்றுய்ப் பிசுபிசுக்கும் மனிதர்களாய்த்
துன்னும் உப்புக் கடலைவிட்டுத் தொண்டு செய்யும் நீர்மைகொளும்,
தூய துறையைச் சாருதற்குத் தூத்துக் குடிபோய் வருவனென்றேன்
அன்னேன் பார்வை தனிற்கிடந்த ஐயம் நீக்க முற்பட்டேன்
அந்நாள் கப்பல் ஓட்டியஅவ் வண்ணல் வ. உ. சி. பெயரால்
மன்னும் அறிவாம் கடல்கடக்க மாண்பார் கல்லூ ரிக்கப்பல்
வழங்கும் துரையாம் துறையென்றேன்; வருக சென்றென்றவன்போயின்.

மனத்துக் கினிய பூம்பொழிலாய் வளஞ்சேர் தென்றற் குன்றமாய்
வண்மைக் கடலாய்க் குணக்கடலாய் வயங்கும் வீர வாகுவெனும்
இனத்திற் சிறந்த நல்லவனே எண்ணிச் சொன்னேன் இத்தனையும்;
இப்போ தவன்றன் மணிவிழாவில் இனிது கலந்து நலங்கொள்ளும்
தினத்தைப் பொன்னும் நாளென்றே சிந்தை செய்தேன்; கவியரங்கிற்
சிறந்த கவிஞர் பலர்பாடும் செய்ய தமிழின் வளம் சுவைத்துத்
தனத்தைப் பெற்று மகிழ்வதுபோல் தழைக்கும் உவகை மிகக்கொள்ளத்
தந்த பெருமைக் காகநன்றி சாற்றிக் கடமை ஆற்றுவனே.

கவிஞர் வேலவன். **பொருளியற் கோட்பாடு.**

கரிசல் பருத்திபல கண்மலர்ந்த வெண்மையெனப்
பரிசாய்ச் சிதறிப் பளிச்சிடும் வெண்சிரிப்பு!
உழைப்பில்நீ வேளாளன்; உதவுவதில் வல்லாளன்
பிழைகண்டால் தாங்குவதில் பெரும்புகழ்சேர் கம்மாளன்
எண்ணத்தை வனேவதிலே எழிலார் குயவன் நீ!
கண்டமுதல் ஆள்வதிலே கண்டிப்பாய் நீ முதலி!
சிந்தனையை நெய்வதிலே சேணியன்நீ! நின்பாதம்
வந்தவர்தம் துயர் அழுக்கை மாற்றுவதால் வண்ணனே!
எப்படியோ இவர் மாயம் இப்படியே தான்வளர்ந்து
அப்படியே அறப்பணிகள் அருந்தமிழ்போல் வளர்ந்திடுக!"

கவிஞர் குமாரசாமி. **அரசியல் ஈடுபாடு.**

ஏ. பி ஸி. வீரபாகு இயல்புணர்த்த வேண்டுமெனில்
பூப்போன்ற மனிதரென்றும் புண்ணியம் உடையரென்றும்
வாய்ப்பான நல்லறம்செய் வள்ளலென்றும் கல்லூரிக்
காப்பாளர் என்றும் நிறை கட்டுரைப்பர் தென்னகத்தார்.

அரசியலின் பங்குபற்றி அடிமை வாழ்வின்
அவலத்தில் சிக்குண்ட மக்கட் காக
அரசினர்க்கும் எதிர்நின்றே அறப்போ ரிட்டார்
அடக்குமுறைக் காளாகிச் சிறைக்கோட்டத்தில்

அரசினரின் வெங்கொடுமைக் காட்பட் டார்கள்!
ஆனலும் தளராமல் வாணு ளெல்லாம்
அரசியலில் மறுமலர்ச்சி தோன்றும் என்றே
அவரெல்லாம் காத்திருந்தே மலர்ச்சி கண்டார்!

திருமதி. கு. காந்திமதி. இல்லற மேம்பாடு.

இல்லறத்தின் மேம்பாட்டை எண்ணுங் காலே
இதமான பண்பமைந்த எழிற்பே ரண்ணல்
எல்லார்க்கும் நல்லவராம் என்ற பான்மை
வல்லவராம் ஏ. பி. ஸி. வீர பாகு
தொல்லியலில் வழங்கிவ்ரும் அவர்தம் வாழ்க்கை
தூயநலம் துலங்குதலால் அதுவே காட்டாம்.
நல்லியலில் அவர்பெற்ற வாழ்க்கை யாவும்
நவிலுதற்கே ஒருநாவும் காணு தம்மா!

கவிஞர் உலகநாதன். சமுதாயப் பண்பாடு.

தேடிச் சோறு தின்றதெல்லாம் சிந்தைமலர்ந்து எழுகவே!
சிதம்பரத்தின் வேண்டுகோளைச் சிந்தைகொண்டு எழுகவே!
பாடி நின்ற பாரதியின் பாட்டைக்கேட்டு எழுந்தவன்
பாசங்கொண்ட தேசங்காக்கப் பகலும்இரவும் உழைத்தவன்
கோடிஎண்ணம் உள்ளங்கொண்டு கல்விகேள்வி வளர்ப்பவன்
கூர்த்தமதியின் வீரபாகு கோடியாண்டு வாழ்கவே!
மோடியில்லை, வித்தையில்லை மோகன்காந்தி வழிச்செலும்
மூவா அண்ணல ஏ. பி. சி.யும் முத்தமிழ்போல் வாழ்கவே!

அ. செகதீசன். மணிவிழா வாழ்த்து.

மணிவிழா! பண்புநவ மணிவிழா! இன்பமலி
மலர்விழா! மலர்ந்து வாழும்
மனவிழா! நிறைநாளின் மதிவிழா! பால்பொங்கும்
மனைவிழா! அன்பு வேள்வி
அணிவிழா! தெய்வீக அருள்விழா! காலத்தின்
அணிவிழா! அறுப தென்னும்
ஆயிரங் காலத்துப் பயிர்விழா! அறிவாண்மை
அடைவிழா! பொதுந லத்துப்
பணிவிழா! பயன்விழா, பார்விழா, பணம்விழாப்
படைவிழா! கல்வி நேர்மைப்
பதிவிழா! செந்தில்வேல் நிதிவிழா! திருநீற்றுப்
பனிவிழா! வாழ்க்கை வெற்றித்
திணிவிழா! ஏ. பி. சி. மணவிழா! வாழ்மனைத்
திருமகள் மகாலட்சுமி
திகழ்விழா! திருவிளக் கொளியேந்த வேவந்த
திருவிழா! வாழ்க! வாழ்க!